# சுதந்திரத்

# தமிழ் வாசகம்

ஐந்தாவது பாரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1949
MADRAS




இ. ... பாலகிருஷ்ணக் கோன்,
சென்னை.

031
N49

# SUDHANTHIRA
# TAMIL VACHAGAM

## FORM V

[Prepared according to the Finalized Syllabus—194[illegible]]

Pandit S. KESAVARAMASAMY
&
Pandit N. LAKSHMINARASIMHAN

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: MADRAS

Rights Reserved] 1949 [Price Rs. 1-6-0

# நான்முகம்

இப்புத்தகம், அரசியலார் அண்மையில் ஆராய்ந்து வெளியிட்ட புதிய பாடத்திட்ட முறைப்படி அமைக்கப் பெற்றது. மாணவரது இயற்கையறிவை எழுச்சியுறச் செய்வதற்கான சீரிய பலதுறைக் கட்டுரைகளும், பாக்களும் பொறுக்கியெடுத்து இதன்கண் தொகுக்கப் பெற்றுள்ளன. கட்டுரைகள் நமது பண்பாடும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் வளரும் வகையில், உலகியலறிவையும், பொது நோக்கையும், இலக்கியப் பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.

ஒவ்வோரு வகுப்பிற்கும் அரசியலார் அமைத்த திட்டப்படி உள்ள குறட்பாக்கள், மாணவர் தனிப் புத்தகமாக வாங்கும் சிரமத்தை நீக்குதற்பொருட்டு இதன் செய்யுட் பகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

செய்யுட் பகுதியிலும் உரைநடைப் பகுதியிலும் *உடுக்குறியிட்ட பாடங்கள் சிறப்புப் பகுதிக்கும் பிற பாடங்கள் பொதுப் பகுதிக்கும் உரியனவாகும்.

இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும் தலைமையாசிரியர்களும் தங்கள் கலாசாலைகளில் பாடப்புத்தகமாக வைத்து ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

எமது வேண்டுகோட்கு இணங்கித் தங்கள் கட்டுரைகளையும் கவிதைகளையும் இப்புத்தகத்தில் இணைத்துக்கொள்ள அனுமதியளித்த பேராசிரியர்கட்கும் பத்திராதிபர்கட்கும் எமது அன்புசால் வணக்கம்.

தொகுப்பாசிரியர்கள்.

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:—49.

# உள்ளுறை

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## செய்யுட்பகுதி

Ancient = An. Medival = Me. Modern = Mo.

### வாழ்த்துப் பகுதி (HYMNS)


| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாய்மொழி | (An.) | 1 |
| 2. | தேவாரம் | do. | ,, |
| 3. | திருவருட்பா | (Mo.) | ,, |
| 4. | பரம்பொருள் வாழ்த்து | (Me.) | 2 |
| 5. | திருப்புகழ் | do. | ,, |
| 6. | தமிழன்னை | (Mo.) | ,, |


### அறவுரைப் பகுதி (DIDACTIC VERSES)


| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் | (An.) | 3 |
| 2. | நாலடியார் | do. | 13 |
| 3. | பழமொழி நானூறு | do. | 14 |
| 4. | சோமேசர் முதுமொழி வெண்பா | (Me.) | 15 |


### கதைப் பகுதி (NARRATIVE POEMS)


| | | | |
|---|---|---|---|
| 1. | கம்பராமாயணம் | (Me.) | * 16 |
| 2. | நளவெண்பா | do. | 19 |
| 3. | ஆசியஜோதி | (Mo.) | 21 |
| 4. | குசேலோபாக்கியானம் | do. | 22 |
| 5. | பாஞ்சாலி சபதம் | do. | 23 |
| 6. | வில்லிபுத்தூராழ்வார் பாரதம் | (Me.) | 24 a |
| 7. | திருவாலவாயுடையார் திருவிளையாடல் | do. | 24 c |
| 8. | பெரியபுராணம் | do. | * 24 f |
| 9. | மனோன்மணீயம் | (Mo.) | 25 |
| 10. | இரட்சணிய யாத்திரிகம் | do. | 27 |
| 11. | மணிமேகலை | (An.) | * 28 |
| 12. | சிலப்பதிகாரம் | do. | * 29 |


### வருணனைப் பகுதி (DESCRIPTIVE POEMS)


| | | | |
|---|---|---|---|
| 1. | தாமிரவர்ணியாறு | (Mo.) | 30 |
| 2. | திருக்குற்றால வளம் | (Me.) | ,, |
| 3. | நாஞ்சிநாட்டு வளம் | (Mo.) | ,, |
| 4. | அழகு | do. | 31 |
| 5. | சரத்காலம் | do. | ,, |

## பல்சுவைப் பகுதி (MINOR POEMS AND INTERESTING EPIGRAMS)


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | புறநானூறு | (An.) | * | 32 |
| 2. | கற்றோரைக் கற்றோரே காமுறுவர் | do. | | ,, |
| 3. | மடக்கு | (Me.) | * | ,, |
| 4. | அற்புதத் திருவந்தாதி | (An.) | | 33 |
| 5. | திருவாரூர் நான்மணிமாலை | (Me.) | * | ,, |
| 6. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | do. | | 35 |
| 7. | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | do. | | 36 |
| 8. | திருவரங்கக் கலம்பகம் | do. | | ,, |
| 9. | திருக்குற்றாலக் குறவஞ்சி | do. | | 37 |
| 10. | எலிக்கும் புலிக்கும் சிலேடை | do. | | ,, |
| 11. | தொழில் | (Mo.) | | 38 |
| 12. | பாண்டியன் பரிசு | do. | | ,, |
| 13. | நினைவும் முடிவும் | do. | | 40 |
| 14. | பொங்கல் | do. | | ,, |


## உரைநடைப் பகுதி


| | பொருள் | SYLLABUS | | |
|---|---|---|---|---|
| 1. | உலகப் பெரியார் | (Biography) | | 41 |
| 2. | பழந்தமிழர் | (Literary themes) | * | 46 |
| 3. | கரும்பொன் தொழில் | (Manufacturing process) | | 49 |
| 4. | இல்லக் கிழத்தி | (Domestic science) | | 54 |
| 5. | கிராமக் கைத்தொழில் | (Rural problems) | | 59 |
| 6. | தொழிலுக்கும் செல்வத்துக்கும் உள்ள தொடர்பு | (Topic of National interest) | | 64 |
| 7. | பொருளறிவும் புதிய வாழ்க்கையும் | (Topic of International Interest) | * | 67 |
| 8. | விசுவநாதன் (நாடகம்) | (Modern play) | | 72 |
| 9. | ஔவையாரும் அதியமானும் | (Prose Rendering of Poetical Pieces) | | 77 |
| 10. | பூமி உண்டான விதம் | (Letters of Literary Merit) | | 81 |
| 11. | கடற் செலவு | (Travel) | | 85 |
| 12. | திராவிடக் கலை | (Temple Architecture) | * | 89 |
| 13. | பைந்தமிழ் வளர்த்த பாதிரியார் | (Biography) | | 93 |
| 14. | நாடகம் | (Fine Art) | | 97 |
| 15. | தமிழ்நாட்டு வண்ண ஓவியக் கலை | (Ancient Painting) | * | 102 |
| 16. | பரம்பரைக் குணம் | (Short Story of good taste) | | 106 |

| | | | |
|---|---|---|---|
| 17. | நான் கண்ட நூல் | (Nature in poetry) | 110 |
| 18. | வீர விகடன் | (Short Story of good taste) | 115 |
| 19. | ஒளி விநோதங்கள் | (Scientific discovery) * | 119 |
| 20. | இசைக் கருவி | (Musical Instruments) | 123 |
| 21. | குகை ஆராய்ச்சி | (Exploration) * | 127 |
| 22. | முயற்சியின் முதன்மை | (Lecture) | 131 |
| 23. | ஜனநாயகம் | (Democracy) * | 134 |
| 24. | சகுந்தலை | (Classical Play) | 139 |
| 25. | நற்குடி வாழ்க்கை | (Citizenship) | 145 |


## மனப்பாடம் செய்யவேண்டிய பகுதிகள்

| | செய்யுள் | எண் | வரிகள் |
|---|---|---|---|
| 1. | தேவாரம் | 1 | 4 |
| 2. | திருவருட்பா | 1 | 4 |
| 3. | நாலடியார் | 1, 2, 3, 4, 5 | 20 |
| 4. | பழமொழி | 1, 2, 3, 4, 5 | 20 |
| 5. | நளவெண்பா | 4, 5, 7, 8, 9, 10, 12 | 28 |
| 6. | குசேலோபாக்கியானம் | 1, 4, 5, | 12 |
| 7. | வில்லிபுத்தூராழ்வார் பாரதம் | 9, 12, | 8 |
| 8. | திருவாலவாயுடையார் திருவிளையாடல் | 4, 9, | 8 |
| 9. | தாமிரவர்ணியாறு | 1 | 9 |
| 10. | திருக்குற்றால வளம் | 1 | 8 |
| 11. | தொழில் | 2 | 8 |
| | | | 129 |

# சுதந்திரத் தமிழ் வாசகம்

## ஐந்தாவது பாரம்

## 1. வாழ்த்துப் பகுதி

### கடவுள் வாழ்த்து

#### திருவாய்மொழி

உயர்வற வுயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழு(து) எ(ழு)என் மனனே.

(நம்மாழ்வார்)

#### தேவாரம்

மண்பாத லம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே!
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.

(திருநாவுக்கரசர்)

#### திருவருட்பா

எத்துணையும் பேதமிலா தெவ்வுயிரும்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
யொத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தே னந்த
வித்தகர்தம் மடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ.

(இராமலிங்க சுவாமிகள்)

## பரம்பொருள் வாழ்த்து

பாயப் புலிமுனம் மான்கன் றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கேயிலக் காவெனை வைத்தனையோ?
நீயெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங்கருணைத்
தாயொத் தடியார்க் கருள்சச்சி தானந்த தற்பரமே.

(தாயுமானவர்)

## திருப்புகழ்

(தனதனன தனன தந்தத் தனதான)

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

(அருணகிரிநாதர்)

## தமிழன்னை

அரனருள் புதல்வி, அருங்கலைச் செல்வி,
வரனருள் முதல்வி, வாழிய தமிழ்த்தாய் !
தென்னா டெல்லாம் தன்னா டாக
வீற்றிருக் கின்றாள் வீரர்க் கிறைவி!
எழுதா மறையாம் இன்னிசை பிழியும்

* * * *

காவிரி யாழைக் கைத்தலம் பிடித்தாள்;
அறமும் வாய்மையும் அருளும் விளக்கும்
வெற்றிக் கதிர்க்கொடி விண்ணுற உயர்த்தினாள்;
அழகுத் தெய்வம், அருந்தமிழ்த் தெய்வம்,
எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்கவே!

(யோகி சுத்தானந்த பாரதியார்)

# 2. அறவுரைப்பகுதி

## திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில. 1

### வான் சிறப்பு

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 2

### நீத்தார் பெருமை

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 3

### அறன் வலியுறுத்தல்

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 4

### இல்வாழ்க்கை

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து. 5

### வாழ்க்கைத் துணைநலம்

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

### புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 7

### அன்புடைமை

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று. 8

### விருந்தோம்பல்

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 9

**இனியவைகூறல்**

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 10

**செய்ந்நன்றி யறிதல்**

மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. 11

**நடுவுநிலைமை**

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ருேர்க் கணி. 12

**அடக்கமுடைமை**

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து. 13

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 14

**பொறையுடைமை**

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். 15

**அழுக்காருமை**

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னர்
வழுக்கியுங் கேடீன் பது. 16

**புறங் கூருமை**

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும். 17

**பயனில சொல்லாமை**

அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். 18

**தீவினையச்சம்**

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். 19

**ஒப்புரவறிதல்**

ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 20

**ஈகை**

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 21

**புகழ்**

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 22

**அருளுடைமை**

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. 23

**தவம்**

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 24

**கூடாவொழுக்கம்**

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும். 25

**வாய்மை**

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன். 26

**வெகுளாமை**

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். 27

**இன்னாசெய்யாமை**

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. 28

**கொல்லாமை**

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. 29

### நிலையாமை

உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 30

### துறவு

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 31

### மெய்யுணர்தல்

எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 32

### அவாவறுத்தல்

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 33

### ஊழ்

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. 34

### இறைமாட்சி

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானம் வேந்தர்க் கொளி. 35

### கல்வி

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 36

### கேள்வி

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 37

### அறிவுடைமை

எவ்வ துறைவ துலக முலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு. 38

### குற்றங் கடிதல்

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 39

### பெரியாரைத் துணைக்கோடல்

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 40

### சிற்றினஞ் சேராமை

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில். 41

### தெரிந்து செயல்வகை

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 42

### வலியறிதல்

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும். 43

### காலமறிதல்

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல். 44

### இடனறிதல்

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 45

### தெரிந்து தெளிதல்

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 46

### தெரிந்து வினையாடல்

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந் (து)
அதனை யவன்கண் விடல். 47

### பொச்சாவாமை

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 48

### செங்கோன்மை

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின். 49

### கொடுங்கோன்மை

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு. 50

### வெருவந்த செய்யாமை

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 51

### கண்ணோட்டம்

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை யுடைத்திவ் வுலகு. 52

### ஒற்றாடல்

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
ஒற்றினா லொற்றிக் கொளல். 53

### ஊக்கமுடைமை

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 54

### மடியின்மை

குடியென்னுங் குன்றா விளக்க மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 55

### ஆள்வினையுடைமை

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். 56

### இடுக்கணழியாமை

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல். 57

### அமைச்சு

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 58

### சொல்வன்மை

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. 59

### வினைத்தூய்மை

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 60

### வினைத்திட்பம்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. 61

### வினைசெயல்வகை

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல். 62

### தூது

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது. 63

### மன்னரைச் சேர்ந்தொழுகல்

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 64

### குறிப்பறிதல்

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. 65

### அவையறிதல்

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 66

### அவையஞ்சாமை

கற்றூர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். 67

### நாடு

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. 68

### அரண்

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். 69

### பொருள் செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 70

### படைமாட்சி

அடற்றகையு மாற்றலு மில்லெனினும் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 71

### படைச்செருக்கு

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. 72

### நட்பு

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. 73

### நட்பாராய்தல்

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். 74

### பழைமை

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. 75

### தீ நட்பு

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 76

### கூடாநட்பு

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. 77

### பேதைமை

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். 78

### புல்லறிவாண்மை

காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. 79

**இகல்**

இகலானு மின்னாத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு. 80

**பகைமாட்சி**

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 81

**பகைத்திறம் தெரிதல்**

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 82

**உட்பகை**

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 83

**பெரியாரைப் பிழையாமை**

கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றா தா ரின்னா செயல். 84

**கள்ளுண்ணாமை**

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 85

**சூது**

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 86

**மருந்து**

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய். 87

**குடிமை**

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 88

**மானம்**

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 89

**பெருமை**

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 90

**சான்ருண்மை**

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் ருேல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 91

**பண்புடைமை**

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன். 92

**நன்றியில் செல்வம்**

நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 93

**நாணுடைமை**

நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணாள் பவர். 94

**குடிசெயல்வகை**

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். 95

**உழவு**

ஏரினு நன்ரு லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு. 96

**நல்குரவு**

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு. 97

**இரவு**

இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்ருதார் மாட்டு. 98

**இரவச்சம்**

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில். 99

**கயமை**

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில். 100

* இவை அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப் பெற்றவை.

# நாலடியார்

## அறன்வலியுறுத்தல்

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் —றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம். 1

## சினமின்மை

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாம் கீழ். 2

## பழவினை

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. 3

## கல்வி

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்ச மெனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. 4

## குடிப்பிறப்பு

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறாஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார். 5

(சமணமுனிவர்)

# பழமொழி நானூறு

### கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்ருர் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினல்
ஆற்றுணு வேண்டுவ தில். 1

### குலவித்தை கல்லாமல் வரும்

உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். 2

### அறிவுடைமை

அறிவினல் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினல் மாண்ட தெவனும்—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 3

### வறுமையுறினும் நிலைவழுவாமை

ஒற்கந்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி. 4

### தன்சொல்லே தன்னைத் துயர்ப்படுத்துதல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும். 5

(மூன்றுறை அரையர்)

# சோமேசர் முதுமொழி வெண்பா

## அன்புடைமை

தோன்று வகைகரந்தும் தோன்றலைக்கண் டுள்நெகிழ்ந்தும்
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா--தோன்றுகின்ற
அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 1

## அடக்கமுடைமை

எல்லாம் உணர்ந்தும் வியாதன் இயம்பியவச்
சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா—வல்லமையால்
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 2

## ஒழுக்கமுடைமை

தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல். 3

## பொறையுடைமை

ஒட்டலன்செய் தீமைக் கொருதுநமர் என்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 4

## இன்னா செய்யாமை

பிள்ளையார் வைப்பினில்தீப் பெய்வித்த மீனவன்தீத்
துள்ளுவெப்பு நோயுழந்தான் சோமேசா— எள்ளிப்
பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

(சிவஞான முனிவர்)

# 3. கதைப்பகுதி

## கம்பராமாயணம்

### சுந்தரகாண்டம்

### காட்சிப்படலம்

மாடு நின்றஅம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி இவ்வழி காண்பனேல் தீருமென் சிறுமை
ஊடு கண்டிலென் எனிற்பின்னர் உரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி. 1

என்று சோலைபுக் கெய்தினன் இராகவன் தூதன்
ஒன்றி வானவர் பூமழை சொரிந்தனர் உவந்தார்
அன்ற வாளரக் கன்சிறை அவ்வழி வைத்த
துன்ற லோதிதன் நிலையினைச் சொல்லுவான் துணிந்தாம். 2

துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தா
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள் [ள்
மயிலி யற்குயில் மழலையாள் மானிளம் பேடை
அயிலெ யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள். 3

அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள். 4

கண்டி லன்கொலாம் இளவலும் கனைகடல் நடுவண்
உண்டி லங்கையென் றுணர்ந்திலன் உலகெலாம் ஒறுப்பான்
கொண்டி றந்தமை அறிகில ராமெனக் குழையாப்
புண்டி றந்ததில் எரிநுழைந் தாலெனப் புகைவாள். 5

மாண்டு போயினன் எருவைகட் கரசன்மன் மற்றோர்
யாண்டை என்னிலை அறிவுறுப் பார்களிப் பிறப்பில்
காண்ட லோஅரி தென்றென்று விம்முறுங் கலங்கும்
மீண்டு மீண்டுபுக் கெரிநுழைந் தாலென மெலிவாள். 6

அருந்து மெல்லடை காரிட அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள். 7

வேறு

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போழ்தினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போழ்தினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை உன்னுவாள். 8

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். 9

வேறு

ஆயிடைத் திரிசடை என்னும் அன்பினள்
தாயினும் இனியவள் தன்னை நோக்கினள்
தூயைநீ கேட்டியென் துணைவி யாமென
மேயதோர் கட்டுரை விளம்பல் மேயினள். 10

முனியொடு மிதிலையில் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன ஆய்ந்து நல்குவாய். 11

மறந்தன னிதுவுமோர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தையென் ஆவி நாயகன்
பிறந்தபார் முழுவதும் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந்து டித்ததால். 12

என்றலுந் திரிசடை இயைந்த சோபனம்
நன்றிது நன்றென நயந்த சிந்தையாள்
உன்றுணைக் கணவனை உறுதல் உண்மையால்
அன்றியுங் கேட்டியென் றறைதல் மேயினள். 13

ஆயது தேரினுன் ஆவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிர்தல் உண்மையால்
தீயது தீயவர்க் கெய்தல் திண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள். 14

மன்னவன் தேவியம் மயன்ம டந்தைதன்
பின்னவிழ் ஓதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னிருஞ் சுடர்சுடச் சுறுக்கொண் டேறின
இன்னலுண் டெனுமிதற் கேது வீதெனா. 15

என்றனள் இயம்பிவே றிசைப்பக் கேட்டியால்
இன்றிவண் இப்பொழு தியைந்த தோர்கனா
வன்றுணைக் கோளரி இரண்டு மாறிலாக்
குன்றிடை உழுவையங் குழுக்கொண் டீண்டியே, 16

வரம்பிலா மதகரி யுறையு மவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருங்கி நேர்ந்தன
குரம்பறு பிணம்படக் கொன்ற மாறிலாப்
புரம்புக இருந்ததோர் மயிலும் போயதால். 17

ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவள்
நாயகன் திருமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய். 18

பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே யதன்குறை காணென் றாயிழை
இன்னமுந் துயில்கென இருகை கூப்பினாள். 19

இவ்விடை அண்ணலவ் விராம னேவிய
வெவ்விடை அனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை எய்தினன் அரிதின் நோக்குவான்
நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினான். 20

(கம்பர்)

## நளவெண்பா

வாக்கினன் மன்னவனை யொப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கி னவனல்லன் — பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து. 1

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால் — நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்த னென்றாள் பரிந்து. 2

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான் — செங்கோலாய்!
அந்நாளு நாளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னனூந் தாரானைச் சேர்ந்து. 3

(உடனே இருதுபன்னன், வாகுவனாகிய நளன் தேரோட்ட அதில் ஏறிப் புறப்பட்டான்.)

மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே — தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 4

(இடைவழியில் ஒரு தான்றிமரத்தடியில் நளனைவிட்டுக் கலி நீங்குகின்றான்.)

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி — கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி. 5

(குண்டினபுரம் வந்தடைந்ததும் தமயந்தியின் ஏவலால் ஒரு தோழி நளன்மக்களை அவனிடம் இட்டுச் செல்ல,)

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா — மக்காணீர்

என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 6

மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக — இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது. 7

உங்க ளரசொருவ னாளநீ ரோடிப்போந்
திங்க னுறைத லிழுக்கன்றோ — செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. 8

நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா — எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 9

மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த — என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 10

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றா னுங்குரைத்த வாசகத்தை — முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது. 11

(அதன் மேல் நளன் தன் மெய்யுருக்கொள்ள, கார்க்கோடகன் காட்டில் கொடுத்த ஆடைகளையுடுத்திக் கொள்ளவும்)

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே — அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானக்தேர்ப் பாகன் வடிவு. 12

(புகழேந்திப் புலவர்)

# ஆசிய ஜோதி

## தாயின் துயரம்

காடும் மலையுங் கடந்து வந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்கவந்தேன்
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்தன் உயிரெழச் செய்யுமையா. 1

பெற்ற வயிறு துடிக்குதையா—ஒரு
பிள்ளையும் வேறெனக் கில்லை ஐயா
உற்ற உறவினர் இல்லையையா—என்மீ(து)
உள்ளம் இரங்கிட வேணுமையா. 2

## புத்தர் கூறுதல்

வேறு

தாயேநின் மனக்கவலை—ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்
சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
திரியவும் செய்திடுவேன். 3

நாவிய கடுகுவேண்டும்—அதுவுமோர்
நாவுரி தானும்வேண்டும்
சாவினை அறியாத—வீட்டினில்
தந்ததா யிருக்கவேண்டும். 4

## அவள் கடுகு தேடிச் சென்றுவந்து கூறுதல்

வேறு

என்றுரைத்த மொழிகேட்டவ் வேழை மார்பில்
ஏந்தியணைத் திடுமகனோ டூரில் எங்கும்
சென்றுகடு கிரந்துவெறுங் கைய ளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற்கொண்டு 5

வேறு

ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை

வையகத்தில் பிறப்புளதேல் இறப்புமுண்டு
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்
கையமர்ந்த மகவினையும் கானி லிட்டேன்
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்பதுண்டோ
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன் என்றாள். 6

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

---

## குசேலோபாக்கியானம்

---

### வறுமை

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைநீட்டு
முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைநீட்டு மும்மகவுங் கைநீட்டு
மென்செய் வாளாற்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற் றொருமகவு
புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமக்வெங் ஙனஞ்சகிப்பாள்
பெரிதும் பாவம். 1

அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென
வழுமா லோர்சேய்,
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன் னுயெனப்பொய்
செப்பு மோர்சேய், [ய்
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ தினிலொருசே
முடுகி யீர்ப்ப,
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச் சிந்துதற்கு
நயக்கு மோர்சேய், 2

இவ்வண்ணங் கலாம்விளக்கு மைந்தர்களை நனிநோக்கி
யிரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தா லணைத்துமடித் தலத்திருத்திச்
சிறப்புச் செய்து,

மைவண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம் வெரிங்புறந்தை
வந்து மாம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயந் தோர்விதத்தி
லாற்றல் செய்வாள். 3

அடுத்தமனைச் சிறுரொருவ னின்றுநும தகங்கறியென்
னட்டா ரென்று,
தொடுத்துவினை யினனைலச் சொற்பொருள்யா ததுதானெனச்
சுவைத்தன் னுய்நீ,
எடுத்துரையென் றிடுமகவுக் குரைக்கிலது செய்யெனிலென்
செய்வா மென்று,
மடுத்தவலை தறிந்திலே னெனமற்றொன் றுரைத்ததனை
மறக்கச் செய்வாள். 4

வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண் டோடிவந்து
விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்தின் னுனின்ன
தின்று னென்வாய்
ஊறுதலா லிப்பொழுதே செய்தளித்தி யெனவுடுத்த
வுடைதொட் டீர்க்குந்
தேறுதலில் சிறுமகவை யெடுத்துமார் பிடையணைத்துச்
சிந்தை நோவாள். 5

(வல்லூர் தேவராஜ பிள்ளை)

---

## பாஞ்சாலி சபதம்

### வீமன் சொல்வது

'சூதர் மனைகளிலே — அண்ணே,
தொண்டு மகளிருண்டு
சூதிற் பணயமென்றே — அங்கோர்
தொண்டச்சி போவதில்லை. 1

'ஏது கருதிவைத்தாய்? — அண்ணே,
யாரைப் பணயம்வைத்தாய்?
மாதர் குலவிளக்கை — அன்பே
வாய்ந்த வடிவழகை. 2

'பூமி யரசரெல்லாங் — கண்டே
போற்ற விளங்குகிறான்,
சாமி புகழினுக்கே — வெம்போர்ச்
சண்ட னப் பாஞ்சாலன். 3

'அவன் சுடர்மகளை, — அண்ணே,
ஆடி யிழந்துவிட்டாய்.
தவறு செய்துவிட்டாய்; — அண்ணே,
தருமங் கொன்றுவிட்டாய். 4

'சோரத்திற் கொண்டதில்லை; — அண்ணே,
சூதிற் படைத்ததில்லை ;
வீரத்தி னாற்படைத்தோம்; — வெம்போர்
வெற்றியி னாற்படைத்தோம். 5

'சக்கர வர்த்தியென்றே — மேலாந்
தன்மை படைத்திருந்தோம்;
பொக்கென ஓர்கணத்தே — எல்லாம்
போகத் தொலைத்துவிட்டாய். 6

'நாட்டையெல் லாந்தொலைத்தாய்; — அண்ணே
நாங்கள் பொறுத்திருந்தோம்.
மீட்டு மெமையடிமை — செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம். 7

'துருப தன்மகளைத் — திட்டத்
துய்ம னுடற்பிறப்பை,
இருப கடையென்றாய், — ஐயோ!
இவர்க்க டிமையென்றாய்! 8

'இதுபொ றுப்பதில்லை, — தம்பி
எரித முல்கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் — அண்ணன்
கையை எரித்திடுவோம்'. 9

(சி. சுப்பிரமணிய பாரதி)

# வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

## வீமனும் அனுமனும்

(வீமன் திரௌபதிக்காகச் சுகந்தமலர் பறித்துவரச் செல்கையில் எதிர்த்த காவலாளிகளைக்கொன்று ஆரவாரம் செய்தான்.)

அந்த வோதையப் பொழிலிடைத் தவம்புரிந் தருளும்
மந்த ராசல மனையதோள் மாருதி கேட்டு
விந்த மன்னதிண் புயாசல வீமனுக் கெதிர்போய்
முந்த மற்றவன் வருநெறி யதனிடை முன்னி. 1

குகைத்த டங்கிரி யனையதோள் கொட்டியார்த் துரப்பி
நகைத்து நாகமு நாகமு நடுங்கிட நடந்து
மிகைத்த வாளரி போல்வரும் வீமன்முன் கண்டு
திகைத்து நின்றனன் மறமையும் திறமையு முடையான். 2

அண்டர் தானவர் அரக்கரும் அணுகுறா வனத்தில்
எண்டி சாமுக மெங்கணு மிரிந்திட வார்த்து
மண்டி மேல்வரு மானுட ரடா வென்றான்
சண்ட வாயுவின் தனயனை மற்றவன் தமயன். 3

துன்னும் வெஞ்சிலை வலிகொலோ தோளிணை வலியோ
என்னை நீபுகல் ஆரடா வென்பதிங் கெவனோ
உன்னை நீயறி யாநெறி யுணர்விலா மனிதா
மன்னும் வால்தனைக் கடந்துபோ வல்லையே லென்றான். 4

உரங்கொள் வீமனம் மாருதி யுரைத்தசொற் கேளா
வரங்கொள் வார்சிலை இராகவன் மாப்பெருந் தூதன்
தரங்க வாரிதி தாவுமென் தம்முன்வா லன்றிக்
குரங்கின் வாலிது கடப்பதிங் கரியதோ கூறாய். 5

என்று தன்திருத் துணைவனின் றிசைத்தது கேட்டு
நன்று நன்றுநீ நவின்றது நன்றென நகையாத்
துன்று வார்சிலை மனிதனைச் சுமந்துதோள் வருந்தும்
புன்றொ ழிற்சிறு குரங்கையோ வென்னெடும் புகல்வாய். 6

குரக்கு நாயக னவ்வுரை கூறலும் கேட்டுத்
தரைக்கு நாயகன் தடம்புயம் குலுங்கிட நகையா
அரக்கர் நாயகன் ஊரழ லூட்டியிவ் வகிலம்
புரக்கு நாயகன் தன்னையோ இழித்துநீ புகல்வாய். 7

பின்னும் வார்சிலை இராகவன் பெருமையும் அனுமான்
மன்னு தோளிணை வலிமையும் மாருதி சாற்ற
அன்ன போழ்தினில் அகமகிழ்ந் தருளுடன் நோக்கி
என்ன காரியம் வந்ததிங் கியார்கொனீ யென்றான். 8

தாம மாருதி யுரைத்தசொல் தம்பியும் கேட்டு
நேமி மாநிலம் புரக்கும்நன் னீதிவேல் தரும
நாம நாயகற் கிளையவன் நரனுக்கு மூத்தோன்
வீமன் வாயுவின் புதல்வன்யான் என்றனன் விறலோன். 9

(அதுகேட்ட அனுமான் மகிழ்ந்து)

குந்தி கான்முளை கூறிய வாசகம் கேட்டுப்
புந்தி யாலுயர் அஞ்சனை புதல்வனும் புகல்வான்
சிந்து சீகரச் சிந்துமுன் கடந்து செந்தீயா
லுந்து வாள்வலி நிருதரூர் ஒருங்குசுட் டவனும். 10

அந்த வார்சிலை இராமனுக் கடிமையாய் என்றும்
சிந்தை யாலவன் திருப்பதம் சிந்தைசெய் பவனும்
முந்தை யாகிய வாயுவுக் குற்பவித் தவனும்
இந்த வாழ்வுடை யனுமனே யென்றனன் இகலோன். 11

(உடனே வீமன் அனுமனை வணங்க, அனுமான் அவனை வாரி யெடுத்துத் தழுவி, அவன் வந்த காரண முணர்ந்து 'அது கொள்ளு தற்கு மிகவும் அரியது' என்று சொல்ல வீமன் 'நின்னருளும் என் தோள்வலியும் இருக்கையில் அரிதாவ தேது' எனக்கூறவே அனுமான் மகிழ்ந்து 'வேண்டும் வரம் கேள்' எனப் பணித்தான்)

நெடிய கானகம் நீங்கியாம் நெறியில் நேரலரைக்
கடிய வெஞ்செருப் புரிபெருங் குருதிவெங் களத்தில்
அடிகள் ஆங்கெழுந் தருளிவந் தருச்சுனன் தடந்தேர்க்
கொடியின் மீதுநின் றுவந்துகூத் தாடுதி ரென்றான். 12

(வில்லிபுத்தூராழ்வார்)

# திருவாலவாயுடையார் திருவிளையாடல்

## கிழியறுத்த திருவிளையாடல்

உன்னரும் முன்னோர் காலம்
ஓங்கலங் காரத் தோங்கி
மன்னுமா மதுரை தன்னுள்
வாழும்ஓர் வழுதி வான்தோய்
மின்னுமா மதில்தன் கோயில்
மீமிசை விடுத லத்துத்
தந்நிகர் இல்லா மாதர்
தம்மொடும் உலாவுங் காலை. 1

பேசருந் தகவு டைத்தாய்ப்
பேருளங் கவர்வ தாய
நேசமா தேவி வாய்ந்த
கூந்தலை நீங்கா தோங்கும்
வாசமா ருதவ சத்தால்
வரமனம் அதிச யித்திவ்
ஆசிலா வாசம் பூவோ(டு)
இயைந்ததோ அன்றோ என்றான். 2

ஆயிரம் பசும்பொன் கூட்டி
அடங்கஓர் கிழியாய்க் கட்டி
மாயிரு ஞாலங் காண
மாசில்ஆ சிரியர் வாழும்
சீயவெண் தரளச் செம்பொன்
சித்திரத் தூணப் பத்தித்
தூயமண் டபத்து முன்னர்த்
தூக்கினன் சிறக்க ஆங்கு. 3

(அதனையறிந்த தருமி என்னும் ஏழையந்தணன் அப்பொன்னைப் பெறவிரும்பிக் கடவுளை வேண்டினான்)

வழுத்திய மறையோன் தன்மை
கண்டவன் மனத்தின் ஆசை

ஒழித்திடு வான்வி ரும்பி
உரகமா ணிக்கச் செம்பொன்
குழைக்கிளை காதன் அங்கண்
'கொங்குதேர் வாழ்க்கை' என்றோர்
கிழிக்கிசை கவிதை பாடிக்
கொடுத்தனன் கீர்த்தி வேட்டு. 4

(அக்கவி மன்னன் கருத்துக் கிசைந்ததால் அவன் 'கிழியைப் பெறுக' என்று கட்டளையிட்டான். தருமி மகிழ்ந்து கிழியை எடுக்கச் செல்கையில், சங்கப்புலவருள் தலைவனாகிய நக்கீரன் 'இக் கவி குற்றமுடையது' என்று கூறித் தடுக்க, தருமி மீண்டும் இறைவனிடம் சென்று முறையிட்டான். இறைவன் புலவர் திருவுருக் கொண்டு போந்து)

இயற்சிவன் அவைக்குள் மிக்க
இருங்கவி வாணர் முன்னே
இயற்றமிழ்க் கவிதைக் குற்றம்
எங்ஙனே நவிறி என்னச்
செயற்கருங் கூந்தல் தானும்
சிக்குமேல் நாறு மேழுன்
செயற்குரித் தான செய்யா
விடினெனச் செப்பி னான்முன். 5

மற்றது சொல்லக் கேட்டே
வானுறு தெய்வ மாதர்
கற்றையங் குழற்கும் ஒக்கு
மேயெனக் கடவுள் கேட்பச்
செற்றிநெய்த் திருண்டு நீண்டு
தீண்டுதற் கரிய தான
அற்றருங் குழற்கும் செய்கை
அலாதில இயற்கை என்றான். 6

மொழியறி யாத வெய்ய
மூர்க்கநீ என்ன சொன்னாய்
எழுதரி தாய கோலத்(து)
இயைந்தநம் கவுரி தன்பேர்

அழகமர் கூந்தல் தானும்
அப்படி யேயோ வென்னப்
பிழையிலை என்று கீரன்
முன்னுரை பின்னுஞ் சொன்னான். 7

தீயவெம் புரங்க டந்த
சேவகன் சிறிது சீறிக்
காய்தழல் நெற்றிக் கண்ணைக்
காட்டமுன் கனன்று வேவான்
ஏயெனச் சுற்று முற்றும்
எங்கணும் நெருப்புக் கண்ணே
ஆயினும் குற்றம் குற்றம்
என்றனன் அஞ்சா னாகி. 8

வளந்தரு மடம்நாண் முன்னா
வருங்குணம் நித்த மாபோல்
உளங்கவர் இருள்வா சம்தே(சு)
உரியன நித்த மாகும்
தெளிந்தறிந் திலையோ பேதாய்
சிற்புட்ப கேசி யென்று
குளிர்ந்தமா மறைகள் நான்கும்
கூப்பிடு கின்ற வாறு. 9

(இறைவன் நெற்றிவிழிக் காற்றாது கீரன் பொற்றாமரைக் குளத்தில் விழ இறைவன் மறைந்தருளினார். பின்னர்த் தருமி)

விரைவொடுஞ் சென்றி யாரும்
வியப்பாகன் கிழிய றுத்துப்
பரமனை யடைந்து வாழ்த்திப்
போந்துதன் பண்பிற் கொத்த
திருவினும் உருவம் மிக்க
தேவியை மணந்து ஞாலம்
பரவவாழ்ந் திருந்தான் ஊழி
பழுதறு சிறுவர்ப் பெற்றே. 10

(பெரும்பற்றப்புலியூர்நம்பி)

# பெரிய புராணம்

## தடுத்தாட் கொண்டது

ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்தே
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலுமய னுக்குமரி யாரொருவர் வந்தார். 1

கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. 2

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென வையமுற வெய்தி. 3

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களு மென்றான்
முந்தைமறை யாயிர மொழிந்ததிரு வாயான். 4

என்றுரைசெ யந்தணனை யெண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
நன்றுமது நல்வரவு நங்கடவ மென்றே
நின்றதிவ ணீர்மொழிமின் நீர்மொழிவ தென்றார். 5

ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான். 6

வேறு

என்றா னிறையோ னிதுகேட்டவ ரெம்ம ருங்கும்
நின்றா ரிருந்தார் இவனென்னினைந் தான்கொ லென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார்திரு நாவ லூரரான்
நன்றால் மறையோன் மொழியென்றெதிர் நோக்கி நக்கான். 7

நக்கான் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத்துகில் தாங்கி மேற்சென்
றக்கா லமுன் றந்தை தன் றந்தையா ளோலை யீதால்
இக்கா ரியத்தைநீ யின்றுசிரித்ததென் னேட வென்ன. 8

வேறு

ஓலைகாட் டென்று நம்பி யுரைக்கநீ யோலை காணற்
பாலையோ அவைமுன் காட்டப் பணிசெயற் பாலை யென்ற
வேலையி னுவ னூரர் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தானை வலிந்துபின் தொடர லுற்ருர்.9

மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
விறைவனைத் தொடர்ந்து பற்றி யெழுதுமா ளோலை வாங்கி
அறைக்கழ லண்ணல் ஆளா யந்தணர் செய்தல் என்ன
முறையெனக் கிறி யிட்டான் முறையிட்டான் முடிவி லாதான்.10

அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் பற்றி
யொருமுறை முறையோ வென்ன வுழைநின்ருர் விலக்கி யிந்தப்
பெருமுறை யுலகி லில்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர் செப்பு மென்ருர். 11

என்றதும் நின்ற ஐயர் இங்குளேன் இருப்பும் சேய
தன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க அறத்தா றின்றி
வன்திறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினுன் அடிமை யென்ருன். 12

ஆட்சியி லாவ ணத்தி லன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றி லொன்று காட்டுவா யென்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தே னென்றனன் மாயை வல்லான். 13

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கி
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்ருன். 14

'அருமறை நாவ லாதி சைவனு ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியா னு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னெ ழுத்து.' 15

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
யருமுனி நீமுன் காட்டு மாவண மதனி லெங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய துனக்கிவ் வூரில்
வருமுறை மனையு நீடு வாழ்க்கையும் காட்டு மென்றார். 16

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை
ஒருவரும் அறியீ ராகில் போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார். 17

எம்பிரான் கோயி னண்ண விலங்குநூல் மார்ப னெங்கள்
நம்பர்தம் கோயில் புக்க தென்கொலோ வென்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ(டு)
உம்பரின் விடைமேல் தோன்றி யவர்தமக் குணர்த்த லுற்றார். 18

'முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம்' என்றார். 19

என்றெழும் ஓசை கேளா வீன்றவான் கனைப்புக் கேட்ட
கன்றுபோற் கதறி நம்பி கரசர ணாதி யங்கம்
துன்றிய புளக மாகத் தொழுதகை தலைமே லாக
மன்றுளீர் செயலோ வந்து வலியவாட் கொண்ட தென்றார். 20

அன்பனை யருளி னோக்கி அங்கண ரருளிச் செய்வார்
'முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாத லாலே
யென்பெயர் பித்த னென்றே பாடுவாய்' என்றார் நின்ற
வன்பெருந் தொண்ட ராண்ட வள்ளலைப் பாட லுற்றார். 21

---

(சேக்கிழார்)

# மனோன்மணீயம்

முதற்களம்

இடம்: பாண்டியன் அரண்மனை] [காலம்: காலை

(சீவகனும் குடிலனும் மந்திராலோசனை செய்தல்)

**குடிலன்:**—மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி சீரெலாம்
அறியினும் சேரன் வெறிகொளும் சிந்தையன்
ஆதலின் வதுவைக் கவன்தான் இசைவனே,
யாதோ, எனவென் மனந்தான் அயிர்க்கும்;
அவன்குணம் ஒருபடித் தன்றே; அவனுளம்
உவந்தன வெல்லாம் உஞற்றுவ னென்றே
நாட்டுளார் நவில்வது கேட்டுளாய் நீயும்.

**சீவகன்:**—ஆம்! ஆம்! அறிந்துளேம். ஏமாப் படைந்த
தன்னுளம் வியந்தவை இன்னவென் றில்லை.
* * * *
ஒருவன் தனதடி யிணையடைந் துறவே
பெரிது விரும்பினும் பெருமைபா ராட்டுவன்;
மற்றோர் மனிதன் சற்றுமெண் ணாதே
செருப்பால் மிதிக்கினும் விருப்பா யிருப்பன்,
மலரிடில் காய்வன்; பரலிடில் மகிழ்வன்;
பெரியோர் சிறியோர் பேதையர் அறிஞர்
உரியோர் அயலோர் என்றவன் ஒன்றும்
உன்னான். ஆயினும் இன்னவை யாவும்
பிரபுத் துவமலால் பிறவல குடிலா!

**குடிலன்:**—அடியேற் கவ்விடத் தையமொன் றுளது.
முடிபுனை மன்னரிற் கடிநகர்ச் செருக்கும்,
இணையிலாச் சேனையும், ஈறிலா நிதியும்,
துணிவுறு உளனும், பணிகிலா உரனும்
உனைவிட எவர்க்குள? ஓதுவாய். உன்வயின்
தினையள வேனுஞ் சேரா தாகும்
ஒருகுணம் பிரபுத் துவமென யாரே

உரைதர உன்னுவர்? ஒவ்வுவ தெவ்விதம்?
மலையன் தந்தைகீழ்த் தாய்க்கீழ் வளர்ந்தவன்
அலனெனுந் தன்மைநீ ஆய்ந்திலை போலும்.
நன்றுதீ தென்றவன் ஒன்றையும் நாடான்
என்றிடில் நாஞ்சொலும் நன்மையும் எங்ஙனம்
நாடுவன், எனவெனக் கோடுமோர் நினைவே.

**சீவகன்:**—ஒக்கும்! ஒக்கும்!நீ உரைத்தவை முற்றும்.
குலகுரு கூறுதல் கொண்டில மென்னில்
நலமன் றென்றே நாடி யனுப்பினேம்.
நயந்தில னாகில் அவன்விதி. நமக்கென்?
இயைந்த கணவர்வே றாயிரம் காண்குதும்.

**குடிலன்:**—அதற்கேன் ஐயம்? ஆயிரம்! ஆயிரம்!
இதுமாத் திரமன் றிறைவ! சேரன்
சென்றவர்க் கெங்ஙனந் தீதிழைப் பானோ
என்றே என்மனம் பதறும். ஏவுமுன்
உரைக்க உன்னினேன் எனினும் உன்றன்
திருக்குறிப் பிற்கெதிர் செப்பிட அஞ்சினேன்.

**சீவகன்:**—வெருவலை குடிலா! அரிதாம் நமது
தூதுவர்க் கிழிபவன் செய்யத் துணியும்
போதலோ காணுதி, பொருநைத் துறைவன்
செருக்கும் திண்ணமும் வெறுக்கையும் போம்விதம்!
விடுவனோ சிறிதில்? குடில! உன்மகற்குத்
தினைத்துணை தீங்கவன் செய்யினென் மகட்குப்
பனைத்துணை செய்ததாப் பழிபா ராட்டுவன்.

(ஒற்றன் வர)

**ஒற்றன்:**— மங்கலம்! மங்கலம்! மதிகுல மன்னவா!

**சீவகன்:**—எங்குளார் நமது தூதுவர்?

**ஒற்றன்:**— இதோ! இம்மாலையில் வருவர்.

(சுந்தரம்பிள்ளை M. A.)

# இரட்சணிய யாத்திரிகம்

---

## இரட்சணிய சரித்திரப் படலம்

### (திருக்குமாரர் பேதுரு முதலிய சீடர்களைப்பிரிதல்)

ஆவது கருதிய அமலன் பேதுரு
சேவலின் றிரவிலே தெருளக் கூவுமுன்
மூவிசை எனைமறு தலிப்பை முற்றுநீ
மேவுறு மெய்மையை விளம்பி னேனென்றார். 1

இன்னன நிகழ்வுழி இருந்த சீடரும்
தன்னிக ராயதற் பரனுந் தம்முனம்
மன்னுபஸ்காவெனும் மறியைத் துய்த்துமே
முன்னிய மப்படி முடித்திட் டாரரோ. 2

வேறு

இனிமைதரு பழரசபாத் திரமேந்தித் துதிசெலுத்தி
இதிலே நீங்கள்
அனைவீரும் பருகுமின்மற் றிதுபுதிய உடம்படிக்கைக்
கமையச் சிந்தும்
எனதிரத்தம் பாவமன்னிப் பிதனுலே யுண்டாகும்
இனியிப் பானந்
தனைநுகரேன் என்பரம தந்தையிராச் சியந்தனினீர்
சாரு மட்டும். 3

என்றுதிரு வாய்மலர்ந்தன் புருவாக எழுந்தருளி
ஏசு நாதர்
ஒன்றியதம் அடியரொடும் பாவிகளுக் காயிரங்கி
ஒருபே ரூன
தன்திருமைந் தனைக்கொடுத்திவ் வளவாக உலகிலன்பு
சார்ந்த தேவை
நன்றுநினைத் தேத்தியொரு தோத்திரகீ தமுமிசையாய்
நவிற்றி னூரால். (வித்துவான் H. A. கிருஷ்ண பிள்ளை) 4

## மணிமேகலை

### பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

மருளறு புலவ! நின் மலரடி யதனை
அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய,
அருளறம் பூண்ட ஒருபேர் இன்பத்(து)
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள்,
அரவக் கடலொலி **யசோதரம்** ஆளும்
**இரவிவன்மன்** ஒருபெருந் தேவி
அலத்தகச் சீறடி **அமுத பதி**வயிற்(று)
**இலக்குமி** என்னும் பெயர்பெற்றுப் பிறந்தேன்,
**அத்தி பதி**யெனும் அரசன் பெருந்தேவி
**சித்திபுரம்** ஆளும் **சீதரன்** திருமகள்
**நீல பதி**எனும் நேரிழை வயிற்றில்
காலைஞா யிற்றுக் கதிர்போல் தோன்றிய
**இராகுலன்** தனக்குப் புக்கேன், அவனொடு
பராவரும் மரபில்நின் பாதம் பணிதலும்
"எட்டிரு நாளிலிவ் விராகுலன் தன்னைத்
திட்டி விடம்உணும்; செல்லுயிர் போனால்
தீயழல் அவனொடு சேயிழை மூழ்குவை;
ஏது நிகழ்ச்சி ஈங்கின் றாதலின்,
**கவேர கன்னிப்** பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப்(பு) எய்துதி;
அணியிழை! நினக்கோர் அருந்துயர் வருநாள்
**மணிமே கலாதெய்வம்** வந்து தோன்றி
அன்(று) அப் பதியில் ஆரிருள் எடுத்துத்
தென்திசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்

* * * *

பிறவிப்பிணி மருத்துவன் இருந்(து)அறமுரைக்கும்
திருந்(து)ஒளி ஆசனம் சென்றுகை தொழுதி!

(சீத்தலைச் சாத்தனார்)

# சிலப்பதிகாரம்

## நாடுகாண் காதை
## (கவுந்தியடிகள் வம்பரைச் சபித்தல்)

மாதரும், கணவனும், மாதவத் தாட்டியும்
தீதுதீர் நியமத் தென்கரை எய்திப்
போதுசூழ் கிடக்கைஓர் பூம்பொழில் இருந்துழி,
வம்பப் பரத்தை வறுமொழி யாளனொடு
கொங்கலர் பூம்பொழில் குறுகினர் சென்றோர்
"காமனும் தேவியும் போலும் ஈங்கிவர்
ஆரெனக் கேட்(டு)ஈங்கு அறிகுவம்" என்றே
"நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடன்
ஆற்றுவழிப் பட்டோர் ஆர்!" என வினவ, "என்
மக்கள் காணீர்; மானிட யாக்கையர்;
பக்கம் நீங்குமின்; பரிபுலம் பினர்." என
"உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ? கற்றறிந் தீர்!" எனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் **கண்ணகி** நடுங்க,
"எள்ளுநர் போலுமிவர் என்பூங் கோதையை!
முள்ளுடைக் காட்டில் முதுநரி யா"கெனக்
**கவுந்தி** யிட்டது தவந்தரு சாபம்
கட்டிய தாதலின் பட்டதை அறியார்
குறுநரி நெடுங்குரல் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி
செய்தவத் தீர்!நும் திருமுன் பிழைத்தோர்க்(கு)
உய்திக் காலம் உரையீ ரோ," என
"அறியா மையினின்(று) இழிபிறப் புற்றோர்
பன்னிரு மதியம் படர்நோய் உழந்தபின்
முன்னை உருவம் பெறுக,ஈங் கிவர்." என.

(இளங்கோவடிகள்)

# 4. வருணனைப்பகுதி

## தாமிரவர்ணியாறு

அமிழ்தினுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையமின் றிழிந்து விலையுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக் காழ்அகிற்
சந்தன டவியும் சாடி வந்துயர்
குங்குமம் முறித்துச் சங்கினம் அலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து, குளம்பல நிரப்பி,
இருகரை வாரமும் திருமகள் உறையுளாப்
பண்ணும்இப் புண்ணிய தாமிர வர்ணி. (மனோன்மணீயம்)

## திருக்குற்றால வளம்

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே.
(திரிகூடராசப்பக் கவிராயர்)

## நாஞ்சிநாட்டு வளம்

வயலெல் லாம்நல் லறற்புனல் பாயும்
வரம்பெல் லாமிள வால்வளை மேயும்
அயலெல் லாம்செந்நெல் காய்க்குலை சாயும்
அருகெல் லாமிரை யன்னங்க ளாயும்
புயலெல் லாம்மலர்ப் பூம்பொழில் தோயும்
பொழிலெல் லாங்கனி போகங்கள் ஈயும்
இயலெல் லாம்தெரி செண்பக ராமன்
ஏந்தல் வாழ்நாஞ்சி நாடெங்கள் நாடே.
(செண்பக மாறன் பள்ளு)

## அழகு

மொட்டுக்குள் ளேயழகு—சும்மா
மூடிக் கிடக்குதம்மா—கதிர்
பட்டு மலர்ந்து விட்டால்—அது
பரிம ளிக்குதம்மா!

சிந்தனைக் குள்அழகு—நாளும்
தேங்கிக் கிடக்குதம்மா—மனப்
பந்தனை யற்று விட்டால்—அது
பரந்து தாவுதம்மா!

பாரினி லேயழகு—கண்
பார்வையைக் கொஞ்சுதம்மா—அதன்
போர்வையை நீக்கி விட்டால்—தெய்வப்
பொலிவு காணுதம்மா!

மோனத்தி லேயழகு—சக்தி
மூண்டு ததும்புதம்மா—ஆத்ம
ஞானம் பிறந்து விட்டால்—அது
நல்லொளி யாகுமம்மா!

(யோகி சுத்தானந்த பாரதியார்)

## சரத்காலம்

பொன்னொளியும் மரகதத்தின் பொலிவும் செந்நெற்
புலன்காட்ட அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரற்கால மேகந் தன்னைப்
பருதிவிரைந் தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மறந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங்களித்துக் குரலெழுப்பித் திரியு மாதோ.

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

# 5. பல்சுவைப்பகுதி

### உலகம் உண்டு

உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே, முனிவிலர்,
அஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 1

### கற்றோரைக் கற்றோரே காமுறுவர்

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்
தருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்
சான்றோர் பால ராப;
சாலார் சாலார் பால ராகுபவே.

(புறநானூறு)

### மடக்கு

அஞ்சு வணத்தின் ஆடை யுடுத்தாள் அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேக மிகுத்தாள் அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரி யத்தாள், அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளி ராரத் தணிகொண்டாள்.

(கம்பர்)

## அற்புதத்திருவந்தாதி

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவா யறிகின்ருன் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளும் தானே **யவன்.**

**அவனே** யிருசுடர்தீ யாகாச மாவான்
அவனே புவிபுனல்காற் ருவான்—அவனே
இயமான னட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனுகி நின்ருனும் **வந்து.**

**வந்தி**தனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ—வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீரும் சென்னிப் **பிறை.**

**பிறை**யும் புனலும் அனலரவும் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனும்—கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டே மென்றென் றிருக்குமே
எந்தையா வுள்ள **மிது.**

**இது**வன்றே ஈசன் திருவுருவம் ஆமா(று)
இதுவன்றே என்றனக்கோர் சேமம்—இதுவன்றே
மின்னும் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னும் சுழல்கின்ற திங்கு.

(காரைக்காலம்மையார்)

## திருவாரூர் நான்மணிமாலை

### வெண்பா

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—ஆரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. 1

### கட்டளைக் கலித்துறை

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாணால் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரே. 2

### ஆசிரிய விருத்தம்

என்பாக நகுதலையோ டெழிலாக அணிந்தகம
லேச! மற்றுன்
தன்பாகம் இடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்தும்
தலைவி பாகத்
தன்பாக நின்திருநோக் கவைதோய்ந்தும் திருநிறம்வே
றாகை யாலப்
பொன்பாகம் இதுவெனவும் நின்பாகம் இதுவெனவும்
புகலொ ணாதே. 3

### ஆசிரியப்பா

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பில்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பில்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவின் கருவிரல் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல எடுத்துவாய் மடுப்பது,
மானுட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதத்(து)
அந்தண் ஆரூர் எந்தைஎம் பெரும!
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசில்

கங்குலும் பகலும் கலந்தினி திருந்தாங்(கு)
இடம்வலம் பொலிந்த இறைவியும் நீயும்
நடுவண் வைகும் நாகிளங் குழவியை
ஒருவிரின் ஒருவிர் உள்ளநெக் குருக
இருவிரும் தனித்தனி ஏந்தினிர் தழீஇ

முச்சுடர் குளிப்ப முறைமுறை நோக்கி
உச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகும்
எழுதாக் கிளவியின் ஏழிசை பழுத்த
இழுமென் குரல மழலைத் தீஞ்சொல்
சுவைஅமு துண்ணும் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
அருள்பெற அமைந்ததோர் அற்புத முடைத்தே.

(குமரகுருபர சுவாமிகள்)

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

### வருகைப் பருவம்

இழுமென் அருவி சொரியும் இமய
முதல்வி புதல்வன் வருகவே,
இயலும் நடையும் வடிவும் அழகும்
எழுத அரியன் வருகவே,

ஒழுகு கருணை முழுகு கமல
வதனன் வருக வருகவே,
ஒருவன் இருவ ரொடுகை தொழுநல்
உபய சரணன் வருகவே,

விழுது விடுவெண் நிலவு பொழியும்
நகையன் வருக வருகவே,
விளரி பயிலும் அளியும் ஞிமிறும்
விரவு குரவன் வருகவே,

மழலை முதிர முதிரு மதுர
வசனன் வருக வருகவே,
வளமை தழுவு பருதி புரியின்
மருவு குமரன் வருகவே.

## மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

### தாலப் பருவம்

தென்னன் தமிழின் உடன்பிறந்த
சிறுகால் அரும்பத் தீஅரும்பும்
தேமா நிழல்கண் துஞ்சுமிளஞ்
செங்கட் கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புல் கறிக்கல்லா
இளங்கன் றுள்ளி மடித்தலநின் (று)
இழிபால் அருவி உவட்டெறிய
எறியும் திரைத்தீம் புனல்பொய்கைப்
பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்
பொற்றா தாடிக் கற்றைநிலாப்
பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த
பொன்போல் தொடுதோடு அடிப்பொலன் சூட்(டு)
அன்னம் பொலியும் தமிழ்மதுரைக்(கு)
அரசே தாலோ தாலேலோ
அருள்சூல் கொண்ட அங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ.

(குமரகுருபர சுவாமிகள்)

## திருவரங்கக் கலம்பகம்

### மறம்

பேசவந்த தூத!செல் அரித்த ஓலை செல்லுமோ ?
பெருவரங்கள் அருள்,அரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா !

வாசலுக் கிடும்படல் கவித்துவந்த கவிகை,மா
  மகுடகோடி தினைஅளக்க வைத்தகாலும் நாழியும்;
வீசுசா மரம்குடில் தொடுத்தகற்றை சுற்றிலும்
  வேலியிட்ட தவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே.

### அம்மானை

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலிஅலர்காண் அம்மானை
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்
சானகியைக் கொள்வரோ தாரமாய் அம்மானை
தாரமாய்க் கொண்டதும்ஓர் சாபத்தால் அம்மானை.

(பிள்ளைப்பெருமாளையங்கார்)

## திருக்குற்றாலக் குறவஞ்சி

---

### குறத்தி குறிசொல்லுதல்

என்னகுறி யாகிலும்நான் சொல்லுவே னம்மே—சதுர்
  ஏறுவேன், எதிர்த்தபேரை வெல்லுவே னம்மே;
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநா னம்மே;—எந்தன்
  வயிற்றுக்கித் தனைபோதக் கஞ்சிவா ரம்மே;
பின்னமின்றிக் கூழெனினுங் கொண்டுவா வம்மே-வந்தால்
  பெரியதொரு குடுக்கைமுட்ட மண்டுவே னம்மே;
தின்னஇலை யும்பிளவும் அள்ளித்தா அம்மே—கப்பல்
  சீனச்சரக் குத்துக்கிணி கிள்ளித்தா அம்மே.

(திரிகூடராசப்பக் கவிராயர்.)

### எலிக்கும் புலிக்கும் சிலேடை

பாயுங் கடிக்கும் பசுகருவா டும்புசிக்கும்
சாயுங்குன் றில்தாவிச் சஞ்சரிக்கும்—தோயுபுகழ்
தேங்குமுத்து ராமலிங்கச் சேதுபதிப் பூமானே !
வேங்கையொடு சிற்றெலியா மே.

(மாம்பழக் கவிச்சிங்க நாவலர்)

## தொழில்

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைநெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே! 1

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே! 2

(சுப்பிரமணிய பாரதியார்)

## பாண்டியன் பரிசு

[கதிரைவேலரசனும், வேழ மன்னனும் வாட்போர் புரிந்துகொண்டிருந்தபொழுது நரிக்கண்ணன், பின்னால் மறைந்திருந்து கதிரைவேலரசனை வேலால் முதுகில் குத்தி வீழ்த்திவிட்டு ஓடித் திரைக்குள் மறைந்துகொண்டான். அப்பொழுது அரசி அங்கே வந்து பிணத்தைக் கண்டாள்.]

### வீர மாது

கொலைவாளுங் கையுமாய் அரசி வந்தாள்;
கொண்டவனைப் பிணமாகக் கண்டாள். ஆங்கே
நிலைகலங்கி நின்றிட்டாள். "வீழ்ந்த தோநின்
நெடுமேனி! வீழ்ந்ததோ கதிர்நா டிந்நாள்!

இலைநீதான் எனவறிந்தால் அஞ்சி வாடும்
இந்நாட்டு மக்களையார் தேற்று வார்கள்;
கலைந்ததுவோ என்காதல் ஓவி யந்தான்''
எனக்கூறிக் கட்டழகன் உடலை அள்ளி. 1

அணைத்திட்டாள்; மலர்க்கையால் கன்னம் உச்சி
அணிமார்பு தடவினள்; ஈட்டி யாலே
தணல்போலும் புண்பட்ட முதுகு கண்டாள்;
தலைகுனிந்தாள்; அப்பிணத்தை நிலத்தில் போட்
இணைபிரியா மானமதும் எம்மை விட்டே [டாள்.
ஏகிற்றோ ஐயகோ! முதுகு காட்டத்
துணிந்ததுவோ தமிழாநின் தமிழ நெஞ்சம்
தூயநின் மூதாதை என்மூ தாதை, 2

அனைவருள்ளும் எவரேனும் பகைவன் வாளை
அருமார்பில் முன்தோளில் ஏற்ற தின்றித்
தினையளவுந் திரும்பிப்பின் முதுகில் ஏற்ற
சேதியினை இவ்வையம் கேட்ட துண்டோ?
எனக்கூவித் திரும்புங்கால் எதிரில் நின்ற
இளவேழ நாட்டரசன் இரக்க மிஞ்ச,
''மனைவிளக்கே நின்துணைவன் கதிரை வேலன்
வாட்போரை என்னோடு நிகழ்த்துங் காலை. 3

முகமறைத்த ஒருதீயன் எவனோ பின்னே
முடுகிவந்து நடுமுதுகின் எறிந்தான் ஈட்டி
திகைத்தேன்நான்; சாய்ந்தான்அம் மறவோர் மன்ன
திகழிமய மலைபோலும் அவன்கொண் டுள்ள [ன்;
புகழ்க்கென்ன ! உன்குடிக்கு வாய்த்த மானம்
போனதெனப் புலம்புவதும் என்ன? பெண்ணே!
அகத்துன்பம் நீங்கியிரு. செல்க உன்றன்
அரண்மனைக்கே'' என்றுரைத்தான். சென்றாள்
[பெண்ணாள். 4

(பாரதி தாசன்)

## நினைவும் முடிவும்

இருளும் அகலும் இரவியும் தோன்றும்
பொருவிலித் தாமரைப் பூவும் மலரும்
மலரும் பொழுதிவ் வன்சிறை நீங்கி
உலகில் எங்கும் உலவித் திரிந்து
பூவெழு பற்பல புதுவனம் கண்டு
நாவெழு சுவைதரு நறைமிக வுண்டு
வாழ்குவன் என்றொரு மதுகரம் இருப்பத்
தாழ்மத வேழமொன் றூழ்கய மிறங்கிப்
பாசிலைப் பூவெலாம் பறித்து
வீசி யெறிந்து வெறிகொண் டதுவே.

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

## பொங்கல்

பொங்கல் எனும் பொழுதில்—இன்பம்
பொங்குது துன்பங்கள் மங்கி மறைந்திடும்
மங்களச் சொல் அதிலோர்—தெய்வ
மந்திரம் உண்டெனச் சிந்தை களித்திட
எங்கள் தமிழ் நாட்டில்—மிக்க
ஏழையும் செல்வரும் தோழமை எய்திடும்
இங்கிதம் கண் டிடும்நாள்—பலர்
எங்கும் புகழ்ந்திட உங்கள் குடித்தனம்

பொங்குக பொங்குக பால்!

(நாமக்கல், வே. ராமலிங்கம் பிள்ளை)

---

## திருமந்திரம்

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

(திருமூலர்)

---

# 1. உலகப் பெரியார்

[பண்டித, எஸ். கேசவராமசாமி]

ஆசியாக் கண்டத்தில் ஏசுநாதர் பிறந்தார்; முகமதுநபி தோன்றினர். புத்தபிரான் அவதரித்தார்; திருக்குறள் மலர்ந்தது; கீதையெழுந்தது பாரத பூமியில். இருள் குறைந்தது; அருள் நிறைந்தது மக்கள் உள்ளத்தில். இந்தியத்தாய் இணையற்றவள். ஆத்ம ஞானிகள் அவதரித்தனர்; வீரர்கள் பிறந்தனர்; புலவர்கள் உற்பவித்தனர் அவள் வயிற்றிலிருந்து; தோன்றித் தோன்றி மறைந்தனர் பொய்யுடலை நீத்து. புகழுடம்பு அழிவற்றதன்றோ? பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட செய்தி இது.

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்பதாம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாந்தேதி இந்திய மக்களுக்கு—ஏன்? உலகத்திற்கே—ஒரு புண்ணிய தினம். ஒவ்வொரு இந்தியனது உள்ளத்திலும் அத்தினம் ஆழப்பதிந்து நிற்கும். இந்திய மகன் தலைநிமிர்ந்து நடக்கத் தானூன்றிய நாள். அந்நாளில் தோன்றியது ஓர் காந்தி. ஏசுநாதர் தோற்றத்தை விளக்கியதும் காந்தி. பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவரது ஏற்றத்தை விளக்கியதும் காந்தி. இதில் வியப்பென்ன?

**போர்பந்தர்** பம்பாய் மாகாணத்திலுள்ளது. ஒரு சிற்றரசின் தலைநகர். அந்நாட்டு முதன் மந்திரி **கரம்சந்த் காந்தி.** வருவாய் நிறைந்தவர்; குணத்தில் சிறந்தவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர். அவரது வாழ்க்கைத்துணை **புத்தலிபாய்,** உத்தமப் பத்தினி; தனக்கென வாழாத் தனிமருந்து; பிறர்க்கின்னா செய்யாப் பெருந்தகை. உயர் குணங்கட்கெல்லாம் உறைவிடம். அவர் உதரத்திலிருந்து மோகனப் புன்னகையுடன் வெளிவந்தது ஒரு பேரொளி. **காந்தி—மோகன தாஸ் கரம்சந்த் காந்தி** — அல்ல — **மகாத்மா காந்தி** — ரவீந்திரர் தந்தது இப்பெயர் — இந்தியர்க்கு ஏற்றமளித்த பெயர்; என்றும் அழியாத பெயர்.

தாயைப்போலப் பிள்ளை. பிறர்க்கின்னா செய்யாமை, தன்னலங் கருதாமை, வாய்மை என்பன சீரிய லட்சியங்

கள்; புத்தரின் பொன்மொழிகள்; எம்மதமும் ஒப்புக் கொள்வன. இவை பிறவிக் குணங்களாய் அமைந்தன காந்தியடிகட்கு. அன்னையின் உபதேசமும் அவையே. அடிகள் ஆப்பிரிக்காக் கண்டத்திற்குச் சென்றார்; இந்தியர் படும் அவதியைக் கண்டார்; அதனைப் போக்க உறுதி கொண்டார்; அரசாங்கத்தை எதிர்த்து நின்றார்; இறுதியில் வெற்றி கண்டார். எளிதில் அல்ல. 1893-முதல் 1914-ஆம் ஆண்டு வரை ஆப்பிரிக்கா வாழ்க்கை. பெரும் போர் நிகழ்ந்தது. படைவலியாலோ? அன்று; அன்று. புதுவிதப் போர்; உலகம் அதுவரை கண்டறியாத போர்; அறப்போர் நடத்தினர் அடிகள். ஆயுதம்? அன்பு. இடையிடையே நேர்ந்த இன்னல்கள் பலப்பல. உரிமைக்கு ஆபத்து; உயிருக்கு ஆபத்து. பகைவரால் மட்டுமல்ல; நண்பரும் நலிவு செய்தனர். பல்லுடைந்தது; பவிசழிந்தது; 'அரே ராம்', என்றது தவிர எதிர்ப்பில்லை. சிறைச்சாலை உறை விடமாயிற்று. எனினும் என்? உறுதி தளர்ந்திலது. இறுதி யில் வெற்றி; அறம் அளித்த வெற்றி; அன்புதந்த வெற்றி.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை"

"தெய்வலோகத்தைக் கைப்பற்றுதற்கும் அன்பு வலியே சிறந்தது; ஞானவலி அல்ல." இஃது அவர் தம் குடும்பக் கோட்பாடு. இறுதிவரை விடாது கைக்கொண்ட ஆயுதம். இந்தியர் பதிவின்றி வதியும் உரிமைபெற்றனர் ஆப்பிரிக்காவில். காந்தியாரின் உள்ளொளி ஊற்று, பொங் கிப் பெருக்கெடுத்தது. இந்தியப் பெரும் போருக்குப் பயிற் சியுமாயிற்று.

காந்தியடிகளின் இளமைப் பருவம் விளக்கமற்றிருந் தது. ஆங்கிலமோகம் உச்சநிலையிலிருந்த காலம் அது. தாய் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது. அடிகளும் ஆங்கிலம் பயின்றார். தாய்மொழிப் பயிற்சி அதிகமில்லை. தலைசிறந்த அறநூல்களையும், அரும்பெருங் காவியங்களையும் தாய் மொழியில் படிக்கத் தகுதிபெற்றாரில்லை. ஆங்கில மொழி பெயர்ப்புக்களையே படிக்கமுடிந்தது. 'மூலத்தின் சுவை காண முடியவில்லையே' என்று வருந்தினர் பிற்காலத்தில். தாய் மொழிப்பற்று, தலைதூக்கியெழுதற்கு அதுவே முதற்காரண

மாய் அமைந்தது அடிகட்கு.—தமிழர் அனைவர்க்கும் அஃது அமைவதாகுக—சில்லாண்டுகள் சென்றன. ஆங்கிலப்ப டிப்பு முடிந்தது. வழக்கறி தொழில் கல்விக்காக இங்கி லாந்து செல்லத் தீர்மானித்தார் ஏனையரைப்போல. தாயா ருக்குத் தருமசங்கடமாகத் தோன்றிற்று. மேனாடு சென்று திரும்பிய மாணக்கரின் மாறுபாட்டை நன்கு உணர்ந்திருந் தார் அவர்; எனவே, மகனாரின் எதிர்கால நிலைநோக்கி அஞ்சினார்; மகனை அழைத்தார்; அரவணைத்தார்; அற வுரைகள் பகர்ந்தார்; மூன்று வாக்குறுதிகள் வாங்கிக் கொண்டார். மதுவருந்தாமை, பிறனில் விழையாமை, புலான் மறுத்தல் என்பன அவை. அடிகட்கு இளம் பருவத்தே மணமுடிந்திருந்தது.

என்னே அன்னையின் தகவு! அடிகள் இருபது வயதில் இங்கிலாந்து சென்றார்; பாரிஸ்டர் தேர்வுக்குப் படித்தார்; பட்டம்பெற்றார்; அணுவளவேனும் பிசகினாரில்லை அன் னைக்கு அளித்த வாக்குறுதியினின்று; 1891—ம் ஆண்டில் தாய்நாடு திரும்பினார்; பம்பாய் உயர் நீதிமன்றத்து வழக்கறி ஞரானார். உள்ளதை இல்லையென்பர்; இல்லதை உள்ள தென்பர் வழக்கறிஞர். அடிகள் அறவே வெறுத்தார்; விடுத் தார் அத்தொழிலை. அடுத்தார் ஆப்பிரிக்காவை; எடுத்தார் இந்தியர் கட்சியை; தொடுத்தார் தருமப்போரை; முடித்தார் தமது பணியை. 1914—ம் ஆண்டு இந்தியாவில் மிளிர்ந்தது அந்தச்சோதி, பல நட்சத்திரங்களுக்கு இடையே.

அக்காலத்தே இந்தியாவின் இரு கண்களாய்த் திகழ்ந் தனர் **தாதாபாய் நௌரோஜியும், கோபாலகிருஷ்ண கோகலேயும்.** பின்னவர் மகாபண்டிதர்; இயற்கைக்கேற்ற கல்வி இந்தி யர்க்கு வேண்டுமென்று முதன் முதற் கூறியவர்; அத் துறையிலே மக்களைத் திருப்ப அரும்பாடு பட்டவர்; முன்ன வர் சிறந்த அரசியலறிஞர்; அடிகட்கு அடியெடுத்துக் கொடுத்தவர்; இன்னா செய்யாமையின் ஏற்றத்தை உணர்ந் தவர்; உபதேசித்தவர்; அரசியல் துறையில் புகுத்தியவர்; அடிகட்கு ஆதரவளித்தவர்; "அன்பின் வழியது உயிர் நிலை" என்று அனுபவத்தில் காட்டிய பெருமகனார். அவ் விருவரது துணைகொண்டு காந்தியடிகள், அரசியல் வாழ்க் கையில் தலையிடலானார். சிறிது காலத்தில் அவ்விருவரும்

மறைந்தனர். **பால கங்காதர திலகரும்** சுமை நீக்கம் பெற்ருர். அதனை அடிகளே தாங்க நேர்ந்தது.

அண்ணலுக்கு வாழ்க்கைத் துணையாய் அமைந்தவர் அன்னை **கஸ்தூரிபாய்.** ஆப்பிரிக்கப் போரில் அருந்துணை புரிந்தவர்; அநுபவம் பெற்றவர்; கொண்டான் குறிப் பறிந்தொழுகுங் குணவதி. அடிமைத்தளையறுக்கத் தொடங் கிய அறப்போரில் அவர் ஆற்றிய பணி அளப்பரிது. **பண்டித மோதிலால் நேரு, பண்டித மதன்மோகன மாளவியா, சித்தரஞ்சன தாஸ், அலி சகோதரர்கள், சரோஜினி தேவி, லாலா லஜபதிராய்** முத லிய பெருந் தலைவர்களின் அருந்துணை கிடைத்தது. இந்திய மக்கட்குச் சுதந்திரத்தில் தணியா வேட்கை பிறந்தது; ஆங்கில ஆட்சியின் கொடுமை எரித்தது அவர்களை. கிலாபத் கிளர்ச்சி வலுத்தது. எரிமலை குமுறிற்று. வெடிகுண்டு, விடப்புகை, அணுக்குண்டு எனத்தக்க ரௌலட் சட்டம், பஞ்சாப் படுகொலை, அடக்குமுறைச் சட்டங்கள் உள்பட எல்லாம் எதிர்த்து எழுந்தன ஒன்றன் பின் ஒன்ருக. எதிர்த்தாக்குதல் ஆரம்பமாயிற்று. ஆயுத பலத்தாலல்ல — இரசாயன பலத்தால் அல்ல — ஒத்துழை யாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், வரிகொடா இயக் கம், மதுவிலக்கு இயக்கம், கதராடையியக்கம் முதலிய மோகனக்கணைகளால். அறவாழிகள் கிளம்பின. எதிரிகளின் அடிவயிற்றில் பாய்ந்தன; திணறவடித்தன; திக்குமுக் காடச் செய்தன. **பண்டித ஜவஹர்லால் நேரு, சுபாஷ்சந்திரபோஸ்,** முதலிய இளஞ்சிங்கங்கள் துள்ளி எழுந்தன. **இராஜேந்திரப் பிரசாத், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், சர்தார் வல்லபாய் படேல்** முதலான மதிவலிபடைத்த முதுபுலிகள் உறுமின. அரசாக்கினை எழுந்தது; ‘நாமார்க்கும் குடியல்லோம்’ என் றனர். கொடுந்தண்டனை பிறந்தது; ‘நமனை அஞ்சோம்’ என்று விடைகிடைத்தது. சிறையிலடைத்தனர்; ‘நரகத்தி லிடர்ப்படோம்’ என்ற ஓசை கிளம்பிற்று. காவற்கூடங்கள் நிரம்பின.

இங்கிலையில் இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்கிற்று. பலவந்தக் கலவரம் கூடாதென்பது காந்தி மகான் கட்டளை. பிறர்க்கின்னு செய்யாதே! — பகைவரே எனினும் இன்னலுற்றபொழுது இடையூறு செய்யாதே! —

ஆகா! — எத்தகைய பெருங்குணம்! வெடித்தது எரிமலை; வீழ்ந்தது படைவலி; வாழ்ந்தது அன்பு; அறுந்தது அடிமைத் தளை; நிறைந்தது அமைதி; வென்றது அஹிம்சை; நின்றது சத்தியம்; ஒரு துப்பாக்கி வெடிக்கவில்லை. துளி இரத்தஞ் சிந்தவில்லை. எதிர்த்தெறிந்த குண்டுகள் வெடித்தில; வெற்றுவேட்டாயின; அன்பு வெள்ளத்தின் தண்மையில் சில்லிட்டுப் போயின; பகைவரது உடலம் சிலிர்த்தது; உள்ளம் வியர்த்தது. ஒப்புக்கொள்ள நேர்ந்தது. எதை? தோல்வியை. முழங்காலளவு முழத்துண்டு உடுத்திய முதுகிழவர் வாகை சூடினர். 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் நாளில் காந்தீயம் தழைத்தது. அசோகச் சக்கரந்திகழும் மூவண்ணக்கொடி வானளாவிப் பறந்தது— பறக்கின்றது. என்னே அன்பின் திறம்! என்னே ஆத்மிக பலம்!

சிலரது போதனை அவரது இனத்தார்க்கு மட்டும் ஏற்றதாய் அமையும்; ஒரு காலத்திற்கே ஒத்ததாய்ப் பொருந்தும். காந்தியடிகளின் போதனையோ, தமது இனத்தாரின் யுத்திபுத்திகளுக்கு ஏற்றதாய், காலதேச வர்த்தமானங்களுக்கு ஒத்ததாய், உலக மக்கள் அனைவர்க்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது. ஒருசார்பற்று, உலகப் பொது நன்மைக்காகவே உழைத்த மோகனதாஸ் கரம்சந்த் காந்தியை **மகாத்மா, உலகப் பெரியார்** என்று போற்றுவதும், **புத்ததேவர், ஏசுநாதர், முகம்மதுநபி** முதலியோருடன் ஒப்பிட்டுக் கூறுவதும் மிகையாகா; சாலப் பொருந்தும். மதுவருந்தாதே, தீண்டாமையை விலக்கு, தனக்கென வாழாதே, பிறர்க்கின்னா செய்யாதே, பகைவரிடத்தும் அன்புகாட்டு, வாய்மை கடைப்பிடி என்பன காந்தி மகான் கட்டளைகள். வாழ்க மணிக்கொடி; வாழ்க தமிழ் மணம்! வாழ்க காந்தீயம்! வாழ்க! வாழ்க!

---

## 2. பழந்தமிழர்

[யோகி சுத்தானந்த பாரதியார்]

நமது நாடு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு பழம்பெரு நாடு. குமரிக்கு அப்பாலும் தமிழ்நாடு நீண்டு கிடந்ததாகச் சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். இது குமரிக் கண்டம் என்று சொல்லப்படுகிறது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள"

(சிலப்பதிகாரம்)

இதனால் மேற்சொன்ன பழந்தமிழகம் கடல் கொள்ளப் பட்டது எனத் தெரிகிறது. **அடியார்க்கு நல்லார்** உரைப்படி, பன்மலைநாடு பஃறுளியாற்றைத் தெற்கே கொண்டது. ஏழுதெங்கநாடு, ஏழுமதுரைநாடு, ஏழுமுன்பாலைநாடு, ஏழு பின்பாலைநாடு, ஏழுகுன்றநாடு, ஏழுகுணகரைநாடு, ஏழு குறும்பனைநாடு ஆகிய நாற்பத்தொன்பது நாடுகளுடன் குமரிக்கொல்லம் முதலிய பன்மலைநாடு, காடு, நதி, பதி, நீர்க்குமரி எல்லாம் கடலுக்கு இரையாயின. அதைப்பற்றி இப்போது கவலைப்பட்டுப் பயனில்லை; இனிப் பஃறுளியாற்றின் ஒரு துளியும் நமது வயல்களில் பாயாது. காலவெள்ளத்தின் போக்கைக் கண்டறிவார் யார்? நம் முன்னேயுள்ள தமிழ் நாட்டைச் செல்வச் சித்திரமாளிகையாக்குவோம்.

முன்சொன்னதினின்று "தமிழர், தமிழ் நாட்டுக்கே உரியவர்; வேறு எங்கிருந்தும் வந்து குடியேறினவர் அல்லர்" என்று தெரிந்து கொள்வோம். "ஆதிமனிதர் உண்டானதே தமிழ்நாடு" என்று புலவர் ஆராய்கின்றனர்.

தமிழர் இன்ன வகையைச் சேர்ந்தவரென்று பலர் பலவிதமாக ஆராய்கின்றனர். தமிழர் **எகிப்து** சாதியைச் சேர்ந்தவரென்று சில ஐரோப்பியர் முடிவு கட்டுகின்றனர். ஏனெனில் இரண்டு சாதியாரிடையேயும் சில ஒற்றுமைகள் உள்ளனவாம். இமயமலைக்கு அப்பாலிருந்து வந்த **மங்கோலிய** வகுப்பினரே தமிழர் என்பது ஒருவர் ஆராய்ச்சி. மற்றுஞ் சிலர் தமிழரைத் **துரானியர்** மரபென்பர். துரானிய நாடுகளில்

வழங்கும் மொழிகளில் தமிழ்மொழிக் கலப்புள்ளதென்று **கால்டுவெல்** (Caldwell) ஆராய்கிறார். அக்காள்—இக்கன், அப்பா-இபா, அம்மா-அம்மா, ஆத்தாள்-ஆத்தா, ஆம்-ஆம், கட்டு-கோட்டு, கேள்-குலென், கோ-கோ (அரசன்) தீ-தீ, தோல்-தௌல், ஞாயிறு-ஞார், மனை-மன், மரம்-மொர், முதலிய மொழிகள் துரானிய மொழிகளில் தமிழ்க் கலப்புள்ளதைக் காட்டுகின்றன. ஆரியர் தமிழர் இருவரும் நடு ஆசியாவிலிருந்து வந்தனர்; தமிழர் முன்னே இந்தியாவிற்கு வந்து குடியேறினர்; ஆரியர் பிறகு வந்தனர் என்பது மற்றொரு முடிபு. பெலுசிஸ்தானத்தில் வழங்கிய **பிரக்வீ** (Brahvi) மொழியில், பல தமிழ் ஒலிகள் கலந்திருப்பதால் தமிழர் அந்நாட்டில் சிலகாலம் இருந்து வந்தனர் என்பார் சிலர். தமிழர் **பாபிலோனியர்** மரபினர் என்று ஒரு சாரார் கொள்ளுவர்.

*                    *                    *                    *

இவ்வாறு ஆராய்ச்சியாளர் பலவிதமாகச் சொல்லுகின்றனர். ஆனால் இந்த அனுமானங்களுக்கு மேற்பட்ட உண்மையொன்றுள்ளது; தமிழர் உலகின் தொல்பெரு மக்கள்; **தமிழர் நாகரிகம் ஒரு காலத்தில் பரதகண்டம் முழுவதும் பரவியிருந்தது; திபேத்து பர்மா, பெலுசிஸ்தானம், மலேயா, நடுக்கடல் நாடுகள் இவற்றிலெல்லாம் தமிழர் நாகரிகம் பரவியிருந்ததற்குப் புறச் சான்றுகள் உள்ளன.** தமிழர் கப்பல் செல்லாத்துறை கிடையாது. தமிழர் வாணிபம் மேற்கிலும் கிழக்கிலும் தழைத்தோங்கியதற்கு ஏராளமான அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உள்ளன. இவ்வாறு, பல நாடுகளுக்குச் சென்ற தமிழர் வாயிலாக அந்தந்த நாடுகளில் தமிழர் பேச்சு, நடையுடை பாவனைகள் பரவியிருத்தல் வேண்டும். அதன் அறிகுறிகளே நாம் மேலே காட்டிய புலவர் ஆராய்ச்சிகள். ஆகையால் தமிழர் "இங்கிருந்து வந்தார், அங்கிருந்து வந்தார்" என்பதை மறப்போம்; தமிழர் நமது நாட்டிற்கே யுரியவர்; அவர் "எங்கும் சென்று தமது நாகரிகத்தைப் பரப்பினர்," என்பதே பொருந்தும். கைத்தொழில், கப்பல் வாணிபம் ஆகியவற்றால் தமிழர் பெயர் உலகெங்கும் தெரிந்தது. இங்கே பல ஏலேல சிங்கர்கள் இருந்தனர். அரபியர், யவனர் முதலியோருடன் பாண்டிய நாடு வியாபாரம் செய்தது.

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

யவனர் பெரிய கப்பல்களில் தங்கம் கொண்டு வந்து, மிளகை வாங்கிச் செல்வார்கள். தங்கம் மதுவகை, விளக்குகள், பாவைகள் முதலியன ஏற்றிய கப்பல்கள் மேற்கு நாடுகளிலிருந்து தமிழ்த் துறைமுகங்களுக்கு வரும்: தமிழ் நாட்டினின்று முத்து, மயிலிறகு, மிளகு, ஏலம், அகில் முதலியவற்றை வாங்கிச் செல்லும். "யவனர் இயற்றிய வினைமாண் பாவை கையேந்தும் அகல்" நிறைய நெய் சொரிந்து விளக்கேற்றுவாராம் தமிழர். "யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்" என்று புறநானூறு கூறுவதினின்று, மேனாட்டிலிருந்து நம் நாட்டிற்குத் திராட்சாபானம் வந்ததெனத் தெரிகிறது. தமிழருக்கும் உரோமருக்கும் நட்புறவு மிகுந்தது. பாண்டிய மன்னன் உரோம நாட்டரசனை **சீசருக்கு** கி.மு. இருபதாம் ஆண்டு தூதனுப்பினான். காவிரிப் பூம்பட்டினத்தில் உரோமரும், கிரேக்கரும் குடியேறித் தமிழரசர்க்குப் படை வீரராகவும், வாயிற் காப்பாளராகவும் ஊழியஞ் செய்தனர். தமிழ் நாட்டில் உரோம நாணயங்கள் கிடைக்கின்றன. வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கை காவேரி தீரங்களின் விளைவும், ஈழ நாட்டு உணவுகளும், பர்மாவில் உண்டாகும் வாசனைச் சாமான்களும் தமிழரது வாணிபச் சரக்குகள். மேற்கும் கிழக்கும் ஒரு காலத்தில் தமிழர் கப்பலை எதிர் நோக்கி வாழ்ந்தன. அத்தகைய தமிழ் மரபினர் இன்று உலக சமுதாயங்களின்முன் தாழ்ந்த நிலையில் இருப்பானேன்?

தமிழா உணர், உணர்! தலை நிமிர்! சிங்கம் போல் நட! உனது பழம் பெருமையை நினை! ஆனால் பழம்பெருமையில் சொக்கி மயங்கிக் கும்பகர்ண யோகம் பண்ணாதே! **நான் தமிழன்! முற்காலம் எனது தமிழர் உலக நாகரிகத்தில் முன்னணி வகித்தனர்; இன்று என் மரபும் மொழியும் தாழ்த்தப்பட்டுள்ளன!** என் பதை யுன்னி முதுகில் சவுக்கடி பட்டதுபோல உணர்ந்து துள்ளியெழுந்து, **தமிழ்க் கொடியை வானளாவ உயர்த்துவேன்** என்னும் வீறுகொண்டு, முன்வந்து பணி செய், பணி செய்!



F. V பத்திராவதி இரும்புத் தொழிற்சாலை பக்கம் 49

# 3. கருப்பொன் தொழில்

[ஆசிரியர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்]

**இரும்பு, ஈயம், செம்பு, தங்கம், வெள்ளி** இவ்வைந்தும் ஐம்பொன் எனப்படும். இவற்றுள் இரும்பு அதன் தகுதிநோக்கிக் **கரும்பொன்** எனவும் வழங்கப்படுகின்றது. உலகில் மிகவும் உபயோகமுள்ள உலோகம் இரும்பு ஒன்றே. இரும்பு இல்லையேல் தொழிற்சாலைகள் ஏது? யந்திரம் ஏது? புகை வண்டி, மோட்டார், கப்பல் முதலியன ஏது? ஏதும் இல்லை. வீடுகள் கட்ட இரும்பு வேண்டும்; விளக்குவைக்க இரும்பு வேண்டும்; உடைகள் தைக்கவும் இரும்பு வேண்டும். ஊசி முதல் உயர்ந்த பொறிகள்வரை அனைத்திற்கும் இரும்பு அவசியமாயிருக்கிறது.

முற்காலத்தில் நமது நாட்டில் இரும்புத்தொழில் பல் வேறிடங்களிலும் பரவியிருந்தது. இரும்புச் சுரங்கங்கள் பலப்பல இருந்தனவென்று தெரிகிறது. **கடாரத்தில்** (பர்மா) உற்பத்தியான இரும்பு, மிகமிகச் சிறந்ததென்று பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

> " இமயத்தில் பிறந்த வயிரச்சாதியும்
> கடாரத்து இரும்பொடு கையகத்தடக்கி........ "

என்னும் அடிகள் **கொங்குவேள் மாக்கதையில்** காணப்படுகின்றன. டெல்லிக்கு அணித்தேயுள்ள **குதுப்மீனர்** என்னும் இரும்புத் தம்பம் சற்றேறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிருமிக்கப்பட்டதேனும், இன்றுவரை துரு வேறிக் கெட்டுப்போகாமலிருக்கிறது. இஃதொன்றே இந்திய நாட்டு இரும்பின் மேன்மைக்கும் தொழில் திறமைக்கும் போதிய சான்றாகும். " இந்திய நாட்டுச் சத்திரம் வேண்டுமோ " என்று, பிற நாடுகளில் பகைத்தவர் ஒருவர்க்கொருவர் வஞ்சினங் கூறிக்கொள்ளுதல் வழக்கமாம். தற்காலத்தில் **அமெரிக்காவில்** இரும்பு அதிகமாக உருக்கி எடுக்கப்பட்டுப் பெரிய யந்திரங்களின் உதவியால் மக்களது தேவைக்குரிய பொருள்கள் அத்தனையும் ஆக்கப்படுகின்றன. அவை நமது நாட்டிலும் இறக்குமதியாகிக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டமையின், யந்திர சாதனங்களற்ற நம் நாட்டில்

இரும்புத் தொழில் கைவிடப்பட்டது. எனினும், விழிப் புற்றுக் கைத்தொழிலின் முக்கியத்தை யுணர்ந்து கொண்ட இந்திய மக்கள், இப்பொழுது இரும்புத் தொழிலுக்குப் புதிய முறையில் புத்துயிரளிக்கத் தொடங்கியுள்ளனர்.

பாரத நாட்டில் இரும்புக்கனிகள் பலவிடங்களில் இருப் பதாக ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருப்பினும், சில இடங்களில்தான் இரும்பு உருக்கி எடுக்கப்படுகிறது. கனிகளிலிருக்குங் கரும்பொன்னைக் கட்டியாக உருக்கி எடுப்பதற்கு நிலக்கரியும், சுண்ணும்பும் வேண்டும். நிலக்கரிச் சுரங்கமும், இரும்புக்கனியும், சுண்ணும்புப் பாறையும் அண் மையில் அமைந்திருந்தால், அவ்விடத்தில் பெரிய தொழிற் சாலைகள் ஏற்படுத்தலாம்; குறைந்த செலவில் பெருவாரி யாக இரும்பை உருக்கியெடுத்து, வேண்டியபொருள்களைச் செய்து பிறநாட்டினருடன் போட்டியிட்டு, மலிந்த விலைக்கு விற்று, மிகுந்த லாபத்தையடையலாம். நம் நாட்டில் அத்தகைய வாய்ப்பு இன்னும் சரியாக அமையவில்லை. **நிசாம்** சமஸ்தானத்திலும் **பீகார், ஓரிசா** மாகாணங்களிலும் நிலக்கரி அகப்படுகிறது. அவ்விடங்களில் இரும்புச்சத்து அதிகமாகக் கிடைக்கவில்லை; இரும்பு உள்ள இடத்தில் நிலக் கரியில்லை; நிலக்கரியுள்ளவிடத்தில் இரும்பில்லை. இரும் புள்ள இடத்திற்கு நிலக்கரியும், சுண்ணும்பும் கொண்டு போய்ச் சேர்க்க வீண் காலதாமதமும் பணச் செலவும் அதிகரிக்கின்றன. ஆயினும் பீகார், ஒரிசா, வங்காள மாகாணங்களில் இரும்பை உருக்கி யெடுப்பதற்கான இயற்கை வசதிகள் ஓரளவு அமைந்துள்ளன.

மைசூர் நாட்டில் **பத்திராவதி** என்னுமிடத்தில் ஓர் இரும் புத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. துங்கபத்திரா நதி யின் கிளைநதிகளிலொன்ருன பத்திராவதி நதியின் பக்கலில் அமைந்துள்ள நகரம் பத்திராவதி. அந்நகரத்திற்குச் சற்று தூரத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த **பாபா பூடன்** என்ருேர் மலைத்தொடர் இருக்கிறது. அதிலுள்ள **கெம்மங்கண்டிக்** குன்றுகளில் இரும்புச்சத்து மிகுதியாக அகப்படுகின்றது. குன்றுகளின் மேலுள்ள இரும்புச்சத்து, வெட்டி யெடுக்கப்பட்டு, கயிற்றின் மூலமாக அடிவாரத் திற்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து ரயில் மார்க்க

மாக அது பத்திராவதித் தொழிற்சாலைக்குக் கொண்டுவரப் படுகிறது. பத்திராவதிக் கருகில் நிலக்கரி கிடையாது. ஆதலின், நிலக்கரிக்குப் பதிலாக மரக்கட்டைகளை எரித்து எடுத்த கரியால் இரும்பு உருக்கி எடுக்கப்படுகிறது. ஒரு டன் இரும்புச் சத்தை உருக்கி எடுப்பதற்கு ஒரு டன் நிலக் கரியாவது, மரக்கரியாவது வேண்டும். ஐந்து டன் எடை யுள்ள மரக்கட்டைகளை எரித்தால் ஒரு டன் மரக்கரி கிடைக் கும். பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையில் நாள் ஒன் றிற்கு எண்பது டன் இரும்புச் சத்து உருக்கப்படுகிறது. அதற்கு நானூறு டன் விறகு செலவாகிறது.

பத்திராவதி நதியின் இரு கரையிலும் சுமார் 350 சதுர மைல் பரப்புள்ள பெருங்காடுகள் உள்ளன. அவற்றை மைசூர் அரசாங்கத்தார் இரும்புத் தொழிற்சாலைக்கு விறகு கொடுப்பதற்கென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். காட்டி லாக்கா அதிகாரிகள், அக்காடுகளைக் கண்ணுங்கருத்து மாகக் கவனித்துக்கொண்டு வருகிறார்கள்; தொழிற்சாலை உபயோகத்திற்காக மரங்கள் வெட்டப்பட்ட இடத்தில் உடனே வேறு மரங்களை வைத்து உற்பத்தி செய்கின் றனர். இவ்வாறு அழித்தலும், ஆக்கலும் அடுத்தடுத்து நடைபெறுவதால், தொழிற்சாலைக்கு வேண்டிய மரங்கள் அவ்வப்போது தட்டின்றிக் கிடைக்கின்றன.

இந்த இரும்புத் தொழிற்சாலை, மைசூர் அரசாங்கத்தில் திவானாக இருந்த **சர். எம். விசுவேசுவரையா** என்ற தலைசிறந்த இஞ்சினீயரின் அரிய முயற்சியால் 1923-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அதன் பரப்பளவு சுமார் ஐம்பது ஏக்கர். சர். விசுவேசுவரையா, திவானாக இருந்த காலத்தில் மைசூர் சமஸ்தானம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்தது. அவர் செய்த நன்மைகளில் பத்திராவதி இரும் புத்தொழிற்சாலை நிறுவியதும் ஒன்று.

மேற்கூறிய தொழிற்சாலை, மதுசாரம் சுத்தஞ் செய்யுமிடம், கீல் தயாரிக்குமிடம், பொதுவார்ப்புச் சாலை, குழாய் வார்க்கும் பகுதி, யந்திர சாலை என ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகு தியிலும் ஒவ்வொரு வேலை நடைபெறுகின்றது.

இரும்புச் சத்தை உருக்கித் தனியிரும்பெடுப்பதற்கு நெருப்பு வேண்டும். மரக்கட்டைகளை எரிப்பதால் உண்டாகும் சூட்டைக் காட்டிலும் மரக்கரியை எரிப்பதால் தாக்கும் சூடு அதிகமானது. ஆகையால் தொழிற்சாலையில், மரக்கட்டைகளைச் சுட்டுக் கரியாக்க ஒரு முறை கையாளப்படுகின்றது. மூடியிட்ட பெரிய இரும்புப்பாத்திரத்தில் மரக்கட்டைகளைப்போட்டு, பாத்திரத்திற்குச் சூடு உண்டாக்கினல், சில மணி நேரத்தில் மரக்கட்டைகள் எரிந்து கரியாக மாறிவிடுகின்றன. கட்டை கரியாகமாறும்பொழுது, கட்டையிலுள்ள திரவப்பொருள் ஆவியாகி, இரும்புப் பாத்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள குழாயின் வழியாக மேலேசென்று வேருெரு பாத்திரத்தை அடைந்து, அங்கே குளிர்ச்சிபெற்று, மறுபடியும் ஒரு வகைத் திராவகமாகிறது. மரக்கட்டைகளை மேற்கூறிய முறைப்படி எரிப்பதால், மரச்சத்துச் சேதப்படாமல், கரியும், ஒரு வகைத் திராவகமும் கிடைக்கின்றன. இந்தத் திராவகத்திலிருந்து **கீலும், மதுசாரமும்** செய்யப்படுகின்றன. மதுசாரம் சுத்தஞ்செய்யுமிடத்தில், மேற்கூறிய திரவப் பொருளிலிருந்து மதுசாரம் தயாரிக்கும் வேலை நடைபெறுகின்றது. அவ்வாறே கீல் தயாரிக்கும் பகுதியில் கீல் தயாரிப்பு வேலை நடக்கின்றது. கட்டையைக் கரியாக்கும்போது கிடைக்கும் **உபவிளைவுகளில்** கீலும், மதுசாரமும் முக்கியமானவை.

இரும்புச் சத்தையும், மரக்கரியையும் சம எடையாகச் சேர்த்து அவற்றோடு சுண்ணம்பையும் கலந்து உலையிலிட்டு எரித்தால், சுண்ணம்பு இரும்புச் சத்தோடு கலந்துள்ள மண்ணை வேறுபிரித்துவிடும். நான்கு மணி நேரத்தில் இரும்பு நன்ருக உருகிக் குழம்பாகிவிடும். மண்ணும் சுண்ணம்பும் கலந்து இரும்புக் குழம்பின்மேல் அழுக்குப்போல மிதக்கும். இரும்புக்குழம்பு கனமானதால் அடியில் தங்கிவிடும். பின்னர், உருகிய குழம்பு, அது தேங்கிநிற்கும் பாத்திரத்தின் பக்கத்திலுள்ள சிறு துவாரத்தின் வழியாக வெளியில் விடப்படும். அவ்வாறு வெளியில் விடப்பட்ட இரும்புக் குழம்பு, மணல் தரையில் தோண்டிவைக்கப்பட்டுள்ள குழிகளில் விழுந்து,குளிர்ந்து இரும்புக் கட்டிகளாக இறுகிவிடும். இவ்வேலை பொதுவார்ப்புச் சாலையில் நடைபெறுகின்றது. கட்டியிரும்பு மிகவும் சுத்தமானது; விலையேறப்பெற்றது.

கட்டியிரும்பை வார்ப்பிரும்பாகவும் எஃகாகவும் மாற்றலாம். பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையில் வார்ப்பிரும்பு மட்டுமே செய்யப்படுகிறது. குழாய் வார்ப்புப் பகுதியில், கட்டியிரும்பை வார்ப்பிரும்பாக மாற்றிப் பலதரப்பட்ட இரும்புக் குழாய்கள் வார்க்கப்படுகின்றன. அதற்குத் தேவையான நவீன யந்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு இரண்டு அங்குலம் முதல் முப்பத்து மூன்று அங்குலம் வரை குறுக்களவுள்ள குழாய்கள் வார்க்கப்படுகின்றன. வாங்குவோருடைய தேவைக்குத் தக்கபடியும் குழாய்கள் தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன. **சோலாப்பூர், பங்களூர், பவநகர்** முதலான நகரங்களுக்கு மைல் கணக்கான நீளமுள்ள இருப்புக் குழாய்கள் இந்தத் தொழிற்சாலையிலிருந்து செய்து கொடுக்கப்பட்டன. சாதாரணக் கட்டியிரும்பு அவ்வளவு அதிகமாக விற்பனையாகாது. உற்பத்திக்குத் தக்க விலைகொடுத்தும் வாங்கப்படுவதில்லை. ஆகையால் பத்திராவதியில் தயாரிக்கப்படும் கட்டியிரும்பின் பெரும் பகுதி, குழாய்கள் வார்க்க உபயோகிக்கப்படுகின்றது. இதனால் யந்திரசாலையில் யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பத்திராவதி இரும்பும், அங்கு தயாரிக்கப்படும் இரும்புப் பொருள்களும் ஆரம்பநிலையிலிருப்பதால் அவ்வளவு அதிகமான லாபத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், அத்தொழில் நிகழ்ச்சியினிடையே உண்டாக்கப்படும் உபவிளைவுப் பொருள்களே மிகுந்த வருமானத்தைக் கொடுக்கின்றன. அவ்வுப விளைவுகளில் கீலும் மதுசாரமும் முக்கியமானவை. மதுசாரம் ரசாயன சம்பந்தமாகப் பலவகையில் பயன்படுகின்றது. கீலின் உபயோகம் அனைவர்க்குந் தெரிந்ததே.

பத்திராவதித் தொழிற்சாலை நிருமாணத்திற்காக இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு இரண்டு கோடி ரூபாய். இன்னும் இருபது லட்சம் செலவழித்து ஓர் எஃகுத் தொழிற்சாலையும் அதனுடன் இணைக்க மைசூர் அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கின்றனர். மேலும், மரக்கட்டையைக் கரியாக மாற்றும்போது கிடைக்கின்ற திரவப்பொருளிலிருந்து **சாராய காமிலம்** என்னும் ஒருவகைத் திராவகம் தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் அங்கே நடைபெறு

கின்றன. நமது நாட்டில் டாட்டா தொழிற்சாலை மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது. இவைபோல மற்றும் பல இரும்புத் தொழிற்சாலைகள் இந்தியா நாட்டில் விரைவில் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம். ரயில்வே இஞ்சின், மோட்டார், வானவூர்தி, கப்பல், தொழிற்சாலை யந்திரம் முதலிய சகல யந்திரங்களும் இங்குப் பெருவாரியாகச் செய்வதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இந்திய இரும்புத்தொழில் இணையற்று விளங்குவதாக.

---

## 4. இல்லக்கிழத்தி

[வித்வான் ஆர். இலக்குமியம்மாள்]

மனைவி, இல்லாள், தலைவி, கிழத்தி என்பன ஒரு பொருள்குறித்த சொற்கள். குடும்பப் பராமரிப்பிற்கு வேண்டிய பொருள்களைத் தேடித்தருவது தலைவனது தொழில். அதனை அளவறிந்து செலவிட்டுக் குடும்பத்தை நடத்துவது தலைவியின் தொழில். நாட்டிற்குத் தலைவி அரசி; வீட்டிற்குத் தலைவி மனைவி. இல்லாள் என்னும் பதத்தில் 'வீட்டை ஆள்பவள்' என்ற பொருள் தொனிப்பது காண்க. நாட்டை நல்ல முறையில் அரசாள எவ்வளவு திறமையும், கவனமும் வேண்டுமோ அவ்வளவு திறமையும், கவனமும் வீட்டுக் காரியங்களை நடத்துதற்கும் வேண்டியிருக்கின்றன. முன்னது பெரியது; பின்னது சிறியது. பரப்பு வேற்றுமையேயன்றித் திறமைவேற்றுமையில்லை. ஒரு வீட்டில் குழந்தைகளைக் கவனிக்கச் செவிலியிருக்கலாம்; உணவு தயாரிக்கச் சமையற்கார னிருக்கலாம்; பிற காரியங்களைச் செய்ய வேலைக்காரர்களிருக்கலாம். எனினும் அவர்களனைவரும் தத்தமக்குரிய பணிகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று கண்காணிக்கத் தகுதிவாய்ந்த தலைவி யிருக்கவேண்டிய தவசியமல்லவா? அத்தலைவி குடும்ப நிருவாகத்திற்கு வேண்டிய பல்வகைத் தொழில்களுந் தெரிந்த திறமைசாலியாக இருப்பின், ஏவலரை ஒழுங்குறப் பணியாற்றச் செய்து குடும்ப வாழ்க்கையை இனிது நடத்தலாம். இன்றேல், பணிமக்கள் வேலைக்கு வருவதும், வீண்பேச்சுப் பேசுவதும்

வீடு திரும்புவதும், மாத முடிவில் சம்பளம் பெறுவதுமாகக் காலங் கழிப்பர். குழந்தைகள் கவனிப்பாரற்றுத் திரிவார்கள்; வீடும் பொருள்களும் சுத்தமாயிரா; உணவு, குறித்த காலத்தில் கிடைக்காது; உணவுப் பொருள் முதலியவை திருட்டுப் போய்விடும்; அளவுக்குமிஞ்சிய செலவேற்பட்டுக் குடும்பம் சீர்கேடடையும். இல்லத் தலைவி திறமைசாலியாயிருப்பின் வீடு பீடுபெறும்.

> "இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
> இல்லவள் மாணுக் கடை?"

—என்பது வேதவாக்கு. தூய்மை, உணவு, குழந்தை வளர்ப்பு, வரவறிந்து செலவிடல் எனும் நான்கு பண்புகளும் குடும்பத்தலைவியிடம் முக்கியமாக அமைந்திருக்கவேண்டியவை. தலைவி அகத்தும் புறத்தும் தூய்மையுடையவளாயிருக்க வேண்டும்.

> "புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்"

வீடும், வீட்டிலுபயோகிக்கப்படும் பொருள்களும், வீட்டைச் சுற்றிய வெளியிடமும், உடையும், உணவும், உடலும் அழுக்கின்றிச் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக்கொள்வது தலைவியின் கடமை. துர்நாற்றமும், ஈ, கொசு முதலிய பிராணிகளும் நோய்க்கு அடிப்படையானவை. குப்பையிருக்குமிடத்தில் கொசுகும், ஈக்களும் இடையறாது வசிக்கும்; துர்நாற்றம் தொடர்ந்து வீசும். இவ்வளவும் நிறைந்துள்ள வீட்டில் குடியிருக்கும் மக்களின் உடல்கள் நோய்க் கொட்டில்களே. நோயற்ற வாழ்வன்றோ குறைவற்ற செல்வம்? மேலும் தலைவியின் எண்ணமும், சொல்லும், செயலும் அழுக்கின்றிச் சுத்தமாயிருத்தல் வேண்டும். நல்லதையே எண்ணவேண்டும்; உள்ளதையே சொல்லவேண்டும்; நன்மையையே செய்யவேண்டும். குழந்தைகளும், கணவனும், உற்றோரும், மற்றோரும் தன்னை விரும்பி மதிக்கும்படி நடந்துகொள்ளவேண்டும் தலைவியாயிருப்பவள். கற்பு நெறியினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, உண்டி, இன்னுரை முதலியவற்றால் தனது கணவனை உபசரித்து, நல்லொழுக்கத்தால் தேடிக்கொண்ட புகழை நழுவவிடாமல் காத்து, நற்

குண நற்செய்கைகளில் சிறிதுந் தவறுதலின்றி ஒழுகுப வளே உத்தம இல்லக்கிழத்தியாவாள், என்று நாயனர் நயம்பட நவின்றுள்ளார்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

காலத்திற்கும், இடத்திற்கும், தகுதிக்கும் ஒத்த உணவைத் தயாரித்து, மக்களுக்கும் மணளனுக்கும் இனிது அருத்தி அவர்களை வளர்க்குங் கடமையும் தலைவியைச் சார்ந்ததே. சீவ சத்துள்ள பதார்த்தங்களையும், சீரண சத்துள்ள பொருள்களையும் கலந்து சமைத்து அருத்தினல் அவ்வுணவு உடலுக்கு உரமாகும். இதுபோன்ற சமையல் நுட்பங்களையும் இல்லத்தரசி நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும்.

குழந்தைகளை வளர்ப்பது ஒரு சிறந்த கலையாகும். தொட்டிலை ஆட்டுங்கையே செங்கோலை ஆக்குங்கை. பெற்றோர் குழந்தைகளை வளர்ப்பதில் மிகுந்த கவனமெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். தந்தையைக் காட்டிலும் தாயே இதற்கு மிகுதியும் உரியவள். மகவை எப்பொழுதும் பிரியாதிருப்பவள் தாயே; தந்தையன்று. அளவும், அமயமும் அறிந்து உணவருத்தி இளமையிலிருந்தே நற்பண்புகளைப் படியச் செய்து, தானே உதாரணமாக நடந்து காட்டி, மக்களை மேம்பாடுறச்செய்யும் பெருஞ்சுமையைத் தாயே தாங்கவேண்டியவளாகின்றாள். சில தாய்மார், குழந்தைகளை வளர்க்கும்பொழுது ஆண், பெண் என்ற வேற்றுமையுணர்ச்சியைப் புகுத்தி, ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்து விடுகின்றனர். துளிர்த்து வளருஞ்செடியின் நுனியைக் கிள்ளிவிட்டாற் போன்று, இயல்பான உரிமையோடு வளரும் நற்பண்புகளை மேலோங்கவிடாமல், அவை அழிந்து ஒழியுமாறு ஆய்வற்ற சொற்களை வழங்கி, மகவின் மனத்திட்பத்தை மாற்றி விடுகின்றனர் சிலர்—ஏன்? பலர்—அதனுல், "நாம் பெண்கள் தாமே; அடிமைகள் தாமே;" என்ற தளர்ச்சியும் பெண் குழந்தைகளுக்கு உடன் வளரத் தொடங்குகின்றது. அதனுல் விளைந்துள்ள இன்னல்கள் எண்ணிலடங்கா. அன்னையர் தம்மக்களை ஆண், பெண், என்ற வேற்றுமை பாராட்டாது சமமாகக் கருதி நடத்தல்

வேண்டும். பெண் மக்களுக்குக் கொடுக்கும் கல்வியின் அளவைப் பொறுத்தே, அவர்களுக்கு மனத்திட்பமும், மதி நுட்பமும், அடிமையில் வெறுப்பும், உரிமையில் விருப்பும் தோன்றும்.

*"விலங்கொடு மக்க ளனையர்; இலங்குநூல்*
*கற்றாரோ டேனை யவர்"*

என்ற பொதுமறையின் கருத்திற் கியைய, பெற்றோர் இயற்கையிலேயே சிறப்புற்ற மானிடராகப் பிறந்துள்ள பெண் மக்களை, செயற்கையில் விலங்குகளாக மாற்றிவிடாமல், அவர்களுக்குத் தக்க கல்வியைக் கொடுப்பார்களாக. பெண் மகள் தகுந்த கல்வியைப் பெறுதொழிவளேல், அவள் இல்வாழ்க்கையைத் திறம்பட ஆற்றி **இல்லக்கிழத்தி** என்ற மாண்பை எய்துவது எங்ஙனமியலும்?

*"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு"*

ஆதலின், அவர்கள் மக்களை ஈன்று, மாண்புறச் சீராட்டி வளர்த்து மன்னர்களாகவும், மகான்களாகவும், கம்பர்களாகவும், கலைவாணராகவும் ஆக்குவது எவ்வாறு?

இல்லத்துணைவி வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். வீட்டு வாடகை, சாப்பாட்டுச் செலவு, உடைச் செலவு முதலியன முக்கியமான செலவுகள். இவற்றைக் கூடுமானவரை ஒரு திட்டத்திற்குட் படுத்திக்கொள்ள வேண்டும். பிற செலவுகளைச் சமயத்திற்குத் தக்கவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம். தகுதிக்கு மிஞ்சிச் செலவழிக்காமல், கூடிய அளவு சிக்கனமாயிருந்து சிறிது பொருள் சேமித்து வைக்கவும் வேண்டும். சிக்கனத்திற்காகச் சாப்பாட்டுச் செலவைக் குறைத்துக் கொள்ளக்கூடாது. உணவு குறைந்தால் உடல் தளரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். அடிக்கடி திரைப்படம் பார்க்கச் செல்லுதல், மாலை வேளைகளில் சிற்றுண்டிச்சாலைகளுக்குச் செல்லுதல் முதலியன அனாவசியமான ஆடம்பரச் செலவுகளாம். அலங்காரமான பட்டுடைகள் தைத்தும், ஆபரணங்கள் செய்தும் அணிந்து

கொள்ளுதலும் ஆடம்பரச் செயல்களே. ஆடை ஆபரணங்கள் அடிக்கடி மாறுபடுகின்றன. பழைய நகையை அழித்துப் புதுவிதமான நகைசெய்து போட்டுக்கொள்ள நினைப்பது பெண்களுக்கு இயல்பு. ஓர் ஆபரணத்தை அழித்துச் செய்வதால் ஏற்படும் நட்டம் மிகமிக அதிகம். கூலிகொடுக்க வேண்டும்; தங்கத்தின் மாற்றுக் குறைந்துபோம்; சேதாரமேற்படும். இறுதியில் உள்ள நகை ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்துவிடும்.

இவைபோன்ற வீண் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக இருந்து சேமித்து வைக்கப்படும் பொருள், குடும்பத்தில் திடீரென்று ஏற்படக்கூடிய செலவுகளுக்கு உபயோகப்படும். கலியாணம் முதலிய சடங்குகளுக்கும் கடன் வாங்கவேண்டியதில்லை. திருமணக் காலங்களில், வீண்பெருமைக்காகத் தமது சக்திக்கு மீறி ஆடரம்பரமாகச் செலவு செய்துவிட்டு, இறுதியில் கடனுக்கு ஆளாகிக் கவலைப்படுபவர் பலர். இது எவ்வளவு மதியீனமான செயல்! சிக்கனமாக நடந்துகொண்டால்,கடன் முதலிய தொந்தரவுகளின்றிக் குடும்ப வாழ்க்கை இனிது நடைபெறும். கடைகளில் பற்று வரவு வைத்துக் கொள்வது பெருந்தவறு. பற்றுவரவு வைத்துக்கொண்டால், நினைத்தபொழுது வேண்டிய பொருள்களை அளவுக்குமேல் கவலையின்றி வாங்க நேரிடும். கடனுக்கு வாங்கும் பொருள்களும் நல்லனவாயிரா; அளவும் குறைந்திருக்கும்; விலையும் அதிகப்படியாயிருக்கும். மாத முடிவில் கணக்குப்பார்க்கும் பொழுது தான், வரவுக்குமிஞ்சிச் செலவாகி இருப்பது தெரியும். அந்த மாதத்தில் வாங்கிய கடனை முற்றிலுங் கொடுக்க முடியாமல் பாக்கி நிறுத்திக்கொண்டு, அதே கடையில் மறுபடியும் கடன் வாங்கவேண்டிய அவசியமும், நிர்ப்பந்தமும் உண்டாகும். இவ்வாறு மாதந்தோறும் நிகழ்வதால், கடன் தொகைபெருகி, கொடுக்க வகையின்றித் திண்டாடும் குடும்பங்கள் பல இருப்பது கண்கூடு. ஆதலின் கடைகளில் பற்று வரவு வைக்கும் பழக்கத்தை அறவே ஒழித்தல் வேண்டும்.

முற்கூறிய விடயங்களை நன்குணர்ந்து, தக்கவாறு நடந்து, குடும்பத்தை நல்லவழியில் நடத்திச் செல்லும் பொறுப்பு தலைவியினுடையதேயாகும். எனவே, **அவள் இல்லக்கிழத்தி** எனப்படுகின்றனள்.

## 5. கிராமக் கைத்தொழில்கள்

[ஜே. எஸ். பொன்னையா எம். ஏ.]

சென்னைமாநகர வீதிகளில் நீங்கள் சென்றால், நம் முன்னோர் பார்த்திராத அநேக அரும்பெருங் காட்சிகளைக் காணலாம். வீதிகளின் இருபக்கங்களிலும், பார்ப்போர் கண்களைக் கவரத்தக்க விதமாய் அலங்கரிக்கப்பட்டுப் பலவிதமான விலையுயர்ந்த சாமான்கள் விற்கப்படும் பலபல கடைகள் விளங்கும். ஒரு பக்கத்தில், விரைந்து செல்லும் சிறிதும் பெரிதுமான மோட்டார் வண்டிகளையும், இன்னுமொரு பக்கத்தில், இருப்புப் பாதைகளின்மேல் பெருங் கூச்சலிட்டு விரைந்து செல்லும் புகை வண்டிகளையும், மின்சார வண்டிகளையும் கண்டு மகிழலாம். இவை மட்டுமா! ஆகாயத்திற் பறவைகள் பறந்து திரிந்தாற்போல, மனிதர் ஏறிச்செல்லும் ஆகாய விமானங்களும், ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள நாடுகளில் நடக்கும் வர்த்தமானங்களை யெல்லாம் சில மணி நேரங்களில் தெரிந்து கொள்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஆகாயவசனி (Wireless) நிலையங்களும், நீராவியின் ஆற்றலால் பெருங்கடலையும் கடந்து செல்லும் கப்பல்களும், 'அம்மம்ம! இவற்றை இயற்றியவர் மனிதரோ, பூதமோ!' என அதிசயிக்கக்கூடிய இவை போன்ற இன்னும் பல காட்சிகளும் அங்கே உண்டு. மேலும், மிகப் பெரிய நெசவுத் தொழிற்சாலைகளையும் வேறு பல தொழிற்சாலைகளையும் அங்கே காணலாம்.

இவ் விநோதங்களை யெல்லாம் சென்னையின்கண் மட்டுமன்றி, **பம்பாய், கல்கத்தா** போன்ற பெரிய நகரங்களிலும், **மதுரை, அலகபாத், பெஷாவர்** முதலான சிறிய நகரங்களிலும் காணலாம். ஆயினும், இத்தகைய நகரங்கள் நமது தேசத்தில் மிகச் சிலவே. 1931-ஆம் வருட ஜனசங்கியைக் கணக்கின்படி இந்தியாவிலுள்ள நகரங்களின் மொத்த எண் 2575; இந்த நகரங்களில் வசிக்கும் மக்கள் தொகை 3 கோடியே 89 இலட்சம்.

எனவே, மேல்நாடுகளான இங்கிலாந்து, ஜெர்மனி முதலான தேசங்களின் நகரங்களுடனும், நகர மாந்தர் தொகைகளுடனும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இந்தியாவிலுள்ள

நகரங்களின் தொகையும், நகரவாசிகளின் தொகையும் மலேக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுடையனவாகும்.

ஆனால், நமது இந்தியா தேசத்தில் தேனடையிலுள்ள சிற்றறைகள்போலச் சுமார் ஏழு லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன! அவற்றில் வசிப்போர் சுமார் 32 கோடி மாந்தர் ஆவர்; இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராமவாசிகள் ஆவார்கள். இந்தியாவிலுள்ள கிராமவாசிகளின் தொகை உலக முழுதுமுள்ள மக்கட்டொகையில் ஐந்திலொருபங்காகும்! கிராமங்களே இந்தியாவின் உயிர் நிலை எனவும் கூறுதல் மிகையாகாது. இக்கிராமங்களிற் காணக்கிடப்பன மின்சார வண்டிகளும் ஆகாய விமானங்களும், தொழிற்சாலைகளும் அல்ல; வயல்களும், தோட்டங்களும், ஆடுமாடுகளுமேயாம்.

இன்று நமது கிராமவாழ்க்கை சிதைந்து, வேளாண்மை தாழ்வுற்று, மக்களின் பொருளாதார நிலை எவ்விதத்திலும் இரங்கத் தக்கதாயிருந்து வருகின்றது. நமது கிராமப்பொருளாதாரத்துறையிலுள்ள குறைகளை நீக்கக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்யவேண்டும். 'இத்தகைய தொழில்கள் யாவை? அவற்றை எங்ஙனம் வளர்ப்பது?' என்பன பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பழைய நகரக் கைத்தொழில்கள்:** பண்டைக் காலத்தில் பெருஞ் சிறப்பெய்தியிருந்து இப்பொழுது அழிந்து கிடக்கும் நமது கைத்தொழில்களில் பெரும்பாலன நகரக் கைத்தொழில்களேயாம். அவற்றுள் பஞ்சு, பட்டு முதலியவைகளைக் கையால் நூல் நூற்று ஆடைகளை நெய்வதும், கல், மரம், வெண்கலம், வெள்ளி பொன் முதலியவற்றால் வேலைப்பாடமைந்த பணிகளைச் செய்வதும் ஆகிய இவைகள் தலை சிறந்து நின்றன. இக்கைத்தொழில்கள் பெரும்பாலும் முக்கிய தலைநகரங்களிலும், பெருங்கோவில்கள் உள்ள இடங்களிலுமே நடைபெறலாயின. இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களும் பெரும்பாலும் நகரவாசிகளே ஆவார்கள்.

**பண்டைக் கிராமக் கைத்தொழில்கள்:** ஆயினும், கிராமங்களிலும் கையால் நூல் நூற்றல், துப்பட்டி கம்பளி முதலியன

நெய்தல், விவசாயிகளுக்குரிய சிறிய கருவிகளைச் செய்தல், சருக்கரை, எண்ணெய் போன்ற உணவுப் பொருள்களை ஆக்கல் ஆகிய பல சிறு கைத்தொழில்களும் நடைபெற்று வந்தன. தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைச் செய்வதற்கே, பண்டைக் கிராம மக்கள் இக்கைத் தொழில்களை மேற்கொண்டிருந்தார்களே அன்றி, இவற்றால் தங்கள் வருவாயைப் பெருக்கிப் பெருத்த ஊதியம் பெற்றார்கள் இல்லை என்ற உண்மையை நாம் இவ்விடத்து நன்கு உணர்தல் வேண்டும்.

**கையால் நூல் நூற்றலும் நெய்தலும்:** நம் பண்டைக் கைத் தொழில்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்கியவை கையால் நூற்றலும், நெய்தலுமேயாம். கைப்பணியாய்ச் செய்யப்பட்ட பஞ்சியாடைகளும் பட்டாடைகளும் மேல் நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதியாயின. ஆனால், மேனாட்டார் இப்பொழுது யந்திரக் கருவிகளினால் செய்யப்பட்ட துணிகளை நமது தேசத்திற்குள் இறக்குமதி செய்து, அவற்றை மிகக் குறைந்த விலைக்கு விற்பதனால், இத்தொழில் சிறிது சிறிதாக அழிவுறுகிறது. இக்கைத் தொழிலாளர் பலரும் பிழைப்பற்று நிலத்தைச் சார்ந்து வயிறு வளர்க்கும் பயிர்த் தொழிலாளராக மாறுகின்றனர்.

எனினும், கைநெசவுத் தொழிலின் ஒரு பாகம் இன்னும் சிற்சில இடங்களில் சில பிரிவினரால் நடத்தப் பட்டு வருகிறது. நமது தேசத்தில் செலவழியும் மொத்தத் துணியில் கைநெசவுத்துணி மூன்றிலொரு பாகமாக விளங்குவதே, இத்தொழிலின் இற்றைச் சிறப்பையும் புலப்படுத்தும்; எஞ்சிய பாகங்களின் ஒரு பாகம் நமது தேசத்தில் நிறுவப்பட்டுள்ள நெசவாலைகளிலும், மற்றொரு பாகம் பிறநாட்டாருடைய நெசவாலைகளிலும் உற்பத்தி யாக்கப்படுவனவாம். இக்கைத்தொழில் இன்னும் நீடித்து வருவதற்குக் காரணம், பிறநாட்டுத் துணிக்கு இறக்குமதி வரி விதித்திருப்பதும், நமது தேசத்திலுள்ள ஆலைத் தொழில் திறமையுடன் நடைபெறாமையும், நமது தேச மக்களின் உடைப் பழக்கம் பெரும்பாலும் மாறாதிருப்பதும் ஆகும். இம்மூன்று காரணங்களும் ஒத்து உதவி புரியும் வரை கைநெசவுத் தொழிலுக்குப் பழுதில்லை.

கைநெசவுக்குப் பின் வைத்தெண்ணப்படும் வேருெரு முக்கியக் கிராமக் கைத்தொழில், கையால் நூற்றலாம். ஒழிந்த நேரங்களில் கிராம விவசாயிகள் நூல்நூற்றுச் சிறிது ஊதியம் பெறலாம். அகில பாரத சர்க்கா சங்கத்தின் ஆதரவின் கீழ் இப்பொழுது 5000 கிராமங்களில் நூற்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக, இந்நூல் உற்பத்தி குறைவுபட்டு வருகிறது. இத்தொழில் ஒன்றினால் மட்டும் நமது கிராமப் பொருள்நிலை உயர்ந்துவிடும் என எண்ணுவது கூடாது.

**பழைய கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்தல்:** அங்ஙனமாகவே, நமது பண்டைக் கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்து, நம் கிராமங்களிலுள்ள குறைகளைப்போக்கி விடலாம் என்பதும் இயலாத வீண் ஆசையேயாம். நெற்குற்றல், வெல்லம் செய்தல், செக்காட்டல், கயிறுதிரித்தல் ஆகிய இத்தகைய பழங்கைத்தொழில்கள் தனி நிலைக் கிராம வாழ்க்கைக்கே (Independent Village Economy) ஏற்றவை. யந்திரங்களின் போட்டிமிகுந்துவரும் இக்காலத்தில் இத்தகைய கைத்தொழிலை உயிர்ப்பித்தாலும் இவற்றை லாபத்துடன் நடத்தமுடியாது. மேலும், இவற்றால் நிலத்தைச் சார்ந்து பிழைப்போரின் தொகையும் குறைந்துவிடாது. ஆயினும், சிற்சில கிராமங்களில் சுண்ணும்பு செய்தல், விளையாட்டுக் கருவி இயற்றல் போன்ற, சிறப்பாக உள்ள கைத்தொழில்களை விருத்தி செய்தால் அவை அவ்வக் கிராமவாசிகளுக்குச் சிறிதளவில் பயனளிக்கும். இத்தகைய சேவையை ஆற்றப் பல சங்கங்களும், பெருமக்கள் பொருளுதவியும் இருத்தல் நலம்.

**புதிய கிராமக் கைத்தொழில்கள்:** பண்டைக் கிராமக்கைத்தொழில்களுக்குப் புத்துயிரளித்துப் போற்றுவதுடன், புதிய பொருளாதார மாறுதல்களினால் எழுந்துள்ள புதிய கைத்தொழில்களையும் நாம் சிறப்பாக ஆதரிக்கவேண்டும். இப்பொழுது நமது தேசத்தின் பல பாகங்களில் நிறுவப்பட்டுள்ள அரிசியாலை, பஞ்சியாலை, சருக்கரையாலை, எனும் புத்தாள் தொழிற்சாலை, நெருப்புக்குச்சி, சோப்பு முதலியன செய்வதற்கு ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகிய பலவற்றால் கிராமவாசிகளிற் சிலர், சில மாதங்களுக்கேனும் வேலை கிடைக்கப்பெற்று வயிறு வளர்த்து வருகின்றனர்.

மேலும், காகிதம், பென்சில், கண்ணாடிப் பொருள்கள், விளையாட்டுக் கருவிகள் முதலியன உற்பத்தியாக்கத்தக்க சிறிய யந்திரத் தொழிற்சாலைகள் பலவற்றையும், நாம் அமைக்கவேண்டும். ஜெர்மனி தேசத்தில், இத்தகைய சிறிய கைத்தொழிற் சாலைகளின் மூலமே அத்தேச மக்களில் ஐந்தில் இரண்டு பகுதியினருக்கு வேலை கிடைத்திருக்கிறதென அறிகிறோம். இத்தகைய சிறிய கைத்தொழிற் சாலைகள் இத்தேசத்தில் நிறுவப்படவும் வளர்ச்சியுறவும் வேண்டுமாயின், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படும் இச்சிறு கைத்தொழிற் பொருள்களின்மேல் உயர்ந்த காப்பு வரிகள் விதிக்கப்படவேண்டும். மேலும், நவதானியங்கள், பழங்கள், கிழங்குகள் முதலியவற்றிலிருந்து, நெடுநாள் வைத்துண்ணக்கூடிய உணவுப்பொருள்களைத் தற்கால முறைப்படி தயாரிக்கத்தக்க சிறிய தொழிற் சாலைகளையும் அமைக்கலாம்.

**பெரிய தொழிற்சாலைகள்:** அன்றியும், பெரிய யந்திரத் தொழிற்சாலைகளும் நமது தேசத்திற் பெருக வேண்டும். இப்பொழுது சென்னை, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி ஆகிய மிகச் சில தலைநகரங்களில் மட்டுமே நூலாலைகளும், நெசவாலைகளும், சருக்கரையாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றால் சுமார் 20 லட்சம் மக்களுக்கு வேலை கிடைக்கிறது. இவர்களனைவரும் கிராமவாசிகளே என்ற உண்மையையும் நாம் நன்குணரவேண்டும். ஆலைகளால் நம் கிராமங்களுக்குக் கேடுகளே விளைகின்றன எனக் கூறுவது இழுக்கு. நமது தேச மக்களின் வருவாயும் வாழ்க்கை நிலையும் உயர்ந்து, காகிதம், துணிபோன்ற செய்பொருட்கள் மிகுதியான அளவில் வாங்கப்படுமேல், இத்தகைய தொழிற்சாலைகள் இப்பொழுது உள்ளதை விடப் பன்மடங்காகப் பெருக வழி ஏற்படும்.

# 6. தொழிலுக்கும் செல்வத்துக்குமுள்ள தொடர்பு

[சி. சுப்பிரமணிய பாரதி]

கைத்தொழிலாலே செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப்படுகிறது. கைத்தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத் தொழில் கைத்தொழிலை நடத்துகிறது. "புத்தியில்லாத மூடர்கள் சக்கரவர்த்திகளாகவும், அரசர்களாகவும், பெரிய நிலச்சுவான்களாகவும் முதலாளிகளாகவும் இருந்து பெருஞ் செல்வங்களைக் கையாளுதல் காண்கிறோமே! எனவே, அறிவுத்திறமையாலும், அறிவு முயற்சியாலும் பெருஞ் செல்வந் திரட்டப்படுகிறது என்று சொல்லுதல் எங்ஙனம் பொருந்தும்?" என்று கேட்பீர்களாயின், அதற்கு உத்தரம் சொல்லுகிறேன்.

பல இடங்களில் இப்போது மூடர்களிடம் செல்வமிருப்பது காண்கிறோமாயினும், இவர்களுக்கு இந்தச் செல்வம் எற்படுத்திக் கொடுத்த இவர்களுடைய முன்னோர்களில் அனேகர் அல்லது ஒருவனாயினும் மிகுந்த புத்திசாலியாயும், அந்த புத்தியைக்கொண்டு சோம்பலின்றி விடாமுயற்சியுடன் உழைப்பவனாகவும் இருந்திருக்கவேண்டும். புத்தி மாத்திரம் இருந்தால் போதாது. அதைக்கொண்டு சோம்பலில்லாமல் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும். அப்போதுதான் செல்வம் சேர இடமுண்டாகும். "வெறும் மிருக பலத்தால் அரசர்கள் சைனியங்களின் மிகுதி காரணமாகப் பிறநாடுகளைக் கொள்ளையிட்டு அளவிறந்த பூமியும் செல்வங்களும் சேர்த்ததாகச் சரித்திரங்களில் படித்திருக்கிறோமே. அப்படியிருக்கையில், புத்தி நுட்பத்தால் செல்வம் சேர்வதாகச் சொல்லுதல் தகுமோ?" என்று கேட்பீர்களானால் அதற்கும் விடை கூறுகிறேன். யுத்தம் மிருகத் தொழிலாக இருந்தபோதிலும், நல்லோர்களால் எவ்வகையாலும் வெறுக்கத்தக்க இழிதொழிலாக இருந்தாலும் அதற்கு மிருகபலம் மாத்திரம் இருந்தால் போதும் என்று நினைப்பது தவறு. யுத்த சாத்திரம் என்பது ஒரு பெரிய சாத்திரம். அதில் மிருக பலம் கருவி; அறிவு கர்த்தா; சாதாரணக் கொள்ளைக் கூட்டங்களிலே கூட்டத் தலைவனாக

இருப்பவன் சிறந்த புத்தி நுட்பமுடையவனுக இருத்தல் இன்றியமையாதது. எத்தனையோ விதமான அறிவுப் பயிற்சிகள் ஆதிகால முதலாகவே யுத்தத்திற்கு அவசிய மாக ஏற்பட்டு இருந்திருக்கின்றன. அதிலும், தற்கால யுத்தங் களோ பல துறைகளில் மிகச் சிறந்த அறிவுத்தேர்ச்சி கொண்ட பண்டிதர்களாலே நடத்தப்படுகின்றன.

வியாபாரம், கைத்தொழில் முதலிய சமாதான நெறி களில் செல்வம் சேர்ப்பதற்கு மிக உயர்ந்த புத்தி நுட்பம் எக்காலத்திலும் இன்றியமையாததாக இருந்து வந்திருக் கிறது. இக்காலத்திலும் இவை புத்தித் திறமையில்லாமல் போனுல் ஒரு கணங்கூடத் தரித்து நிற்கமாட்டா.

இந்த நிலைமையை உணர்ந்தே, ஆதிகால முதல் அறிவுப் பயிற்சியுடைய வகுப்பினர், கைத்தொழிலோடு புத்திநுட்ப மும் ஒருசேர அமையின் தம்மினும் மேம்பட்டு விடுவர் என்ற கருத்தால் கைத்தொழிலாளிகளுக்குக் கல்வி ஏற்படாதபடி யாகத் தடைசெய்து கொண்டு வந்திருக்கிறுர்கள். நம்மு டைய தேசத்தில் மட்டுமேயன்று; உலக முழுமையிலும் எல்லா நாடுகளிலும் கைத்தொழிலாளருக்குக் கல்விப்பயிற்சி உண்டாகாத வண்ணமாகவே மக்கள் கட்டுப்பாடுகள் செய்து வந்திருக்கின்றனர். ஆனுல், இந்தச் சூழ்ச்சியை மீறி, எல்லா நாடுகளிலும், முக்கியமாக, நமது பாரத தேசத்தில், கைத்தொழில் புரியும் கூட்டங்களைச் சேர்ந்தோரில் பற்பலர், கல்வித் தேர்ச்சியடைந்து வந்திருக்கிறுர்கள். ஆனுல், இங்ஙனம் கல்விப் பயிற்சி வாய்ந்தோர் பெரும்பாலும் தம் முடைய பரம்பரைத் தொழில்களில் இறங்காமல், சுத்த இலக்கியப் பயிற்சியிலேயே வாழ்நாள் கழிப்பாராயினர்.

எனினும், சென்ற ஓரிரண்டு நூற்றுண்டுக்குள்ளே, ஐரோப்பாவில், எல்லா வகுப்பினருக்கும் கல்வி பயிற்றும் முறைமை தொடங்கி வந்திருக்கிறது. இந்தப் பொதுமக்கள் கல்வியெனும் கொள்கை ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் பிறபகுதிகளிலும் தாவி விட்டது. இக்கொள்கையை நமது நாட்டில் நிறைவேற்றிவிட வேண்டுமென்று பல புண்ணிய வான்கள் பெருமுயற்சி செய்து வருகிறுர்கள். இங்ஙனம்

எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும் அதன் விளைவுகளாகிய பலவகைப்பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவி விடுமானால், அதனின்றும், கைத்தொழிலாளிகள் கல்விப் பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும் படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப் போய், அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வியறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதனின்றும், இதுவரை உலகத்தில் கைத்தொழிலாளர் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி மேன்மேலும் கைத்தொழிலாளருக்குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்றுவர ஏதுவுண்டாகும்.

தொழிலாளர்கள் முன்னேற்ற வழிகளிலே முயற்சி செய்வதுடன் தமது காரியங்களை நிறுத்தி விடாமல், அங்கங்கே பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்காக ஏற்படுத்தி அவற்றில் தம்முடைய மக்களுக்கு நிறைந்த கல்வியை ஊட்டுவதற்குரிய முயற்சிகள் செய்யவேண்டும். மேலும், பகற் பள்ளிக்கூடங்கள் மாத்திரமேயன்றி இராப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி அவற்றில் தொழிலாளிகள்—எல்லாப் பிராயத்தினரும்—சென்று படிப்பதற்குரிய காரியங்களை நடத்தவேண்டும்.

அறிவே வலிமை. கல்வியே செல்வத்தின் தாய். கலைமகளும் இலக்குமியும் மாமியும் மருமகளும் போல்வர் என்றும், கல்வியுள்ள இடத்தில் செல்வமும் செல்வமுள்ள இடத்தில் கல்வியும் ஏற்படுதல் மிகவும் அரிது என்றும் நமது நாட்டில் பரம மூடத்தனமான கொள்கை யொன்று பரவி நிற்கிறது. வெறுமே வர்ணனைகளும் கற்பனைகளும் சமைத்து, யாருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேரக் காரணமில்லை யென்பது வெளிப்படை. இந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே மேற்படி கொள்கை ஆதிகாலத்தில் உற்பத்தியாயிற்று. ஆனால் இது இக்காலத்துக்குப் பொருந்தாது. காவியங்களைக் கூட எளிய நடையில் எழுதினால், அச்சுத் தொழிலும் பொதுமக்கள் கல்வியும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபங் கிடைக்கும்.

காவியங்கள் எழுதுவதற்கு மாத்திரம் படிக்காமல், பலவகை வியாபாரங்களுக்கும், தொழில்களுக்கும் வேண்டிய படிப்புக்கள் படித்து, அவற்றை ஊக்கத்துடன் கையாளுவோருக்கு மேன்மேலும் செல்வம் பெருகும். ஆதலால், தொழிலாளர்களே, கல்விப்பயிற்சி செய்யுங்கள்! உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்!

---

## 7. பொருளறிவும் புதிய வாழ்க்கையும்

[கே. ஸீ. வீரராகவையர், எம். ஏ. எல். டி.]

எந்தத் தேசத்து ஜனங்களிடத்தில் பொருளறிவு ஆழ்ந்து பரவியிருக்கிறதோ, அந்தத் தேசத்து மக்கள், புதிய வாழ்க்கை நலன்களை அனுபவித்து நாகரிகமேம்பாட்டை அடைந்தவர்கள் என்று பொதுவாகப் பெரியோர்கள் கருதுகிறார்கள். பொருள் அறிவு என்பது என்ன? பூமியிலும் மற்றச் சுற்றுப் புறங்களிலுமுள்ள பொருள்களை நமது ஐம்புலன்களின் மூலமாய் அறிந்து, அவைகளின் குணங்களையும், உள்ளமைப்பையும், உபயோகங்களையும் ஆராய்ந்து தெளிவு பெறுவதே பொருளறிவு எனப்படுகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் **இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்வீடன், ரஷியா, இட்டாலி** முதலிய மேல்நாடுகளில் வசித்த அறிஞர்கள் பொருளறிவைப் பெரிதும் பெருக்கி முற்போக்கை அடைந்து சமூக வாழ்விலும், கைத்தொழில்களிலும், இராஜீய விஷயங்களிலும் பல பெரும் மாறுபாடுகளைச் செய்திருக்கின்றனர்.

பொருள்கள் பூமியிலிருந்தும், சமுத்திரத்திலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் கிடைக்கின்றன. பூமியை நன்றாய் உழுது, பக்குவப்படுத்திப் பயிரிட்டால் பழுதில்லாத பல பொருள்கள் விளைகின்றன. அவைகள் நெல், துவரை, பயறு, தினை, சாமை, கொள்ளு, எள்ளு, கடலை, உளுந்து ஆகிய நவதானியங்களும், கோதுமை, யவம், கரும்பு, கிழங்கு, காய், பழம், காப்பி, தேயிலை, புகையிலை, பருத்தி, ரப்பர் முதலியவைகளும் பிறவும் ஆகும். மேலும் பூமியில் இயற்கையாகவே பல பொருள்கள் பொதிந்து கிடக்கின்

றன. அவைகளை அடைவதற்குப் பலர் முயற்சி செய்து ஐயாயிரம் அடிவரை பூமியைக் கீழே தோண்டிப் பயன் பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கின்றவைகளே தங்கம், வெள்ளி, பாதரசம் முதலியனவும், ஈயம், தகரம், செம்பு, இரும்பு, அலுமினியம், நாகம் முதலிய மூலப் பொருள்கள், நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலியனவுமாம். இவை தாதுப் பொருள், கனிஜப்பொருள், நிரசப்பொருள் என்று பலவகையாகச் சொல்லப்படுகின்றன.

மேலே சொல்லிய பொருள்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒருங்கே காணப்படுவதில்லை. பூமத்திய ரேகைக்கருகிலுள்ள நாடுகளில் சூரிய ஒளியும் வெப்பமும் மிகுந்திருப்பதால் அங்கு விவசாயப் பொருள்கள் நன்கு விளைகின்றன. குளிர் தேசங்களில் விளைவன வேறுவகையாகும். உணவுப் பொருளும் வித்துப் பொருளும் அவ்வளவாக அங்கு விளைவதில்லை. ஆகவே குளிர் தேசத்து மக்கள் உஷ்ண தேசத்துப் பொருள்களை அடைய விரும்புவது இயற்கையாகும். அதனாலேதான் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி முதலிய நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியா, தென்னமெரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள உஷ்ணப் பிரதேச நாடுகளைத் தத்தம் ஆதிக்கத்தில் அடையப் போட்டி போடுகின்றன.

இயற்கையில் கிடைக்கும் விவசாயப் பொருள்களையும் நிரசப் பொருள்களையும் ஆதாரமாகக் கொண்டு செயற்கைப் பொருள்கள் பல செய்யப்படுகின்றன. இயற்கைப் பொருள்களைவிட இச்செயற்கைப் பொருள்கள் எண்ணிக்கையில் மிகுதியாகி வருகின்றன. இச்செயற்கைப் பொருள்களைச் செய்வதில் எத்தனையோ அறிஞர்கள் தமது வாழ்நாளைச் செலவிட்டு யந்திரங்களின் உதவிகொண்டு பல சூழ்ச்சிகளைக் கற்பித்து, பொருளறிவை ஓங்கி வளரும்படி செய்கிறார்கள். இப்படி வளரும்பொருளறிவின் பயன்களே, நாம் நேரில் பார்த்து அனுபவிப்பனவும், இன்றியமையாதனவாகத் தோன்றுவனவுமான **ரயில், மோட்டார், ஏரோபிளேன், கிராமபோன், ரேடியோ, போட்டோ, சினிமா, டாக்கி** முதலியன. இவைகளை மிகுதியாக்கி, பாமரர்களும் அனுபவிக்கும்படி செய்யும் தேசங்களே நாகரிக நாடுகள் என மேல் நாட்டு மேலோர் கருதுகின்றனர்.

மேலே சொல்லிய சாதனங்களைச் செய்வதற்கு அடிப் படையாக உள்ளன நிலக்கரியும் இரும்பும். இரும்பு இயற் கையில் அப்படியே கிடைப்பதில்லை. பிராணவாயுவுடன் இலகுவில் பிரிக்கமுடியாத **ஆக்ஸைட்** ஆகக் கிடைக்கின்றது. ஆனால் பொன்னும், வெள்ளியும், செம்பும் இயற்கையில் அப்படியே கிடைக்கும். ஆதலின் மனிதன் முதலில் தேடி அடைந்து உபயோகித்தவை அவைகளே. பின்னர் செம் பும் தகரமும் சேர்த்து உருக்கப்பட்டதால் வெண்கலம் கிடைத்தது. அதனாலே பண்டைக்காலங்களில் ஒரு பகுதி "செம்புக்காலம்" என்றும், வேறொரு பகுதி "வெண்கலக் காலம்" என்றும் கருதப்படுகின்றன. இக்காலத்தில் இரும்பு பெரிய உலைகளில் இலகுவாகச் செய்யப்பட்டு அபரி மிதமாக உபயோகப்படுவதால் நமது காலம் "இரும்புக் காலம்" என்று சொல்லப்படுகிறது. இந்த நிலக்கரியும், இரும்பு ஆக்ஸைடும் ஏராளமாக இங்கிலாந்தில் அகப்பட்ட தால், அத்தேசத்து அறிஞர்களும் வினையாளர்களும் அவை களைத் தேடியடைந்து உபயோகித்து, இரும்பையும் எஃகை யும் பெருவாரியாகச் செய்து, நீராவியந்திரம், ரயில் வண்டி கள், நீராவிக் கப்பல்கள், அவற்றின் யந்திரங்கள், வேறு பல இரும்புக் கருவிகள் முதலியவைகளைச் செய்வதில் உபயோகித்தார்கள்; சுகவாழ்வைப் பெற்றார்கள்; பிற தேசங்களுக்குச் சென்றார்கள்; தங்களது விடாமுயற்சியா லும், தெய்வபக்தியாலும், சமயோசித நடத்தையாலும் "சூரி யன் என்றும் மறையாத பூமி"யின் பாகங்களை ஆள ஆரம் பித்தார்கள். அங்கங்கே கிடைக்கும் பொருள்களின் இயற் கையையும் உலோகங்களையும் அந்நாட்டு அறிஞர்கள் ஆராய்ந்தறிந்து நாகரிக வாழ்வை உயர்த்திவந்தார்கள்.

இங்கிலாந்து வீரர்களும், அறிஞர்களும், வியாபாரி களும் செய்ததுபோல, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி முதலிய தேசத்து மக்களும் முயற்சி செய்ய எத்தனித் தனர். நாகரிக வாழ்விற்கு அத்தியாவசியமான பொருள் கள் தமது நாடுகளில் கிடைக்காததனால், அவைகளிருக்கும் பிறநாடுகளைக் கவர ஆசை கொண்டார்கள்; ஆசை உண் டானதால் எந்த உபாயத்தைச் செய்தாவது அவைகளை யடையப் பிரவிர்த்தி உண்டாயிற்று; அப்படிப்பட்ட பிர

விர்த்தி எதிராளிகளுடைய நன்மைக்கு விரோதமானதாக ஏற்படுவதால், சண்டையும் சச்சரவும் உண்டாயின. சென்ற இரண்டு மூன்று நூற்றூண்டுகளில் நடந்த பல தேசத்து விவரங்களெல்லாம் இப்படிப்பட்டவைதான். அதனுலே, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய பிரதேசங்களில் ஐரோப்பாக் கண்டத்து அறிவாளிகளும், வீரர்களும், வியாபாரிகளும் உட்புகுந்து, தத்தமக்குக் கிடைத்த பூபாகங்களைப் பொத்திக்கொண்டு, அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கிறுர்கள். அப்பிரதேசங்களின் பொருட்டுத்தான் 1914—1918ல் பெரிய ஐரோப்பிய யுத்தம் நடந்தது. அதே காரணத்தால்தான் சென்ற **அபிஸீனிய-இட்டாலி** யுத்தம் நடந்தது. இனி வரப்போகிற யுத்தங்களும் அந்தக் காரணத்தாலேயே ஏற்படும்.

மண்ணுசையானது, பாரதப்போர் வீரர்களையும், **ஹனிபால், அலெக்ஸாண்டர், ஸீஸர், நெப்போலியன், கெய்ஸர்** முதலிய போர் வீரர்களையும் தோன்றச் செய்தது. "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பதற்கிணங்க அவர்கள் கடைசியில் தங்களது ஆசையை நிறைவேற்ற முடியாது தோற்றுத் தொலைந்து போயினர். இந்திய நாட்டிலுள்ள விளைபொருளும் இயற்கைப் பொருளுமே பிறர் மனதைக் கவர்ந்து பல நூற்றூண்டுகளாக அவர்களது படையெடுப்புக்கும் ஆதிக்கத்துக்கும் காரணமாயின. கிரேக்கர்கள், முகலாயர்கள், துருக்கியர்கள், போர்த்துக் கேசியர்கள், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள், இங்கிலீஷ்காரர்கள் முதலியோர் முறையே அடுக்கடுக்காக நமது நாட்டுக்கு வந்த காரணம், நம்நாட்டு நீர்வளமும் நிலவளமுமேயாகும்.

இப்பொழுது நாகரிகமடைந்த ஒவ்வொரு நாடும் தனது பிரதேசத்திலே நாகரிக வாழ்விற்கு வேண்டிய பல பொருள்களையும் கண்டுபிடித்து விருத்திசெய்ய முயன்று வருகிறது. உதாரணமாக, விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் முக்கியமாக வேண்டிய 'நைட்ரேட்' பொருள் மிகப் பழங்காலத்தில் இந்தியாவிலிருந்தும், பிற்காலத்தில் தென் அமெரிக்காவிலுள்ள 'சிலி' நாட்டிலிருந்துமே கிடைத்தது. இப்பொழுது இவ்விரண்டு நாட்டையும் விலக்கி விட்டு, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாட்டறிஞர்களும்,

வினைஞர்களும் ஆகாயக் காற்றிலுள்ள நைட்ரஜன், ஆக்ஸிஜன் ஆகிய இரண்டு தனிப் பொருள்களிலிருந்தும் அந்த அவசியப் பொருளைச் செய்து தனித்தியங்க முற்பட்டுவிட்டனர். மேலும் இக்காலத்தில் மோட்டார், வானவூர்தி ஆகிய இரண்டும் வேலை செய்வதற்கு இன்றியமையாததான பொருள் 'பெட்ரோல்' ஆகும். அது ருஷியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பர்மா முதலிய நாடுகளில்தான் அகப்படுகிறது. அங்கிருந்துதான் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாட்டினருக்கு அது கிடைக்க வேண்டியிருக்கிறது. அதனாலே அந்நாட்டு அறிஞர்கள் சென்ற பத்து ஆண்டுகளில் நிலக்கரியிலிருந்து 'பெட்ரோல்', 'மோபிலாயில்' முதலிய எண்ணெய்களைப் பெறும் உபாயங்களை ஆராய்ந்து தெளிந்து கண்டுபிடித்துள்ளனர். அம்முறைகளைப் பின்பற்றி யந்திர வினைஞர்கள் அப்பொருள்களை எளிதில் குறைந்த செலவில் ஏராளமாக உற்பத்தி செய்யும் ஏற்பாட்டை நடத்திவருகிறார்கள். இன்னும் மணலைக் கயிறு கத் திரித்தும், தகடாகச் செய்தும், கண்ணாடி ஏனங்களுக்குப் பதிலாக, பெரும் வெப்பநிலை வேறுபாடுகளால் உடைபடாத 'லவார்டஸ்' ஏனங்களைச் செய்துமிருக்கிறார்கள்.

இப்படிப் பொருளறிவுப் போராட்டம் பெருகி நாகரிக வாழ்வு மேம்படுவதாயிருப்பினும், மனிதனது இராஜஸ, தாமஸ குணங்களே ஓங்கி வளருகின்றன. நீதிவழுக்களும் மிகுதியாகி, காமம், கோபம், பொய், கொலை, வஞ்சம் முதலியவைகளும் அதிகரித்து வருகின்றன. இந்தியாவின் பொருள்கள் பிறநாட்டுக்கு இன்றும் வேண்டப்படுவனவாயினும், இக்காலத்தில் இந்தியாவில் தலைமுறை தத்துவமாக வழங்கிவரும் வேதவாக்கியங்களும், புத்தர்பிரான் முதலிய பெரியோரின் அருள் மொழிகளும், அருள், பொறை, வாய்மை, ஞானம் போன்ற சத்துவ குணங்களுமே மேல்நாட்டுப் பொருளறிஞர்களுக்கும், வினைஞர்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் பொறுமையை அளித்து அமைதியை நிலவச் செய்யும் தகுதியுள்ளனவாகத் தோற்றுகின்றன. அவைகளை அனைவரும் அடையுமாறு எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக.

## 8. விசுவநாதன்

[தமிழாசிரியர், நா. லக்ஷ்மி நரசிம்மன்]

### காட்சி—2

இடம்:— கிருஷ்ணதேவராயன் கொலு மண்டபம்

பாத்திரங்கள்:

கிருஷ்ணதேவராயன் — விஜயநகர மன்னன்.
சங்கர பட்டர் — மதுரை அர்ச்சகர்.
விசுவநாதன் — கதாநாயகன்.

சூரவர்மன் முதலிய வீரர், கடைகாவலர்

கிருஷ்ணதேவராயன்:—நமது படைத் தலைவன் நாகமன் மதுரை சென்று இத்தனை மாதங்களாகியும் ஏன் ஒரு செய்தியும் அனுப்பவில்லை? சோழன் படைக்கு நம்படை தோற்றுவிட்டதோ?

கடைகாவலன்:—அரசே, மதுரைச் சங்கர பட்டர் வந்து காத்து நிற்கின்றார்.

கிருஷ்ணா:—விரைவினில் அவரை வரவிடுக.

(காவலன் செல்லுதல்)

(தனக்குள்) மதுரைச் செய்தியை இவ்வந்தணர் மூலம் கேட்டறிவோம்.

(சங்கர பட்டர் வருதல்)

சங்கர:—வாழ்க! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. அரசே! அங்கயற்கண்ணி அருட்பிரசாதம் பெறுக.

(பிரசாதத்தைக் கொடுத்துவிட்டு அரசனைக் கவனித்தல்)

மலைகலங்கினும் கலங்காத தங்கள் உள்ளம் கவலையுற்றதாகக் காண்கிறதே. காரணம்?

கிருஷ்ண:-வேதியர் திலக! மதுரை மன்னன் சந்திரசேகரன், வீரசேகர சோழனது அடாத செய்கையால் அரசிழந்து நம்மிடம் வந்து முறையிட்டான். நாம் அவனுக்கு அடைக்கலம் தந்து, நம் படைத்தலைவன் நாகமனை அனுப்பிச் சோழனைத் தண்டித்துப் பாண்டியற்கு அரசளித்து வரப் பணித்தோம். பல மாதங்களாகியும் நாகமன் செய்தி



F. V கிருஷ்ணதேவராயன் கொலுமண்டபம் பக்கம் 72

இன்னதென்றே தெரியவில்லை. ஒருகால், சோழன் நமது படையை வென்று, நாகமனையும் கொன்றுவிட்டானே என்ற எண்ணம் தோன்றிக் கவலையளிக்கின்றது.

**சங்கர:**—அரசே! வெற்றி நம்படைக்கே. நாகமன் வீரசேகரனை வென்றார். எங்கள் அரசர் மீண்டும் தங்கள் கருணையால் அரசு பெற்றார்.

**கிருஷ்ண:**—ஆஹா! இது நல்ல செய்தியே. வேதியரே, அங்கு நிகழ்ந்தவற்றை விவரமாகச் சொல்வீர்!

**சங்கர:**—நாங்கள் முதலில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஆனல் —

**கிருஷ்ண:**—ஆனல் என்ன?

**சங்கர:**—தங்கள் படைத் தலைவர், ஒருநாள் திடீரென்று, எமதரசரைப் பைத்தியம் பிடித்து விட்டதென்று பறை சாற்றிச் சிறை செய்துவிட்டுத் தாமே அரியணையமர்ந்து ஆட்சி புரியத் தொடங்கிவிட்டார்.

**கிருஷ்ண:**—ஆஹா! இப்படியா செய்தான் நாகமன்? இது உண்மையா?

**சங்கர:**—உண்மைதான் அரசே. இன்னும் கேளுங்கள். நாகமன் ஆட்சியில் எங்கள் நாட்டார் படும் அவதிக்களவே யில்லை. 'தான் இடரே நிதம்புரிவான்; தனக்கெனவோர் விதி வகுப்பான்; மானிடர்தம் துயர்கருதான்; வழக்குரைத் தால் எதிர் பகரான்' என்றபடி அவரிட்டதே சட்டம். இம் மென்றால் சிறைவாசம்; அம்மென்றால் வனவாசம்தான்.

**கிருஷ்ண:**—என்ன அக்ரமம்? வீரநாகமனும் விரோதியா கினனு? ஆ! இந்த நன்றிகெட்ட நாகமனைத் தண்டிப்பதே நமது முதற்கடமை! (சபையை நோக்கி) வீரர்களே! உங் களில் நாகமனைத் தண்டிக்க வல்லவர் யார்?

(வீரர்கள் மௌனம்)

என்ன ஆச்சர்யம்! இங்கிருக்கின்ற இத்தனை வீரர் களும் ராஜபக்தியும் ஆண்மையும் அற்ற பேடிகளா? நன்று! நன்று! நம் கொற்றம்.

(விசுவநாதன் எழுகின்றான்; ஏதோ சிந்திக்கின்றான்; உட்காருகின்றான்; மீண்டும் எழுகின்றான்.)

**கிருஷ்ண:**—விசுவநாதா! என்ன யோசனை? எழுந்தாய் - அமர்ந்தாய். உன் தந்தையின் செயல் உன் உள்ளத்திற்குப் பொருந்துகின்றதோ? உண்மையைச் சொல்!

**விசுவ:**—அரசே! தந்தை செய்தது பெரும்பிழையே எனினும், என்னைப்பெற்ற தந்தையன்றோ என்று எண்ணியது என்மனம். ஆனால் மாப்பெருந் தந்தை மன்னவனன்றோ என்று தெளிவு பெற்றேன். ஆதலின் தங்கள் ஆணையைச் சிரமேற்றாங்கி என் தந்தையை எதிர்த்துச் செல்லத் துணிந்தேன். தங்கள் ஆசியும், எல்லாம் வல்ல இறைவனருளும், அறமுமே துணையாக என் தந்தையை வென்று வருவேன். விடைதரல் வேண்டும்.

**கிருஷ்ண:**—இவனே வீரன்; அறிவுக்கும் ஆண்மைக்கும் ஏற்றவாறு பேசினான்.

**சூரவர்மன்:**—அரசே! ஒரு முக்கியமான விடயம். நாகமனோ பெருவீரன். அவனிடம் நமது படையின் பெரும்பகுதி இருக்கின்றது. அவன் மகனாகிய இவனும் ஒரு பெருஞ் சேனையைக் கொண்டு சென்று, தந்தையுடன் சேர்ந்து கொண்டால் நாகமன் வலி மிகப்பெருகிவிடும். ஆகவே, இதனை நன்கு கவனித்துச் செய்யவேண்டும்.

**விசுவ:**—சபையோர்களே! என்மீது ஏன் இவ்வளவு ஐயம்? நான் முதலிலேயே என் உள்ளத்தைத் திறந்து கூறிவிட்டேனே. நமக்கு எதிரியாகவுள்ளவர் என் தந்தையே. ஆயினும் தந்தையினும் பெரியது குலம். தருமம் அதனினும் பெரிது. நான் இப்பொழுது என் தந்தையைத் தண்டிக்கச் செல்லவில்லை. பேராசையாலும், தன்வலிபற்றித் தன்னையே மதித்த உள்ளச் செருக்காலும் தனக்குப் பேரும் புகழுமளித்து நின்ற பேரரசையே எதிர்க்கத் துணிந்த அவரது துரோகச் செயலையே தண்டிக்கச் செல்கின்றேன். 'ராஜத்துரோகி' என்ற பழி அவரை மட்டும் சார்வதன்று. வழிவழியாக அவரது குலத்தையும் பீடிக்குமல்லவா? ஆகவே என் குலத்திற்கு வரவிருக்கும் பெரும்பழியைத் துடைக்கவே செல்கின்றேன். தருமநெறி தவறிய எனது தந்தைக்

குத் தருமநெறி புகட்டவே செல்கின்றேன். எனது கடமை மிகத்தெளிவானது. இதில் ஒருபோதும் பிறழேன். தந்தை மீதுள்ள அன்பு, கடமையைத் தூண்டுமேயொழியத் தடை செய்யாது. ஆகவே என்மீது ஐயம்கொள்ள வேண்டாம் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

**கிருஷ்ண:**—இவனன்றோ வீரன்! விசுவநாத! வெற்றியுடன் மீள்க.

(எல்லோரும் செல்கின்றனர்)

**விசுவ:**—(தனக்குள்) சபையில் 'இளங்கன்று பயமறியாது' என்றபடி என்னென்னவோ சொல்லிவிட்டேனே! என்ன செய்வேன்? 'சொல்வது எளிது; செய்வது அரிது' என்பார்களே, அது என்பால் உண்மையாயிற்றே. பெற்ற தந்தையை எப்படி எதிர்ப்பேன்? தந்தையைக் கொல்லவோ மைந்தனாய்ப் பிறந்தேன். இதென்ன தருமசங்கடம்?

(சிந்திக்கின்றான்)

எனக்கேன் இத்துணை மனத்தடுமாற்றம்? பாரதப் போரில் வீரவிஜயனுக்குக் கண்ணன் கழறிய கட்டுரை என்ன? "உறுபயன் எண்ணாது உஞற்றுக கடமை." நானும் அவ்விதமே என்கடமையைச் செய்வேன். இதுவே அறம். விளைவு யாதாயினும் ஆகுக.

## காட்சி—5

**இடம்:**— சோழவந்தானில் ஒரு பாசறை

**பாத்திரங்கள்:** நாகமன்- படைத்தலைவன்,

சந்திரசேகரன்—பாண்டிநாட்டரசன்.

விசுவநாதன், வீரர் முதலியோர்.

(போரில் நாகமன் தோல்வியுற விசுவநாதன் அவனைச் சிறை செய்து விலங்கிடல்)

**விசுவ:**—தந்தையே! என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் எனக்களித்த பயிற்சியால் நான்பெற்ற தருமவுணர்ச்சியாலும், வேந்தனாணை மேற்கொண்ட பொறுப்பாலும், குலப்பழிக்கு அஞ்சிய வெறுப்பாலும் என்னைத் தோற்று

வித்த தங்களேயே சிறை செய்யத் துணிந்தேன். இதனல் என் உள்ளம் படும் வேதனையை ஈசனேயறிவான்.

*(வணங்குகிருன்)*

**நாகமன்:**—*(மனம் மாறி மைந்தனை வாரியெடுத்து மார்புறத் தழுவி)*

விசுவநாதா! வருந்தாதே! நீயே உத்தம புத்திரன். பேராசைப்பேய் என்னைப்பிடித்தாட்டியது. அதனல் நான் செய்யத்தகாத செயல்களைச் செய்தேன்; மக்களை வாட்டினேன்; ராஜத்துரோகி யாயினேன். எனக்கு எத்தகைய கொடுந்தண்டனையும் தகும். என்னல் இழிந்த நம் குலம் உன்னல் உயர்ந்தது. என்னைப்பிடித்த பேயும் என்னைவிட்டு அகன்றது; சித்தந் தெளிந்தது. எனது பழியெல்லாம் உனது புகழொளியால் மறைந்தது.

(சந்திரசேகரனை நோக்கி)

அரசே! நான் தங்கட்கிழைத்த இன்னல்களை மறந்து என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்.

**சந்திர:**—நல்வழிப்பட்ட நாகம, வருந்தேல்; "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தாற்கும் துய்த்தல் அரிது" ஆதலின் இதுவரை நிகழ்ந்த எல்லாவற்றையும் மறந்துவிடுவோம். விசுவநாதனை மைந்தனகப் பெற்றதே உனக்குப் பெரும் புகழ் அளிக்கும். நானே விஜயநகரம் வந்து கிருஷ்ணதேவராயரிடம் உன்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**நாகம:**—ஆஹா! எத்தகைய சீரிய உள்ளம்! தீமை செய்தவற்கும் நன்மையே செய்ய விரும்பும் இவருக்கல்லவோ பல இன்னல்களை விளைத்தேன் பேதையேன்.

**விசுவ:**—தந்தையே! வருந்துதலொழிக. விதிவழியே மதி சென்றது. முடிவில் நன்மையே யாயிற்று.

(எல்லோரும் போதல்)

---

# 9. ஔவையாரும் அதியமானும்

[வித்வான் எஸ். ஆழ்வார் ஐயங்கார்]

நாடுகள் பலவற்றினும் சிறந்து பீடுமிக்க தமிழ் நாட்டில் சங்ககாலத்து நல்லிசைப் புலமை மெல்லியலார் பலருள்ளுஞ் சிறந்தோராவர் **ஔவையார்.** இவர் தமிழகத்தின் ஒரு பகுதியாகிய கொங்கு நாட்டினர்; தமிழ்ப் பழங்குடிகளில் ஒன்றாகிய பாணர் குடியிற்பிறந்தவர். பாணராவார் பாடுந் தொழிலுடையர். அத்தொழிலில் வல்ல பெண்டிர் பாடினியர் எனப்படுவர். இவர்கள் விறலியர் என்றுங் கூறப்படுவார்கள். விறல்பட ஆடுதலின் இப்பெயர் பெற்றனர். பாணர் மரபினரே பாடற்றொழிலையும் ஆடற்றொழிலையும் பண்டை நாளில் பராமரித்து வந்தனர். இம்மரபினராகிய ஔவையாரும் இளமையிலேயே நல்லாசிரியர்பால் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து, கேள்வியறிவிலும் சிறந்து, முற்றிய புலமையுடையவராயும் நினைத்த மாத்திரத்தில் தீஞ்சுவை பொருந்துஞ் செய்யுளியற்றுந் திறலினராயும் விளங்கினர். திருவுடை மன்னர்பாலும் செல்வர்பாலும் தம்திறம் காட்டிப் பரிசு பல பெற்று வரிசையுற்றார். அதனால் இவர் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.

**அதியமான் நெடுமான் அஞ்சி** கொங்குநாட்டுத் தகடூரைத் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்திய சிறப்புமிகு மன்னன். அவன் தமிழ்ப்பற்று மிகப்பெற்றவன்; தண்டமிழ்ப் புலவர் பாலும் தகைமிகு பாடினியர், விறலியர் பாலும் அன்பு பூண்டு அவர்தம் வறுமைப் பிணிக்கு மருந்தாய் விளங்கியவன்; எவர்க்கும் வரையாதளிக்கும் வள்ளல்; மாற்றார் ஆற்றலை மாய்க்கும் வீரராம் மழவர் பெருந்தலைவன்; குணக்குன்று; அருளின் உறைவிடம். இத்தகையோனது அறிவு, திரு, ஆற்றல், குணநலம் முதலியன பற்றிக் கேள்வியுற்ற ஔவையார் அவன் பெருநட்புக்கு உரியராய்ப் பரிசில் பெறுவான் விழைந்தனர். அதியமானும் இவரைத் தம் அவைப் புலவராக்கச் சமயம் பார்த்திருந்தான்.

ஔவையார் அதியமானைக் காண விழைந்து இயற்கை வளம் செறிந்த காடும் மலையுங் கடந்து தகடூரை அடைந்தார். அதியமான் முன்னரே ஔவையார் வரவை விழைந்

திருந்தானுதலின் அவரை இனிய முகத்துடன் முகமன் கூறி வரவேற்று நல்லதோர் இருக்கையில் இருத்தி உபசரித்தான்; அமிழ்தினுமினிய அறுசுவையுண்டியளித்தான்; எவ்வாற்றானுங் குறைவின்றிப் போற்றி வந்தான். அவரது அரும்பெருங் கல்விச் சுவையில் ஈடுபட்ட அதியமான், உடனே பரிசில் தரின் தம்மை விட்டு அவர் அகல்வரேயென அஞ்சிப் பரிசில் தாராது காலம் தாழ்த்தான்.

அதியமான் இங்ஙனமிருக்க, அவனுட் கருத்தறியாத ஔவையார் சினமேற்கொண்டு தம்மை அவன் மதித்திலனே என மனம் புழுங்கி அவனை நேரிற் காணவு மனமில்லாதவராய், அரண்மனையினின்றும் வெளியேறத் துணிந்து வாயிற் காவலனிடத்து அவன் பரிசில் வழங்காமையையும், அதனுல் தமக்கு மனவருத்த மிக்கமையையும் கூறி அகன்றார். வாயிற் காவலனுல் ஔவையாரது சீற்றத்தை அறிந்த அதியமான், விரைந்தோடித் தன் கருத்தை உரைத்து அழைத்து வந்து தன்னுடன் இருத்தி உண்பித்து அவர் மனம் நிரம்ப மகிழுமாறு பொன் மணி முதலிய பரிசில் அனைத்தும் வேண்டியபடி நல்கினன். அவனது சிறந்த கொடையுள்ளங் கண்டு வியந்த ஔவையார் அவனது அவைப்புலவராக ஆகி மேலும் பலநாட்கள் அவ்விடத்தே தங்கி இன்சுவைப் பாக்களால் அவனை மகிழ்வித்து, நெருங்கிப் பழகி வாழ்வாராயினர். அவனது ஈகைச் சிறப்பையும், உள்ளத்துயர்வையும்

‘ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ’

என மனமார வியந்து புகழ்ந்து பாடியுள்ளார்.

இவ்வாறு இருக்குங்கால், ஒருநாள் அதியமான் பல்வளமிக்க நல்வரைப் பக்கத்திற்குச் சென்றிருந்தவன், மலைப் பிளப்பில் இருந்த கருநெல்லி மரமொன்றில் கனிந்திருந்த கனியொன்றை மிகமுயன்று அடைந்தான். அக்கனியை உண்பார் நீண்டகாலம் உடல்நலம் உற்று உயிருடன் வாழ்வர் எனவுணர்ந்தும் அதனைத் தானுண்ணலினும் ஔவையார் உண்ணின் அது உலகிற்குப் பெருநலம் பயப்பதாகும் என

எண்ணி அவருக்கீந்தான். ஔவையார் கனியை உண்ட பின்னரே அதன் பெருமையை உணர்ந்தார். அதியமான், தன்னினும் தம்மை மதித்து அதனையீந்த கொடைத் திறத்தையும் குற்றமற்ற மனநிலையையும் கருதி வியந்து "வீர மிக்க அதியர் கோமானே! பெரிய மலையின் பிளப்பில் மிக அரிதிற் பெற்ற சிறிய இலையையுடைய நெல்லிமரத்தின் தீஞ்சுவைக் கனியை, அதன் பயனை என்மாட்டுக் கூறாது நின்மனதில் அடக்கி இறப்பு நீங்க எமக்கீந்தாயாதலால், நீ பிறை மதியணிந்த சென்னியனும் நீலமணிபோலுங் கண்டத்தினனுமாகிய சிவபிரான் நஞ்சுண்டும் நிலைத்திருத்தல் போல் நீண்டகாலம் நிலைபெற்றிருப்பாயாக" என்று வாழ்த்திப் பெரிது மகிழ்ந்தார்.

பின்னர், ஔவையார் அறிவின் றிறத்தை உணர்ந்த அதியமான் எச்செயலையும் அவருடன் ஆலோசித்தே செய்துவந்தான். ஔவையார் இவ்வாறு உறைந்துவரும் நாளில் தொண்டை நாட்டினைக் காஞ்சிநகரத்துஇருந்து ஆண்டுவந்த தொண்டைமான் என்னுங் காவலன், படை வலியால் அதியமானைத் தன்னின் மெலியனாகவெண்ணிப் படையெடுக்கும் நினைவினனாய்த் தருக்குற்றிருந்தான். அவன் தருக்கை யொடுக்கித் தன்னாற்றலை அவனுக்குத் தக்கவாறு உணர்த்த அறிவாற்றலிற் சிறந்த ஔவையாரே தகுதியுடையவர் என எண்ணிய அதியமான், அவரை அவன்பால் தூதுபோய் வருமாறு வேண்டினான். அதற்கிசைந்த ஔவையார் காஞ்சிமாநகர் அடைந்தார். புலமைமிக்க தூதுவராகிய அப் பெருமாட்டியாரைத் தொண்டைமான் மனங்கனிந்து வரவேற்றான்; இன்னுரை பல பகர்ந்து பெருவிருந்தளித்தான்; அவருடன் பல பேசி மகிழ்ந்து, தன் பேராற்றலையும் படைக்கலப் பெருமையையும் அவருக்குணர்த்தக் கருதிப் படைக்கலக் கொட்டிற்கழைத்துச் சென்றான்; ஆங்குள்ள படைக்கலங்களின் வகைகளை அவருக்குக் காட்டினான். ஔவையார் தம் அஞ்சாவியல்பும் அதியமான் பேராற்றலும் அவன் நெஞ்சில் நன்கு பதியுமாறு,

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து

கடியுடை வியனக ரவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ''

என்று நயமுறப்பாடினர். "இவை மயிற்பீலி அணியப் பெற்று, மாலை சூட்டப்பட்டு கண்ணுக்கினிய திரண்ட வலிய வயிரம் பொருந்திய காம்பு திருத்தி நெய்பூசப்பட்டுக் காவலையுடைய அகன்ற அரண்மனைக்கண் (பயனின்றி) உள்ளன. அதியமானுடைய ஆயுதங்கள் பன்முறை பகைவரைக் குத்துதலால் விளிம்பும் நுனியும் முரிந்து (செப்பனிடுதற்கு) கொல்லனது உலைக்களமாகிய சிறிய கொட்டிலை யடைந்துள்ளன'' என்பது இதன் பொருளாம்.

இவ்வாறு புகழ்வது போல் இகழ்ந்தும் இகழ்வது போல் புகழ்ந்தும் கூறிய ஔவையார் சொல்லாற்றலையும் அதன் கருத்தையும் அறிந்த தொண்டைமான் "புலவீர்! அப்படியாயின் நும் நாட்டில் எம்முடன் போர் செய்யும் வலியுடையாருமுளரோ'' என வினவினன். ஔவையார் "வேந்தே, நீ போர் செய்யக் கருதுவையாயின் எம் நாட்டின்கண், அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் பாம்புபோன்ற இளைய வலிய வீரருமுளர்; அவரேயுமின்றி, மன்றில் தூங்கும் மத்தளத்தில் காற்றடித்தலால் உண்டான ஓசையைப் போர்ப்பறை ஓசையெனக் கருதி மகிழ்ந்து உடனே படைக்கலந்தாங்கிப் போருக்கெழும் எமது தலைவனுமுளன்'' என்று கூறித் தொண்டைமான் தருக்கை யடக்கித் தகடூர் அடைந்தார்.

சின்னாட்களுக்குப் பின், திருக்கோவலூர் வேந்தனாகிய மலையமான் திருமுடிக்காரி என்பானுக்கும் அதியமானுக்கும் பெரும்போர் நடந்தது. காரி குதிரைமீது இவர்ந்து எதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். காரி தோல்வியுற்றான். அதியமான் வெற்றிபெற்றான். கோவலூர் அதியமான் கைப்பட்டது. இவ்வெற்றியைப் பரணரென்னுஞ் செந்தமிழ்ப் புலவரும் ஔவையாரும் பாடி மகிழ்ந்தனர்.

தோல்வியுற்ற காரி, சேரமான் பெருஞ் சேரலிரும் பொறையைத் துணைக்கொண்டு மீண்டும் பொருதற்கெழுந்தான். அப்போரில் சேரமான் விடுத்த வேலால் அதியமான் உயிர் துறந்தான்.

ஔவையார்க் குண்டாய துயரம் அளவிட ஒண்ணாதது. ஔவையார் அவனது அரும்பெருங் குணநலன்களைக் கூறிக்கூறி மிகமிக வருந்தினர். அவர் வருத்த மிகுதியால், கேட்டோர் அனைவரும் இரங்குமாறு பாடிய பாடல்கள் பல. "அதியமான் மார்பினிடத்துத் தைத்த வேல் மார்பில் மட்டும் பட்டதன்று. அது பாணரது மண்டைப் பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவி, தன்னாற் பாதுகாக்கப்படும் சுற்றத்தாரது கண்ணின் கருமணிப் பாவையின் ஒளி மழுங்க, நுண்ணிய அழகிய சொல்லாராய்ச்சியை உடைய புலவரது நாவினிடத்தும் போய்த் தைத்தது" என்ற பொருளமைந்த ஒரு பாட்டின் அடிகள் படிக்கத் தக்கன. அவை வருமாறு:—

" அருந்தலை யிரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவைசோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர்நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே" என்பன.

ஔவையாரைப் போன்று நல்லிசைப் புலமை வாய்ந்த பெருமாட்டியர் பலர், பண்டைத் தமிழ் நாட்டில் வேந்தரும் கொண்டாடும் தீந்தமிழ்ப் பாடலியற்றும் வன்மையுள்ளோராய் விளங்கினர். அவர்கள் நறுந்தமிழ்ப் பாடல்களைச் சங்க நூல்களிற் சாலக் காணலாம்.

---

## 10. பூமி உண்டான விதம்

[ஜவஹர்லால் நேரு கடிதம்—'கலைமகள்']

பூமி சூரியனையும், சந்திரன் பூமியையும் சுற்றுகின்றன என்பது உனக்குத் தெரியும். பூமியைப் போலவே இன்னும் பல கிரகங்களும் சூரியனைச்சுற்றி வருகின்றன என்பதும் உனக்குத் தெரியும். அவை எல்லாவற்றிற்கும், பூமியுட்பட, சூரியனைச் சேர்ந்த கிரகங்கள் என்று பெயர். சந்திரன் பூமியை ஒட்டியிருப்பதால் அதற்கு உபக்கிரகம் என்று பெயர். மற்ற கிரகங்களுக்கும் இம்மாதிரியான உபக்கிரகங்

கள் உண்டு. சூரியனும் உபக்கிரகங்களோடு கூடிய மற்ற கிரகங்களும் ஒன்று சேர்ந்து சந்தோடமாக ஒரு குடும்பம் போல் வாழ்கின்றன. இதற்குச் **சூரிய மண்டலம்** என்று பெயர். சூரியன் மற்ற கிரகங்களுக்குத் தகப்பன் என்ற முறையில் இருப்பதால் தான் அம்மண்டலத்தைச் சூரிய மண்டலம் என்று அழைக்கிறார்கள்.

இரவில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களை நீ வானில் பார்க்கிறாய். இவற்றில் வெகு சிலவே கிரகங்கள். இவற்றை நட்சத்திரங்கள் என்று சொல்லக்கூடாது. கிரகம் எது, நட்சத்திரம் எது என்று உனக்குக் கண்டு பிடிக்கத் தெரியுமா? நட்சத்திரங்களைவிடக் கிரகங்கள், நமது பூமியைப் போல் அளவில் மிகச் சிறியன. ஆனால், அவை, நட்சத்திரங்களைவிடப் பூமிக்குப் பக்கத்தில் இருப்பதால் பெரியனவாகக் காணப்படுகின்றன. சந்திரனே ஒரு சிறு குழந்தையைப் போன்றது. அது நமக்கு அதிகப் பக்கத்தில் இருப்பதால் பெரியதாகக் காணப்படுகிறது. கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவற்றை எப்படிக் கண்டு பிடிப்பது? நட்சத்திரம் விட்டுவிட்டுப் பிரகாசிக்காது. சூரியனின் வெளிச்சத்தைப் பெறுவதனாலேதான் கிரகங்கள் பிரகாசிக்கின்றன. சூரிய வெளிச்சத்தைத்தான் நாம் கிரகங்களிடத்திலும் சந்திரனிடத்திலும் காண்கிறோம். ஆனால் நட்சத்திரங்களோ சூரியனைப் போன்றவை. அவைகளெல்லாம் வெப்பமானவை; கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றவை. உண்மையாகவே சூரியனும் ஒரு நட்சத்திரந்தான். சமீபத்தில் இருப்பதால் பெரியதாகத் தெரிகிறது. அதனால்தான் அது நமக்கு ஒரு பெரிய நெருப்புப் பந்துபோலத் தோற்றுகின்றது.

நமது பூமி, சூரிய மண்டலத்தைச் சார்ந்தது. இந்தப் பூமி மிகவும் பெரிதென்று நாம் நினைக்கிறோம். அற்பப் பிராணிகளான நம்மைவிட அது பெரியதுதான். ஒரு விசையான ரெயில் வண்டியிலாவது கப்பலிலாவது நாம் போவோமானால், இப்பூமியின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் போக அநேக மாதங்கள் செல்லும். பூமி மிகப் பெரியதாய் நமக்குத் தோன்றினாலும் அது

ஆகாயத்தில் காணும் ஒரு தூசியின் அளவுதானுள்ளது. சூரியனே கோடானு கோடி மைல்களுக்கு அப்பாலிருக்கிறது. மற்ற நட்சத்திரங்கள் இன்னும் வெகு தொலைவில் இருக்கின்றன.

நட்சத்திரங்களின் இயல்பை அறிந்த வானசாத்திரிகள் நீண்ட காலத்திற்கு முன்பு ஒரு காலத்தில் பூமியும் மற்ற கிரகங்களும் சூரியனோடு சேர்ந்திருந்தன வென்று சொல்லுகிறார்கள். சூரியன் அப்போதும் இப்போது இருப்பதைப் போல ஒரு நெருப்புப் பந்தாகவே யிருந்தது; அதிக வெப்பமுள்ளதாக இருந்தது. சூரியனிடத்திலிருந்து சிறிய நெருப்புத் துண்டுகள், பொறிகள் போல் எப்படியோ பிரிந்து ஆகாயத்தில் பறந்தன. ஆனால் அவைகள் எல்லாம் தங்கள் தந்தையைவிட்டு முற்றும் பிரிந்துபோக முடியாமலிருந்தன. ஏதோ ஒரு கயிற்றால் கட்டப்பட்டவை போல அவை சூரியனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. கயிற்றைப் போன்ற இவ்விசித்திரமான விசையானது, சிறிய பொருள்களைப் பெரிய பொருள்களிடம் இழுக்கும் தன்மையுடையது. இந்த விசைதான் பளுவுள்ள சாமான்களைக் கீழே விழும்படி செய்கிறது. நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் விட இந்த உலகமே பெரிது. அதனால்தான் இது நம்மிடமுள்ள எல்லாவற்றையும் தன்னிடம் இழுத்துக்கொள்கிறது.

இவ்விதமேதான் இப்பூமி சூரியனினின்றும் சிதறியது. அப்போது அது அதிக வெப்பமுடையதாக இருந்திருக்கும். சூடான ஆவியும் காற்றும் அதைச் சூழ்ந்து கொண்டிருந்தன. சூரியனைவிட மிகச் சிறியதான இப்பூமி, விரைவில் சூடு தணிந்து குளர்ச்சியடைந்தது. சூரியனின் வெப்பமும் கூட முன் இருந்ததை விட இப்போது குறைந்து வருகிறது. அது நன்றாகச் சூடு தணிந்து குளிர்ச்சியடைய இன்னும் அநேக கோடி வருடங்கள் பிடிக்கும். பூமி வெகு சீக்கிரத்தில் குளிர்ச்சியடைந்தது. அது வெப்பமாக இருந்த போது அதில் மனிதனாவது, மிருகங்களாவது, செடி கொடிகளாவது வசிக்கத் தகுதியற்றதாயிருந்தது. அப்போது எல்லாம் கருகிச் சாம்பலாகியிருக்கும்.

எப்படிச் சூரியனினின்றும் சிதறிய பாகம் பூமியா யிற்ரே, அவ்விதமே சந்திரனும் ஒரு சிதறிய பாகத்தி லிருந்து உண்டாகியது. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் நடுவிலுள்ள பெரும்பள்ளமான பசிபிக் மகா சமுத்திரத்தி லிருந்து சந்திரன் வந்ததாகப் பலர் நினைக்கின்றனர்.

பூமியின் சூடு மெள்ள மெள்ளத் தணிய ஆரம்பித்தது. ஆனல், அதற்கு வெகுகாலம் பிடித்தது. பூமியின் மேல் பக்கம் நாளடைவில் குளிர்ச்சி அடைந்ததெனினும் பூமியின் உட்புறம் அதிக வெப்பமாகவே இருந்தது. இப்போதும் நீ ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் இறங்கிச் சென்ருல் கீழே போகப் போக வெப்பம் அதிகரிப்பதை உணர்வாய். ஒரு சமயம் நீ பூமிக்குள் நெடுந்தூரம் செல்வாயே யானல் அங்கே கொல்லன் உலைபோல் சிவந்து சூடாயிருக்கும். சந்திரனும் கூட பூமியைப்போல் வெப்பந்தணிந்து குளிர்ச்சியடைந்தது. அது பூமியைவிடச் சிறியதாகையால் மிக விரைவில் குளிர்ச் சியடைந்தது. சந்திரன் எவ்வளவு இன்பகரமான குளிர்ச் சியைக் கொடுக்கிறது! அதைத் 'தண்மதி' என்று சொல்லு கின்றனர். ஒரு வேளை சந்திரமண்டலத்தில் பனி ஆறு களும் பனி வயல்களும் இருக்கின்றனவோ என்னவோ!

பூமி குளிர்ச்சியடைந்ததும் ஆகாயத்திலிருந்த நீராவி யெல்லாம் நீராக மாறிப் பூமியில் மழையாகப் பெய்கிறது. அப்போது மழை சோவென்று விடாமல் பெய்திருக்க வேண்டும். அப்படிப் பெய்த மழைநீரானது பூமியிலிருந்த பள்ளங்களில் தேங்க சமுத்திரங்களும் கடல்களும் உண்டாயின.

பூமியைப்போல் சமுத்திரமும் குளிர்ச்சியடைந்தது. அதனல் பூமியிலும் சமுத்திரத்திலும் ஜீவராசிகள் வசிக்க ஆரம்பித்தன. ஆதியில் பிராணிகள் எப்படி உண்டாயின என்பதை அடுத்த கடிதத்தில் கவனிப்போம்.

## 11. கடற் செலவு

[த. வே. உமாமகேசுவரம் பிள்ளை பி. ஏ. பி. எல்.]

ஒருநாள் நெடுந்தூரத்தில் உயிரற்ற பொருளொன்று நீரால் அலைக்கப்படுவதைக் கண்டோம். வெட்டவெளியான நீர்ப்பரப்பில் வெட்டவெளிக்கு மாறுபட்டதாக எது காணப் பட்டாலும் அது நம் மனத்தைக் கவரும். காணப்பட்ட அப்பொருள் முழுதும் உடைந்து தகர்ந்த கப்பலின் கொடி மரமாகத் தோன்றிற்று. அலைகள் எற்றித் தள்ளாமல் தடுக்கும் பொருட்டுப் பாய்மரத்துடன் பிணித்திருந்த கைத் துண்டுகள் பல, அம்மரத்தில் எஞ்சியிருந்தன. அக்கப்ப லின் பெயர் யாதெனக் காண, எவ்வித அடையாளமும் தென்படவில்லை. அந்தப் பாய்மரமானது பலமாதங்களாகக் கடலிலேயே அலைக்கப்பட்டுக் கிடந்ததாகத் தோன்றியது. மிகப்பல கிளிஞ்சில்கள் அதைப்பற்றி இருந்தன. அதன் பக்கமெல்லாம் நீண்ட கடற்பாசிகள் வளர்ந்து, கம்பீர மாகத் தலை அசைத்து நின்றன. ஆனால், அக்கப்பலில் ஏறிவந்தவர்கள் எங்குச் சென்றார்கள்? அவர்கள் உயிர் தப்புவதற்குச் செய்த போராட்டம் வெகு காலத்திற்கு முன்பே ஓய்ந்து விட்டது. புயலின் ஆரவாரத்துடன் அவர்களும் மாய்ந்து மூழ்கிவிட்டார்கள். அவர்களுடைய எலும்புகள் கடலின் அகட்டிலுள்ள பெருங் குகைகளில் வெளுத்துக் கிடக்கின்றன. அவர்களை, அந்தகாரமும், மந்தமும், மௌனமும் மூடிவிட்டன. அவர்களுடைய முடி வின் வரலாற்றைக் கூறுவார் ஒருவருமிலர். அக்கப்பலின் வருகையைப் பெருமூச்சுடன் எதிர்பார்த்திருந்தவர் எத் துணையர்? அவர்கள் வாழ்ந்து வெளியேறிய இல்லத்தில் உள்ளார், அவர்கள் வருகைக்காக ஆண்டவனை நோக்கி வேண்டிய வேண்டுதல்கள் எத்துணை? கடலில் தெரியும் இக்கப்பலைப் பற்றிய செய்தி ஏதேனும் கிடைக்காதா வெனத் தினத்தாள்களை ஆவலுடன் உற்றுநோக்கிய அன்னை, மனைவி, உற்றார், உறுதுணைவர் எத்துணையர்? எதிர் நோக்குதல் கவலையாகவும், கவலை பயமாகவும், பயம் இழப்பாகவும் எங்ஙனம் மாறின? ஐயோ! அவர்கள் மாட்டு அன்புடையோர், ஞாபகக்குறியாக வைத்துப் போற் றுதற்குக் கடலில் மடிந்த அவர்களுடைய அடையாளப்

பொருள் ஒன்றேனும் கிட்டாதா? "கப்பல் துறையி னின்றும் புறப்பட்டது; பின்னர் யாதும் தெரியவில்லை," என்று கூறும்படியாயிற்றே!

கடலில் காணப்பட்ட கப்பல் துண்டின் காட்சி வழக்கம்போலத் துயர்நிறைந்த பல நிகழ்ச்சிகளின் வரலாற்றைக் கூறும்படி தூண்டியது. முதன்மையாகக் கோடையில், கடற்செலவின் அமைதிக்குக் கெடுதியுண்டாகுமாறு, மாலைப்பொழுதில் திடீரென வானம் இருண்டு புயற்காற்றின் வருகையைக் காட்டும் குறிகள் காணப்படும்போது இத் தகைய கதைகள் பலவற்றைப் பேசுவது வழக்கம். அங்ஙனமே, நாங்கள் கப்பலறையில் உள்ள மங்கலான விளக்கைச் சூழ்ந்திருந்தபொழுது ஒவ்வொருவரும் தாம்தாம் கண்ட கப்பற்கேட்டின் கதைகள் கூறத் தொடங்கினர். அவர்களில் கப்பல் தலைவன் கூறிய கதையொன்று என் மனத்தைப் பிணித்தது. அக்கதையாவது:—

"நான் **நியூபவுண்ட்லாண்ட்** கரையோரமாய் அழகும் வலிமையும் வாய்ந்த ஒரு கப்பலில் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது பகலில்கூட நமக்கு முன் உள்ள பொருள்களைக் காணமுடியாமல் மறைப்பதும், அவ்வெளிகளில் இயல்பாக நிகழ்வதுமான "மூட்டம்" ஒன்று தோன்றியது. இராப்பொழுதில் நம்மருகில் உள்ளவர்களையும் மறைக்கும் வண்ணம் அம் "மூட்டம்" மிகவும் கனத்திருந்தது. நான் சென்ற கப்பலின் பாய்மரத்தின் உச்சியில் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. என்றாலும், அந்தக் கரையோரங்களில் மீன் படகுகள் நங்கூரம் போட்டுக் கிடப்பது வழக்கமாதலால், அவை குறுக்கிடுமோவென, நான் அடிக்கடி ஊன்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். காற்றும் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. நாங்களும் கடலில் கடுவேகமாகப் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது திடீரெனக் காவற்காரன் "எதிரே கப்பல்!" எனக் கூக்குரலிட்டான். அதற்குள்ளாக அக்கப்பலைத் தாக்கிவிட்டோம். அது "கூனர்" என்னும் பெயருடைய சிறு கப்பல். அது நங்கூரம் போட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்தவர் உறங்கி விட்டனர்; விளக்கேற்ற மறந்து விட்டனர். ஆதலால் நடுக்கப்பலில் மோதிவிட்டோம். எமது கப்பலின்

வேகத்தினுலும், பருமனுலும், பளுவினுலும் அச்சிறுகப்பல் அலைகளின் கீழ் ஆழ்ந்துவிட்டது.

இங்ஙனம் தகர்ந்த கப்பல், கடலில் மூழ்கிக் கொண்டிருக்கையில் இரண்டு பாவிகள் உடை நெகிழ்ந்து அலங்கோலமாக கீழேயிருந்து மேற்றட்டிற்கு ஓடிவந்ததை நான் பார்த்தேன். அவர்கள் அப்பொழுதுதான் படுக்கையிலிருந்து எழுந்து ஓடிவந்தார்கள். அவர்கள் கடலில் மூழ்கும்பொழுது ஓலமிட்டழுத குரல் புயல்காற்றுடன் கலந்து என் செவிக்கெட்டியது. அவ்வழுகுரலை என்னிடம் கொணர்ந்த காற்று இனி அக்குரலைக்கேட்க முடியாதவாறு எம்மை வெகுதூரம் அடித்துச்சென்றது. நாங்கள் எங்ஙனம் அவ்வழுகுரலை மறத்தல் கூடும்? கப்பல் விரைந்து சென்றமையால் அதைத் திருப்பச்சிறிது நேரமாயிற்று. கப்பல் உடைந்தவிடத்தை உற்றுணர்ந்து அவ்விடத்திற்குத் திரும்பிவந்தோம்; நாங்கள் தேடுவதை அறிவிக்கும் பொருட்டுப் பல வேட்டுகள் சுட்டோம்; அக்கப்பலிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் யாரேனும் கூப்பிடமாட்டார்களா எனப் பார்த்தோம். எங்கும் ஓசையின்றி அமைதியாயிருந்தது. நாங்கள் அக்கப்பலைப் பற்றியாவது, அதிலிருந்தவர்களைப் பற்றியாவது யாதும் கேட்கவுமில்லை; காணவுமில்லை.'' இது அக்கப்பற்றலைவன் கூறிய கதையாகும்.

இதுபோன்ற கதைகள் சிறிது நேரம் எனது மன வூக்கத்தைக் குறைத்து ஓயவைத்தன. இரவு நேரமும் வந்தது. புயலும் வரவர மிகுதிப்பட்டது. கடல் குழம்பும்படி அலைகள் வீசின. புரளும் அலைகளாலும் மோதும் அலைகளாலும் பயங்கரமான சப்தம் விளைந்தது. அவ்வோசை கடலைக் கடல் கூவி அழைப்பதுபோலிருந்தது. வானத்தில் படரும் கரிய மேகக்கூட்டங்களினின்றும் பளீர் எனப் பிளக்கின்றதைப் போலக் காணப்பட்ட, ஒளிவீசும் மின்னற்கொடிகள், கிளம்பும் அலைகளின் மேல் காணப்பட்டன. இம்மின்னலானது பின் தொடரும் இருளை இரட்டிப்பாக்கி, அச்சத்தை விளைத்தது. இடிகளோ நீர்ப்பரப்பின் மேல் அதிர்ந்தன. மலை போன்ற அலைகள் எதிர் ஒலி விளைத்தன. மலைபோலும் அலைகளின் மேலும், குகைபோலும் பள்ளங்களின் கீழும், கப்பல் ஏறுவதையும் அமிழ்வதையும் பார்த்த எனக்குக்

கப்பல் மீண்டும் தன் நிலையடைவது தெய்வீகமாம் எனத் தோன்றியது. கப்பலின் தலை அலைகளில் புதைந்தது. பாய் மரக்கட்டுகள் கடலிற் படிந்தன. கப்பலையே ஆழ்த்தவல்ல மலை போலும் அலைகள் எழுந்து தாக்கின. அப்போது சுக்கானைத் திருப்பும் திறன் ஒன்றே, கப்பல் அலைகளால் மொத்துண்டு மூழ்கா வண்ணம் பாதுகாத்தது.

அப்பொழுது என் அறைக்குள் நான் தனித்துச் சென்றேன். என்றாலும், இப்பயங்கரமான தோற்றங்கள் என்னைத் தொடர்ந்து வந்தன. காற்று வீசுவதால் கப்பற் கட்டுகளின் மீது விளைகின்ற ஒலி, சாக்காட்டின் மேல் ஒப்பாரிபோன்றிருந்தது. அலைமோதுங் கடலில், கப்பல் உழலுதலால், பாய் மரங்களும், கப்பற் கட்டுகளும் விளைக்கும் "கிரீச்" என்னும் ஓசை பயத்தை விளைத்தது. கப்பலிடம் ஓடி வரும் அலைகளின் அலறுதல் எமன் இரை தேடிவந்து இம்மிதவைச் சிறை வீட்டை முற்றுகை செய்ததுபோன்றிருந்தது. இக் கப்பலில் ஓர் ஆணி கழன்றாலும், அல்லது ஒரு பலகை விலகினாலும், அந்த எமன் உடனே உள் நுழைவதற்கு அது வழியாகுமெனத் தோன்றியது.

வெயில் காயும் காலைப்போழ்தில் "தரை! தரை!" என்ற ஒலி பாய் மரத்தின் மேல் தட்டிலிருந்து தோன்றவே, அது கேட்ட எனக்கு மயிர்க்கூச்செறிந்தன. முதல் முறை ஐரோப்பாவைக் காணும் அமெரிக்கனுடைய உள்ளத்தில் ஓடிப்புகும் சுவையுள்ள உணர்ச்சிகள் யாவை என்பதைப் பழகியுணர்ந்தவரல்லாத பிறரால் அளவிட்டுக் கூறமுடியாது. ஐரோப்பாவிற்கே உரிமையான பல செய்திகள் உள்ளன. இளம் பருவத்தில் நாம் கேட்டவற்றையும், படித்தவற்றையும் நேரில் காணக்கூடிய நன்னாடன்றோ அஃது?

தரையைக் கண்டது முதல் கரையேறும் வரை ஒரே பதைபதைப்பாயிருந்தது. போர்க் கப்பல்கள் காவல் தெய்வங்களைப்போலக் கரையோரங்களில் காப்புச் செய்து திரிந்தன. **அயர்லாந்தின்** நிலமுனைகள் சமுத்திரத்தில் நீண்டு நீண்டு தோன்றின. **வேல்ஸ்** நாட்டின் மலைத்தொடர்கள் மேகமண்டலத்தை அளாவுகின்றன. ஒவ்வொரு தோற்றமும் மனவெழுச்சியையும் ஆர்வத்தையும் விளைத்தது. கப்பல்

"எமர்சே" ஆற்றின் கழிவாயின் வழியே மேலேறியபோது நான், "தூரங்காண்" கண்ணாடியால் இருகரைகளையும் உற்று நோக்கி வந்தேன். என் கண்கள், திருத்தி வளர்த்த செடிகளும், பசும்புற்றரைகளும் சூழ்ந்திருக்கும் சிறு குடில்களில் அன்புடன் தங்கின. அருகில் உள்ள குன்றின் உச்சியில் உயர்ந்து நிற்கும் கிராமக் கோயிலின் பெரிய கோபுரமும், பசுமையான 'ஐவி'க்கொடி படர்ந்து பாழடைந்து கிடக்கும் மடமும் எனக்குப் புலப்பட்டன. இங்கிலாந்து தேசத்திற்கு இத்தகைய காட்சிகள் மிகவும் உரிமையுள்ளவை.

காற்றும், அலையும் சாதகமாய் இருந்தமையால், கப்பல் இறங்கும் பாலத்திற்கு உடனே வரமுடிந்தது. அப்பாலத்தில் மக்கள் நிறைந்திருந்தார்கள். அவர்களில் அலுவலின்றி வேடிக்கை பார்க்க வந்தவர் சிலர்; நண்பர்களையும் உறவினர்களையும் காண்பதற்கு ஆவலுடன் வந்தவர் வேறு சிலர்.

கப்பல் கரைசேர்ந்ததும் எங்கும் பரபரப்பாயிருந்தது; பழகினவர் சந்தித்தனர்; நண்பர் ஒருவருக்கொருவர் வந்தனங் கூறி அளவளாவினர். வணிகர் குழுமிநின்று உரையாடினர். நான் மட்டிலும் தன்னந்தனியாய்ச் செய்வதொன்றும் அறியாது வாளாவிருந்தேன். என்னைச் சந்திக்கவும், வரவேற்கவும் நட்பினர் இல்லை.

---

## 12. திராவிடக்கலை

[மா. இராஜமாணிக்கம் பி. ஒ. எல், எல். டி, எம். ஓ. எல்.]

கோவில் கட்டுதல் திராவிடரது பழக்கம் ஆகலாம். அதனைப் பிற்காலத்தில் ஆரியர் கைக்கொண்டனர். **தூபி, சைத்தியம்** என்பன திராவிடருடையன. இவற்றை ஆரியர் கடன் பெற்றனர். இவை பிற்காலத்தில் இந்து சமயக் கோவில்களிற் காணப்பட்டன. இவற்றையே பௌத்தர் மேற்கொண்டனர். விமான வகைகள் பல தென்னிந்தியாவில் உண்டு. அவை யாவையும் கல்லறைகளிலிருந்து தோன்றின என்றால் தவறாகாது. தென் கன்னடக் கோட்டத்திலுள்ள

**முதுபித்ரி** என்னும் இடத்திற் காணப்படும் குருமார் கல்லறைகளில், மூன்று முதல் ஏழு அடுக்குகள் கொண்ட விமானங்களைக்காணலாம். சதுரத்தின் மேல் சதுரம் வைத்துக் கட்டப்பட்ட ஏழு அடுக்குகள் கொண்ட சதுரக் கல்லறைகள் பல இந்நாட்டில் உண்டு. இவ்வமைப்புக்கள் நாளடைவில் பெரிய விமானங்களாக மாறிவிட்டன என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபுரங்கள், விமானங்கள் இவற்றில் காணப்படும் வேலைப்பாடுகள் அனைத்தும் இந்நாட்டுப் பழைய வேலைப்பாடுகளிலிருந்து வளர்ச்சியுற்றனவேயாகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டையோட்டிலிருந்து இன்றைய மனிதனது மண்டையோடு வளர்ச்சியுற்றாற் போலவே தமிழகக் கட்டடக்கலையும் வளர்ச்சிபெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர்களைக்கொண்டும், திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவனார் கோவில் வேலைப்பாட்டைக் கொண்டும் செவ்வனே அறியலாம்.

**கோவில்கள் பயன்பட்டவகை:** சங்க காலத்துக் கோவில்கள் அழியக்கூடிய பொருள்களால் ஆனவை. ஆதலால் நமக்குக் **கல்வெட்டுகள்** கிடைக்கவில்லை. பின்வந்த பல்லவர் கற்கோவில்கள் அமைத்தனர். ஆதலின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவர்க்குப் பின் வந்த சோழர் பழைய கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர். ஆதலின் அழியா நிலையுடைய கல்வெட்டுகள் தோன்றின. அவை கோவில் அறப்பணிகளைக் குறிக்க எழுந்தன. ஆயினும் அரசர் மரபு, போர்கள், அரிய செயல்கள் இன்ன பிறவும் முதலிற் பொறிக்கப் பெற்றிருந்தன. அக்குறிப்புக்களே இன்று தமிழக வரலாறு கட்ட அடிப்படையாக இருந்து உதவுகின்றன.

கோவிலை அடுத்துச் சமய வளர்ச்சிக்குரிய மடங்களிருந்தன. அவை சமயக்கல்வியைப் புகட்டின. விழாக்களைக் காணவந்த அடியார்கட்குப் புலர் தானமளித்துப் பாதுகாத்து வந்தனர்.

கோவிலை அடுத்து மருத்துவச்சாலை இருந்தது. இதனைத் தஞ்சாவூர்ப் பெரியகோவிற் கல்வெட்டால் அறியலாம்.

நடனம், இசை, நாடகம் முதலிய நாகரிகக் கலைகள் கோவில்களில் வளர்க்கப்பெற்றன. இவற்றில் பண் பெற்ற பெண்மணிகள் இருந்தனர். அவர்கள் அடிகள் மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திரகணிகையர் எனப்பட்டனர். தஞ்சைப் **பெரிய கோவிலில்** மட்டும் 400 பேர் இருந்தனர். காஞ்சி **முத்தீசுவரர்** கோவிலில் 42 அடிகள் மார் இருந்தனர். பெருங் கோவில்களிலெல்லாம் நடன அரங்கு, இசையரங்கு, நாடகவரங்குகள் இருந்தன.

கோவிலில் தருக்க மண்டபம், பிரசங்க மண்டபம் என்பனவும் இருந்தன என்பது **திருவொற்றியூர்க்** கோவிற் கல்வெட்டுகளைக்கொண்டு அறியலாம். **பாரதம், ஆகமம்** போன்ற நூல்களைப் பொதுமக்கட்குப் படித்துக் காட்டக் கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவை யனைத்திற்கும் மேலாகக் கோவில்கள் **ஓவிய—சிற்பக்கலை**கட்குத் தாயகமாக விளங்கின. இன்று நமது பழம் பெருமையை உலகிற்குக் காட்டி நிற்பன இந்த இரண்டே அல்லவா? இவற்றைத் தம்மகத்தே கொண்டுள்ள கோவில்களே இன்று நம்மைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்துள்ளன என்னல் மிகையாகுமோ?

இங்ஙனம் இவ்வுலக வாழ்வில் பேரின்பம் துய்த்தற்குரிய ஒப்பற்ற இடமாகக் கோவில்கள் விளங்கின. இவ்வுயரிய நோக்கங்கொண்டே அவை கட்டப்பட்டன. ஆயின், நாளடைவில் அறிவற்ற—பக்தியற்ற—பழம் பெருமையும் வரலாறும் உணராத—பலர் கைகளில் கோவில் ஆட்சி சென்றமையாலும், பூசை முதலியன உணர்ச்சியற்ற முறையில் நடைபெற்றமையாலும், நடைபெறலாலும் கோவில்கள் தம் பொலிவிழந்துவிட்டன. அவற்றைப் பண்டைச் சிறப்பில் பாதியளவிலேனும் கொண்டுவந்து நிறுத்தல் தமிழறிஞர்—சமயப்பிரியர்—நீங்காக் கடமையாகும்.

**செய்யவேண்டுவன:** சைவர் கோவில்களில் தேவாரப் பாடசாலைகள் தேவை; பெருமாள் கோவில்களில் நாலாயிரப் பிரபந்தப் பாடசாலைகள் தேவை.

குருக்கள் தகுதி வரையறை செய்யப்படல் வேண்டும். பத்தாம் வகுப்புத் தேறியவர்க்குப் பல்கலைக் கழகத்துச் சார்பில் நான்கு ஆண்டுகள் வரலாறு, சமயம், ஓவியம், சிற்பம், நடனம், இசை, கட்டடக் கலை இவற்றில் ஓரளவு பயிற்சி யளித்துத் தேர்வுவைத்துப் பட்டந்தரல் வேண்டும். அப்பட்டதாரிகளே குருக்களாக அமையவேண்டும். அந்நிலை யிற்றான் கோவில்கள் சாத்திரீய முறையில் விளங்கும்; யாவும் தூய்மையாக இருக்கும். இஃது அறிஞர் உடனே செய்யத்தகுவதாகும்.

கோவில் இயக்குநராக வருபவர், பி. ஏ., பி. ஓ. எல். பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்; வழக்கறிஞராக இருத்தல் பின்னும் சிறந்ததே. இவர்களும் பல கலைகளில் புலமை உடையராக இருத்தல் வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக நம் நாடு, நம் நாட்டுக் கோவில்கள், நம் நாட்டுச் சமயங்கள், நம் நாட்டுக் கலைகள் இவற்றைப் பாதுகாத்தலும், போற்றுதலும், வளர்த்தலும் நமது கடமை என்பதை உளமார உணர்ந்து பாடுபடும் ஒருமைப்பாடு வேண்டும்.

இங்ஙனம் யாவும் அமையுமாயின், பண்டை வரலாற்றை இன்று கண்டு பேரின்பமும் பெருவாழ்வும் பெற வழியுண்டு. இம்முயற்சிக்குத் தமிழர் ஒன்றுபட்ட மனமே வேண்டற் பாலது. இஃது எப்பொழுது கைகூடும்?



F. V　　பைந்தமிழ் வளர்த்த பாதிரியார்　　பக்கம் 93

# 13. பைந்தமிழ் வளர்த்த பாதிரியார்

[வித்வான், எஸ். கூர்மாவதாரன்]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சகல துறைகளிலும் சிறப்புற்றிருந்த தென்னாட்டில், பைந்தமிழ்மொழி தோன்றி வளர்ந்த வரலாறு இன்றளவும் புதைபொருளாகவே உள்ளது. தென்னாடு பன்முறை கடல்கோட்பட்டமையின் பழம்பெருநூற்கள் பலவும் அழிந்தொழிந்து சிதைந்தன. எஞ்சிய சிலவும் போற்றுவாரற்று மறைந்தன; மறைக்கப்பட்டன. எனவே தொன்மொழியாகிய தென்மொழியின் தோற்றமும், வளர்ச்சியும், ஏற்றமும், இறைமையும் கண்டறியக் கூடாதனவாய்க் கரந்தன. தற்காலத்தில் வெளிவந்துள்ள சில பழந்தமிழ் நூல்களின் துணைக்கொண்டு ஆராயுங்கால், முற்காலத்திருந்த தனவந்தர்கள் தமிழ்மொழியைப் பெரும் பற்றுதலுடன் ஆதரித்து வந்தமை மட்டிலும் ஒருவாறு புலனாகின்றது. பின்னர், காலமென்னுங் கனைகடலில், சாதி சமயச் சுழிகளில் அகப்பட்டுத் தத்தளித்த தமிழ்மொழியாகிய மரக்கலம், அச்சுழிகளையுங் கடந்து தலைநிமிர்ந்து உலவுதற்கான நற்காலங் கிட்டியது.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக ஆங்காங்குத் தோன்றிய வளவரும், குழுவினரும் தத்தம் நலங்கருதித் தமிழ்மொழியைப் போற்றத் தலைப்பட்டனர். மேனாட்டுக் கிறித்துமதத் தலைவர்கள் சிலர் தங்கள் மதத்தைப் பரப்பத் தென்னாட்டிற்கு வந்தனர். இந்நாட்டு மக்களோடு நெருங்கிப் பழகி உறவாடித் தங்கள் மதக்கொள்கைகளைப் போதிக்கத் தமிழ்மொழி தெரிந்திருக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமாயிற்று. இவ்வாறு அவசியத்தின் பொருட்டுத் தமிழ் கற்கத் தொடங்கிய மேனாட்டுப் பாதிரிமார்களிற் சிலர், தமிழின் அருமையை நன்குணர்ந்து அதனைச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்து பெரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களுள் **போப், பெஸ்கி, கால்டுவெல்** முதலியோர் முதன்மை பெற்றவராவர்.

ஐரோப்பாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த பாதிரிமார்களில் **கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி** என்பவர் சிறந்தவர்.

இவர் இத்தாலி நாட்டுத் தலைநகராகிய **ரோமாபுரியில்** பிறந்தவர். மேனாட்டு உயர்தனிச் செம்மொழிகளாகிய **கிரீக், லத்தீன்** முதலிய மொழிகளைப் பழுதற ஓதிப் பாண்டித்யம் பெற்று அருங்கலைச் செல்வராய் விளங்கிய இப்பெரியார் ஏசு சபையில்சேர்ந்து சமயத்தொண்டாற்றத் தொடங்கினார். செழுங்கலை நுட்பங்களைச் சிக்கறவுணர்ந்த இவரது திருந்திய உள்ளம் பள்ளத்துட் பாயும் வெள்ளம்போல் இயேசு மகானின் போதனைகளில் ஆழ்ந்து பாய்ந்து ஈடுபட்டது வியப்பன்றே. இவரது மதப்பற்றையும், கல்விப் பெருக்கையுங் கண்ட இயேசு சபையார், ஆயிரத்து எழுநூறும் ஆண்டில் கிறித்து மதத்தைப் பரப்பும் வண்ணம் இவரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பினர். இந்தச் சீரிய பணியைச் சிரமிசைக்கொண்ட பெஸ்கி இந்தியாவிற்கு வந்து தமிழ்நாட்டின் தனிப் பெரும்பதியான மதுரையை அடைந்தார்; அதனையே தமது இருப்பிடமாகக் கொண்டு பாண்டிய நாட்டு மக்களோடு நெருங்கிப் பழகித் தமிழ்மொழியைப் பேசவும் படிக்கவுங் கற்றுக்கொண்டார். செந்தமிழ்ச் செல்வி இவரது உள்ளத்தைக் கவர்ந்தனள். அவளது குண்டலத்தின் குழைவும், மணியின் ஒளியும், வளையின் எழிலும், மேகலையின் மிளிர்வும், சிலம்பின் ஒலியும் பாதிரியாரைப் பரவசப் படுத்திவிட்டன. தமிழ்ப்பெரு நூல்களைக்கற்று இன்புற அவரது நெஞ்சந் துடித்தது. நள்ளிரவில், மரங்களடர்ந்த இருண்ட காட்டின் நடுவே, திசைதெரியாது மயங்கும் வழிப்போக்கனைப்போல, தமக்கு இயற்கையாகவே அமைந்திருந்த கலையார்வத்தால் இழுப்புண்டு, தமிழ்நூற் காட்டிற் புகுந்து தத்தளித்த பெஸ்கிப் பாதிரியாருக்கு வழி காட்டியாகக் கைத் தீபமொன்று கிடைத்தது. **சுப்ரதீபக் கவிராயர்** என்னும் சுடர் விளக்கின் துணைக்கொண்டு தமிழ்நூற் காட்டில் சஞ்சரித்து, ஈரடி வைத்து, நாலடி தாண்டி, எட்டுகள் இட்டு, பத்தும் பார்த்துப் பழங்களருந்திப் பசிதீர்ந்துலவினார் பாதிரியார்; சிலம்புவளங் கண்டார். மணிகளின் ஒளிர்வு மனக்கண்ணுக்கு மிளிர்வளித்தது.

இவ்வாறு தமிழ் நூல்கள் பலவுங் கற்றுக் கவிபாடுந் திறமையுற்றுத் தமிழ்ப் புலவர்களால் நன்கு மதிக்கப்பெற்று விளங்கிய **பெஸ்கி** என்னும் பெருமகனார் தமிழார்வத்தாலோ தமிழ் மக்களது மனத்தைக் கவரும் பெருவிருப்பாலோ,

தமது பெயரையும் உடையையும் மாற்றிக் கொண்டார். **தைரியநாத சுவாமிகள்** என்று வடமொழியிலும், **வீரமா முனிவர்** என்று தென்மொழியிலும் அவருக்குப் பெயர் வழங்கலா யிற்று. தமிழ் நாட்டுத் துறவிகளைப்போலத் துவராடை உடுத்துக்கொண்டார்; புலாலுணவை நீக்கினர்; தமிழ் நாட்டு ஒழுக்கத்தையும் மேற்கொண்டார். இவரது தூய சிந்தை யும், துவராடையும், தொன்னூல் வன்மையும் தமிழ் மக்க ளது உள்ளத்தைப் பிணித்தன. அதனல் தைரியநாத ருக்குப் பின்னும் தைரியம் அதிகரித்தது. தமிழ் மொழிக் கும், தமிழ் மக்களுக்கும் தம்மாலான உதவிகளனைத்தையும் செய்ய வீறுகொண்டெழுந்தார் வீரமா முனிவர். அவர் ஆயுட்காலம் முழுமையும் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அரும்பணியாற்றி ஆயிரத்து எழுநூற்று நாற்பத்திரண் டாம் ஆண்டில் திருநெல்வேலியைச் சேர்ந்த **மணப்பாடு** என்னும் கிராமத்தில் தமது பொய்யுடம்பை நீத்தார். அவரது புகழுடம்பு என்றும் நிலவுவதாக.

வீரமாமுனிவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் பல. அவற்றுள் தலைசிறந்தது **சதுரகராதி.** சொல்லின் பொருளை அறிந்துகொள்ளுதற்கு முற்காலத்தில் நிகண்டு களே சிறந்த கருவிகளாக அமைந்திருந்தன. பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, திவாகரம் முதலியன பழைய அகராதி நூல்கள். அவை செய்யுள் நூல்களாக அமைந் துள்ளமையின் கற்றோர்க்கே அன்றிக் கற்கத் தொடங்கு வோர்க்குப் பயன்படுவதில்லை. இப் பெருங் குறையை முதன் முதல் நீக்கியவர் வீரமாமுனிவராவர். தமிழுக்கே புதிதான இந்த அகராதியில் ஆங்கில அகராதிகளைப் போலத் தமிழ்ச் சொற்களை அகரமுதலாக வரிசைப்படுத்தி யமைத்து ஒவ் வொரு சொல்லுக்கும் நேரே பொருள் விளக்கங் கூறப் பட்டுள்ளது. சொற்களின் பொருளறிதற்குத் தக்கதொரு துணைநூலாக இது விளங்குகின்றமையின், இந்நூற்பாயிரத் தில் "தமிழ்ப் பெருங் கடலுக்கு இஃதோர் மரக்கலமாகத் திகழ்ந்தது" என்று கூறப்பட்டிருப்பது சாலப் பொருத்த முடையதாகும். **பெயரகராதி, பொருளகராதி, தொகை யகராதி, தொடை யகராதி** என நான்கு பிரிவுகளுடைமையின் இது சதுரகராதி எனப்பட்டது.

இம்மாபெருந் தமிழ் முனிவர் **தேம்பாவணி, காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலே** முதலான சில செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார். அவற்றுள் தலே சிறந்தது **தேம்பாவணி** என்னும் கிறித்துமதப் புராண நூலாம். இப்பெரும் புலவர் இந்நூலில், **திருத்தக்கதேவர், கம்பர், திருவள்ளுவர்** முதலிய தமிழ்ப் பேராசிரியரது கற்பனே நலங்களேயும், நடையழகை யும், நீதிகளேயும் பலவிடங்களில் எடுத்தாண்டிருக்கிருர். அவ்வாட்சி முனிவரது கவிபாடுந் திறமையையும், பொருள் நயங்காணும் வன்மையையும், பரந்த நூற்பயிற்சியுடைமை யையும் நன்கு வெளிப்படுத்துகின்றது. இவர் தமிழ்மொழி யிலுள்ள **நன்னூலேப்** போன்றதொரு இலக்கண நூலும் இயற்றியுள்ளார். அதில் ஐந்திலக்கணங்களேயும் விளக்கிக் கூறி, சூத்திரங்களுக்கு விரிவுரையும் எழுதப்பட்டுளது. அந்நூல் **தொன்னூல்** என்று வழங்கப்படுகிறது. **கொடுந்தமிழ்** என்னும் பெயரால் லத்தீன் மொழியிலும் தமிழுக்கு ஓர் இலக்கணஞ் செய்துள்ளார் இப்பெரியார். இது மேல் நாட்டார் தமிழ் கற்பதற்குப் பெருந்துணையாய் நிற்கின்றது. அன்றியும் **வேதியரொழுக்கம், வேதவிளக்கம், வாமன்கதை** முதலிய உரைநடை நூல்களும் இவரால் எழுதப்பட்டன. உரை நடையில் நகைச்சுவைக் கதை எழுதும் முறையை முதன் முதல் தமிழ் நாட்டார்க்கு எடுத்துக்காட்டிய பெரியார் இவரே. இவரெழுதிய **பரமார்த்தகுரு கதை** என்னும் நகைச் சுவை நூல் இதற்குச் சான்று பகரும். தெய்வப்புலமைத் திருவள்ளுவரியற்றிய திருக்குறள் அறத்துப்பாலேயும், பொருட்பாலேயும் லத்தீனில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்க ளதுபண்பை மேனுட்டார் நன்குணரும்படி செய்த பெருமை வீரமாமுனிவரையே பெரிதும் சார்ந்ததாகும்.

இப்பெரியார் திரிசிராப்பள்ளியை ஆண்ட **சந்தாசாகிப்** என்ற முகமதிய மன்னரிடம் சில காலம் திவாஞக வேலே பார்த்திருந்ததாகவும் தெரிகிறது. இவர் புரிந்த தமிழ்த் தொண்டு என்றும் போற்றப்படுவதாக.

# 14. நாடகம்

[வித்துவான், தி. சி. குழந்தைவேல் முதலியார்]

பிறரைப் பார்த்து, நடித்தொழுகி உயர்வதென்பது உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் இயற்கையாய் இருந்து வருகிறது. பிள்ளைகள் முதல் பெரியோர்கள் வரையில் அனைவரும், மொழிவழிகளிலும், பழக்க வழக்கங்களிலும், நடையுடைகளிலும், ஒருவரைப் பார்த்து மற்றவர் பின்பற்றி நடந்து மேன்மையுற்று வரும் இயல்பினராகவே இருக்கக் காண்கிறோம்.

இங்ஙனம் பிறரைப் பார்த்து நடித்தொழுகுவதில் நலம் விளைவதேயன்றி, தீமை விளைவதும் இயல்பேயாகும். ஆயினும் இன்பங்கருதி, உயர்வு விழைவதே மக்கள் இயற்கையாக வின், அறநெறிச் செல்லும் அறிவுடைப் பெரியோர்களையே பெரும்பாலோர் பின்பற்றி நடித்தொழுகுகின்றனர். இந் நடிப்புப் போலியாயிராது உண்மையா யிருத்தலினாலேயே, இது நாளடைவில் நலம் பயப்பதாய் இருந்து வருகிறது. இவ்வாறு நடித்தொழுகி முன்னேற்றம் விரும்பும் மக்களுக்கு நன்னெறி காட்டும் முறையில் நடிக்கப்படுவதே நாடக மாகும்.

மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்குங்கால், இன்னுரை யாடி இன்பம் எய்துகின்றனர்; அம்மகிழ்ச்சி அதிகப் படின், பாடிப் பரவசமடைகின்றனர்; பின்னும் மகிழ்ச்சி மிகின், ஆடியும் அகங்களிக்கின்றனர். இங்ஙனம் மகிழ்ச் சிப் பெருக்கில், இன்பந் தோன்றப் பேசியும், பாடியும், ஆடியும் அகமகிழ்வது அவர்கள் இயற்கையாகும். இவ் வியற்கை, மக்களிடத்தேயன்றி, மற்ற விலங்கு, பறவை முதலியவைகளிடத்திலும் இருப்பதைக் காணலாம். இவ் வாறு இயற்கையிலெழுந்த உரையாடலும், பாடலும், ஆடலும் ஆகிய இம்மூன்று செயல்களுமே, ஒன்று கலந்து, திருந்தி, நாடகமென நடைபெறலாயிற்று.

மக்களது உள்ளத்திலெழும் உணர்ச்சிகளையும், எண் ணங்களையும், மன மாறுபாடுகளையும் வெளிப்படுத்துவதற்கு இரண்டு வழிகள் உள: முதலாவது சொல்; இரண்டாவது

அவிநயம். சொல்லால் எண்ணங்களைத்தான் வெளிப்படுத்தலாமே யன்றி, உணர்ச்சிகளையும், மன மாறுபாடுகளையும் அவ்வளவு நன்றாய் வெளிப்படுத்த இயலாது. அவிநயம், அவற்றைப் பிறரறியுமாறு நன்கு வெளிப்படுத்த வல்லது. சொல், அவிநயம் ஆகிய இரண்டும் ஆடல் பாடல்களுடன் கலந்து, ஒன்றுக் கொன்று இயைந்து நாடகத்தில் நிகழும்.

நாடகம் நன்கு நடைபெறுதற்கேற்ற ஒரு திட்டம் வேண்டுமல்லவா? அதுவே நாடக நூல் எழுத வேண்டுமென்னும் எண்ணத்தை எழுப்பியது. இத்தூண்டுதலால் நாடக நூல்கள் பல தோன்றின. நாடக நூல்கள் பல தோன்றவும், அவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு நாடக இலக்கணம் வகுக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆதலால் நாடக இலக்கணம் தோன்றியது. இங்ஙனமே, நாடகம் பற்றிய இலக்கிய இலக்கண நூல்கள் எழுந்து வளர்ந்தன.

உலக வரலாற்றில், கிரேக்க நாட்டிலேயே முதன் முதலில் நாடகம் உருப்பெற்றதென்று உரைப்பர். நமது நாட்டில் சமய சம்பந்தமாகவே தமிழ் நாடகம் தோன்றியது. கோவில் திருவிழாக்களில், அவ்வத் திருவிழாக்கள் பற்றிய கதைகள், நாடகமாக நடித்துக் காட்டப்பட்டன. இவ்வாறு தோன்றிய தமிழ் நாடகம், நாளடைவில் சீர்திருந்தி, இலக்கண வரம்புகளுடன் நற்கலையாய் மிளிர்ந்தது. இந்நிலையில், இது அரசர்களாலும், புலவர்களாலும் நன்கு வளர்க்கப்பட்டு வளர்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், தமிழ் நாட்டில் நாடகம் செழித்தோங்கியிருந்தது என்பதற்குப் பழந்தமிழ் நூல்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன.

இயல், இசை, நாடகம் என்று தொன்று தொட்டுத் தமிழ் மூவகையாகப் பகுத்து மொழியப்படுகிறது. இயற்றமிழ் நூல்களே இப்பொழுது உள்ளன. இசைத் தமிழ் நூல்களும், நாடகத் தமிழ் நூல்களும் இருந்தன. ஆனால் அவையாவும் அழிந்தொழிந்தன. **பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம்** முதலிய இசைத்தமிழ் நூல்களும், **முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாண நாடகத் தமிழ்நூல், கூத்தநூல்,** முதலிய நாடகத் தமிழ் நூல்களும் பெயரளவிலேயே உள்ளன. இளங்கோவடிகள் இயற்றியருளிய **சிலப்பதிகாரம்**

என்னும் பழைய செந்தமிழ் நூல் ஒன்றுமட்டுமே நாடகக் காப்பியம் என்று நவிலப்பட்டு நாம் காண இருக்கிறது. அந்நூலில், நாடகத்தைப்பற்றி அடியார்க்கு நல்லார் என்பவர் வரைந்துள்ள உரையைப் படிப்போர் பழங்காலத்தில் தமிழ் நாடகம் எத்தகைய சீரிய நிலையிலிருந்தது என்பதைத் தெளிவாயுணர்வர்.

நல்லறிவு கொளுத்துவதில், நாடகம் நனி சிறந்து விளங்குதலின், இது மேனாட்டாரால் மிக மேன்மையுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டிலும், நாடகம் நற்கலையாமெனப் போற்றி வளர்க்கப்பட்ட செய்தி முன் கூறப்பட்டது. இயல், இசை ஆகிய இரண்டும், கேள்வியின்பம் ஒன்றுமட்டுமே பயக்க வல்லது. இவ்விரண்டுங் கூடி இயலும் நாடகமோ, கேள்வி யின்பத்தோடு காட்சி யின்பத்தையும் பயக்க வல்லது. ஆதலின், நாடகம் உயர் கலையாய் மதிக்கப்படுவதில் ஒன்றும் வியப்பில்லை.

வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஓய்வின்றியுழைத்துப் பாடுபடும் ஏழைத் தொழிலாளர்களும், படிப்பறியாப் பாமரர்களும், கண்டு, கேட்டுக் களிப்படைந்து, நல்லறிவு கொள்ளும் நன்னோக்கத்துடனேயே நாடகம் நன்முறையில் அமைக்கப் பெறலாயிற்று. இந் நாடகத்தைக் காண யாவரும் விரும்பி வருவதற்கேற்ற வகையில், இது இன்பச் சுவையுடன் இயல்வதாயிற்று. இன்பச் சுவையும், உலக நடையை ஒட்டியதேயாம். வாழ்க்கைச் சித்திரங்களும், வரலாற்று நிகழ்ச்சிகளும், புத்துயிர் பெற்றுக் கண்ணுக்கும் செவிக்கும் பெரு விருந்தாகி இன்ப மளிப்பதாயின், நாடகத்தை எவர்தாம் விரும்பார்?

நாடகத்தமிழ், **வேத்தியல், பொதுவியல்** என இருபிரிவினதாகி இயன்று வந்தது. வேத்தியலாவது, அரசர்களும், அவர்களைச் சார்ந்தோர்களும், தனிமையிற் கண்டு களித்து, இன்புறுதற் பொருட்டு இயல்வதாகும். பொதுவியலாவது, பொது மக்கள் யாவரும் பார்த்து, மகிழ்ந்து இன்புறுதற்கேற்றவாறு பொதுவிடத்தில் இயல்வதாகும். இங்ஙனம் நடைபெறும் நாடகம், ஒன்பான் சுவையுடன் வேறு வேறான பல காட்சிகளையுடையதாயும், பலதிற மக்கள் பயில்வதாயும் நிகழும்.

இங்ஙனம் சிறப்புடன் விளங்கிய நாடகத் தமிழ், பிற்காலத்தில் தேய்பிறையெனச் சுருங்கி வீழ்ச்சி யுற்றது. இதற்குக் காரணமென்ன? ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த சைனர், அறிவை வளர்க்க வேண்டிய நாடகக் காட்சியால், காமமே, மிகப்பெருகுகின்றதென்ற கொள்கையுடையராய்த் தமது நூல்களில் விலக்கப்படுவவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர்; அக்காலத்திலிருந்த அரசர்களுக்குத் தவருக அறிவுறுத்தி நாடகத் தமிழைத் தலையெழ வொட்டாது அடக்கி வந்தனர். இதனுல், நாடகத் தமிழ், நல்லோர் கைவிட்டு, அல்லோர் கையகப்பட்டுத் தெருக்கூத்தளவில் தாழ்ந்து, இகழ்ச்சிக்குரியதாய் நிலை மாறியது.

மேனுட்டார், **துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம்** என்று நாடகத்தை இருவகையாகப் பிரித்துக் கூறுவர். கதைத் தலைவனும், தலைவியும், பலவித இன்னல்களுற்று, முடிவில் அவர்கள் இறந்து விடுவதாக நாடகம் முற்றினுல், அது துன்பியல் நாடகம் என்று சொல்லப்படும். அன்றி, அவர்கள் இன்னல்கள் எய்திடினும், இறுதியில் இன்புற்று வாழ்ந்தனர் என்று முடியின், அது இன்பியல் நாடகம் என இயம்பப்படும். பொதுவாய் இவற்றைத் துன்ப முடிவுள்ள நாடகம், இன்ப முடிவுள்ள நாடகம் என்று கூறலாம். இவை இரண்டுங் கலந்து மூன்ருவது வகை நாடகமொன்றும் உண்டென்பர்.

நாடகம், மக்கள் வாழ்க்கையின் சிக்கறுக்க, அல்லது வாழ்க்கையைச் சீர்திருத்தவே தோன்றியதாதலின், இது உயர்ச்சி கருதும் மக்களுக்குக் கட்டாயமாய் வேண்டியதொரு கலையாகும். இவ்வுண்மையை நன்குணர்ந்த பெரியோர்கள் பலர், பிற்காலத்தில், நாடகக்கலையை நன்கு வளர்க்க முயன்றிருக்கிருர்கள். சீகாழி அருணுசலக் கவிராயர் அவர்கள் இயற்றியுள்ள **ராம நாடகமும்,** குமரகுருபர சுவாமிகள் இயற்றியுள்ள **மீனுட்சியம்மை குறமும்,** திரிகூட ராசப்பக் கவிராயரவர்கள் இயற்றியுள்ள **குற்ருலக் குறவஞ்சியும்,** இவை போல்வன பிறவும் நாடகக் கலைக்கு ஒருவாறு அழகு செய்து விளங்குகின்றன. அறிஞர் சுந்தரம் பிள்ளை அவர்கள் அகவற்பாவில் அமைத்துள்ள **“மனேன்மணீயம்”** என்னும் அரிய நாடகநூல், புலவர்களால் பொன்னேபோல்

போற்றப் படுகிறது. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள் **"நாடகவியல்"** என்னும் நாடக இலக்கண நூலை நன்கு உழைத்து இயற்றியுள்ளார்கள். இக்காலத்தில், ராவ் பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள் சென்னையில், **"சுகுண விலாச சபை"** ஏற்படுத்தி, அதைப் பல்லாண்டுகளாய்த் திறம்பட நடத்தி வருவதோடு, ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் நாடக நூல்களை எழுதி வெளியிட்டு நாடகத்திற்குப் புத்துயிரளித்தார். மற்றும் பல அறிஞர்கள் தமிழ் நாடக வளர்ச்சி கருதித் தற்காலத்தில் உழைத்து வருகிறார்கள்.

நாடகத்தின் சிறப்பை நன்கறிந்தே, கல்வித் துறையில் வல்ல பெரியோர்கள், நாடக மேடையும் ஓர் உறுப்பாய் விளங்கும்படி கல்விக் கழகங்களை அமைக்கிறார்கள்; அதில் மாணவர்களைச் சேர்த்துப் பயிற்றி, நடிக்கவும் செய்விக்கிறார்கள். நில நூல் பற்றியும், வரலாற்று நூல் பற்றியும், மற்றுமுள்ள நூல்பற்றியும் படித்தறிவதை விட, அவற்றை நாடக மேடையில் நடிக்கக் காண்பார்களானால், அச்செய்திகள் மிக ஆழமாய் உள்ளத்தில் பதியும். ஆகலின் நாடகம் மாணவர்களுக்கு மிகப் பயனுடையதா மென்பது கூறாமலே விளங்கும். மாணவர்களுக்கு எல்லாக் கல்வியறிவையும் காட்சிகள் மூலமாகவே கற்பிப்பது சிறந்ததாகு மென்றும், இயன்றவரையில் அங்ஙனமே செய்ய வேண்டு மென்றும் அறிஞர்கள் விளம்புகிறார்கள்.

நாடகம், ஒரோவழித் தீமை விளைப்பது உண்டெனினும், அதற்குக் காரணம் கல்வியறிவில்லா மக்களாலும், ஒழுக்கங் கெட்டவர்களாலும் நாடகம் நடத்தப்படுவதே யாகும். ஆதலால், கல்வியறிவிற் சிறந்தவர்கள், நாடகத்திற் கலந்து, நடித்து, அதனை வளர்க்க முற்படுவார்களாயின், நாடகத் தமிழ், பழைய நன்னிலையையடைந்து, எல்லோருக்கும் நன்னெறி காட்டும் நற்கலையாய்த் திகழுமென்பதில் ஐயமுண்டோ?

---

# 15. தமிழ்நாட்டு வண்ண ஓவியக்கலை

[கே. ராஜாராம் நாயுடு பி. ஏ. எல். டி.]

உடையும் உண்டியும் தடையின்றிக் கிடைப்பின் மக்களது மனம் இன்பத்தை நாடுதல் இயல்பு. அதனால் இன்பக்கலைகளான இசை, சிற்பம், ஓவியம் முதலியன செழித்தோங்கி வளரும். வளரவே, அவற்றின் இயல்புகளை விளக்கிக் கூறும் நூல்கள் பல எழும். இவ்வாறெழுந்த நுண்கலை நூல்கள் எண்ணிறந்தன.

பஞ்சந்தெரியாத பழந்தமிழ் நாட்டில் அக்காலத்தே இன்பக் கலைகள் இணையற்று விளங்கின. பழம்பெருங் கோவில்களும் குகைகளும் தமிழ் நாட்டுச் சிற்ப ஓவியக் கலைகட்குச் சான்று கூறி இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றன. இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டவன் தமிழன். நறுமண மாலை யணிந்து, அறுசுவை உண்டியருந்தி, கண்ணுக்கினிய காட்சிகளைக் கண்டு, இன்னிசை நுகர்ந்து இன்பப்பொழுது போக்குபவன் தமிழன். தமிழன் வசிக்கும் வீட்டிலும், அவன் உடுத்தும் உடையிலும், உபயோகிக்கும் பொருளிலும் ஓவியக் கலையழகு உயர்வுற்று விளங்கும்; வண்ண விசித்திரம் வகைவகையாய்த் துலங்கும். தமிழ் நாட்டிலும், தமிழன் வீட்டிலும், அவன் உருவத்திலுங்கூட ஓவியம் இடம் பெற்றிருக்கும். பெண்களை அலங்கரிக்கும் பணிமகளை **வண்ணமகள்** என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. அரசமகளிர்க்குக் கண்களில் மையெழுதி, சந்தனக் குழம்பு முதலியவற்றால் உடலிலும் முகத்திலும் ஓவியங்கள் வரைந்து, செம்பஞ்சிக் குழம்பால் பாதங்களில் படந்தீட்டி அலங்கரிப்பது இவள் தொழில். உருவத்தில் ஓவியங்களெழுதி அழகு படுத்துஞ் செய்திகளைப் பண்டை நூல்களில் பரக்கக் காணலாம்.

"வண்ணமகடூஉ வல்லாவகுத்த—"

(பெருங்கதை-41-62)

தமிழ்நாட்டு நடனமாதர் பலகலைகளிலும் தேர்ச்சியுற்றிருந்தனர்; நடனமாடியவாறே மணல் பரப்பிய தரையில் கால்களால் பலவகைச் சித்திரங்கள் தீட்டுவர்; இரு கைகளி

லும் தூரிகை பற்றி வெண்திரையில் பலவகை வண்ண ஓவியங்கள் வரைவர். நாடகக் கணிகையாகிய **மாதவி** ஓவியக் கலையிலும் கைவந்தவள் என்று சாத்தனர் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

"வட்டிகைச் செய்தியும், மலராய்ந்து தொடுத்தலும்,
கோலங் கோடலும், கோவையின் கோப்பும்,
காலக் கணிதமும், கலைகளின் துணிவும்,
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரை நூற் கிடைக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை—"

(மணிமேகலை-2-27)

மேலெடுத்துக் காட்டிய அடிகளிலிருந்து மாதவி வட்டிகைச்செய்தி யறிந்தவளென்றும், ஓவியச் செந்நூல் உணர்ந்தவளென்றும் தெரிகிறது. (வட்டிகை-எழுதுகோல்) தூரிகைகளின் நுட்பந்தெரிந்து கையாண்டு சித்திரந்தீட்ட வல்லவள் மாதவி என்பதும், ஓவியந்தீட்டும் முறைகளைக் கூறும் **ஓவியச் செந்நூல்** என்றொரு நூலிருந்தது என்பதும், அதனை மாதவி நன்கு கற்றிருந்தனள் என்பதும் விளங்குகின்றன.

முற்காலத்தில் தமிழ்நாட்டில் ஓவியக் கலை உச்சநிலையடைந்திருந்தது. வீட்டுச் சுவர்களிலும், மாடங்களிலும், கூடங்களிலும், கோவில்களிலும், கோபுரங்களிலும், பாத்திரங்களிலும், பாயல்களிலும், துணிகளிலும், அணிகளிலும் வண்ணச் சித்திரங்கள் வகைவகையாய் வரையப் பெற்றிருந்தன. மண்ணிலும், மரத்திலும், கல்லிலும் செய்யப்பட்டும், செதுக்கப்பட்டும், குடையப்பட்டுமிருந்த ஓவியங்கள் பலப்பல. அவற்றின் எழிலையும், கலைநுட்பத்தையுங் கண்ட பைந்தமிழ்ப் புலவர்கள் அழகிற்கு எடுத்துக்காட்டாகச் சித்திரத்தைக் கூறத்தொடங்கினர். "ஓவியப் புலவனாலும் வரையமுடியாத அத்துணை மிகுந்த அழகுடையவனே!" என்று பொருள்பட "ஓவியத் தெழுதவொண்ணா உருவத்தாய்" என்று இராமனது அழகை வருணிக்கிறார் கம்பர்.

"இராமா, நீ முடிபுனைந்து கொள்க" என்று தயரதனும், "பரதனுக்கு முடிசூட்டப்படும்; நீ பதினான்கு ஆண்டுகள் வனத்தில் வதிய வேண்டும்; இது அரசனது ஆணை"

என்று கைகேயியும் கூறிய சமயங்களில் வாட்டமும் வருத்தமும் இன்றித் தோன்றிய இராமனது முகத்தோற்றத்திற்கு, எப்பொழுதும் வாடாத வண்ணத்தாமரைச் சித்திரத்தை உவமையாக எடுத்துக்காட்டுகிறார் மற்றோரிடத்தில்.

"மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதிலும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதிலும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை .... ... ...."

(கம்பராமாயணம்)

திருக்கோவையாரில், தலைவன் "இச்சோலையிலுள்ள சித்திரங்களைக் கண்டுகளிப்போம்" என்று தலைவியை அழைக்க அவள் "பெண் சித்திரமாயின் நீர் காணலாகாது; ஆண் சித்திரமாயின் நான் காணத்தகாது; ஆதலின் நம் இருவர்க்குமே அச்சித்திரக் காட்சி ஒவ்வாது" என்று கூறியதாகக் காணப்படும் செய்தி பண்டைநாளிலிருந்த சித்திரக் கலையின் சிறப்பை விளக்குவதாகும்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உவவனத்தை வருணிக்குமிடத்தில் மணிமேகலை ஆசிரியர் "பன்னிற மலர்கள் நிறைந்த மரங்கள் செறிந்த அவ்வுவவனம், சிறந்த ஓவியப் புலவனொருவன் எழுதிய வண்ணத் திரைச்சீலையை விரித்து வைத்ததைப் போலிருந்தது" என்று சித்திரத்தை உவமை காட்டுகிறார்.

"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
* * * *
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் --" (மணிமேகலை-3-160)

சித்தன்னவாசல் குகையில் வண்ண ஓவியங்கள் பல காணப்படுகின்றன. இக்குகை, கலாரசிகனை மகேந்திரவர்மன் காலத்தில் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. அவனது ஓவியம் குகையிலுள்ள ஒரு தூணில் தீட்டப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் ஓவியக் கலைக்கும் சிற்பக்கலைக்கும் உயிரளித்தவர் பல்லவமன்னரே. **சித்திரக்காரப்புலி** என்று

பட்டம் பெற்ற மகேந்திரவர்மன் புதியதொரு வண்ணத்தைக் கண்டுபிடித்தானும். அதனுல் அவனுக்கு **வர்ணசதுர்த்தா** என்ற பெயரும் பிறந்தது. இவன் வண்ணங்களைச் சேர்க்கும் முறைகளை விளக்கி **வர்ணசந்த்ரார்ணவம்** என்ருேர் நூலும் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

சித்தன்னவாசற் குகைச் சுவர்களிலும் மண்டபங்களிலும் தூண்களிலும் உள்ள வண்ண ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களைக் காட்டிலும் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. அவற்றுள் வெளிமண்டபத்துக் கூரையிலுள்ள மலர்ந்த தாமரைகள், மலரும் பருவத்திலிருப்பவை, மலராத முகைகள், இலைகள், மாடுகள், யானைகள், எருமைகள், அன்னப் பறவைகள், மீன்கள், குளத்தில் சிலர் மலர் பறிக்குங் காட்சி முதலிய ஓவியங்கள் மிகமிகச் சிறந்த முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் சுதைச் சித்திரங்களே.

குகையைக் குடைந்த பின்னர் அதன் சுவர்களை மேடு பள்ளங்களின்றிக் கொத்திச் சமப்படுத்தி, உமியும் புல்லுங் கலந்து செய்யப்பட்ட ஒருவகைச் சாந்தைப்பூசி, அதன் மேல் சுண்ணும்பும் மணலுங் கலந்த சாந்தை அரைக்கால் அங்குலக் கனத்திற்கு ஒழுங்காகப் பூசிக் காயவைத்து, பின்னர்ப் பலவகை வண்ணங்களால் சித்திரந் தீட்டப்படும். இதுவே பண்டைக் காலத்தில் சுதைச் சித்திரந் தீட்டும் முறை. வடநாட்டு அஜந்தாச் சித்திரங்களுக்கும், தென்னுட்டுச் சித்தன்னவாசல் சித்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனினும் சித்தன்னவாசல் சித்திரங்களே சிறந்தனவென்று சொல்லுகின்றனர். சித்தன்னவாசல் சாந்தையும் அஜந்தாச் சாந்தையும் எடுத்துவந்து, ரசாயன முறைப்படி பிரித்து ஆராய்ந்து பார்த்ததில் சித்தன்னவாசல் குகையில் பூசப்பட்டிருக்கும் சாந்து மிக்க உறுதியுடையதென்றும், இருமுறை பூசப்பட்டதென்றும் தெரிகிறதாம். "அஜந்தாக்குகைச் சுவர்களிலுள்ள சாந்தை நகத்தால் கிள்ளி எடுத்து விடலாம்; சித்தன்ன வாசல் குகைச் சுவரில் பூசப்பட்டிருக்கும் சாந்து, கருவிகொண்டு உடைத்தெடுக்கவும் இயலாதவாறு மிக்க உறுதியுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது" என்று ஆராய்ச்சியாளர் கூறு

கின்றனர். சித்தன்ன வாசல் குகை, புதுக்கோட்டைக்கு வடமேற்கே ஒன்பது மைல் தூரத்தில் அன்னவாசல் என்ற ஊருக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு மலைக்குகையாகும்.

---

## 16. பரம்பரைக் குணம்

[மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர்]

மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்கமுடியாது. **மணிமேகலையின்** முகவுரையில் " .... .... இவற்றுள் மிகப் பழமையானதும், பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும், பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போன பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும், கோப்புச் சிதைந்து, அழகுகெட்டு, மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்துகொள்ளும் வண்ணம் செப்பஞ் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே'' என்று எழுதியுள்ளேன். தமிழ் நாட்டில் எவ்வளவோ புண்ணியத் தலங்கள் இருக்கின்றன. சிவதலங்களும் விஷ்ணுதலங்களும் பல உள்ளன. அவற்றைப் போல் தமிழ்த் தெய்வம் கோவில் கொண்டுள்ள தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப் பட்டியை நான் கருதியிருக்கிறேன். அது சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தது; புதுக்கோட்டையைச் சார்ந்த திருமெய்யம் என்னும் இடத்திலிருந்து சிலமைல் தூரத்தில் உள்ளது. அங்கிருந்து நான் பெற்ற ஏட்டுச் சுவடிகள் சில. அவற்றை எனக்கு உதவியவர் **அழகிய சிற்றம்பலக் கவிராயர்** என்னும் ஓர் அன்பர். அவருடைய பரம்பரையானது தமிழ் வித்வான்களுடைய பரம்பரை ஆதலின், பல அரிய தமிழ்ச்சுவடிகள் பலநூற்றாண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டிலே பாதுகாக்கப் பெற்றிருந்தன. அவருடைய முன்னோர்கள், பல சமஸ்தானங்களில் யானை முதலிய பரிசுகளும் மானியங்களும் பெற்றவர்கள். அவர் வீட்டின் பக்கத்தில், பழைய காலத்தில் யானை கட்டிய கல்லையும் பழைய சிவிகையையும் பார்த்திருக்கிறேன். அங்கே கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர். அவரோடு நான் பழகிய காலத்தில், அவருடைய முன்னோர்களைப் பற்றிய பல வரலாறுகளை எனக்குச் சொல்லியிருக்கிறார். தம்முடைய சொந்த அனுபவங்கள் பலவற்றையும் சொன்னதுண்டு. அவற்றுள் ஒன்று வருமாறு:

ஒருநாள் எங்கேயோ நெடுந்தூரமுள்ள ஓர் ஊருக்கு ஒரு கலியாணத்திற்கு அவர் போயிருந்தார்; மீண்டும் ஊருக்குத் திரும்ப எண்ணி ஒரு வண்டிக்காரனிடம் வண்டி பேசி அமர்த்திக் கொண்டார். இரவு முழுதும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. வண்டிக்காரன், மூன்று ரூபாய் வாடகை கேட்டான்; அன்றியும், "ஊருக்குப் போகையில் பொழுது விடிந்துவிடுமாகையால் எனக்கு நாளைக் காலையில் சாப்பாடு போட்டு அனுப்பவேண்டும்" என்றும் தெரிவித்துக் கொண்டான். அவ்வாறே செய்விப்பதாக அவர் உடன்பட்டார்.

இராத்திரியில் வண்டி புறப்பட்டது. கவிராயர் அதில் படுத்துக்கொண்டார். நல்ல நிலாவெளிச்சம் இருந்தது. வண்டிக்காரன் ஆனந்தமாகத் தெம்மாங்கு முதலியவற்றைப் பாடிக்கொண்டே வண்டியை ஓட்டினான். காளைகள் வேகமாகச் சென்றன. பாட்டுக்களைக் கவிராயர் கேட்டுப் பாராட்டிக்கொண்டே வந்தார். பின்பு வண்டிக்காரனும் மெல்ல அவருடைய குடும்ப நிலையைப்பற்றி விசாரித்தான். அவர் தம்முடைய குடும்ப வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்:

"நான் இருப்பது மிதிலைப்பட்டிதான். எங்கள் முன்னோர்களெல்லாம் பெரிய வித்வான்கள். அவர்கள் எவ்வளவோ நூல்களைச் செய்திருக்கிறார்கள்; பல இடங்களில் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். முதலில் அவர்கள் சேலத்தைச் சார்ந்த ஓர் ஊரில் இருந்தனர்; அக்காலத்தில் தாரமங்கலம் கோவில் திருப்பணிகள் செய்த கட்டியப்ப முதலியார் என்பவரால் ஆதரிக்கப்பெற்று வந்தனர். அவர்களில் ஒருவராகிய அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு, இந்த மிதிலைப்பட்டி என்னும் கிராமமானது, அக்காலத்தில் இந்தப் பக்கத்தில் ஜமீன்தாராக இருந்த **வெங்களப்ப நாயக்கர்** என்பவரால் கொடுக்கப்பட்டது. அது சம்பந்தமான சாசனம் எங்கள்

வீட்டில் இருக்கிறது. ராமநாதபுரம் சேதுபதிகளிடமிருந்து பலவகையான பரிசுகளை எங்கள் முன்னோர் பெற்றிருக்கிறார்கள்; மருங்காபுரி ஜமீன்தாரிடமிருந்தும் பலவற்றை அடைந்திருக்கிறார்கள்; சிவகங்கையிலிருந்தும் அப்படியே கௌரவம் பெற்றிருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் தமிழருமை அறிந்த அரசர்களும் ஜமீன்தார்களும் இருந்தார்கள். அவர்கள் வித்துவான்களை ஆதரித்தார்கள். அதனால் வித்துவான்களும் பிரபுக்களைப் போலவே கவலையில்லாமல் வாழ்ந்துவந்தார்கள். எங்களுக்கு இப்பொழுது ஜீவனாதாரமாக இருப்பதும், எங்கள் குடும்பத்தில் லட்சுமி கடாட்சம் குறையாமல் இருக்கும்படி செய்வதும் அந்த வெங்களப்ப நாயக்கர் கொடுத்த கிராமமே. அவருடைய அன்னத்தைத்தான் இப்பொழுது நாங்கள் சாப்பிட்டு வருகிறோம். என்ன, கேட்கிறாயா?''

"ஆமாம், சொல்லுங்கள்'' என்றான் அவன்.

"வெங்களப்ப நாயக்கர் செய்த பல தருமங்களும் அவருடைய புகழும் இன்னும் நிலைத்திருக்கின்றன. அவரால் ஆதரிக்கப்பெற்ற பரம்பரையினராகிய நாங்களும் பிறரும் நல்ல நிலையில் இருக்கிறோம். அவருடைய பரம்பரையோ, இருந்தஇடம் தெரியாமல் போய்விட்டது. எங்கள் முன்னோர்களைப்போன்ற எவ்வளவோ பேர்களுக்கு அவர் அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் பரம்பரையினர், கொடுத்துக் கொடுத்துப் புகழைச் சம்பாதித்தனர். ஆனாலும் பிற்காலத்தில் அக்குடும்பத்திற் பல பிரிவுகள் உண்டாயின; செல்வமும் குறைந்துவிட்டது. வெங்களப்ப நாயக்கருடைய பரம்பரையினர், யாரேனும் இப்போது எங்கேயாவது இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. அவர்களுடைய நிலை எப்படியிருக்கின்றதோ? காலச்சக்கரமானது இப்படி மாறிக்கொண்டே வருகிறது.'' என்று சொல்லிக்கொண்டே வந்த அவர் அயர்ச்சி மிகுதியால் தூங்கிவிட்டார்.

விடியற்காலையில் வண்டி மிதிலைப்பட்டி வந்துசேர்ந்தது. வீட்டையடைந்த கவிராயர் காலைக்கடன்களை முடித்துக் கொண்டார்; தம்முடைய வேலைக்காரனை யழைத்து, வண்டிக்

காரனுக்குப் பழையது போடும்படி சொன்னார். அப்பொழுது வண்டிக்காரன், "எனக்குச் சாப்பாடு வேண்டாம்; நான் போய்வருகிறேன்; உத்தரவு கொடுங்கள்" என்று சொன்னான். அவர், "நீ ஊர்போய்ச் சேர்வதற்கு அதிக நாழிகை ஆகுமே, சாப்பிட்டுவிட்டுப் போ" என்று வற்புறுத்தினார்.

**வண்டிக்காரன் :** இல்லை; இப்பொழுது எனக்குப் பசியில்லை. போகும் வழியில் தெரிந்தவர்கள் வீட்டில் சாப்பிடுவேன்.

**கவிராயர் :** "சரி; இதோ வாடகை ரூபாயை வாங்கிக் கொண்டுபோ" என்று சொல்லி ரூபாயைக் கொடுக்க ஆரம்பித்தார்.

"ரூபாய் தங்களிடமே இருக்கட்டும்; நான் போய்வருகிறேன்" என்று பணிவோடு அவன் சொன்னான்.

கவிராயர் திகைத்து விட்டார்; அவன் அதிக வாடகை விரும்பக்கூடுமோ என்று எண்ணினார்.

"நான் பேசினது மூன்று ரூபாய் தானே?" என்று அவர் கேட்டார்.

"இது கிடக்கட்டும் ஐயா! நான் போய் வருகிறேன்; தாங்கள் வேறு ஒன்றும் நினைத்துக்கொள்ளக் கூடாது" என்று கம்பீரமாக வண்டிக்காரன் சொன்னான்.

"ஏனப்பா! இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லையே!" என்று இரக்கத்தோடு அவர் கேட்டார்.

"ஐயா! நேற்று இராத்திரி உங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையில் பிறந்தவன் அடியேன்; ஏதோ தலைவிதி என்னை இப்படி வண்டியோட்டச் செய்தது; 'என்ன செய்தாலும் கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது' என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எங்கள் முன்னோர்களால் கொடுக்கப்பட்டவைகளில், ஒரு துரும்பையாவது உங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள என்மனம் சிறிதும்

துணியவில்லை; மன்னிக்க வேண்டும்; இவ்வளவாவது தங்களுக்கு நான் உபயோகப்படும்படி கடவுள் கூட்டி வைத்தது என் பாக்கியந்தான்'' என்று சொல்லிவிட்டு, கவிராயர் மேலே பேசத் தொடங்குவதற்குள் வண்டியை அவன் ஓட்டிக்கொண்டே போய்விட்டான்.

கவிராயருடைய மனம், அவனுடைய கம்பீரத்தையும், வெங்களப்ப நாயக்கர் பரம்பரையின் பெருமையையும், அவனுடைய நிலையையும் நினைந்து இரங்கியது. அவர் கண்களில் நீர் ததும்பியது.

இந்த வரலாற்றைப் பிற்காலத்தில் எனக்குக் கூறும் பொழுதுகூட, இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தைச் சொல்லுகையில் அவர் கண்களில் நீர்த்துளிகள் புறப்பட்டன; நாத் தழுதழுத்தது.

உயர்ந்த பரம்பரையில் பிறந்தவர்களுடைய கம்பீரமும் உதாரகுணமும் எக்காலத்தும் அழியாதவை. "**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே**" என்ற அருமையான வாக்கியத்திற்கு இந்த வரலாற்றைவிட வேறு சிறந்த உதாரணம் கிடைக்குமோ?

---

## 17. நான் கண்ட நூல்

[பண்டித எஸ். கேசவராமசாமி]

இலக்கிய விரிவிலும், இலக்கண நுண்மையிலும் ஏனைய தொன்மொழிகட்குச் சிறிதுங் குறையாத நம் தமிழ்மொழி, இயல், இசை, நாடகம் என முப்பிரிவினை யுடைத்து. அவற்றுள், நாடகத் தமிழ் நூல்கள் இறந்தொழிந்தன போக எஞ்சிய சிலவே. அவைதாமும் பண்டைய வழக்கையே பற்றி நிற்கின்றன. ஆரிய, ஆங்கில மொழி நாடக நூல்கள் போன்றது ஒன்றேனும் நம் தமிழ்மொழியில் இலதாயது பெருங் குறையன்றோ? "உரிமை மைந்தரைப் பெறுகின்றது உறுதுயர் நீங்கி, இருமையும் பெறற்கு'' என்பது, பெரியவர் இயற்கை ஆதலின், தம் தாய்க்குறு குறையினை உணர்ந்து அதனை நீக்கத் துணிந்து பன்னாள் முயன்று, வடமொழி நாடக நூல்களையும், ஆங்கிலக் கவியாகிய

(Shakespeare), **ஷேக்ஸ்பியர்** என்பாரின் வாக்குயர் நூல்களையும், பெரிதும் பின்பற்றி வாழ்த்து, வணக்கம், நாட்டுச் சிறப்பு, மலை வளம், நதி வளம், மதில் வருணனை, அகழ் வருணனை, சூரியோதயம், மன்மதோபாலம்பனம், கேசாதி பாதம், தந்நிகரில்லாத் தலைவன், தலைவி, நன் மணம் புணர்த்தல் முதலிய காவிய உறுப்புக்களில் சிறிதும் குறைபாடின்றி **"மனோன்மணீயம்"** என்னும் பெயரிய தோருயரிய நாடக நூலை, செந்தமிழ்ப் புலமை சான்ற, திருமிகு, **சுந்தரம் பிள்ளையவர்கள்** தந்துதவினர். என்னே இம்மகவின் தகைமை!

இப் பெரியார் கி. பி. 1854-ஆம் ஆண்டு பங்குனித் திங்கள், இருபத்தெட்டாந் தினத்திற் பிறந்தார். இவர் இளமையிலிருந்தே தலை மாணக்கராக விளங்கி, ஆங்கிலம் பயின்று எம். ஏ. பட்டமும் பெற்றார்; கல்லூரிப் படிப்பு நீங்கிய சின்னாட்களில், திருவனந்தபுரம் கல்லூரி யில் தத்துவ சாஸ்திர போதக ஆசிரியராக நியமிக்கப் பட்டு, சீரிய குணத்தாலும், கூரிய அறிவாலும், தம்மிடைப் பயின்ற மாணவர்க்குப் பெரிதும் பயனளித்து, நாற்பத்தி ரண்டாம் ஆண்டில் விண்ணுலகெய்தினர். இவர் தம் நூலின் கதைச் சுருக்கம் பின் வருமாறுகாண்க:

சீவகவழுதி, தன் முதன் மந்திரியாகிய குடிலனின் நயவஞ்சகத்தில் ஈடுபட்டு, மதுரையை நீக்கி நெல்லையைத் தலைநகராக்கி, தன் ஒரே மகளான தாயற்ற மனோன்மணி யுடன் வந்து தங்கினன். மனோன்மணி, சேரநாட்டரசனை புருஷோத்தமவர்மனைக் கனவிற் கண்டு காதலுற்றனள். இதைக் குறிப்பால் அறிந்த சுந்தர முனிவர், சீவகற் குணர்த்த, அவன் குடிலனோடுசாவினன். அக்கொடியவன், மணம் பேசுவான்போலத் தன் மைந்தனையனுப்பிச் சேர னது செருக்கினைக் கிளறிச் சினமூட்டுவிக்க, பொறையனும் உடனே போருக்கு எழுந்தனன். மாறனுஞ் சேரனும் பொருதுங்கால் பாண்டியனது சேனையிற் குழப்பம் பிறக்க, அரசனது உயிர்க்கே ஆபத்தேற்பட்டது. அவ்வமயம்,நாரண னெனுமோர் வீரனுங்குற்று மன்னனைக் காத்தனன். இதனை உணர்ந்த முனிவர், சீவகனை யடைந்து மனோன்மணியைப் போர்முடியும்வரை, தாமியற்றிய சுரங்க வாயிலாக

அனுப்பித் தமதாச்சிரமத்தில் இருக்கச் செய்யும்படி வேண்டினர். மன்னவன் இசைந்து, பின் குடிலனது போதனையால், மனோன்மணியை அன்றிரவே அவன்மகன் பலதேவனுக்கு மணமுடிப்பித்து, இருவரையும் முனிவர்பாலனுப்ப எண்ணினன்.

இந்நிலையில், தன்னலமொன்றையே கருதும் குடிலன், முனிவரா லாக்கப்பட்டிருந்த கற்படை வழியைக் கண்டுபிடித்து அதன் வழிச்சென்று நோக்க, பகைவரது பாசறை பக்கத்திலிருப்பதைக் கண்டு, சேரனை அண்மிச், சிவகனைச் சிறைசெய்து தருவதாகவும், தன்னை மன்னவனுக்க வேண்டுமென்றும் விளம்பினன். சேரன், 'வஞ்சியான் வஞ்சியான்' என்றறைந்து, குடிலனது கைகளில் தளையிடுவித்துத் தென்னவனதரண்மனைக் கேகினன். அவ்வமயம் மனோன்மணி பலதேவனுக்கு மாலையிடும் வேளையாயிருந்தது. இளவரசியினது உருவத்தையே கனவிற் கண்டு காதலித்திருந்த சேரன், தன்னுணர்வற்று அப்பெண்ணிடையணைய, அவளும் மாலையைச் சேரன் கழுத்தில் சேர்த்தனள். பின்னர்ப் புருஷோத்தமன், குடிலனது மோசக் கருத்தை வெளிப்படுத்த, பாண்டியன் அவனை ஒறுத்து, தன்மகளை மலையனுக்கே மணம்புரிவித்து இனிதிருந்தனன்.

இக்கதை, **லிட்டன் பிரபு** அவர்களால் இயற்றப்பட்ட (The Secret way) **ரகசிய வழி** என்னும் ஆங்கிலக் கவிதையைப் பெரும்பாலும் பின்பற்றியிருப்பினும், தேய வழக்கிற்கேற்ப, வேண்டியாங்குச் சிற்சில விடங்களிற் குறைத்தும், கூட்டியும், மறைத்தும், மாற்றியும் கோக்கப்பட்டுள்ளது.

இந்நூல் எல்லோராலும் எளிதிற் கற்றுணரத்தக்க நடையில் எழுதப்பட்டு நாடக மேடையில் நடித்தற்கேற்றதாகவும், பண்டைய இலக்கிய நூல்களோடு சேர்த்து எண்ணத்தக்கதாகவும், அகவற்பாவால் அமைந்துள்ளது. தமிழ்மொழிக்கே புதிதாகத் தோன்றிய இந்நூலிற்கு, தம் போக்கிற்கும், நீரொழுக்குப் போன்ற வாக்கிற்கும் தக்கவாறு ஆசிரியர் தெரிந்து எடுத்துக்கொண்ட அகவற்பா, பெரிதும் பொருத்தமுடையதே. மேலும், வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, மருட்பா ஆசிரியத்தாழிசை, வஞ்சித் தாழிசை

கலித்தாழிசை, ஆசிரியத்துறை, வெண்செந்துறை முதலிய பாக்களும், பாவினங்களும் இக்காவியத்தின்கண் ஆங்காங்கு விரவித்தோன்றும்.

இலக்கணத்தை ஆதாரமாகக்கொண்டு கண்டவாறு விவகாரங்களைப் புகுத்தி, கற்போரை இடர்ப்படுத்தாது இன்பமான எளிய வார்த்தைகளால் ஆக்கப்பட்டிருக்கும் தொடையும், மடக்கும், ஆசிரியரது வாக்கு நயத்தை வெள்ளிடை மலைபோல் விளக்கும் :—

" மஞ்சுகண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி
உதயனும் உடல் சிவந்தனனே "

மேலும் இயற்கைக்கு ஒத்தனவாயும் பெரிதும் பொருத்தமுடையனவாயும் பொருத்தப்பட்டுள்ள வருணனைகளும், உவமானங்களும் எண்ணில :—

" மரக்கலம் தந்திடும் வயற்கரை யொருபால்
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்"

" ஓமென ஓவிறந் தொலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்கும்அந் நாட்டிடை ஒருசார். "

மேலெடுத்துக் காட்டப்பட்டவற்றை ஆழ்ந்து நோக்கின் ஆசிரியரது புலமையும், கற்பனு சக்தியும் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காணக்கிடக்கும்.

இன்னும் ஆங்கிலப் பழமொழிகளை அவற்றிற்கிசைந்த தமிழ்ப் பதங்களால் எடுத்தாண்டு, புதியது புணர்த்துந் திறமை, இந்நூலுடையாரது பரந்த நூலறிவையும், ஆங்கிலப் பயிற்சியையும் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

'செருக்கினைக் கிள்ளுதல்'—'Pricking the Pride'
'புத்தியே சகல சத்தியும்'—'Knowledge is Power'
'கால விளம்பனஞ் சாலவுந் தீது'—'Delay is dangerous'
'நன்மையே யாவும் நன்மையாய் முடியில்'—'All is well that ends well'

மற்றும், இந்நூலின் ஒருபகுதியாகிய, சிவகாமி சரிதையையும், ஏனைய பகுதிகளையும் ஆழ்ந்து நோக்கில், சீவகனை ஜீவாத்மா ஆகவும், அவனைத் தன்வசப்படுத்தி ஆட்டுவித்த குடிலனை மாயாசக்தியாகவும், மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத்து உதிக்கும் முத்திக்குரிய உத்தமபாகமான சுத்த தத்துவமாகவும் கொண்டு, வேதாந்த சித்தாந்த நூல் வல்லார் தம் கொள்கைகளுக்கேற்றவாறு பொருளுரைத்து விளக்கிக் காட்டுதல், நாடக நூல்களுக்கில்லாத ஒரு பெருஞ் சிறப்பென்பது மிகையாகாது.

மேனாட்டுக் கொள்கைகளுள்ளும் நம் நாட்டுக்கொள்கைகளுள்ளும் காணப்படும் நல்லனவற்றை யெடுத்துக் காட்டி, ஒற்றுமைப் படுத்தும் உயரிய நூல் இது என்பது உணர்தற்பாற்று.

இனி, தந்நலமொன்றையே கருதுந் தகவிலர், தாம் நல்லவர் போல் நடித்து, பிறரைப் பழித்து, கருதியவற்றை முடித்துக் கொள்ளும் பொருட்டுச் சமயத்திற்கேற்றவாறு பேசியும் நடந்தும் ஒருவரை வசப்படுத்தும் தந்திரமும், நல்லோர் தம்முயிர் போயினும் பிறர்க்கு நன்மையே நாடுவரென்பதும், நல்லோர் நன்மையும், தீயோர் தீமையுமே அடைவர் என்பதும் இதன்கண் மிக்க அழகாக எடுத்துக்காட்டப் பட்டிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. எத்திறத்தாரும் தத்தமக்குற்றதெனக் கொண்டாடுந் தகைமை சான்ற இந்நூல், நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கற்போர்க்குப் பயனளித்து, நடித்தற்கும், படித்தற்கும், போற்றற்கும், புகழ்தற்கும் உரியதாய் தமிழ்மொழியில் இதுவரை இல்லாததோர் புதுநூலாக விளங்குகிறது. இதுபோன்ற நூல்கள் இன்னும் பல வெளிவரின், நமது நாடும், மொழியும் மிக்குதியுஞ் சிறப்புறும்.

# 18. வீரவிகடன்

[வித்துவான் இராம. மீனாட்சிசுந்தரம்]

முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டை வெற்றிவேற் செழியன் என்பவன் ஆண்டுவந்தான். அவன் நிகரற்ற போர்வீரன்; சேர சோழ மன்னர்களோடும் வட நாட்டரசர்களோடும் பெரும்போர் பல நிகழ்த்தி வெற்றியே புனைந்த கொற்றவன். அவனிடம் பகைவ ரஞ்சும்படியான வலிமை வாய்ந்த பெரும்படை ஒன்று இருந்தது. அப்படைவீரர்களை அவன் புதியமுறையில் பழக்கிவைத்திருந்தான்; படை உறுதியுடன் ஒருமனப்பட்டு நிற்பதற்காகப் பலவிதக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தான். படையைச் சேர்ந்த எவரும் அக்கட்டுப்பாடுகளில் எதனையும் மீறலாகாது. படைவிதிகட்கு மாறுபட நடந்தவர் யாராயினும் அவர் மரணதண்டனை பெறுவது திண்ணம். இத்தகைய உறுதியான கட்டுப்பாடுகளாலேயே அப்படை, அவனுக்குச் சென்ற போர்தோறும் வெற்றியைத் தேடித்தந்தது.

வெற்றிவேற் செழியன் சபையில் மதிவாணன் என்றொரு விகடன் இருந்தான். அவன் நகைச்சுவை ததும்பப் பேசுபவன் ஆதலின், அரசன் அவன் மேல் அன்பு பூண்டு ஆதரித்து வந்தான். மதிவாணனுக்குச் சில நாட்களாகத் தானும் சேனையில் சேர்ந்து வீரனாக விளங்கவேண்டுமென்ற அவா ஏற்படலாயிற்று. தக்க சமயம் பார்த்துத் தன் விருப்பத்தை அரசனிடம் தெரிவித்தான். செழியன் நகைத்து, "மதிவாண! உனக்கும் படைக்கும் வெகுதூரம். நீ மதிநுட்பம் மிக்கவனே எனினும் போர்நுட்பமறியாய். இளகிய உள்ளமுடையையாதலின் கொடும்போர் கண்டு நடுங்குவாய். மேலும் மனம்போன போக்கின்படி நடந்து பழகிய நீ வீரர்க்குரிய விதிகட்குட்பட்டு நடத்தல் எளிதன்று. விதிகளிற் சிறிது பிறழினும் உன்விதி முடிந்துவிடும். அப்பொழுது என்னாலும் உதவி செய்ய இயலாது. சொல்வதை நன்றாகச் சிந்தித்துச் சொல்" என்று கூறினான். இவ்வாறு அரசன் எவ்வளவோ சொல்லியும், அச்சுறுத்தியும் மதிவாணன் ஆசை அவனை விடவில்லை. முடிவில் அரசன் அனுமதி பெற்றுப் படையில் சேர்ந்துகொண்டான்.

மதிவாணன் படையில் சேர்ந்த சில நாட்களில், வெற்றி வேற் செழியனுக்கும் சோழனுக்கும் நாட்டெல்லை விஷயமாக மனத்தாபம் ஏற்பட்டது. இரு நாட்டார்க்கும் போர் மூளும்போல் தோன்றியது. எல்லைப்புறக் காவலுக்கு அனுப்பப்பட்ட வீரர்களில் மதிவாணனும் ஒருவனுகப் போய்ச் சேர்ந்தான். பாண்டிய நாட்டு வீரர்களும், சோழன் படைஞரும் ஒருவரை யொருவர் அறியாமல் பகைவர் நிலையை அறிய நள்ளிரவில் ஒற்ருய்ந்துவந்தனர். இவ்வொற்ருய்தலிற் கூடச் சிறு சிறு பூசல்கள் நிகழ்ந்தன. பல வீரர்கள் இருதிறத்திலும் மாண்டனர். முடிவில் சோழன் படைகள் பெரும்போர் செய்யாமலேயே பின் வாங்கினர். சோழனும் பணிந்தான்.

வெற்றிவேற் செழியன் சிறப்புடன் இவ்வெற்றியைக் கொண்டாடினுன்; எல்லைப்புறத்துக் காவல் வீரர்களுக்கும் ஒற்ருய்ந்தவர்கட்கும் அவரவர்க்கேற்ற முறையில் பரிசளித்தபின், எல்லோர்க்கும் பெருவிருந்தளித்து மகிழ்வூட்டினுன். மதிவாணனுக்குப் பரிசு ஒன்றும் அளிக்கப்படவில்லை. அதனுல் அவனுக்கு மனவருத்த முண்டாயிற்று. விருந்துக்களியாட்டத்தில் அவன் உற்சாகத்தோடு ஈடுபடவில்லை. எப்பொழுதும் நகைச்சுவை ததும்பப் பேசி எல்லோரையும் களியூட்டுவதில் இணையற்றவன் என்பதை அரசன் அறிவானுதலால், அவன் சோர்வுற்றிருப்பதையுணர்ந்து அவனை அணுகி, “மதிவாண! ஏன் ஒருவாறிருக்கிருய்?” என்று கேட்டான். மதிவாணன் பணிவுடன் எழுந்து “அரசே! எல்லோரையும் போல நானும் எல்லைப்புறம் சென்றேன்; வீரச்செயல் புரிந்தேன்; மற்றெல்லோருக்கும் பரிசுகள் கிடைத்தன. எனக்குமட்டும் ஒன்றும் இல்லை” என்று தன் மனக்குறையை வெளியிட்டுரைத்தான்.

செழியன் சிரித்துக்கொண்டே “வியத்தகு வீரச்செயல் விளைத்தவர்க்கே பரிசளித்தோம். நீ ஏதேனும் அத்தகைய அருஞ்செயல் புரிந்திருக்கிருயா?” என்று கேட்டான். மதிவாணன் உடனே முகம் மலர்ந்து “ஆம்! அதற்கென்ன ஐயம்? ஒரு சமயம், நான் எனது படை முழுமையும் அழிவினின்று பாதுகாத்தேன்” என்ருன். அரசன் “எப்படி?” என்று கேட்க, மதிவாணன் “அரசே! ஒருசமயம் பகைவரைச்சேர்ந்த

ஒற்றன் ஒருவன், நள்ளிரவில் தரையில் படுத்துக்கொண்டே நமது படையின் நிலைமையைக் கவனித்துக்கொண்டிருந்தான். நல்லவேளையாக அவனை நான் பார்த்துவிட்டேன். இல்லையானால் நமது கதி என்னாகியிருக்குமோ? நான் அவனைப் பார்த்ததும் அடிமேலடிவைத்துச் சென்று, அவனை நகர வொட்டாமல் அவன் இரண்டு கால்களையும் ஒரே வெட்டில் வெட்டிவிட்டேன்'' என்று தனது வீரப்பெருமை விளங்கக் கூறினான். அங்கிருந்தவ ரெல்லோரும் மதிவாணன் சொல்வதைக் கூர்ந்து கவனித்தனர். அரசன் மெல்ல, "சரி, நீ அவன் கால்களை வெட்டியதில் பயனென்ன? அவன் தலையையன்றோ துண்டித்திருக்கவேண்டும்'' என்று கூறினான். மதிவாணன் உடனே "நான் என்ன அவ்வளவு மூடனா? தலையிருந்தால் விட்டு வைத்திருப்பேனா? எனக்கு முன்னமே எவனோ தலையை வெட்டிவிட்டான்போலிருக்கிறது'' என்று கூறவே, எல்லோரும் நகைத்தனர். அரசனும் நகைத்துக்கொண்டே "மதிவாணா! நன்று உன் வீரம்!'' என்று கூறிச் சென்றான்.

மற்றொரு சமயம் மதிவாணனுக்கு ஒரு போர் முகத்தில் பாடி வீட்டைக் காவல்செய்யும் முறை வந்தது. இரவு முழுவதும் விழித்த கண் இமையாமல் காப்பதே அவன் கடமை. மதிவாணன் இவ்வாறு விழித்துப் பழகியவன் அல்லன்; சிறிது நேரத்தில் உறங்கிவிட்டான். அப்பொழுது எல்லோரும் சரியாகத் தத்தம் கடமைகளைச் செய்கிறார்களா என்பதைக் கவனித்துவந்த படைத்தலைவன், இவன் உறங்குவதைக் கண்டுகொண்டான். ஏற்கனவே இவன் மேல் வெறுப்புக்கொண்ட படைத்தலைவன், இவனை இன்றுடன் ஒழித்துவிட வேண்டும் என எண்ணி மெல்ல வந்து, மதிவாணன் உறையிலிருந்த வாளை எடுத்துச்சென்றுவிட்டான். பொழுது புலர்ந்ததும், அரசற்கு இதைக் கூறித் தண்டனை பெறச் செய்யவேண்டும் என்பது அத்தலைவன் கருத்து.

தலைவன் வாளைக் கொண்டுசென்ற சின்னாழிகைக்கெல்லாம் மதிவாணன் விழித்துக்கொண்டான்; தன் உறைவாளைக் காணாது விழித்தான்; மறுநாள் காலையில் வாளில்லாமல் படைஞர் வரிசையில் சென்று நின்றால், தான் உறங்கிய குற்றம் வெளிப்படுமே என்று கருதிப் பொழுது புலருவதற்குள்

மரத்தினுல் வாள்போல் செய்து உறையினுள் செருகிக் கொண்டு அணிவகுப்பில் சென்று நின்ருன்.

இதற்குள் தலைவன் மூலமாக மதிவாணன் குற்றத்தை யுணர்ந்த அரசன், அவனைத் தண்டிக்க விரும்பவில்லையாயினும் அவனைச் சேனையை விட்டு நீக்கிவிடவேண்டும் என்னும் கருத்துடன், அணிவகுப்பைப் பார்ப்பவன்போல வந்தான்; மதிவாணன் உறையிலும் வாள் ஒன்றிருப்பதைக் கண்டு வியப்புற்ருன். அவன் உறையிலிருந்த வாள் தன்கையிலிருக்கும்பொழுது அவனுக்கு வாள் எப்படிக் கிடைத்தது என்பது ஆச்சரியமாயிருந்தது. இதை எப்படியேனும் வெளிப்படுத்த வேண்டுமென்றெண்ணிய அரசன், படைவீரருள் ஒருவனைப் பார்த்து, மிக்க சீற்றங்கொண்டவன் போல 'நீ செய்த குற்றத்திற்கு மரண தண்டனையே சரி' என்று கூறி மதிவாணனை நோக்கி "மதிவாண! இத் தீயோன் சிரத்தைச் சேதிப்பாய்'' என்று ஆணையிட்டான்.

மதிவாணன் என்செய்வான். அவன் தன்வாள் திருட்டுப் போனதை எவரும் அறியாமலிருக்கவேண்டும் என்று மரத்தால் வாள்செய்து செருகி வைத்துள்ளான்; அதை இப்பொழுது வெளியில் எடுத்தால் தன் குற்றம் வெளியாகிவிடுமே எனக் கலங்கினுன். பளிச்சென்று அவனுக்கு ஒன்று தோன்றியது. தன் குற்றத்தைப் படைத்தலைவனும் அரசனும் அறிந்துகொண்டு வேண்டுமென்றே தன் குற்றத்தைப் பலரறிய வெளியாக்கவேண்டுமென்று இவ்வாறு செய்கிருர்கள் என்பதை உணர்ந்து கொண்டான். உடனே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. வானத்தை நோக்கித் தன் இருகைகளையும் விரித்து, "கடவுளே! எனது நண்பன் நிரபராதி. அவனை அரசராணையால் சிரச்சேதம் செய்வதற்கு இத்துணை வீரர்களில் நான்தானு அகப்பட வேண்டும்? இக் கொடிய பாவம் என் தலை மீதா விழவேண்டும்? ஆகவே உனக்குக் கருணை சிறிதேனும் இருக்குமாயின் என் வாளை மரவாளாக மாற்றியருள்'' என்று வேண்டிக்கொண்டே வாளையுருவினுன். வீரர்கள் எல்லோரும் வியப்புற்றனர். படைத்தலைவன் கூட மயங்கினுன். ஆனுல் அரசனுக்கு மதிவாணன் செய்த தந்திரம் விளங்கிவிட்டது. அரசன் அவனது சாதுரியத்திற்கு வியந்து, "நீ அரண்மனையில் நகைச்சுவைப்

பணிக்கே தக்கவன். இது உனக்கு ஏற்றதன்று'' என்று கூறிச் சென்றான். மதிவாணனும் படைக் கட்டுப்பாடுகளை யுணர்ந்தவனாதலால் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' எனக்கருதித் தன் பழைய வேலைக்கே சென்றான்.

---

## 19. ஒளிவிநோதங்கள்

[ஆர். கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. எல். டி., பி. ஓ. எல்.]

பேய்த்தேர், கானல் என்று சொல்லப்படும் பொய்த் தோற்றம்பற்றி எல்லா நாடுகளிலும் கர்ணபரம்பரையிலும் இலக்கியத்திலும் வியந்து கூறப்படுகின்றது. இது ஒளி விலகலால் உண்டாகும் நிகழ்ச்சியே. தரையையடுத்துள்ள காற்று, குளிர்ச்சியாகவும் அதன்மேலுள்ள காற்று வெப்ப மாகவும் இருக்கும்போது, பொதுவான ஒளிமுறிவு மிகைப் படுத்தப்படுகிறது. அதனால் அடிவானத்தில் மறைந்திருக்கும் தீவுகள், கடற்கரைகள் முதலியவை மேலே உயர்த்தப்பட்டு நம் கண்ணுக்குப் புலனாகும். இந்த இயற்கைக்கு மாறான ஒளிவிலகல் ஏற்படுவதற்குக் காரணம் கடலிலும் காற்றிலும் உள்ள அதிக வெப்பநிலை மாற்றமேயாகும். சில சமயங்களில் இவ்வெப்பநிலை மாற்றம், பூமிக்குச் சற்று மேலே இருக் கும். அப்போது ஒளிக்கிரணங்கள் மேலேயுள்ள வெப்ப தட்பக் காற்றுப் புரைகளால் விலக்கமடைந்து கீழ்ப்புற மாக வந்து, பூமியில் உள்ள ஓர் இடத்தின் உருத்தோற் றத்தை அதற்கு மேலே உண்டாக்கும். ஒரு சமயம் ஒரு நகரத்தின் உருத்தோற்றம் இதைப்போல் அதன் மேல் தலைகீழாகக் காணப்பட்டதாம். அந்த உருத்தோற்றத்தில் நகரத்தில் சென்றுகொண்டிருந்த வண்டிகள் தலைகீழாகச் செல்வதுபோல் காணப்பட்டன. தலைக்கு மேலே அண்மை யில் தட்பவெப்பக் காற்றுப் புரைகள் இருந்தால், சூரிய சந்திரர்களின் உருவமும் மிக விநோதமாகத் தெரியும். ஒரு சமயம் ஒருவருக்குச் சூரியன் ஒரு நாய்க்குடை போலவும், தொப்பி போலவும் தெரிந்ததாம்.

பாலைவனப் பாங்கரில் ஒளி விலக்கத்தினால் ஏற்படும் மாறுபடு தோற்றங்கள், இயற்கையாகக் காணப்படும். அங்கு இரவில் நிலத்திலிருந்து வெளிவரும் வெப்பம், அதிக

மாகத் தட்பவெப்ப மாற்றங்களை உண்டாக்குவதால், சூரிய உதயத்தின்போது வானத்தில் நெடுந்தூரம் பார்க்கமுடியும். அன்றியும், தட்டையாக உள்ள நிலப்பாங்கர் உட்குழிந்து பள்ளத்தாக்குப் போலவும் காணப்படும். சூரியன் மேலே ஏற ஏற, நிலம் வெப்பமடைந்து, தட்பவெப்ப மாற்றம் ஒத்த அளவாகி விடுவதால், நிலம் மீண்டும் தட்டையாகக் காணப்படும்.

பொதுவாகக் கானல் நீர் என்று சொல்லப்படுவது பின்வருமாறு உண்டாகிறது. ஆகாயத்திலிருந்து சரியான திசையில் வரும் ஒளிக்கதிர்கள், பாலைவனப் பாங்கரை யடுத்துள்ள வெப்பக்காற்றுப் புரையில் நுழைந்து, பிறகு மேலே உள்ள குளிர் காற்றுப் புரையில் மேல் நோக்கி வளைந்து செல்லுகின்றன. ஆகையால், ஆகாயத்தின் ஒரு பகுதி தரையின்மீது எதிர்தோன்றித் தண்ணீர் போன்ற தோற்றத்தை யளிக்கிறது. இது நாம் அணுகும்போது மறைந்து விடுகிறது. ஏனெனில், அப்போது நம் பார்வையின் திசை மாறி விடுகிறது. இக்கானல் நீரைத்தான் ஏமாற்ற மளிக்குந் தோற்றத்திற்கும், நம்பிக்கைக்கும் உவமானமாகக் கூறுகிறோம். அராபியர்கள் இதை 'சைத்தானின் கடல்' என்பார்கள்.

சிலசமயங்களில் இத்தகைய பொய்த் தோற்றத்தோடு அடிவானத்தின் அளவும் குறுகிக் காணப்படும். வெப்பமான நாட்டில் காலையில் நெடுந்தூரம் தெளிவாகத் தெரியும். ஆனால், நண்பகலில் அரைமைல் தூரமே தெரியும்படியாக அடிவானம் குறுகிவிடும். ஒரு சமயம் காப்டன் குக் என்பவர் கடலில் செல்லும்போது ஒரு பனிப்பாறை வானவிளிம்பின் பின்புறம் தெரிந்ததாம். அப்போது ஓர் ஆலங்கட்டி மழை பெய்து கொண்டிருந்தது. அம்மழை நின்றபிறகு அப்பனிப் பாறை முன்போல வானவிளிம்பின் முன்புறம் நின்றதாம். ஒருசமயம் மால்டாவுக்கும் சிசிலிக்கும் இடையில் ஒரு புதிய தீவு தென்பட்டதாகச் சில மாலுமிகள் கருதிச் சென்றனர். அரைமணி நேரத்திற்குள் அத்தீவு உயர்ந்து கொண்டே வந்தது. இறுதியாகப் பார்க்கும்போது அது சிசிலிக் கடற் கரையில் உள்ள எட்னு எரிமலையின் சிகரம் என்று அறியப் பட்டது. இதற்கெல்லாம் காரணம் கடல் வெப்பமாகவும்

காற்று குளிர்ச்சியாகவும் இருப்பதால் ஏற்படும் ஒளி விலக்கத்தின் தோற்றமேயாகும்.

ஒரு சுவர், சூரிய வெப்பத்தில் நன்ருகக் காய்ந்து கொண்டிருக்கும்போது அதன் அருகில் நின்று பார்த்தால் சற்றுச் சேய்மையில் செல்பவர்கள் பக்கத்தில் செல்வது போலத் தெரியும். ஏனெனில் சுவரின் அருகில் உள்ள காற்று அதிக வெப்பமாகவும், அப்பால் உள்ள காற்று அதைவிடக் குளிர்ச்சியாகவும் இருப்பதால் ஒளி விலக்கம் ஏற்படுகிறது.

கோடைக்காலத்தில் நிலம் அதிக வெப்பமடைவதால், அதையடுத்துள்ள காற்று வெப்பமடைந்து மேலே செல்வதை நன்கு பார்க்க முடியும். அப்போது நிலத்தின்மீது ஒரு மெல்லிய திரை அசைவதுபோலத் தெரியும். அதுதான் வெப்பக்காற்று மேலே செல்வதற்கு அறிகுறி. ஒவ்வொரு சமயம் இது வெப்பப் பிரதேசங்களில் மிக அதிகமாய்க் காணப்படும். இதனுல் பல பொய்த்தோற்றங்கள்தோன்றும். இத்தாலி நாட்டுப் பாமர இலக்கியத்தில் இதைப்போல ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஆர்லண்டோ என்னும் தூதுவன் மார்கனு என்னும் வனதேவதையின் மாய நந்தவனத்தில் நுழைந்தபோது, அங்குப் பல வரிசை வரிசையான அரண்மனைகளும், கோபுரங்களும், மண்டபங்களும், காணப்பட்டனவாம். சிறிது நேரம் அவற்றை அவன் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்த சமயம், எல்லாம் மாயமாக மறைந்து விட்டனவாம். இது, மெஸ்ஸினு ஜலசந்தியில் சிசிலிக்கும், கலப்ரியாவுக்கும இடையில் உண்டாகும் ஓர் இயற்கை நிகழ்ச்சி. இங்குக் காற்றின் நிலையற்ற தன்மை, பார்வையைத் திரித்து மாறுபட்ட தோற்றங்களை யளிக்கும். அதனுல் கோபுரங்களும், சிகரங்களும், கட்டடங்களும் ஒன்று பலவாகத் தோற்றும். கலப்ரியாக் கரையிலிருந்து ஒருவன் ஒரு தடவை கடலின்மீது முதல் ஈறில்லாத தூண்களைக் கண்டானும். அவை, ஒரு ரயிலின் பாலக்கம்பத்தின் உரு நிழல்கள் என்று பிறகுதான் அவனுக்குத் தெரியவந்தது. மற்ருெரு சமயம், ஒரு வியாபாரக் கப்பல் கடலில் செல்லும் போது, வேருெரு பிரயாணிக் கப்பலில் செல்பவர்கள், அது கவிழ்ந்துவிட்டது போலவும், பிறகு இரண்டாகப்

பிளந்து இரண்டு நீண்ட சதுரக் கப்பல்கள் செல்வது போல வும், இறுதியாக ஒன்று அதற்கு மேல் தலைகீழாக் இருப் பது போலவும் கண்டார்களாம். மற்றொரு நீராவிக் கப்பல் தண்ணீரைவிட்டு ஆகாயத்தில் மிதந்து செல்வதுபோலக் காணப்பட்டதாம்.

துருவப் பாங்கரில் பனிக்கட்டிகளுக்கு இடையே உள்ள தண்ணீர், சில சமயங்களில் காற்றைவிட 30 டிகிரி அதிக வெப்பமாக இருக்கும். அதனால் வெப்பக் காற்றும் குளிர்காற்றும் அடிக்கடி கலக்கும். ஆகையால், அங்கு உண் டாகும் கானல்களும், பொய்த் தோற்றங்களும், மக்களை அடிக்கடி தொல்லைக்குள்ளாக்கும். பனிக்கட்டிகளும், பனிப் பாறைகளும் அற்புதமான மயன் மாளிகைகள்போல் ஆகா யத்தில் காட்சியளிக்கும். துருவப்பாங்கர்க் கடல்களில் இயற்கை வளத்தால் அழகு காணப்படாவிடினும், வானத் தில் சிறப்பான விநோதக் காட்சிகளால் அழகு உண்டா கிறது. எல்லையற்ற வான ஒளித்திரள் என்று சொல்லப் படும் மலைக்கத்தக்க மிகப்பெரிய காட்சி அங்கு இரவில் தோன்றி, தோரணங்களும் திரைகளும் ஆகாயத்தில் தொங்குவதுபோலத் தெரியும். கீழுள்ள காற்றில் பனித் துணுக்குகள் ஒளிவிலக்கத்தை ஏற்படுத்தி, வானத்தில் வட்டங்களையும் விற்களையும் உண்டாக்கும். கடல் மட்டத்தில் காற்றின் செறிவிலும், வெப்பத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வு களால், ஒளி பலவித மாறுபாடடைந்து தோன்றும்.

நிலத்தால் சூழப்பட்டுள்ள நீர் நிலைகளில் இத்தகைய காட்சிகள் மிகவும் இயல்பாகத் தோன்றும். ஏனெனில், அங்கு நிலத்தின் வெப்பம் மிகவிரைவில் உயர்ந்துவிடும். ஆனல் நீர் அவ்வளவு விரைவில் வெப்பமடையாது. அத ணல் நீரின்மீதுள்ள காற்று குளிர்ந்தும், சுற்றிலும் மேலும் உள்ள காற்று வெப்பமாகவும் இருக்கும். இத் தட்ப வெப்ப வேற்றுமையால், காற்றில் ஒளி செல்லும்போது மாருன தோற்றங்கள் உண்டாகும். பனிப்பாங்கரிலும், வெப்ப நாட்டுக் கடற்கரைப் பாங்கரிலும் காட்சி மாறு பாடுகள் காணப்படுவதற்குக் காரணம் இது தான்.

# 20. இசைக்கருவி

[மிருதங்க வித்துவான், முருகபூபதி]

இசையினுடைய பெருமையை யறிந்தே பழந்தமிழ் மக்கள் முத்தமிழுள் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றார்கள். இயற்றமிழ் நூல்களாகிய இலக்கியங்கள் செய்யுட்களால் இயன்றன. அவை இசையுடனே பயில வேண்டும். நாடகத்திற்கும் இசை இன்றியமையாததென் பதையாவரும் அறிவர். தமிழ்ப் பயிற்சியும், ஆங்கில முதலிய ஏனைய மொழிகளின் பயிற்சியும் உடையவர்களால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே மகிழ்வூட்டமுடியும். ஆனால், இசையோ கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்களுக்கும் இன்பம் நல்கும். பண்டை இலக்கியங்களில் இருதிணை உயிர்களும் இசையின் வயப்பட்டன என்று பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

இத்தகைய, இசையில், பண்களென்றும் திறங்கள் என்றும் இருவகையுண்டு. இந்தப் பண்களும் திறங்களும் பலவகைப்படும். பண்கள் ஏழுநரம்புகளை முதலாகக்கொண்டு பலவாம். பின்னும் பண்களில், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெரும்பண்களும், அவற்றின் வகைகளும் பல. இப்பண்களை அமைத்துப் பாட்டுக்கள் இயற்றப் பெறும். அவை இசைக்கும் பொருளுக்கும் ஏற்றனவாக இருக்கும். பண்ணும் பாட்டும் இசைந்திருத்தல் வேண்டும்.

"பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்"

என்னும் குறளடி இதனை வலியுறுத்தும். பண்களைப் பாடுங்கால் இன்னவகை இலக்கணங்களோடு பாடவேண்டும் என்று விரிவாக இசை நூல்கள் கூறும். இவ்வாறு பாடும் போது இதற்குத் துணைசெய்வனவாகிய கருவிகள் உண்டு. அவைகளுக்கு இசைக்கருவிகள் என்று பெயர்.

இசைக்கருவிகள் கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என மூன்றுவகைப்படும். பாடும்பொழுது மட்டும் கைக்கொள்ளுதற்குரியன கீதாங்க வாத்தியங்கள். நிருத்தாங்கம் என்பன நாடகத்திற்குரியன. பாட்டு, நாடகம் என்ற இரண்டுக்கும் பயன்படுவன உபயாங்கமாகும். எல்லா வாத்தி

யங்களுள்ளும் குழலே முதன்மையாகக் கூறப்படுகின்றது. இக்குழலில் பலவகையுண்டு.

இவ்வாறே யாழிலும் பலவகையுண்டு. இவை யன்றித் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக்கருவி என்னும் ஐவகைக் கருவிகள் உள. இவற்றுள் தோற்கருவியில் பலவகையுண்டு. அவை மத்தளம், படக்கை, உடுக்கை, இடக்கை, குடமுழா, கணப் பறை, தமருகம், கரடிகை, தண்ணுமை, தடாரி, முழவு, முரசு, சந்திரவளையம், சிறுபறை, நாழிகைப்பறை எனப் பலவகையாகக் காணப்படுகின்றன. மத்தென்ற ஒலி யைத் தருதலால் ஒரு வாத்தியம் மத்தளம் எனப்படும். கரடியின் முழக்கம் போன்று ஒலிப்பதால் அவ்வாத்தியம் கரடிகை எனப்பட்டது. இப்படியே வாத்தியங்களின் பெயர் களுக்குக் காரணங்கள் அமைந்துள்ளன. இவ்வகையான தோல்கருவிக ளெல்லாம் பெரும்பாலும் தாளவாத்தியங் களே. உலகிலுள்ள தாளவாத்தியங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது நம்நாட்டு மிருதங்க வாத்தியமேயாகும். வடநாட்டிலும் பிறநாடுகளிலும் கையாளப்படும் தாள வாத்தியங்கள் அனைத்தும், பாட்டின் தாளக்கட்டை மட்டும் எடுத்துக் காட்டுதற்கு உபயோகிக்கப்படுகின்றன. அவை இசை நலமற்றவை. ஆனல் மிருதங்கம் தாளவொலியை வெளிப்படுத்திக் காட்டுவதுடன், பாட்டின் உருவத்தையே இன்னிசையோடு எடுத்துக் காட்டுந் தன்மை வாய்ந்தது. ஆகையால்தான் அது பாட்டுக்கு வேண்டிய முக்கியமான பக்கவாத்தியமாக அமைத்துக்கொள்ளப் படுகிறது. மிருதங் கம் இல்லாத சங்கீதக் கச்சேரியே இல்லையென்பது நாமனை வரும் அறிந்ததே. மிருதங்கத்தில் தொனிக்கும் இனிய நாதம் வேறெந்தத் தோற்கருவியிலும் தொனிப்பதில்லை. பாடகர்கள் பாடும்பொழுது உதிர்க்கின்ற சங்கதிகளையும் சுரங்களையும், மிருதங்கத்தில் அப்படியே வாசித்துக் காட்ட லாம். இசை வரிசைகளையும், தாளப் பிரமாணங்களையும் ஒருங்கே காட்டுந் தன்மையையுடைய மிருதங்கம், தென் னட்டின் சங்கீதக் கலையின் உயர்வுக்கோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

மிருதங்கம் தோல், வார், கட்டை ஆகிய மூன்று பொருள்களால் ஆக்கப்படுகின்றது. தென்னை, வேம்பு,

பலா, சந்தனம், கருங்காலி என்னும் ஐந்து வகை மரங்களும் மிருதங்கக் கட்டை செய்ய உபயோகப்படுகின்றன. இவற்றுள் சந்தனக் கட்டையே பெரிதும் பயன்படுகின்றது. ஏனைய நால்வகைக் கட்டைகளும், கணு, சுழி முதலிய குற்றங் குறைகளின்றி அமைவது அருமை. மிருதங்கக்கட்டை முற்ருத இளமரத் துண்டாக இருந்தால், அதிற்பொருத்தப் பட்டுள்ள தோல், மழைக்காலத்தில் சுருங்கிக் கிழிந்துபோம். ஆதலின், முற்றின மரத்துண்டாகப் பொறுக்கி எடுப்பது அவசியமாகும்.

மிருதங்கக்கட்டை இருபது முதல் இருபத்து நான்கு அங்குல நீளமுள்ள உருண்டையான பீப்பாய் வடிவம் போலிருக்கும். அதன் இருபுறத்து வாய் ஒவ்வொன்றும் ஏழு அங்குலக் குறுக்களவும், நடுவில் பதினெரு அங்குலக் குறுக்களவுமுள்ளதாக இருக்கும். இருபுறத்து வாயும், தோலால் மூடப்பட்டிருக்கும். அத்தோலுக்கு மூட்டு என்று பெயர். அவ்விருபுறத்துத் தோல்களும் நீண்ட வார்களினல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். தோல்களை இழுத்துக் கட்டும் வாருக்குச் சாட்டைவார் என்று பெயர். சாட்டை வாருக்கும் கட்டைக்கும் இடையில் சிறு மரத்துண்டுகளைச் செருகித் தோலின் பிகுவை அதிகப்படுத்திக் கொள்ளலாம். மிருதங்கத்தின் இடது புறத்திற்குக் கவணை அல்லது தொப்பி என்று பெயர். அது இரண்டு தோல்களால் அமைக்கப்பட்டது. ஒன்று வளையமாகவும், அதனடியிலுள்ள மற்ரென்று முழுவில்லையாகவு மிருக்கும். வளையம் ஆட்டுத் தோலாலும், வில்லை எருமைத் தோலாலும் ஆக்கப்பட்டிருக்கும்.

இதனை நடுவில் தட்டும்போது **தா, தோம்** என்ற ஓசைகள் பிறக்கும். மிருதங்கம் வாசிப்போர் இந்தக் கவணையில் ரவையினல் செய்யப்பட்ட ஒருவகைப் பசையைக் கனமாக ஒட்டிவைத்துக் கொள்வார்கள். வலப்புறத்துத் தோலமைப்புச் சிறிது சிக்கலானது. இதில் மூன்று வரிசைத்தோல்கள் அமைந்துள்ளன. அவை **மீட்டு, கரணை, உட்கரத்தட்டு** என்று கூறப்படும். இரண்டு தோல்கள் வளையங்களாகவும் மூன்ருவது வட்டவடிவமான வில்லையாகவும் இருக்கும். வளையங்கள் ஆட்டுத்தோலாலும் வில்லை பசுத்தோலாலும்

ஆனவை. உட்கரத்தட்டு அடியிலிருக்கும்; மற்ற இரண்டும் மேலே அதனை மூடிக்கொண்டிருக்கும். வில்லைக்கு நடுவிலிருக்கும் பாகம் **கரணை** அல்லது **கண்** என்று சொல்லப்படும். அதன் நிறம் கறுப்பு. மிருதங்கத்தில் வலப்புறமிருக்கும் இப்பாகம் மற்றவற்றைக் காட்டிலும் சிறிது உயர்ந்திருக்கும். சிட்டக்கல் என்னும் ஒருவகைக் கல்லைப் பொடியாக்கி, அதனுடன் ரோசனத்தையும், சாதத்தையும் கலந்து, மிருதங்கத்தின் வலப்பக்கத்து மையத்தில் தடவிவைத்துக் காய்ந்தவுடன் சிறு குழவியால் அதை நன்றாகத் தேய்க்கவேண்டும். அவ்வாறு தேய்ப்பதால் அப்பகுதி இறுகிவிடும். இதனால்தான் அப்பகுதி பளபளவென்று கறுப்பு நிறமாகத் தெரிகிறது. இதிலிருந்து தான் **சட்சம** சுருதி பிறக்கிறது.

விஞ்ஞானிகள் மிருதங்கத் தோலின் துடிப்புக்களை ஆராய்ச்சி செய்து, அதன் கனம் விளிம்பிலிருந்து மையத்துக்கு வரவர, சீராக அதிகரித்துக்கொண்டு வருவதால், அதன் ஒலியில் அடங்கிய பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் உண்டாகி, நாதம் இனிமையடைகிறது என்று கூறுகிறார்கள். மிருதங்கத்தின் இன்னிசை, பெரும்பாலும் அதன் வலப்புறத்துத் தோலின் அமைப்பைப் பொறுத்துள்ளது. மேலும், தோல் துடிக்கும்பொழுது பீப்பாயினுள்ளிருக்குங் காற்றும் துடித்து, நாதத்தின் இனிமையை அதிகரிக்கச் செய்கின்றது. கட்டையில் வெடிப்பு ஏற்பட்டால் நாதம் கெட்டுப்போம். பாட்டுக் கச்சேரிகளில் மிருதங்க வாத்தியத்தின் மீட்டு, சாப்புக்களால் உண்டாகும் ஒலி, வாய்ப்பாட்டொலியோடு கலந்து கச்சேரியைச் சோபிக்கச் செய்கிறது. பாடகர்கள் ராக ஆலாபனை செய்யும்பொழுதும், சுரம் பாடும்பொழுதும் தங்கள் மனோதர்மத்தைக் காட்டித் தனி ஆவர்த்தனம் வாசிப்பார்கள். தாளப்பயிற்சி யில்லாதவர்களும் கச்சேரிகளில் மிருதங்கம் தனி ஆவர்த்தனம் வாசிப்பதை அமைதியாயிருந்து கேட்டு, நாதத்தின் இனிமையிலீடுபட்டு இன்புறுகின்றனர்.

# 21. குகை ஆராய்ச்சி

[ஆர். கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. எல். டி., பி. ஓ. எல்.]

இயற்கையின் மிகப்பெரிய பாதாள அறை ஒன்று. அதில் எங்கும் ஒரே இருள். வளைந்து வளைந்து செல்லும் படியான நீண்ட சுரங்க வழி. அதில் மேடு பள்ளங்கள்; ஒவ்வோரிடத்தில் சிலசில பிளவுகள். அவற்றின் வழியாக ஓவென்றிரைந்து குதித்து ஓடிவரும் அருவிகள். எங்கோ மறைவிலிருந்து அடிக்கடி 'குபீர்' 'குபீர்' என்று அஞ்ச வருந்தோற்றத்துடன் பொங்கிவரும் வெள்ளப்பெருக்கு. இயற்கையின் அச்சுறுத்தும் விளையாட்டின் அரங்கமே இந்தக் குகை.

பூமியின்மீது புதிய இடங்களை ஆராய்வதில் உள்ள துன்பங்களைவிடப் பன்மடங்கு மிகத்துன்பம் இதில் உள்ளது. பூமியின்மீது வெளிச்சம் இருப்பதால், எதிர் நோக்கியிருக்கும் கேடுகள் என்னவென்று தெரியும். அவற்றைச் சமாளிக்கச் சிறிதேனும் நேரம் கிடைக்கும். ஆனல், பூமிக்கு அடியில் ஒரே இருள் மயமாய் இருப்பதால் ஒன்றும் தெரிவதில்லை. பெருங்கேடுகள் திடீரென்று நேருவதால் அவற்றை விலக்கவும் போதிய நேரம் இருப்பது இல்லை. அங்கே தீப்பந்தம், சாதாரண விளக்கு முதலிய ஒளிக்கருவிகள் பயன்படுவதில்லை. ஏனெனின் அவற்ருல் சிலசமயம் புகை உண்டாகி மூச்சுத் திணறுகிறது. சிலசமயம் அங்குள்ள வாயுக்கள் தீப்பற்றி எரிந்து பாறைகள் வெடித்துவிழுகின்றன. ஆகையால் மின்சார விளக்குகளையே எடுத்துச் செல்லவேண்டும். அவற்றை ஏற்றுவதற்குப் பெரிய மின்கல அடுக்குகளையும் தூக்கிச் செல்லவேண்டும். அவ்வெளிச்சத்தில் கூடத் திடீர் என்று வரும் வெள்ளப் பெருக்குகள் எங்கிருந்து எப்படி வருகின்றன என்று கண்டுகொள்ள இயலாது. வெள்ளத்தினல் அடித்துக்கொண்டு போவதைத் தடுக்க முன்னேற்பாடாக ஒன்றும் செய்யவும் முடிவதில்லை.

முழைகளில் இறங்குவதற்கு முயன்று ஒரு சிலர் பட்ட பாட்டை இவ்வளவென்று கூறமுடியாது. முழையைக் கண்டு பிடிப்பதற்கே அவர்கள் முதலில் அரும்பாடு பட்டார்கள். கண்டுபிடித்த பிறகு நீண்ட நாள் பிரயாணத்துக்கும்,

காலக்கழிவிற்கும் வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து கொண்டார்கள். உணவும் உடைகளும் அன்றி, திசையறி கருவிகள், உயரமானி, உஷ்ணமானி, பாரமானி, ஈரமானி முதலிய பொதுவான ஆராய்ச்சிக் கருவிகளுடன் விந்தை யான விளக்குகள் அமைக்கப்பட்ட தலைக்கவசங்கள், ரப்பர்க் குழாய்கள், கயிறுகள், எஃகு ரப்பர் ஏணிகள், நூலேணி கள், சுரங்க விளக்குகள், மின்சார விளக்குகள், செப்புக் கம்பிகள், மின்கல அடுக்குகள், தெப்பங்கள், நீந்தும் உடை கள், டெலிபோன்கள் முதலியவையும் எடுத்துக்கொண்ட னர். இப்படி உறுதியான முன்னேற்பாடுகள் செய்து கொண்டு, செங்குத்தான சுவர்கள், பாறைகள் முதலியவற் றிற்கு நூலேணி இட்டு, வெகு விழிப்பாக எமன்வாயில் புகு கிறோம் என்ற உணர்ச்சியோடு முழையில் இறங்கினார்கள். அச்சுவர்கள், பாறைகள் வழியாக அருவிகளும் நீரொழுக்கு களும் கடுகி வழிந்துகொண்டிருந்தன. அவற்றை இறங்கும் போதே அணைபோட்டுத் தடுத்து மற்றொருபுறம் திருப்ப வேண்டி யிருந்தது. 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போல இருந்தும், அவர்கள் மேலும் ஆராயத் தொடங்கி னர். சிறிது எட்டிச் சென்றனர். அங்குப் பலவிதமான பளிங்குக் கற்களால் செய்யப்பட்ட படைக்கலங்கள் கிடைத் தன. ஆம், இவை மனிதனால் பயன்படுத்தப்பட்ட படைக் கலங்களே. ஐயமில்லை.

இவை மனிதன் மிகப்பழைய காலத்தில் பயன்படுத் திய படைக்கலங்கள். சரித்திர காலத்திற்கு முன்பு இவை செய்யப்பட்டவை. ஏனென்றால், பளிங்குக்கல் படைக் கலங்கள் பழைய கற்காலத்தில் கூட இல்லை; புதிய கற்காலத் திலும் இல்லை. இவ்விரண்டு காலங்களுக்கும் முற்பட்டவை இவை. ஆகையால் இவையும் பல ஆயிர ஆண்டுகளுக்குமேல் வயதானவை. "ஒருவேளை இம்முழையில் வசித்த முதல் மனிதனுடைய கருவிகளாய் இருக்கலாம் இவை" என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

சற்றுச் சேய்மையில் எல்லோரும் சென்றார்கள். அங்கே ஒரு பாறைக்கு அடியில் கிடைத்த பழம்பொருள் ஒன்றை ஆராய்ந்தார்கள். "ஆம்! இது காட்டெருமையின் எலும்பு. ஆனால், இதன்மேல் என்னவோ ஓர் உருவம் செதுக்கப்

பட்டிருக்கிறதே. இது என்ன உருவம்? நாம் இதுவரை காணாத ஒரு பூச்சியின் உருவம்போல இருக்கிறதே. இப் பூச்சி, இம்முழையிலும் இல்லை; முழைக்கு வெளியிலும் இல்லை. இம்முழையுள்ள நிலப்பகுதியிலேயே இல்லை. ஒரு வேளை இது, முற்காலத்தில் வாழ்ந்த பூச்சி ஒன்றின் உருவ மாயிருக்கலாம். ஆகையால் முதல் மனிதன் ஒரு சிற்பி என்று தெரிகிறது'' என மீண்டும் எட்டிச் செல்ல, கரடி, சிங்கம் முதலியவற்றின் சிற்பங்களும் கிடைக்கின்றன.

இப்படி அவ்வீரக் குழுவினர், முழையின் ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று, அங்குக் கிடைக்கும் தண்ணீர், பழம் பாறைகள், புதைபொருள்கள், பழஞ் சிற்பங்கள், மண் வகைகள், தாவரங்கள், உயிர்வகைகள் முதலியவற்றையும், முழையின் அமைப்பு, அகலம், நீளம், உயரம், வெப்பம், ஈரம் முதலியவைகளையும், எந்தெந்தத் தாவரம் அல்லது உயிர், குகையின் எந்தெந்தப் பகுதியில் வாழ்கிறதோ அப் பகுதியின் அமைப்பு, வெப்பம், ஈரம் முதலிய குறிப்புக் களையும் எடுத்துக்கொண்டு திரும்புகிறார்கள். முழைக்குள் இறங்கும்போது இருந்த சாமான் மூட்டைகளைவிட வெளியே வரும்போது அவர்களுடைய மூட்டைகள் அதிகம். எனினும், மிக்க மகிழ்ச்சியோடு பெரிய புதையலைக் கண் டெடுத்தவர்கள்போல, கிடைத்த பொருள்களைக் கருத் தாகக்கொண்டுவந்து அறிவியற் கலைஞரிடம் ஒப்படைக் கிறார்கள். அவற்றை மேலும் ஆராய்ச்சிசெய்து பல உண் மைகளை வெளியிடுகிறார்கள். அவற்றுள் முக்கியமானவை வருமாறு :

தரையில் எல்லா இடங்களிலும் மேற்கூறியது போன்ற முழைகள் இல்லை. தரையின் அடியில் ஓடும் பெரிய நீரோடை களால் அரித்துக் குடையப் படக்கூடிய சுக்கான் பாறை கள் உள்ள இடத்தில் மட்டுமே அவை உண்டாகின்றன. அவ்வோடைகளின் நீரை மின்சாரத்தோற்றம், நீர்ப்பாச னம், குடிதண்ணீர் முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.

உலகத்தில் உள்ள மிகப்பெரிய முக்கியமான முழைகள் ஐரோப்பாவில்தான் உள்ளன. இத்தாலி, பிரான்ஸ்,

ஆஸ்திரியா, அல்ஜீரியா, யுகோஸ்லேவியா ஆகிய இடங்களில் அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தாலியில் மட்டும் பத்து முக்கியமான முழைகள் இருக்கின்றன. 2000 அடிக்குமேல் ஆழமுள்ள மிகப்பெரிய முழைகள் அங்குத்தான் இருக்கின்றன. மற்ற முழைகள் 1000 அடி முதல் 2000 அடிவரை ஆழமாக இருக்கின்றன. பிரான்ஸ் தேசத்தில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முழை ஒன்று, ஒரு மலையின் இருபுறத்திலும் இரண்டு வாயில்கள் உடையதாய்ச் சுரங்கம்போல் நீண்டு வளைந்து வளைந்து செல்கிறது. அதில் நடுவிலிருந்து மலையுச்சி வரை செங்குத்தான கிணறுகள் பல தொடர்ச்சியாக உள்ளன. இதுவும் 2000 அடிக்கு மேல் ஆழமானது.

குகையில் கிடைத்த புதைபொருள்கள், மனித வாழ்க்கைக்கு மிக முந்திய காலத்திலேயே இப்போது நிலத்தின்மீது இல்லாத பல உயிரினங்கள் வாழ்ந்து வந்தன என்றும், அவை நிலத்தில் உண்டான தட்பவெப்ப மாறுதல்களால் அழிந்தன என்றும், சில உயிரினங்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்தன என்றும், இவையெல்லாம் தாம் வாழ்ந்த இடங்களில் அடையாளங்களை விட்டு வைத்திருக்கின்றன என்றும் அறிவிக்கின்றன. பூமியின் மீது அப்போதைக்கப்போது தோன்றி மறைந்த உயிர்களின் புதைபொருள்கள், பல அடுக்கடுக்காகக் கிடைத்திருப்பதால், இப்படி ஒன்றன்பின் ஒன்றாக உண்டான தட்பவெப்ப மாறுதல்கள் அல்லது யுகங்களைப்பற்றி அறிய முடிகிறது. இப்போது ஐரோப்பாவில் யானைகள், குகைக்கரடிகள், சிங்கங்கள், புலிகள், அரக்கத்தன்மையுள்ள விலங்குகள் முதலியவை இல்லை. ஆனல், அவை பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பு அங்கிருந்தனவென்று அங்கே கிடைக்கும் புதை பொருள்கள் சான்று பகர்கின்றன.

குகையாராய்ச்சி எவ்வளவு பயன்படுவதென்பது, ஒரே முழையில்மட்டும் இதுவரையில் நமக்குத் தெரியாத ஐம்பது புதிய உயிரினங்களின் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தும், மற்ருெரு முழையில் குகைக்கரடிகளின் முந்நூறு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தும் விளங்கும். முழை ஆராய்ச்சி எதிர்காலத்தில்

நிலநூல், புதைபொருள் நூல், உயிர் நூல், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலியவற்றின் ஆராய்ச்சிக்கு எவ்வளவு துணை செய்யக்கூடும் என்பது விளங்கும். இது, உயிர்த் தொகுதியின் வளர்ச்சி வேறுபாட்டையும், அவை இடத்திற்கேற்ப மாறுவதையும் விளக்கவல்லது. இது ஒரு நூதன ஆராய்ச்சித்துறை. கடந்த இருபது வருடங்களில் இத்துறையில் உண்டான முன்னேற்றம் மலைக்கத்தக்கது. இதில், இனிச் செய்யவேண்டிய காரியமும் மலைபோலப் பெரிதாயுள்ளது.

---

## 22. முயற்சியின் முதன்மை

[ பண்டித, நா. கனகராஜ ஐயர், பி. ஓ. எல். ]

பெரியோர்களே! அருந்தமிழன்பர்களே! இன்று 'முயற்சியின் முதன்மை' பற்றிப் பேசும்பணி எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இறைவன் திருவருளால் இயன்றவரை முயன்று அப்பணியை ஆற்ற முற்படுகின்றேன்.

முயற்சியே செல்வம்; முயற்சியின்மையே வறுமை. ஒருவனுக்கு இன்பவாழ்விற்குரிய எல்லாச் செல்வங்களும் குறைவற நிறைந்திருப்பினும் முயற்சியின்றேல் அச்செல்வங்களால் அவன் ஒரு சிறிதும் பயனடையமாட்டான். செல்வத்தை ஈட்டும் முயற்சியொன்று அவனுக்கு இல்லையாயினும் அதனை அழிவுபெறுமற் பாதுகாத்தலினும், மேன்மேலும் வளர்த்தலினும், அறம் பொருள் இன்பங்களிற் பகுத்துச் செலவழித்துத் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் இன்பமளித்தலினும் பெரிதும் முயற்சி வேண்டப்படும். இவ்வுண்மையை முற்றவுணர்த்தும் பொருட்டே திருவள்ளுவர் திருக்குறளில் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்னும் நான்கு அதிகாரங்களையும் தொடர்புற அடுத்தடுத்து அமைத்திருக்கின்றார்.

ஊக்கமுடைமை என்பது மனம் மெலிதலின்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்; மடியின்மை என்பது கருதியன செய்யுங்காற் சோம்புதல் இல்லாமை; ஆள்வினை

யுடைமை என்பது இடைவிடாத மெய்ம்முயற்சி யுடைய ஞதல்; இடுக்கணழியாமை என்பது வினையின் கண் முயல்வான் தெய்வத்தானுக, பொருளின்மையானுக, மெய்வருத்தத்தானுகத் தனக்கு இடுக்கண் வந்துழி அதற்கு மனங் கலங்காமை.

முயற்சி, நமது உடலியல்பிற்கும் உள்ளத்தின் தன்மைக்கும் இன்றியமையாதது. முயற்சியின்றிச் சோம்பியிருப்பது நமது இயற்கைக்கே மாறுனதாகும். 'செயற்கரிய செயலாகக் கருதப்படும் எதனையும் செய்யலாம்; சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்ருெரு பெரியார் கூறியது முற்றிலும் உண்மை.

தளராத ஊக்கமும், விடாமுயற்சியும் இருந்தால் நம்மால் செய்து முடிக்க வியலாதது ஏதும் இல்லை. மகா வீரனுகிய நெப்போலியன் "முடியாது என்பது அறிவில்லாதவர்களின் மொழி" என உலகினர்க்குப் பறைசாற்றினுன்.

முயற்சிக்குப் பகை மடிமை. இது முயற்சியாலெய்தும் நலன்களை இல்லாமல் செய்வதுடன் மனிதனை விலங்காக மாற்றிவிடும் இயல்பினது.

" குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்று பவர்க்கு "

என்பது தமிழ்மறை. மடிமையே மனிதனை மனிதனுக்கடிமை யாக்குவது. ஊக்கமும் உழைப்பும் உடைய நாட்டார் உலகமெலாம் பரவிச் சிறப்படைவதும், அஃதில்லார் பிறர்க்கடங்கி வாழ்வதும் உலக சரித்திரங்களில் கண்கூடாகக் கண்ட நிகழ்ச்சிகளாம். மடிமையை ஒழித்தவனே மனிதன்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" முயற்சியுடையவர்களே தமக்கும் பிறர்க்கும் நலம்செய்து இன்புறத்தக்கோராவார். அவர்களே அறிவாற்றல்களிற் சிறந்து பற்பல வியத்தகு புதுமைகளை உலகிற் களித்து அழியாப் புகழை நிலைநிறுத்தும் பெரியோர்களாவர்.

முயற்சியில்லையேல் உலகமே இயங்காது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு, உழைப்பும் முயற்சியும்

இன்றேல் கிடைக்குமா? அக்கருத்தினை விளக்கவே முயற்சி எனப் பொருள்தரும் 'உழவு' என்பது அதற்குப் பெயராயிற்று.

> " உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
> விட்டேமென் பார்க்கு நிலை "

உழவே முயற்சி. ஆகவே வாழ்விற்கு இன்றியமையாததும், முதன்மையானதும் முயற்சி என்பது ஒருதலை.

அறங்கள் வளரச் செய்வதும் முயற்சியேயாகும். முயற்சியால் வளம்பெற்ற வுள்ளத்திருந்தே ஈகை தோன்றுவது இயல்பு. மடிமையால் மடிந்திருப்பவன் எவ்வறத்தினைச் செய்ய இயலும்? மடிமையே உலகியல் அறத்திற்கு மாறுபட்டதன்றே?

> " தாளாண்மை யென்னும் தகைமைக்கண் தங்கிற்றே
> வேளாண்மை யென்னும் செருக்கு "

உலையா முயற்சிக் குறுதுணை எதுவரினும் கலங்காத நெஞ்சத் திட்பம். 'நன்முறையில் வினைசெய்வது என்கடன். அதன் பயனைப்பற்றி நினைப்பது எனக்குரியதன்று' என்ற எண்ணமுடைய தூயவுள்ளத்திற்கே அத்தகைய திட்பம் இயல்பாகும். அவர்க்கு இன்பம் துன்பம் இரண்டும் ஒன்றாகும்.

> " இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்பம் உறுதல் இலன் "

> " அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
> இடுக்கண் இடுக்கட் படும் "

> " இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
> துன்பம் உறுதல் இலன் "

பாலைநிலத்தைப் பால்வழிந்தோடும் மருதநிலமாக்குவது முயற்சி. பொருள் பலபடைத்து அறங்களைச்செய்து இன்ப வாழ்வினை வாழச்செய்வது முயற்சி. சுருங்கச் சொல்லின் உலகில் ஒவ்வொரு அசைவும் முயற்சியின் விளைவேயாகும். மனிதனை மனிதனாக்குவது முயற்சி. மனிதன் சோம்பியிருப்பானாகில், அவனது உள்ளத்திலே தீய எண்ணங்கள்

புகும். அதன் விளைவால் அவன் சமுதாயத்திற்கே கேடாக அமைகின்றான். முயற்சியுடையவனே உயர்ந்த எண்ணங்களுடன் சிறந்து விளங்குகின்றான். ஆகவே, முயற்சியே இறைவன் இவ்வுலகிற் களித்த அமுத சஞ்சீவி எனக் கூறிக்கொண்டு என் சிற்றுரையை நிறுத்திக் கொள்கிறேன்.

---

## 23. ஜனநாயகம்

[டி. ஆர் கல்யாணசுந்தரம் எம். ஏ.]

உலகில் மனிதன், என்று தனி வாழ்வை வெறுத்துக் கூட்டு வாழ்வை விரும்பினனோ அன்றே **ஜனநாயகம்** தோன்றியது. ஆனல் ஜனநாயகம் என்ற பெயர் வழங்கப்படவில்லை. ஜனநாயகத் தத்துவத்தை மக்கள், குழுவினராக வாழ்ந்த மிகப் பழங்காலத்திலேயே அனுஷ்டித்து வந்தனர். ஆதலின் அது, மனித சமூக வாழ்வின் இயற்கை நியதி என்றேற்படுகிறது. இயற்கையில் எழுந்த இந்நியதி மனிதனின் பேராசையாலும், அடக்கியாளும் ஆர்வத்தாலும் சிறிது காலம் மனித சமூகத்தினின்றே மறைந்து விட்டது. பின்னர் எதேச்சாதிகாரம் எங்கும் தலைவிரித்தாடத் தொடங்கியது. மக்கள் வாழ்வு துன்பமயமாகியது. எதேச்சாதிகாரம் ஒழியவும், துன்பம் தொலையவும் அறிஞர்கள் இடைவிடாது சிந்தித்ததன் பயனக மக்கள் விடுதலைப் போராட்டம் தொடங்கிற்று. இந்த விடுதலைப் போராட்டத்தின் குறிக்கோள், அரசியல் அதிகாரம் ஒரு தனி மனிதனிடத்தோ, ஒரு சிறு பான்மையினரிடத்தோ இருப்பதை விடுத்துப் பெரும்பான்மையான சாமானிய மக்கள் கைக்கு மாறுவதேயாகும். ஜனநாயகம் என்பது "**மக்களால் மக்கள் நன்மைக்காக நடத்தப்படும் மக்களுடைய அரசியலாகும்**"

இனி ஜனநாயகத்தின் பிறப்பு, மறைவு, மறுமலர்ச்சி, வளர்ச்சி இவற்றைச் சிறிது விரிவாக ஆராய்வோம். முதன் முதலில் மக்கள் தனித்தனியாக வாழ்ந்து வந்தனர். பிறகு தற்காப்பின் பொருட்டுக் கூடி வாழத் தலைப்பட்டனர். சுற்றுப்புறத்தைக் கண்டு மனிதன் உள்ளத்தில் தோன்றிய

அவநம்பிக்கையும் அச்சமுமே தற்காப்பிற்கு அவசியமாயின. முற்கால மனிதன் வியக்கத்தக்க உடலுரம் பெற்றிருந்தான். ஆனல் அவனது உள்ளம் நம்பத்தகாத அளவிற்கு வலிமை இழந்திருந்தது. மனிதன் இயற்கையின் பலவேறுபட்ட சக்திகளைக் கண்டும் அஞ்சியிருந்தான். கடல் என்ருல் கலக்கம். இடி என்ருல் நடுக்கம். இவ்வச்சத்தின் விளைவாகத் தோன்றியதே கூட்டு வாழ்வு. இக்கூட்டு வாழ்வே மனித சமூக சரித்திரத்தில் குழுக்களைத் தோற்றுவித்தது.

குழுவில் வாழும் எந்த மனிதனுக்கும் தனிச்சொத்தென்பது கிடையாது. அவ்வாறே தனக்கே உரியதான தனித்தொழிலும் கிடையாது. எல்லோரும் எல்லாத் தொழிலும் செய்யலாம். தொழிலின் பயனை யாதொரு வேறுபாடுமின்றி, தேவைக்குத் தகுந்தவாறு யாரும் அடையலாம். இதுவே மனித வர்க்கத்தின் லக்ஷிய வாழ்வு. இன்றைய அரசியல் ஞானிகள் இவ்வாழ்வையே பெரிதும் விரும்பிப் பல பெயரிட்டு அழைக்கின்றனர்.

ஜாதிமத பேதமற்ற பூரண சுதந்திர வாழ்வு, மனிதன் குழுவாகக் கூடி வாழ்ந்த காலத்தில் நனவாக இருந்தது. எஜமானன் என்ருவது ஏவல்புரிவோன் என்றுவது வேறுபாடு கிடையாது. உயர்ந்தோர் தாழ்ந்தோர், அரசன் ஆண்டி, கற்ருர் கல்லார் என்ற வேறுபாடுகள் இல்லாத இச்சமுதாய வாழ்வு சீரிய சுவர்க்க வாழ்வு என்பதில் சிறிதும் ஐயமின்று. இதுவே ஆதி ஜனநாயகம். ஜனநாயகமே சமூக வாழ்வின் முதல் தோற்றம்.

உலகில் ஆங்காங்கு இவ்விதக் குழுக்கள் பல தோன்றின. இவை ஓரிடத்தில் நிலைபெருமல் வசதியான இடமும் வளப்பமான உணவும் தேடித்திரிந்தன. இவ்வாறு செல்லும் வழியில் முன்னமேயிருந்த குழுக்கள் புதிதாக வரும் குழுக்களை எதிர்க்கத்தலைப்பட்டன. போரும், வெற்றி தோல்விகளும் சமூக வாழ்வைச் சிக்கலாக்கின. சமூக வாழ்வில் அமைதி குலைந்தது. போராட்டம் மிகுந்தது. சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் தோன்றின. இவற்றைச் சரிவரநிர்வகிக்க ஒரு தலைவன் தேவையாய் இருந்தது.

தொழில்கள் வேறுபடுத்தப்பட்டன. போரிடுவோர், உணவு உற்பத்தியாளர், போர்க்கருவி செய்வோர், ஏவல் புரிவோர், இவர் நலனுக்காகப் பூசைகள் புரிவோர் எனச் சமுதாயம் பலதரப்பட்டதாகப் பிரிந்தது. இப்பிரிவினர் யாவரும் தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்கின்றனரா என்று கவனிக்க ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். தலைவனைத் தேர்ந்தெடுக்கும்பொழுது சுதந்திரத்துடன் ஒருவன் அளிக்கும் வாக்கே, ஜனநாயகத்தின் ஆணிவேராகிய **வாக்குரிமை** எனப்படும்.

முற்கூறியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் மக்கள் விரும்பும் வரை அல்லது மறுதேர்தல் வரை தலைமைப்பதவி வகித்து வந்தான். போர் முதலிய அவசர காலங்களில் தலைவன் தனக்குப்பின் தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட ஒருவனைத் தலைவனாக நியமித்துவிட்டுச் செல்வதுமுண்டு. இந்த நியமனத்தை மக்களும் ஒப்பினர். இந்த நிலைமை காலப்போக்கில் வாரிசுரிமையாகப் பரிணமித்தது. வாரிசுரிமையும் தலைவன் குடும்பத்தில் வாழையடி வாழையாக வந்தது. இவ்விதம் சமூக நிர்வாகத் தலைமை ஒரு குடும்பத்தில் பாரம்பரியமாக வரஏற்பட்ட காலத்தில் தலைவன் முடிசூடி மன்னனானான். ஆரம்பத்தில் மன்னன் அதிகாரம் வரம்புக்குட்பட்டிருந்தது. அமைச்சர் மண்டலம் ஆலோசனை கூறிவந்தது. அந்நாளிலெல்லாம் மன்னன், தான் மக்களின் பிரதான ஊழியன் என்று கருதி, மக்கள் நலனில் கண்ணுங் கருத்துமாக இருந்து அரசுபுரிந்து வந்தான். முடியாட்சி உலகெங்கும் போற்றப்பட்டு வந்தது. நம் பாரதநாட்டிலோ முடியாட்சி 'ராமராஜ்யம்' என்று பாமரரும் புகழ்ந்து கூறும் வண்ணம் சீரும் சிறப்பும் எய்தியது.

மாறுதல் உலக இயற்கை. வளர்ச்சி இயற்கை நியதி. மாறுதல் இன்றேல் வளர்ச்சியும் இல்லை. அறிவும் ஆற்றலும் படைத்த அரசர்கள் அதிகாரம் யாவும் தாமே கைக்கொண்டனர். அரசு மக்களாலளிக்கப்பட்டது என்பதை மறந்து தெய்விக உரிமை என்ற சித்தாந்தத்தைத் தோற்றுவித்தனர். இதனைச் சரித்திரப் பிரசித்தி எய்தச் செய்தவன் பிரான்சு தேசத்து அரசனான பதினான்காம் லூயி மன்னன் என்பது சரித்திரம் கற்றவர் யாவரும் அறிந்ததே.

இக்கொள்கை அறிவும் ஆற்றலும் அற்ற மன்னர்கள் கையில் கொடுங்கோன்மையாக மாறியது. நாடெங்கும் வறுமையும் நோயும் மிகுந்தன. பஞ்சம் தலைவிரித்தாடியது. கொடுங்கோலரசன், மக்கள் நலிந்து வருவதைச் சிறிதும் கவனியாது களியாட்டங்களில் திளைத்தான்.

இக்கொடுங்கோன்மையால் விளையும் சமூகக் கேட்டினை அறிந்த அறிஞர் மனமுருகினர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று முழக்கிப் புரட்சி செய்தனர். மக்கள் வீறுகொண்டு திரண்டனர். முனிந்த மக்கள் முடியாட்சிக்கு முடிவுகட்டினர்.

மேனாடுகள் பலவற்றிலும் இன்று ஜனநாயக ரீதியிலேயே அரசியல் நடைபெறுகின்றது. ஆனால் இந்நாடுகள் நடை முறையில் சிறிது சிறிது வேறுபடுகின்றன. இங்கிலாந்தில் முடியாட்சி பெயரளவிலிருக்கிறது. அதிகாரம் முழுவதும் பார்லிமெண்டுக்குத்தான். இது ஒருவகை ஜனநாயகம். அமெரிக்காவில் நடைபெறுவது மற்றொரு வகை ஜனநாயகம். அங்கு ஜனாதிபதி, பொதுஜன வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப் படுகிறார். ரஷ்யாவில் நடைபெறுவதும் ஜனநாயகமே; ஆனால் இங்கிலாந்து அமெரிக்கா இவ்விரு நாடுகளில் நடைபெறும் ஜனநாயக அரசியலுக்கு முற்றிலும் மாறுபட்டது. ரஷ்யாவிலுள்ள பொருளாதார சுதந்திர அளவைக் குறிப்பிடும் பான்மையில் அங்கு நடைபெறும் ஜனநாயகம் பொதுவுடமை என்றழைக்கப்படுகிறது. இவ்வாறே, ஜனநாயகம் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களால் அழைக்கப் படுகின்றது.

ஜனநாயகத்தின் ஆணிவேர் வயதுவந்தவர்களின் வாக்குரிமை என்று முன்னரே கூறினோம். வயதுவந்தவர்களின் வாக்களிப்பால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு நாட்டின் நிர்வாகம் நடைபெறுகிறது. இப்பிரதிநிதித்வ முறையும் நாடுகள் தோறும் வேறுபட்டிருக்கின்றது. பிரதிநிதித்வ முறையால் பூரண ஜனநாயகம் சித்தித்து விட்டது என்று கூறமுடியாது.

ஜனப்பிரதிநிதிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். பதவி காலம் முடிந்த பின்

மீண்டும் தேர்தலுக்கு நிற்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு நிற்கும் பிரதிநிதி, தான் பதவிவகித்த காலத்தில் தன்னுடைய தொகுதிக்கும், நாட்டிற்கும் புரிந்த சேவையின் தராதரத்திற்குத் தக்கவாறு தேர்தலில் வெற்றியோ தோல்வியோ அடைய நேரிடுகிறது. தோல்வியினுல் அவரது அரசியல் அறிவும் அனுபவமும் மக்களுக்குப் பயன் படாமல் வீணுகின்றன. வெற்றியோ அதிகார மோகம் கொள்ளச் செய்கிறது. பதவி மோகம் கொண்ட பிரதிநிதி சுயநல மொன்றிலேயே கருத்தைச் செலுத்துகின்ருன்.

ஒரு பிரதிநிதி முற்கூறிய புறக்கேடுகளை உண்மையான நாட்டுப் பற்ருலும் சேவையாலும் தவிர்ப்பானேயாயினும் அம்முறையில் உள்ள அக்கேடு தவிர்க்க முடியாததாகும். சாதாரணமாக ஒரு மனிதன் பிறமனிதர் உள்ளத்தை உள்ளபடி அறிதல் இயலாது. நாட்டின்முன் தோன்றும் ஒவ்வொரு பிரச்னையையும் மக்கள் எவ்விதம் தீர்க்க விரும்புகிருர்கள் என்பதை ஜனப்பிரதிநிதி தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை.

மேலும் ஒரு பிரதிநிதி எல்லா விஷயத்திலும் போறிவு (Expert Knowledge) பெற்றிருக்க முடியும் என்று கூற முடியாது. பல விஷயங்களைப் பற்றியும் சாமானிய ஞானமே அடைந்திருக்கக்கூடும். எந்த விஷயத்தைப்பற்றும் ஐயந்திரிபின்றி அறிந்து கொள்ளாத ஒரு பிரதிநிதி அவ்வவ்விஷயங்கள் தீர்மானத்திற்கு வரும்போது எவ்விதம் அவற்றைச் செவ்வனே ஆராய்ந்து முடிவு சொல்லக்கூடும். சுருங்கக் கூறுமிடத்து ஜனப்பிரதிநிதிகள் எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்யாது எல்லாக் காரியங்களையும் குழப்பிவிடக்கூடும். இவர்கள் நாட்டில் அரசியல்வாதிகள் என்ற ஒரு தனி வகுப்பைத் தோற்றுவித்துவிட்டார்கள். இவர்கள் அரசியலையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டவர்கள். இவர்கள் நாட்டிற்கு விளைக்கும் அல்லலைப் பிரான்சு தேச சரித்திரத்தைக் கற்றவர்கள் நன்கு அறிவர். இவர்களின் கொடுமைகளினின்று நாட்டைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாத பாதுகாப்புகள் நான்காகும். அவை: மக்களுக்கு வாக்குச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், சேர்ந்து வாழும் பண்பு, கலாசார சுதந்திரம் என்பனவாம்.

இவற்றில் எழுத்துச் சுதந்திரமே இன்றைய அரசியல் உலகில் முக்கிய இடம் வகிக்கிறது. இது பத்திரிகை உலகம். பத்திரிகைகள், உலக அபிப்பிராயத்தைப் பல வாயிலாகவும் வெளியிடுகின்றன. இவ்வபிப்பிராயங்களைப் போற்றி வளர்க்கும் நாட்டை ஜன நாயக நாடென்று துணிந்து கூறலாம்.

---

## 24. சகுந்தலை

**(கவிச்சக்கரவர்த்தி காளிதாசன் இயற்றிய சாகுந்தல நாடகத்தின் மொழி பெயர்ப்பு)**

[வித்வான் இராம. மீனாட்சிசுந்தரம்]

(ஏழாம் அங்கம்)

**பாத்திரங்கள் :**

துஷ்யந்தன் — அத்தினபுரத்தரசன்.

சகுந்தலை — கண்ணுவமுனிவரது வளர்ப்புப் புதல்வி. துஷ்யந்தனால் காந்தருவ முறையில் மணம் செய்துகொள்ளப்பெற்றுப் பின் கைவிடப் பெற்றவள்.

பரதன் — துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மகன்.

மாதலி — இந்திரன் தேரோட்டுபவன்.

மாரீசர் — ஒரு முனிவர்

அதிதி, தவமகளிர் முதலியோர்.

**இடம்:** முனிவர் உறைவிடம்.

**துஷ்யந்தன் :**—மாதலி! மாரீசருடைய உறைவிடம் எங்கேயுள்ளது.

**மாதலி :**—(கையால் சுட்டிக்காட்டி) அரசே! அதோ பாரும். மாரீசரது பத்தினியான அதிதியால் வளர்க்கப்பட்ட மந்தாரமரம் விளங்கும் உறைவிடம் அண்மையில் காட்சியளிக்கின்றது.

**துஷ்ய :**—(அதைப்பார்த்து) அமைதியில் விண்ணுலகினும் மேலானது. நான் அமிழ்தத்திலேயே மூழ்கியவனைப் போல் இன்புறுகின்றேன்.

**மாதலி** :—அரசே! முனிவர் உறைவிடம் அடைந்து விட்டோம். நீர் முனிவர் தவம்புரியும் இடத்தின் சிறப்பைக் கண்டு மகிழ்வீர்.

**துஷ்ய** :—மாதலி! வியப்பினை விளக்கும் இத்தவ நிலத்தை உவப்புடன் காண்பேன்.

**மாதலி** :—மன்னவரே! நான் உமது வரவை முனிவர்க் கறிவித்து வரும்வரை இவ்வசோக மரத்தடியில் நின்று கொண்டிருக்க வேண்டுகின்றேன். (போதல்) (திரை மறைவில்) 'அடங்காமல் உன் விருப்பம்போல் நடவாதே! என்ன? இவன் இச்சிறுவயதிலேயே தன் இயல்பின் படியே நடந்துகொண்டு வருகின்றான்.'

**துஷ்ய** :—(காதுகொடுத்துக் கேட்டு) தன்மனம்போன போக்கில் நடப்பதற்குத் தக்க இடம் இதுவன்று. யாரைக் குறித்தோ இவ்வசைமொழி கூறப்படுகின்றது. (ஓசை வந்த வழியே உற்று நோக்கி) ஆ! தவப்பெண்கள் இருவர் பின் தொடர ஓடிவரும் இச்சிறுவன் தன் இளமைக் கொவ்வாத வலிமையுடன் காணப்படுகின்றான். இவன் யாராயிருக்க லாம்?

**சிறுவன்** :—ஏ சிங்கக்குட்டியே! உன் வாயைத்திற. எத்தனை பற்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்க் கின்றேன்.

**தவப்பெண்** :—ஏ துடுக்குள்ள சிறுவனே! ஏன் இந்தச் சிறு குட்டியைத் துன்புறுத்துகின்றாய்? உன் குறும்புத் தனம் வளர்கிறதேயொழியக் குறைய வில்லையே. முனிவர் கள் உனக்குச் சர்வதமனன் என்று பெயரிட்டது பொருத்த மாகத்தான் இருக்கிறது.

**துஷ்ய** :—(தனக்குள்) என்ன காரணமோ? என் உள் ளம் இச்சிறுவனைக் கண்டதும் என்மகனைக் கண்டது போன்ற அன்புணர்ச்சியால் களிப்படைகின்றதே.

**தவப்** :— (துஷ்யந்தனைப் பார்த்து) ஐயா! இங்கே வாரும். இவன் சிறு பிள்ளை விளையாட்டினால் விடுவிக்க முடியாதபடி இறுகப் பிடித்துக்கொண்டிருக்கின்ற இச் சிங்கக்குட்டியை விடுவித்தருளும். இல்லையேல் இக்குட்டி இறந்துவிடும்.



F. V துஷ்யந்தன் பரதனைக்கண்டு வியத்தல் 

**துஷ்ய :—** (புன்முறுவலுடன்) குழந்தாய்! முனிகுமாரனே!

**தவப் :—**ஐயா! இவன் முனி குமாரன் அல்லன்.

**துஷ்ய :—** குழந்தாய்! குட்டியை விட்டுவிடு. (சிங்கக் குட்டியை விடுவித்தல்)

**தவப் :—**(இருவரையும் ஒருங்கே உற்றுநோக்கி) இவனுக்கும் உமக்கும் உள்ள உருவவொற்றுமை வியக்கத்தக்கதா யிருக்கின்றது. நீர் புதியவரா யிருந்தும் இவன் உமது சொற்படி நடந்தது கண்டு மகிழ்கின்றேன்.

**துஷ்ய :—** (சிறுவனைத் தழுவிக்கொண்டு) இவன் முனி குமாரன் அல்லனு? பின் இவன் யார்?

**தவப் :—**ஐயா! இவன் புருகுலத்தவன்.

**துஷ்ய :—**(தனக்குள்) நம் குலத்திற் பிறந்த இயற்கை தான் இவன்மேல் நம்முள்ளம் சென்றதன் காரணம் போலும்! மேலும் இத்தவமகளும் நம்மோடு இவனுக்கு ஒற்றுமை காண்பதற்கும் அதுவே காரணமோ? (வெளிப் படையாக) இச்சிறுவனது பெற்ருேர் யாவரோ?

**தவப் :—**கொண்ட மனைவியைப் புறக்கணித்த இவனது தந்தையின் பெயரைச் சொல்ல யார்தாம் விரும்புவர். கணவனுற் கைவிடப்பட்ட இவனது தாய் இத்தவவனத்தில் இவனைப் பெற்றனள்.

**துஷ்ய :—**(தனக்குள்) இவ்வரலாறு என்னையே குறிக்கின்றது. அஃதெங்ஙனமாயினும் இச்சிறுவனது அன்னையின் பெயரை வினவி அறிவோம். (இச்சமயம் மண்ணுற் செய்த மயிலுடன் அங்கு வந்த மற்ருெரு தவப்பெண்)

**தவப்பெண் ;—**சர்வதமனு! இச்சகுந்தப் பறவையின் அழகைப்பார்.

**சிறுவன் :—**(சிரித்து) எங்கே என் அம்மா?

**தவமகளிர் :—**(சிரித்து) பெயரொப்புமையால் ஏமாற்றப் பட்டாயல்லவா?

**துஷ்ய** :—(தனக்குள்) என்ன! இவனது தாய்க்குச் சகுந்தலை என்று பெயர்? இது உண்மையாயிருக்குமோ? ஒருகால் பெயரொப்புமையால் கானல்நீர் காண்பது போன்று நானும் ஏமாற்றம் அடைவேனோ?

**சிறுவன்** :—இந்த அழகிய மயில் எனக்கு வேண்டும். (அதைக் கையில் எடுக்கின்றான். அப்பொழுது கையில் காப்புநாண் இல்லாததைக் கண்ட தவப்பெண் கலக்கத்துடன்)

**தவப்** :—ஐயோ! இவனது கை மணிக்கட்டில் காப்பு நாண் காணப்படவில்லையே.

**துஷ்ய** :—பரபரப்படையாதீர்கள். இவன் சிங்கக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் அதோ நழுவி வீழ்ந்து கிடக்கின்றது. (எடுக்கிறான்)

**தவப்** :—ஐயா! அதைத் தொடவேண்டாம். (எடுத்த பிறகு தவமகளிர் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்தல்)

**துஷ்ய** :—என்னை ஏன் தடுத்தீர்கள்?

**தவப்** :—ஐயா! இது ஒரு தெய்வீக மூலிகை. இவனது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது மாரீச முனிவர் இதனை இவன் கையில் அணிவித்தார். இதனை இவனது தாயும் தந்தையும் தவிர வேறு யாரும் தொடக் கூடாது.

**துஷ்ய** :—தொட்டால் என்ன ஆகும்?

**தவப்** :—இது பாம்பாகிக் கடித்துவிடும். ஆனால் அது உம்மையொன்றும் செய்யாதிருப்பது எங்களுக்குப் பெரு வியப்பாக இருக்கிறது.

**துஷ்ய** :—நீங்கள் கூறுகிறபடி இது எப்பொழுதாவது உருவம் மாறியதைப் பார்த்திருக்கிறீர்களா?

**தவப்** :—எத்தனையோ முறைகள் பார்த்திருக்கிறோம்.

**துஷ்ய** :—(தனக்குள் மகிழ்ச்சியுடன்) என் ஆசை நிறைவேறுவது அணித்தாகி வருகிறதுபோலும்!

**சிறுவன்** :—என்னை விடும். நான் என் அம்மாவிடம் போகிறேன்.

**துஷ்ய** :—குழந்தாய்! நீ உன் அன்னையுடன் என்னையும் சேர்த்தே மகிழ்விக்கப் போகின்றாய்.

**சிறுவன்** :—நீர் என்ன என் தந்தை துஷ்யந்த மன்ன வரா? (சகுந்தலை வருகை)

**துஷ்ய** :—(சகுந்தலையைப்பார்த்து, தனக்குள்) இவள் தான் நாம் காட்டிற் காந்தருவமணம் புரிந்து பின் மறதி யால் துறந்த சகுந்தலையா? எவ்வளவு உருமாற்றம்?

**சகுந்தலை** :—(துஷ்யந்தனைப் பார்த்து, தனக்குள்) இவர் என் தலைவரைப்போல் இல்லையே. ஆனால் அவரது சாயல் இருக்கிறது.

**சிறுவன்** :—(தாயை அணுகி) அம்மா! இதோ பார். இவர் என்னைத் தன் குழந்தையென்று கட்டியணைக்கின்றார்.

**துஷ்ய** :—என் அன்பே! இப்பொழுது என் உண்மை நிலையை நீ அறியக்கூடுமாதலால் உனக்கு யான் இழைத்த கொடுமையை நீ மறந்துவிடுவாய்.

**சகுந்** :—(தனக்குள்) இவர் ஆருயிர்த் தலைவரேயாம். வாழ்க என் தலைவர். (கண்ணீர் விடுதல்)

**துஷ்ய** :—அணங்கே! நீ வாழ்த்தும் முன்னரே நான் வாழ்வுற்றேன். (சகுந்தலை துஷ்யந்தனை வணங்குதல்)

**சிறுவன்** :—அம்மா இவர் யார்?

**சகுந்** :—என் செல்வமே! உன் பெருமையே உனக்குச் சொல்லவில்லையா?

(மாரீசர் அதிதியுடன் அணையில் தோன்றுதல்)

**துஷ்ய** :—(அருகிற் சென்று) இந்திரன் ஏவலால் வந் துற்ற துஷ்யந்த மன்னன் தங்கள் இருவரையும் வணங்கு கின்றேன்.

**மாரீசர்** :—மகனே! நீ எஞ்ஞான்றும் நன்றாக வாழ்க.

**அதிதி** :—குழந்தாய்! நீ இணையற்ற வீரனாக விளங்குக.

**சகுந்** :—என் குழந்தையுடன் நான் உங்கள் இருவர் திருவடிகளையும் வணங்குகின்றேன்.

**மாரீசர்** :—சகுந்தலா! உன் கணவன் இந்திரன்போல் விளங்குவான். உன் மகனோ எவ்வுலகத்தும் நிகரற்ற பெரு வீரனாக விளங்குவான். நீ சீரும் சிறப்பும் பெற்று வாழ்க.

**அதிதி** :—குழந்தாய், கணவனுக்கினியளாய் வாழ்க. உன் மகனால் உன் குலம் விளங்கும்.

**துஷ்யந்தன்—சகுந்தலை** :—சீரிய தவச்செல்வரே! இடையில் நாங்கள் இவ்வாறு வருந்தியதன் காரணம் விளங்கவில்லையே.

**மாரீ** :—காட்டில் உன்னையே நினைத்துத் தன்னை மறந்த நிலையில் வீற்றிருந்த சகுந்தலையைக் கண்ட துருவாசர், தன்னை எள்ளியதாக எண்ணிச் சபித்ததனால் வந்த துன்பம் இது. ஆனால் அது மோதிரத்தைக் கண்டதும் ஒழிய வேண்டும். அதுவும் கைநழுவி வீழ்ந்துவிட்டது.

**துஷ்ய** :—நான் கொண்ட மனைவியைக் கைவிட்டதாகக் கூறும் பழிச்சொல்லினின்று இப்பொழுதுதான் விடுபட்டேன்.

**சகுந்** :—காரணமின்றி எனது தலைவர் என்னைத் துறக்கவில்லையென்பது எனது பெரும்பேறுதான். பிரிவால் வருந்திய நானும் அவ்வாறு சபிக்கப்பட்டதை அறிந்திலேன்.

**மாரீசர்** :—குழந்தாய்! நீ ஒழுகியமுறை உயர்ந்ததே. நீ உன் கணவனுடன் சேர்ந்து அறங்களைச்செய்க. உன் கணவன் தவத்தினர் சினமொழியால் உன்னைக் கைவிட்டதன்றித் தானாகக் கொடுமை செய்திலனாதலின், அறத்தின் ஒழுகுதற்குரிய உன் கணவனை வெகுளாதே.

(துஷ்யந்தனை நோக்கி) அரசே! சகுந்தலையின்கண் உனக்குப் புதல்வனாகப் பிறந்த இவன் எங்களால் பிறவிக்குரிய சடங்குகள் சிறப்புறச் செய்யப்பெற்றான். இவனை நீ மகிழ்ந்தேற்றுக் கொண்டாயல்லவா?

**துஷ்ய:**—முனிவர்பெருமானே! இவனலன்றோ என் குலம் தழைக்கப் போகின்றது?

**மாரீசன்:**—நன்று. இவனது இணையற்ற வலிமையால் எல்லோரும் இவனைச் சர்வதமனன் எனப் பெயரிட்டழைத்தனர். நிகரற்ற புகழ்மிக்க மன்னர் மன்னய் நீணிலம்புரக்க இருக்கும் இவனைப் பரதன் என்றழைப்பாய்.

**துஷ்ய :**—தவச்செல்வர் திருவருளால் என் குலம் வாழ்ந்தது.

**அதிதி :**—பெருமானே! சகுந்தலையின் விருப்பம் நிறைவேறியதைக் கண்ணுவர்க்கும் சொல்லியனுப்ப வேண்டும்.

**சகுந் :**—என் விருப்பமும் அதுவே.

**மாரீசன் :**—தவச்சிறப்புடையோர் தாஞகவே உணரக் கூடியவர்கள். ஆயினும் சொல்லியனுப்புவது நம் கடமை. (துஷ்யந்தனை நோக்கி) அரசே! நீ உன் மனைவியோடும் மைந்தனேடும் உன் நண்பனுகிய இந்திரன் தேரிலேயே நின் நகர்க்குச் செல்க.

**துஷ்ய :**—ஆணைப்படியே செய்வேன் வணக்கம்.

---

## 25. நற்குடி வாழ்க்கை

[எஸ். சின்னத்தம்பி பி. ஏ. எல். டி.]

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்பது அமுதவாக்கு. அதில் எத்தகைய பரந்த நோக்கமும் அன்பு கனிந்த வுள்ளமும் வெளியாகின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வுலகில் எல்லோரும் வாழவேண்டும்; இன்புற வாழ வேண்டும். அவ்வாறு வாழ வழி காட்டுவதே நற்குடி வாழ்க்கை.

மனித வாழ்வு இன்று எந்நிலையிலுள்ளது? பஞ்சமும், நோயும், போரும், பேரழிவும், கொள்ளையும், கொலையும், அச்சமும், அறிவின்மையும், பொய்யும், கொடுமையும், மலிந்த நரகவாழ்வாக இருக்கின்றது. இந்நிலை மாறி முன்னைய நன்னிலை பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? சுருக்கமாகச் சொன்னல் பலபல பேசுவதைக் காட்டிலும் செய்வது சிறிதாயினும் திருத்தமாகச் செய்ய

வேண்டும். இத்திருந்திய செயலே நற்குடி வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.

மனிதன் மிகப் பழங்காலத்திலேயே கூடி வாழும் முறையை அனுசரிக்கத் தொடங்கிவிட்டான். சமூக வாழ்வில் தனிமனிதன் தன்னலமொன்றையே கருதக்கூடாது. பலரும் ஒன்றுகூடியே பல தொழில்களையும் செய்து பயன் பெற வேண்டியிருப்பதால், ஒருவர்க்கொருவர் அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும். இவ்வாறு வாழவில்லையாயின் சமூகவாழ்வு சீர்குலைந்து போகும். இச்சமூக வாழ்வு சுமுகமாக நடைபெறுதற்குதவியாக இருப்பவரே நன்மக்களாவர்.

மனிதன், மனம் மொழி மெய்களில் தூய்மையுடையவனாக இருக்கவேண்டும். மனத்தின் தூய்மையாவது: எல்லோரையும் தன்னைப் போல் நேசிப்பதும், சுலநலவுணர்ச்சியின்மையும், அறங்களிற் பற்றும் அருளும் வாய்மையுமாகிய நல்லியல்புகளை யுடைமையுமேயாம். பேராசை கொண்டவன் உள்ளம் பேய்வாழும் அறையாகும். அவன் சமூகத்திற்கே விரோதியாவான்; அவன் தனக்கும் பிறர்க்கும் கேட்டை விளைப்பான்.

இன்மொழி பேசுதலே சொல்லின் தூய்மயாகும்.

“இன்சொலால் ஈர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்”

என்று நாயனர் கூறியபடி இன்சொல், அன்பையும் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கின்றது. சமூகத்தில் ஒற்றுமையுண்டாக்குவது இன்சொல்லே. இனிய பேச்சுக்களால் ஆகாதது எதுவும் இல்லை. ‘நன்மொழியால் நலமுண்டு’.

மெய்யின் தூய்மையாவது: ஒழுக்கத்துடன் வாழ்ந்து செய்வன திருந்தச் செய்தலாம். ஒருவன் நல்லவன் என்பது அவனவன் செய்கையாலேயே அறியப்படும். நல்லது செய்தால் நன்மை பெருகும். தீயது செய்தால் தீமையே பெருகும். சமுதாயம் நன்கு வாழ்ந்தால்தான் சமுதாயத்திலுள்ள தனிமனிதன் நன்றாக வாழமுடியும். ஆகவே, ஒவ்வொருவனும் சமுதாய நலம் கருதிய செயல்களையே செய்யவேண்டும்.

தன்னலமற்ற தொண்டனாக வாழவேண்டும். எச்சமயத்தும் யார்க்கும் நம்மாலியன்ற உதவிகளைச் செய்யத் தயாராயிருக்க வேண்டும். தொண்டு செய்வதில் சாதிசமய வேற்றுமைகளைக் கருதக்கூடாது. பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். உயிர்ப் பிராணிகளிடத்துக் கருணை காட்டவேண்டும். ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாக உழைக்க வேண்டும். தாய்மொழிப்பற்றும், தாய்நாட்டுப்பற்றும் கொள்ள வேண்டும். தாய்நாட்டு விடுதலைக்காகவும், சமூக நலத்துக்காகவும், கலை வளர்ச்சிக்காகவும் உழைத்த நம் நாட்டுப் பெரியோர்களின் வரலாறுகளையும், முன்னாளில் வாழ்ந்த அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள் முதலியவர்களுடைய வரலாறுகளையும் அறிந்துகொள்ளவேண்டும்.

தொண்டன், சேவையையே தன் முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும். செயலாற்றும் முறையிலேயே தான் அறிந்துகொள்ள வேண்டியவற்றை அறிந்துகொள்ளலாம். வாழ்விற் பயன்தராத புத்தகப் படிப்பைக் காட்டிலும், பணியாற்றுவதன் மூலமாக அறிந்து கொள்வதே நிலைத்திருக்கும்; பயனையும் விளைக்கும். உழைப்பே சமுதாயத்தின் ஆணிவேர். ஆகவே அதற்கேற்ற வகையில் கல்விமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் திறமைக்கும் உழைப்புக்குமே முதலிடம். தேசத்தில் பிரதான பதவிகளை வகிக்கப் போகும் அவர்களுக்கு இப்பொழுதே பயிற்சியளித்தல் வேண்டும். நிர்வாகத் திறமையும் பொறுப்புணர்ச்சியும் அவர்களுக்கு உண்டாகுமாறு கலாசாலையில் சில பணிகளை அவர்களே நிருவகிக்குமாறு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். ஒழுங்கு, வாசகசாலை, மாணவர் சங்கம் போன்றவைகளை அவர்களே அமைத்து நடத்தவேண்டும். ஆசிரியர் வழிகாட்டி யுதவிசெய்யலாம்.

மாணவர் தன்னம்பிக்கையும் பிறர் கருத்தை மதிக்கும் இயல்பும் பெறவேண்டும். இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்புற வேண்டும். இசை, நாடகம், கவிதை, சிற்பம், சித்திரம் போன்ற அழகுக் கலைகளை யுணர்ந்து, தாமும் மகிழ்ந்து, பிறர்க்கும் மகிழ்வூட்டுபவராகவும் இருத்தல் வேண்டும். சுகாதார நெறிகளின்படி தாமும் ஒழுகி,

பிறரையும் அவ்வாறே நல்வழியில் நடக்குமாறு நயமொழியால் தூண்டவும் வேண்டும்.

கலாசாலைகளில், சாரணரியக்கம் செஞ்சிலுவைச் சங்கம்போன்று ஒரு சிலருக்கே பயன்படுமாறு நடைபெற்று வரும் சங்கங்களும், மாணவர் கழகம், உடற்பயிற்சிக் கழகம் முதலியனவும் ஒன்றாக இணைக்கப்பட்டு மாணவர் நிர்வாகத்திலேயே விடப்படவேண்டும். வகுப்பறைகளில் அமைதி ஏற்படுத்துதல், கட்டுப்பாடு, ஒழுங்கு, ஆசிரியர் பாடபோதனைக்கு வேண்டியவற்றைத் தயார் செய்து வைத்தல் முதலியவற்றையும் மாணவர்களே நிர்வகிக்கலாம். மாணவர்களுள் கல்வி, சுத்தம், ஒழுங்கு முதலிய பலவிதக் குழுக்களையும் குழுத்தலைவர்களையும் அமைத்துப் பொறுப்பேற்கச் செய்வது சரியான முறையாகும்.

தளரா முயற்சியும், சலியாவுழைப்பும் செய்தற்கு வலிய நல்லுடல் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். நல்லுடல் பெறுதற்கு உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் ஒழுங்கான தேகப் பயிற்சிகளும் அவசியம். மாணவர் தேகப் பயிற்சிகளை ருசிகரமான விளையாட்டுக்கள் மூலம் பெறலாம்.

கிராமங்கள்தோறும் சென்று எழுத்தறிவில்லாதவர்க்கு எழுத்தறிவித்தல், சுகாதார நெறிகளைப் போதித்தல், நோயுற்றோர்க்கு இலவச வைத்திய உதவியளித்தல் முதலியன பொதுநலப் பணியில் ஈடுபடுவார் மேற்கொள்ளத்தக்க நன்முயற்சிகளாம்.

'தன்கையே தனக்குதவி' என்றபடி தமக்கு வேண்டிய எல்லாவற்றையும் தாமே செய்துகொள்வதுடன், பிறர்க்கும் உதவி செய்யப் பின் வாங்காதவரே சிறந்த நன்மக்களாவர். இம்முறையில் மாணவர்களை உழைப்பில் ஈடுபடச் செய்ய வேண்டும். இவ்வாறு மக்கள் உடலுரமும், உள்ளத்தூய்மையும், அறிவாற்றலும் பெற்று வினைத்திட்பமுடையராய் வாழ்வாராயின் நமது நாடொன்றோ—உலக மக்கட் சமுதாயமே உய்யும் வழிபெறும்.

# செய்யுள் குறிப்புரை

## I. வாழ்த்துப்பகுதி

### திருவாய்மொழி

இதனை இயற்றியவர் - நம்மாழ்வார். இவரது பிள்ளைப் பெயர் - மாறன். திருக்குறுங்குடியில் காரி என்பவருக்கு உடைய நங்கை யிடத்தில் திருவவதரித்தவர். இவருக்குச் சடகோபர், வகுளாபரணர், பராங்குசரெனப் பல பெயர்களுண்டு.

மயர்வு - மயக்கம், மதி - அறிவு, அயர்வு - அயர்ச்சி, அமரர் - தேவர், அதிபதி - முதல்வன், மனன் - மனம்.

### தேவாரம்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்ற மூவரும் சிவபெருமானைப் பாடிய பாடல்களின் தொகுதிக்குத் தேவாரம் என்று பெயர். இத்தேவாரத்தைப் பாடியவர் - திருநாவுக்கரசர் இவர் திருவாமூரில் வேளாளர் குடியில் பிறந்தவர். தந்தை - புகழனார். இவர் சிலகாலம் சமண சமயத்தைச் சார்ந்திருந்து மீண்டும் சைவசமயத்தைச் சார்ந்தவர். காலம்-7ம் நூற்றாண்டு. சமகாலத்தவர் - திருஞான சம்பந்தர், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள் முதலியோர்.

மால் - பெரிய, ஏழ்உலகும் - அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் என்ற ஏழ்உலகங்கள், இருசுடர் - சந்திர சூரியர், கண்பாவு நெற்றிக்கடவுள்-நெற்றிக்கண்ணையுடைய சிவன், கழல்-வீரகண்டையணிந்த திருவடி.

### திருவருட்பா

இதனை இயற்றியவர் - இராமலிங்க சுவாமிகள். இவர் சிதம்பரத்திற்கருகில் உள்ள மருதூரில் கருணீகர் குலத்தில் 1823-ல் பிறந்தவர். தந்தை - இராமையபிள்ளை. வடலூரில் தருமசாலை, ஞானசபை, சன்மார்க்க சங்கத் திருக்கோயில் முதலியன அமைத்தார்.

பேதம் - வேற்றுமை, உவக்கின்றூர் - மகிழ்கின்றூர், சித்து- அறிவு, வித்தகர் - அறிவு வடிவாயுள்ளவர், விழைந்தது - விரும்பியது.

பரம்பொருள் வாழ்த்து

இதனை இயற்றியவர் - தாயுமான சுவாமிகள். இவர் பாடிய பாடல்கள் - தாயுமானவர் பாடல் எனப்படும். இவர் வேதாரண்யத்தில், கேடிலியப்ப பிள்ளையின் இளைய குமாரர். இவர்குரு - மௌன தேசிகர். இவர் இறுதியில் துறவு பூண்டனர். காலம்- 150 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

மாயை - மாயம், இலக்கு - குறி, சச்சிதானந்தம்- உண்மையறிவானந்தம், தற்பரன் - சிவன்.

திருப்புகழ்

இதனை இயற்றியவர் - அருணகிரிநாதர். அருணகிரியில் இருந்தவர். வில்லிபுத்தூராழ்வாரை வாதில் வென்றவர். காலம் 15-ம் நூற்றூண்டு எனத்தெரிகிறது.

இருவினை-நல்வினை தீவினை, தரிசனை - காட்சி, சங்கப்புலவோன் - சங்கத்திலிருந்து தமிழாராய்ந்ததினுல் முருகன் சங்கப்புலவன் எனப்பட்டான், கனக சபை - பொன்னம்பலம்.

தமிழன்னை

இதனைப் பாடியவர் - சுத்தானந்த பாரதியார். இவர் தந்தை - ஜடாதரர். ஊர் - சிவகங்கை. இவருக்கு இசையிலும், பயிற்சியுண்டு-இவர் பல உரை நடைப்புத்தகங்கள் எழுதியிருக்கின்றூர். இளைஞருக்கு ஏற்ற இனிய பாடல்களும் பாடியிருக்கின்றூர்.

அரன் - சிவன், கலைச்செல்வி - கல்விச் செல்வமுடையாள், தென்னுடு - தமிழ்நாடு, கைத்தலம் - கையாகிய இடம், கதிர் - ஒளி, என்தாய் - எமது தாயே.

## II. அறவுரைப்பகுதி

திருக்குறள்

இந்நூல் கடைச்சங்க மருவிய பதினெண்கீழ்க் கணக்குநூல்களில் ஒன்று. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்ற பழமொழியால் இதன் பெருமை விளங்கும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்

பால், என மூன்று பால்களை யுடையது. ஆதலால் இதற்கு முப்பால் என்ற பெயர் உண்டு இந்நூலை இயற்றியவர் – திருவள்ளுவர். இவர் வரலாற்றை அறிந்துகொள்ளத்தக்க ஆதாரம் இல்லை. மதம் – துணிந்துரைக்க முடியவில்லை. காலம் – கடைச்சங்க காலம்.

1. வேண்டுதல் – விரும்புதல், வேண்டாமை – வெறுத்தல், இடும்பை – பிறவித்துன்பம்.
2. வான் – மழை, ஒழுக்கு – ஒழுக்கம்.
3. அந்தணர் – முனிவர், அறவோர் – துறவறத்தின் நிற்பவர், செந்தண்மை – கருணை.
4. அன்று – இறக்கும் நாள், பொன்றுங்கால் – உயிர் பிரியுங் காலம், பொன்ரு – அழியாத.
5. நோற்பார் – தவம் செய்வோர்.
6. தகை – பெருமை, சோர்வு – தளர்ச்சி.
8. வன்பால் – வன்னிலம், வற்றல் மரம் – உலர்ந்த மரம்.
9. இனைத்துணைத்து – இவ்வளவினது, வேள்வி – யாகம்.
10. ஈரம் – அன்பு, அளைஇ – கலந்து, படிறு – வஞ்சகம், செம்பொருள் – அறம்.
11. மாசு – குற்றம், கேண்மை – உறவு, துப்பு – உதவி.
12. இல்லல்ல – இல்லாதவையல்ல, கோடாமை – சாய்தல் இல்லாமை, சான்றோர் – அறிவால் நிறைந்தோர்.
13. ஒருமை – ஒரு பிறப்பு, ஐந்து – ஐம்பொறி, எழுமை – ஏழ்பிறப்பு, ஏமாப்பு – காவல்.
14. ஓல்கார் – சுருங்கார், உரவோர் – மனவலியுடையோர், ஏதம் – குற்றம், படுபாக்கு – உண்டாதல்.
15. மிகுதி – செருக்கு, மிக்கவை – தீயவை, தகுதி – பொறுமை.
16. அழுக்காறு – பொறாமை, ஒன்னார் – பகைவர்.
17. பொய்த்து – கண்டவிடத்துப்புகழ்ந்து, அறம் – அறநூல் ஆக்கம் – பயன்.
19. அடல் வேண்டாதான் – வருத்துதலை வேண்டாதவன்.
20. ஒப்புரவு – உபகாரம் செய்தல், கோள்தக்கது – கொள்ளத்தக்கது.
21. எவ்வம் – இழிவு. 22. வசை – இகழ், இசை – புகழ்.

23. மன்னுயிர் - உடம்போடு நிலைபெற்ற உயிர்.
24. நோன்றல் - பொறுத்தல், உறுகண் - துன்பம்.
25. படிறு - வஞ்சகம், பூதங்கள் - பஞ்சபூதங்கள், நகும் - சிரிக்கும்.
27. வெகுளி - கோபம். 28. போற்று - காவாத.
30. சாக்காடு - மரணம்.
31. பற்றற்றான் - இறைவன், பற்று - முத்திவழி.
32. மெய்ப்பொருள் - உண்மைப் பொருள்.
33. தூஉய்மை - பரிசுத்தம், அவா - ஆசை, வாஅய்மை - உண்மை.
34. வகுத்தான்-கடவுள், துய்த்தல் - அனுபவித்தல், தொகுத்தார் - சேர்த்தார்.
35. அளி - கருணை, ஓம்பல் - பேணல்.
36. சாந்துணையும் - இறக்குமளவும்.
38. எவ்வது - எவ்வளவு.
39. வியவற்க - மதியாதிருக்க, நன்றி - நன்மை.
40. சூழ்வார் - சூழ்ந்திருப்போர், (அமைச்சர் முதலியவர்) சூழ்ந்து - ஆராய்ந்து.
41. ஊங்கு - மிகுந்த, துணை - சகாயம், அல்லல் - துன்பம்.
43. அமைந்து - பொருந்தி, அளவு - வலியளவு, வியந்தான் - தன்னை மெச்சினவன்.
45. எள்ளற்க - இகழாதிருக்க. 46. தேறல் - தெளிதல்.
48. பொச்சாப்பு - மறதி, நிரப்பு - வறுமை.
49. முறை - செங்கோல், முட்டா - தவறாமல்.
50. சூழ் - பொருள், சூழாது - எண்ணாது.
51. ஓச்சி - செலுத்தி, ஆக்கம் - செல்வம்.
52. கருமம் - செயல், கண்ணோடவல்லார் - கண்ணோட்டம் செய்ய வல்லார்.
53. ஒற்று - ஒற்றர், ஒற்றி - வேவுபார்த்து.
54. தள்ளினும் - கைகூடாது போயினும்.
55. குன்றா - மழுங்கா, மடி - சோம்பல், ஊர - நெருங்க.
56. ஊழ் - விதி, உப்பக்கம் - புறம், உஞற்றுபவர் - முயல்வோர்.
57. மேல் - மேலோர், இலக்கம் - குறி, இடும்பை - துன்பம், கையாறு - துன்பம்.

58. மதிநுட்பம் - புத்திநுட்பம். 59. இகல் - மாறுபாடு.
60. நடுக்கு - அசைவு, இழி - பழி.
61. திட்பம் - வலிமை. 62. இருள் - மயக்கம்.
63. கண் அஞ்சான் - கோபக்கண்ணுக்கு அஞ்சான்.
64. தீக்காய்வார் - குளிர் காய்வார், இகல் - வலி.
65. நுண்ணியம் - நுட்ப அறிவுடையேம்.
67. மிக்கார் - மிகுந்தவர். 68. தலை - முதன்மை.
69. மாட்சி - பெருமை.
71. அடல் தகை-போர்செய்யும் திறம், பாடு-பெருமை.
72 புரந்தார் - ஆண்டவர், கோட்டக்கது - கொள்ளத்தக்கது.
73. ஆறு - நல்வழி, உய்த்து - செலுத்தி.
74. அடுங்காலை - கொல்லுங்காலை.
75. கெழுதகைமை - உரிமை. 77. சாப்புல்ல - சாம்படிக்கு.
79. காணுதான் - பிறரால் அறியும் தன்மை யில்லாதவனை, காட்டுவான் - அறிவிக்கப் புகுவோன், தான் காணுன் - தான் அறியாதவனுவான், தான் கண்டவாறு - தான் அறிந்த விதத்தால்.
80. இகலான் - மாறுபட்டால், நகலான் - நட்பால், நன்னயம் - நல்ல நீதி.
81. மாணுத - தகுதியில்லாத, மன்ற - நிச்சயம்.
82. முள்மரம் - முள்ளையுடைய மரம், களையுநர் - வெட்டுவோர், காழ்த்த - முற்றிய.
84. கூற்றத்தை - யமனை, விளித்தற்று - அழைத்தது போலுமாம், இன்னு - துன்பம்.
87. கழி - மிகுந்த, இரையான் - உணவு கொள்பவன்.
89. பீடு - பெருமை. 90. அற்றம் - அவமானம்.
91. துலையல்லார் - இழிந்தவர்.
93. நச்சப்படாதவன் - விரும்பப்படாதவன், நச்சுமரம்-எட்டி மரம், பழுத்தற்று - பழுத்ததுபோலும்.
95. கைதூவேன் - கையொழிவேன்.
96. கட்டபின் - களைபிடுங்கியபின்.
97. நெருநல் - நேற்று, நிரப்பு - வறுமை.
98. கரத்தல் - ஒளித்தல். 99. புற்கை - கூழ், தாள் - முயற்சி
100. கயவர் - கீழோர்.

## நாலடியார்

இது ஒரு தொகை நூல். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சேர்ந்தது. இந்நூல் தோன்றியவரலாறு - ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எண்ணாயிரம் சமணர்கள் பஞ்சத்தின் கொடுமையால் தம்நாடு விட்டுப் பாண்டிநாடு சென்றனர்; பாண்டியனால் ஆதரிக்கப்பட்டிருந்தனர். தங்கள் நாடு செழித்த பிறகு பாண்டியனிடத்தில், மீண்டு செல்ல உத்தரவுகேட்டும் அவன் மறுத்ததனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவை எழுதித் தமது இருக்கையில் வைத்து விட்டு நள்ளிரவில் புறப்பட்டுச் சென்று விட்டனர். அடுத்த நாள் அவையாவும் வைகையில் எறியப்பட, நானூறு ஏடுகள்மட்டும் நீரை எதிர்த்துச் சென்றன. இவற்றின் தொகையே நாலடி என வழங்கப்படுகின்றது. காலம் - கடைச்சங்க காலம்.

1. இன்று கொல் - இன்றே, பின்றை - பின்னே, ஒருவுமின் - நீக்குங்கள், ஒல்லும் - கூடிய, மாண்டார் - பெரியோர்.
2. நேர்த்து - சமானமாகக்கொண்டு, நிகரல்லார் - ஒப்பில்லாதவர், நீரல்ல - தன்மையில்லாதன, விழுமியோர் - பெரியோர், ஓர்த்து - ஆராய்ந்து, கிழ் - கீழோர்.
3. ஆ - பசுநிரை, குழக்கன்று - இளங்கன்று, பழவினை - முன்வினை, கிழவனை - உரியவனை.
4. வைப்புழி - வைக்கப்பட்ட இடத்தில், கோள் - கொள்ளப்படல், செறின் - கோபம் கொள்ளின், எச்சம் - எஞ்சியது, விச்சை - கல்வி.
5. புடை - பக்கம், கண் - இடம், ஞாலம் - பூமி, திங்கள் - சந்திரன், ஒப்புரவு - உபகாரம், ஒல்கார் - தளரார்.

## பழமொழி

நானூறு பழமொழிகளைக் கொண்டிருப்பதால் இந்நூல், பழமொழி நானூறு என்று சொல்லப்படும். இதனை இயற்றியவர்-முன்றுறை அரையர். இவர் முன்றுறை என்னும் காட்டுக்கு அரசராக இருந்தார். மதம் - சமணம், காலம் - கடைச்சங்க காலம். இந்நூலால் பண்டைய மக்களது பழக்கவழக்கங்களைக் கண்டறியலாம்.

1. ஆற்றவும் - மிகுதியும், வேற்று நாடு - அந்நிய நாடு, தமவே - தம்முடையனவே, ஆற்றுணா - கட்டுச்சோறு.

2. உரை முடிவு - சொல் முடிவு, முதுமக்கள் - கிழவர்கள், உவப்ப - மகிழ, சொல்லால் - அவர்கள் சொல்லைக் கொண்டே, முறை - நீதி, குலவிச்சை - குலத்தொழில்.

3. மாட்சி - பெருமை, பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி, சாந்தம் - சந்தனம்.

4. ஒற்கம் - வறுமை, நலியும் - வருத்தும்.

5. பொல்லாத - தீயன, பேதை - அறிவில்லான், நல்லாய் - நற்குணமுடையவளே, நுணல் - தவளை.

### சோமேசர் முதுமொழி வெண்பா

இந்நூல் சோமேசரை விளித்து, முதலிரண்டடிகளில் ஒரு கதையையும் பின்னிரண்டடிகளில் ஒவ்வொரு குறளையும்கொண்டு பாடப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் சிவஞானமுனிவர். இவர் திருநெல்வேலி பாபநாசத்திற்கருகில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவர். தந்தையார்-அம்பல ஆனந்தக்கூத்தர். தாயார்-மயிலம்மை. இவரது பிள்ளைத் திருநாமம் முக்களாலிங்கர். இவர் திருவாவடுதுறை சென்று தீக்ஷை பெற்று சிவஞான யோகிகள் எனப்பெயர் பெற்றார். இவர் இயற்றிய நூல்கள், தர்க்கசங்கிரகம், காஞ்சிபுராணம், சிவஞானபோதமா பாடியம், கலைசையந்தாதி முதலியன.

1. கரந்தும் - மறைத்தும், தோன்றல் - மைந்தன், ஆர்வலர்-அன்பர், பூசல்தரும் - அறியத்தூற்றும்.

2. யா - எவற்றை, நா - நாக்கு, சோகாப்பர் - துன்புறுவர், சொல்லிழுக்கு - சொற்குற்றம்.

3. தூய்தலா - தீய, ஒல்லா - கூடா, வழுக்கியும் - தவறியும்.

4. ஒட்டலன் - பகைவன், நமர் - நம்மவர், அடியார், மெய்ப்பொருளார் - மெய்ப்பொருள் நாயனர், ஒறுத்தார் - தண்டித்தார், பொன்றும் - அழியும்.

5. பிள்ளையார் - திருஞானசம்பந்தர், வைப்பு - மடம், மீனவன் - மீனக்கொடியுடைய பாண்டியன், வெப்பு நோய் - காய்ச்சல், முற்பகல் - பகல்முன், பகலின் முன்வேளை, பிற்பகல் - பகல்பின், பகலின் பிற்பாதி.

## III. கதைப்பகுதி

### கம்பராமாயணம்

கம்பராமாயணம் - பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்த

காண்டம் என ஆறு காண்டங்களையுடையது. இங்கு பாடமாயுள்ளது சுந்தரகாண்டம். சுந்தரனாகிய அநுமான் தூதுசென்று வந்த வரலாற்றைக் குறிப்பதால் இப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் கம்பர். திருவழுந்தூரில் பிறந்தவர். தந்தை ஆதித்தன். இவர் கம்பத்தடியில் கிடந்தமையால் கம்பன் எனப்பட்டார். குலம் - வேளாளர் குலம் - உவச்சர் குலம் என்பாரும் உளர். மதம் - வைணவம் என்று சொல்லப்படும். காலம் - 800 ஆண்டுகளுக்குமுன் என்பார். சிலர் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் என்பர். பாடிய நூல்கள் - கலைமகள் அந்தாதி, திருக்கைவழக்கம், ஏரெழுபது, சிலை எழுபது முதலியன.

1. மாடு - பக்கம், மணி - அழகிய, சிறுமை - துயரம், விலங்கல் - மலை.
2. இராகவன் - இரகு குலத்தில் பிறந்த ராமன், பூமழை - மலர்மாரி, ஓதி - கூந்தலையுடைய சீதை.
3. இமைத்தல் - திறத்தல், முகிழ்த்தல் - மூடுதல், ஒளியிலா-அழுக்குப் படிந்ததனால் அழகு குன்றிய, மழலையாள் - குதலைச் சொற்களையுடையாள், எயிறு - பல், குழாம் - கூட்டம்.
4. பரிதி - சூரியன், சுருதி நாயகன் - வேதங்களுக்குத் தலைவன், மாதிரம் - திசை.
5. இளவல் - இளையவன், இலக்குமணன், எரி - தீ, புகைவாள் - பெருமூச்செறிவாள்.
6. எருவைகட்கு அரசன் - கழுகுக்கு அரசனாகிய சடாயு, விம்மும் - பெருமூச்சுவிடுவாள்.
7. அடகு - வெற்றிலை, அழுந்தும் - வருந்தும், விருந்து - விருந்தினர், செல் - கரையான்.
8. திருப்பதம் - அரசாட்சியாகிய செல்வம், திரு - அரசுச் செல்வம், அலர்ந்த - மலர்ந்த, உன்னுவாள்-நினைவாள்.
9. அம்பி - படகு, கடாவிய - செலுத்திய, எம்பி - எனது தம்பி.
10. திரிசடை - விபீடணன் குமாரி, தூயை - தூயவளே, கட்டுரை - வாசகம்.
11. முனி - கோசிகன், முதல்வன் - ராமன், நாட்டம் - கண்கள், நல்குவாய் - சொல்வாய்.
12. வலம் துடித்தது - வலப்புறம் துடித்தது.

13. சோபனம் - சுபம், நன்மை.

14. ஆவிநாயகன் - உயிர்த்துணைவன்.

15. மயன் மடந்தை - மயன் குமாரியாகிய மண்டோதரி, ஓதி - கூந்தல்.

16. இயம்ப - சொல்ல, கனு - கனவு, கோளரி - சிங்கம், குன்று - மலை, உழுவை - புலி, குழு - கூட்டம்.

17. வரம்பு - எல்லை, மதகரி - மதயானை.

18. விளக்கு - விளக்கம், செய்யவள் - திருமகள், நாயகன் - இராவணன், திருமனை - அரண்மனை, கோயில் - கோவில்-அரண்மனை, மேயினள் - அடைந்தாள்.

19. உணர்த்தினை - எழுப்பினை, ஆயிழை - சீதை.

20. அண்ணல் - பெருமையுடையவன், விடை - காளை, அவ் விடை - அவ்விடத்தில், நொவ் - தளர்.

## நளவெண்பா

நளவெண்பாவை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் பொன் விளைந்த களத்தூரிற் பிறந்தவர். இவரது இயற் பெயர் தெரியவில்லை. இவர் மதுரையில் பாண்டியனது அவைப் புலவ ராக இருந்தார். சோழன் பாண்டியன் குமாரியை மணஞ் செய்து கொண்டபொழுது, புலவரும் சோணாடு சென்றார்; ஒட்டக்கூத்தர் பொறாமையால் சிறையிலடைபட்டிருந்து, பின் வெளிப்பட்டு, மள்ளுவநாடடைந்து, சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பட்டிருந்தார். அங்கிருந்தபோது இந் நூலை இயற்றினர். இவர்காலப் புலவர்கள், ஒட்டக்கூத்தர், ஔவை முதலியோர். காலம் 800 ஆண்டுகளுக்கு முன்.

1. வாக்கு - சொல், மறித்து - மீட்டு, ஆக்கை - உடல், பாகன் - தேரோட்டி.

2. சுயம்வரம் - ஒரு பெண் தனக்குரிய நாயகனைத் தானே தெரிந்தெடுத்தல். படை வேந்தன் - நளன்.

3. கோன் - அரசன், தென் - வண்டு, தார் - மாலை.

4. காதம் - பத்து மைல், தோலாமை - வெற்றி, மால் - மயக்கம், மா - குதிரை.

5. பாவலன் - புலவன், காவலன் - அரசன்.

6. காணு - கண்டு, நடுங்கா - நடுங்கி, அணையா - அணைத்து, வன்மம் - வைரம், மன் - அரசன்.

9. மாற்றம் - சொல், அடுமடையா - சமையல்காரனே, சிறு தொழில் - குற்றேவல், வாய்மை - உண்மை.

10. மடையர் - சமைப்போர், அறிவில்லார், முனிந்து - சினந்து.

12. கானகம் - காடு, காதலி - மனைவி, மான் - தேர்.

## ஆசிய ஜோதி

இந்நூலை இயற்றியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இவர் ஊர் திருவிதாங்கூர் நாட்டிலுள்ள சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூர். இவர் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டிருக்கின்றார். இவர் இயற்றியன மலரும் மாலையும் முதலியன. இங்குப் பாடமாயுள்ளது, பிள்ளையையிழந்த தாயின் துயரம்.

1. கடந்து - தாண்டி.

2. உற்ற உறவினர் - நெருங்கிய பந்துக்கள், உள்ளம் - மனம்.

4. நாவிய - தூசு போக்கிய, நாவுரி - ஓரளவை, சாவு - இறப்பு.

6. ஐயம் - பிச்சை, மனை - வீடு, வையகம் - பூமி, கான் - இடுகாடு.

## குசேலோபாக்கியானம்

இதனை இயற்றியவர் தேவராஜ பிள்ளை. இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களின் மாணவர். இவரது ஊர் வல்லூர். இவரது காலம் — கி. பி. 19-ம் நூற்றாண்டு. இது பாகவதத்தில் சொல்லப்படும் ஒரு கிளைக் கதை.

1. மகவு - பிள்ளை, பொருமி - தேம்பி, வீழா - வீழ்ந்து.

2. சேய் - பிள்ளை, வாக்கிலை - கொடுக்கவில்லை, செப்பும் - சொல்லும், ஆர்வம் - ஆவல், மிசைய - உண்ண, நயக்கும் - விரும்பும்.

3. வண்ணம் - வகை, கலாம் - சண்டை, கரம் - கை, வெரிந்புறம் - முதுகு, தைவந்து - தடவி, ஆற்றல் - தேறுதல்.

4. சிறான் - சிறுவன், அட்டார் - சமைத்தார், மனை, அகம் - வீடு, சொல்பொருள் - சொல்லுக்குப் பொருள், மடுத்தது - கூறியது.

5. அயின்ற - தின்ற, பக்கணம் - பலகாரம், சீறுதல் - கோபித்தல், ஈர்க்கும் - இழுக்கும், தேறுதல் - தெளிவு நோவாள் - வருந்துவாள்.

## பாஞ்சாலி சபதம்

இதனைப் பாடியவர்—சுப்பிரமணிய பாரதியார். இவர் எட்டையபுரம் சின்னச்சாமி ஐயரது புதல்வர். கவி பாடும் திறமை பற்றிப் பாரதியார் என்று அழைக்கப் பெற்ருர். இவர், நாட்டுப் பற்றைப் பெருக்கும் பாடல்களைத் தவிரக் குயிற்பாட்டு, கண்ணன் பாட்டு முதலிய கவிதைகளும், பல உரைநடை நூல்களும் எழுதியிருக்கிருர்.

1. சூதர் - சூதாடுவோர், தொண்டு மகளிர் - பணிப்பெண்கள், பணயம் - பந்தயம்.
3. சண்டன் - வலியோன்.
5. சோரம் - களவு.
6. சக்கரவர்த்தி - பேரரசன், பொக்கென - திடீரென.
8. பகடை - சூதாடு கருவி.

## வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

இப்பகுதி வில்லிபுத்தூராழ்வார் பாடிய பாரதத்தினின்றும் எடுக்கப்பட்டது. வில்லிபுத்தூராழ்வார், கொங்கு நாட்டில் சனியூரில் பிறந்தவர். இவர் தென்கலை வடகலை இரண்டையும் அறிந்தவர். சந்தப்பாப் பாடுவதில் வல்லவர். இவர் வரபதி ஆட்கொண்டான் என்ற கொங்கர் குலபதியால் ஆதரிக்கப்பட்டு வந்தார். இவர் காலம் — 500 ஆண்டுகட்கு முன்னுகும். இவர் மகனுர் வரந்தருவார். இவர் காலப் புலவர் அருணகிரி நாதர்.

1. ஓதை - ஒலி, மந்தராசலம் - மந்தரமலை, மாருதி - அநுமன், அசலம் - மலை.
2. கிரி - மலை, நாகம் - மலை, யானை; அரி - சிங்கம்.
3. அண்டர் - தேவர், தானவர் - தனுவினது மைந்தர், திசாமுகம் - திக்கு, தனையன் - பிள்ளை.
5. உரம் - வலி, கேளா - கேட்டு, இராகவன் - இரகு குலத்தவனுகிய ராமன், தரங்கம் - அலை, வாரிதி - கடல்.
6. நவின்றது - கூறியது, நகையா - நகைத்து, புன்தொழில் - அற்பத்தொழில்.

7. அரக்கர் நாயகன் - இராவணன், அழல் - தீ, புகல்வாய் - சொல்வாய்.
8. சாற்ற - கூற, போழ்து - சமயம்.
9. தாமம் - மாலே, நேமி - கடல், நரன் - விஜயன்.
10. கான்முளை - புதல்வன், சீகரம் - துளி.
11. வார்சிலே - நீண்ட வில், இகலோன் - வலியோன்.
12. நேரலர் - பகைவர், செரு - போர், குருதி - இரத்தம்.

## திருவாலவாயுடையார் திருவிளையாடல்

இந்நூலே இயற்றியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி. இவரது ஊர் பாண்டி நாட்டில் உள்ள செல்லிநகர். இவர் சைவர். இவருக்குத் தில்லை நம்பி எனவும் பெயர்.

1. உன்னல் - நினைத்தல், வழுதி - பாண்டியன், கோயில் - அரண்மனை, விடுதலம் - முற்றம்.
2. பேசு - சொல்லல், தகவு - பெருமை, கவர் - பற்றல், மாருதம் - காற்று, ஆசு - குற்றம்.
3. கிழி - முடிச்சு, ஞாலம் - நாட்டார், மாசு - குற்றம், தரளம் - முத்து, பத்தி - வரிசை, தூக்கினன் - தொங்கவிட்டான்.
4. வழுத்திய - போற்றிய, மறையோன் - தருமி, உரகம் - பாம்பு, குழை - காதணி, கொங்கு - தேன், தேர் - ஆராய்தல், கவிதை - கவி, கீர்த்தி - புகழ்.
5. நவிறி - சொல்வாய், உரித்தான - உரியவை.
6. வான் - சுவர்க்கம், கற்றை - தொகுதி, அல் - இருள்.
7. கவுரி - பார்வதி, கோலம் - வடிவம்.
8. புரம் - முப்புரம், சேவகன் - வீரன் (சிவன்)
9. மடம் - மடமை, சிற்புட்பகேசி - ஞானப்பூங்கோதை, குளிர்ந்த - இனிய.
10. வியப்ப - அதிசயிக்க, திரு - இலக்குமி.

## பெரிய புராணம்

இந்நூல் பெருமைபெற்ற சிவனடியார்களது வரலாற்றையுணர்த்துவது. 'பெரிய' என்பது பெருமைபெற்ற சிவனடியாரது பெருமையைக் குறிக்கும். 'புராணம்' என்னும் சொற்குப் பழமையுடையது என்பது பொருள். ஈண்டு, பழைய வரலாறு

என்னும் பொருட்டாய் நூலுக்குப் பெயராயிற்று. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது. இந்நூல் வழி நூலாகும்.

இதன் ஆசிரியர் சேக்கிழார். இவரது ஊர் குன்றத்தூர்; குலம் - வேளாளர் குலம். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர். இவர் அமைச்சரா யிருந்தபொழுது 'உத்தம சோழப் பல்லவன்' என்னும் பட்டம் பெற்றார்; இப்புராணத்தைப் பாடிய பின்னர் 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பெயரையும் பெற்றார். மதம் சைவம். இவரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

இப்பாடற்பகுதி முதற் காண்டத்தில் தடுத்தாட்கொண்ட புராணத்தில் உள்ளது.

1. மாலும் அயனுக்கும் அரியார் - வராகமாகச் சென்ற திருமாலுக்கும் அன்னவடிவாகச்சென்ற பிரமனுக்கும் காண்பதற்கரிய சிவன்.
2. கரந்த - மறைந்த, படம் - துகில், புனிதம் - சுத்தம், சழங்க - தளர.
3. மூப்பு - முதுமை, படிவம் - வடிவம், வைதிகம் - வேத சம்பந்தம், ஐயம் - சந்தேகம்.
4. நம்பி - உத்தம குணங்களை யுடையவன்.
5. மன்றல் - திருமணம், மடங்கல் - சிங்கம்.
6. எம்மான் - சிவன், அயன் - பிரமன்.
7. வெகுண்டார் - சினந்தார், நக்கான் - சிரித்தான்.
8. உத்தரியம் - மேலாடை, தந்தை தன் தந்தை - பாட்டன், ஆள் ஓலை - அடிமை யோலை.
9. பணி - வேலை, வேளை - சமயம், மாலயன் தொடராதான் - மாலும் அயனும் காணமுடியாத சிவன்.
10. அறைகழல் - ஒலிக்கின்ற காலணி யணிந்த பாதம்.
11. பிணங்குகின்ற - வாதிடுகின்ற, உழை - பக்கம்.
12. சேயது - தொலைவிலுள்ளது, ஆவணம் - ஓலை, நிரப்பினான் - உறுதி செய்தான்.
13. ஆட்சி - அனுபவம், காட்சி - நேரில் பார்த்தல், மூட்சி - வலி, மாட்சி - பெருமை.

14. மிடறு - கழுத்து, கரணத்தான் - ஓலை வாசிப்பவன்.

15. பித்தன் - சிவன், மரபு - குலம்.

16. திரு - சிறப்பு, பதி - ஊர்.

17. போதும் - செல்வோம், குழாம் - கூட்டம், திருவடுட்டுறை - சிவன்கோவில்.

18. இலங்கு - விளங்குகின்ற, உம்பர் - ஆகாயம்.

19. வேட்கை - விருப்பம், கூர - மிக, புலம் - அறிவு.

20. ஆன் - பசு, கரசரணுதி - கைகால் முதலிய.

21. அங்கணர் - சிவன், தொண்டர் - அடியார்.

## திருமந்திரம்

இந்நூலை இயற்றியவர் திருமூலர். இவர் ஒரு சித்தர். இவர் பூமியிலுள்ள தலங்களைச் சேவித்துக்கொண்டு வரும் வழியில் மூலன் என்னும் இடையன் உயிர் நீங்கக் கண்ட அவனது ஆனிரைகள் எல்லாம் வருந்துவதைக் கண்டு, அவனுடலில் புகுந்து பசுக்களின் துயரத்தைப் போக்கி மாலையில் அவைகளை வீட்டிற் புகுத்தினர். பின் யாவராலும் திருமூலர் என்றழைக்கப்பட்டார். இவர் பாடிய பாடல்கள் 3000 எனப்படும்.

1. கான் - காடு, கடி - மணம், ஊன் - உடம்பு, உணர்பவர் - அறிபவர்.

2. இழுக்கு - குறைவு, உறு பொருள் - தங்கிய பொருள் (பரமான்மா), உத்தமன் - இறைவன், ஓம்புகின்றேன் - பாதுகாக்கின்றேன்.

## மனோன்மணீயம்

இந்நூலை இயற்றியவர் - சுந்தரம் பிள்ளை, எம். ஏ. இவரது ஊர் ஆலப்புழை. இவர் பெருமாள் பிள்ளையின் குமாரர். மதம் - சைவம். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவ நூல் போதகாசிரியராக விளங்கியவர். இவரது காலம் கி. பி. 19-ம் நூற்றுண்டாகும்.

1-10. மதிகுலம் - சந்திரகுலம், வதுவை - மணம், ஐயிர்க்கும் - சந்தேகிக்கும், உஞற்றுவன் - செய்வன், எமாப்பு - செருக்கு.

11-20. காய்வன் - கோபிப்பன், பரல் - கல், உரியோர் - உரிமை பூண்டவர், உன்னுன் - நினையான், கடிநகர் - காவலையுடைய நகர்.

21-30. இணை - ஒப்பு, ஈறு - முடிவு, உரன் - வலிமை, வயின் - இடம், மலையன் - மலைநாட்டரசனாகிய சேரன்.

31-40. நாடுவன் - தேடுவன், இயைந்த - பொருந்திய.

41-59. செப்பு - சொல்லு, வெருவலை - அஞ்சாதே, பொருநை - தாம்பிரபரணி, பொருநைத் துறைவன் - பாண்டியன்.

## இரட்சணிய யாத்திரிகம்

இரட்சணிய யாத்திரிகம் என்பதற்கு ஆத்மாவைக் காத்தலுக்காகச்செய்த பிரயாணம் என்பது பொருள். இந்நூல் ஐந்து பருவங்களையுடையது. பருவத்தின் உட்பிரிவுக்குப் படலம் என்று பெயர். இதனை இயற்றியவர் கிருஷ்ணபிள்ளை என்பவர்.

1. அமலன் - தூயன், மறுதலிப்பை - மறுப்பை.
2. தற்பரன் - ஏசு, மறி - செம்மறியாடு.
3. நுகரேன் - பருகேன், தந்தை இராச்சியம் - பரலோக இராச்சியம்.
4. கீதம் - பாடல்.

## மணிமேகலை

இந்நூல் தமிழில் வழங்கும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. மற்றவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பன. மணிமேகலையின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார். இவர் ஊர் மதுரை என்றும், சீத்தலை என்றும் கூறுவர். கூலங்களை வியாபாரம் செய்தமையால் கூலவாணிகன் எனப்பட்டார். மதம் - பௌத்தம். சமகாலப் புலவர் - இளங்கோ அடிகள். அரசர் - செங்குட்டுவன். காலம் - செங்குட்டுவன் ஆண்ட காலம்.

1-10. பீடிகை - புத்த பீடம், காதை - கதைபொதிந்த பாட்டு, மருள் - அஞ்ஞானம், ஈண்டி - செறிந்து, அரவம் - ஒலி, அலத்தகம் - செம்பஞ்சு, சீறடி - சிற்றடி, பெருந்தேவி - பட்டத்தரசி.

11-20. நேரிழை - பெண், ஞாயிறு - சூரியன், பராவு - துதித்தல், எட்டிருநாள் - 16-ம் நாள், திட்டிவிடம் - திட்டிவிடம் என்னும் பாம்பு, சேயிழை - பெண் (இலக்குமி).

21-27 தவா - வழுவாத, களி - களிப்பு, மூதூர் - பழயங்கரம், பதி - நகரம், பிறவிப்பிணி மருத்துவன் - பிறவிப் பிணியை ஒழிக்கும் மருத்துவனுகிய புத்தன்.

சிலப்பதிகாரம்

இதுவும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. கற்புத் தெய்வமாகிய கண்ணகி வரலாற்றைக் கூறுவது. இதனை இயற்றியவர் இளங்கோஅடிகள்; சேரநாட்டையாண்ட சேரலாதன் புதல்வர்; செங்குட்டுவன் தம்பி; இளமையிலே துறவு பூண்டதனுல் இப் பெயர் பெற்ருர். மதம் - சமணம். சைவம் என்பாரும் உளர். காலம் செங்குட்டுவன் ஆண்ட காலம்.

1-10. மாதவத்தாட்டி - கவுந்தி, நியமம் - கோயில், வறுமொழி - பயனற்றசொல், நோற்று - விரதம் இருந்து, நொசிதவம் - நுண்ணியதவம்.

11-20. பரிபுலம்பினர் - வருந்தினர், உடன்வயிற்ருேர்கள் - ஒரு வயிற்றிற் பிறந்தோர், எள்ளுநர் - இகழ்ந்தனர்.

21-26. நம்பி - உத்தமகுணங்களையுடையான், உய்திக்காலம் - நற்காலம், மதியம் - மாதம்.

## IV. வருணனைப்பகுதி

### தாமிரவர்ணி

இதன் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, எம். ஏ. அவர்கள். இது மனோன்மணீயத்தில் வரும் வருணனைப் பகுதி.

மலையம் - பொதியில், வேழம் - யானை, மருப்பு - கொம்பு, காழ் - வயிரம், சந்தனுடவி - சந்தனமரங்கள் நிறைந்த காடு, - சாடி - மோதி, குங்குமம்-குங்குமமரம், பணை-வயல், பொழில்-சோலை, உறையுள் - இடம்.

### திருக்குற்ருலவளம்

இதன் ஆசிரியர்-திரிகூட ராசப்பக்கவிராயர். இவரது ஊர்-குற்ருலத்தையடுத்துள்ள மேலகரம். வேளாளர் மரபு - மதம் சைவம். காலம் - பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதி. இயற்றிய பிற நூல்கள் - திருக்குற்ருலப் புராணம், குற்ருல மாலை, குற்ருலச் சிலேடை வெண்பா முதலிய பலவாம்.

சூல் - கரு, கிண்கிணி - ஒருவகைக் காலணி.

### நாஞ்சிநாட்டுவளம்

இதனாசிரியர் பெயர் வரலாறு முதலியன தெரியவில்லை. இவரது மதம் கிருஸ்துவ மதம் எனத் தோன்றுகிறது. காலம்- பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி.

அறல் - மணல், வாள் - ஒளி, அருகு - பக்கம், புயல் - மேகம், பொழில் - சோலை, ஏந்தல் - புகழுடையவன்.

### அழகு

இதனைப் பாடியவர் சுத்தானந்த பாரதியார்.

கதிர் - சூரியனது ஒளி, சிந்தனை - எண்ணம், பந்தம் - பாசம், பொலிவு - அழகு, மோனம் - மௌனம்.

### சரத்காலம்

இதனாசிரியர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இவரது ஊர் - திருவாங்கூரைச் சேர்ந்த சுசீந்திரத்தை யடுத்த தேரூர். 1876-ஆம் ஆண்டில் பிறந்தவர். தந்தை - சிவதாணுப்பிள்ளை. இவர் பலகாலம் ஆசிரியப்பணி புரிந்து இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். இவரது பாடல் தொகுதி 'மலரும்-மாலையும்' என வழங்கப்படும்.

சரத்காலம் - மழைக்காலம், மரகதம் - பசுமை, புலன் - வயல், பருதி - சூரியன், தாரா - ஒரு பறவை.

## V. பல்சுவைப்பகுதி

### புறநானூறு

இது புறத்தைப்பற்றிய நானூறு பாக்களையுடையது; தொகை நூல்களில் ஒன்று. இது புறம், புறப்பாட்டு என்றும் சொல்லப் படும். இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் பலர். பலகாலத்த வர்; பலசாதியினர்.

1. இயைவது-கிடைப்பது தமியர்-தனிப்பட்டவர், முனிவு - சினம், அஞ்சுவது - அஞ்சத்தக்க பழிபாவங்கள், கொள்ளலர் - பெறமாட்டார், அயர்விலர் - சோர்வு இலர், மாட்சி - பெருமை, நோல் - உதவிய, தாள் - முயற்சி, முயலுநர் - முயலுவோர்.

2. துகிர் - பவளம், காமர் - அழகிய, மணி - ரத்தினம், முத்து, தொடை - மாலை, சான்றோர் - மேலோர், சாலார் - நற்குணம் இல்லாதவர், - பாலர் - பக்கத்தவர்,

## மடக்கு

இதன் ஆசிரியர் கம்பர். இச்செய்யுள் கம்பராமாயணத்தில் உள்ளது.

அஞ்சு வர்ணத்தின் - ஐந்து வர்ணத்தையுடைய, அரவு எல்லாம் - பாம்பெல்லாம், அஞ்சு - அஞ்சுகின்ற, உவணத்தின் - கருடனின், அம் - அழகிய, சுவர்ணம் - பொன், உத்தரியம் - மேலாடை, அஞ்சு-யாடும் அஞ்சும்படியான, அலை -திரை, ஆடும் - பொருந்திய,வள் - வளம் பொருந்திய, நத்தின் - நத்தையில் பிறக்கும், முத்து - முத்துக்கள்.

## அற்புதத்திருவந்தாதி

இதனை இயற்றியவர்-காரைக்காலம்மையார். இவர் காரைக்காலில் தனதத்தன் மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர்-புனிதவதியார். இவரது கணவன் - பரமதத்தன். இவர் தமது கணவனால் தெய்வத்தன்மையுடையாள் என்று பாரர்ட்டிக் கைவிடப்பட்டதால் சிவனை வேண்டிப் பேய்வடிவம் பெற்றார். இவர் பாடிய நூல்கள் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை முதலியன.

1. அறிவான் - அறிபவன், மெய்ப்பொருள் - உண்மைப் பொருள், சுடர் - தீ, பார் - பூமி, ஆகாசம் - வானம்.
2. இருசுடர் - சந்திர சூரியர், ஆகாசம் - வானம், புவி - பூமி, புனல்-நீர், காற்று-வாயுவு, இயமானன் - இறைவன், அட்டமூர்த்தி - எட்டுத்தலைவர், ஞானமயன் - அறிவுமயன்.
3. கண்டத்தீர் - கழுத்தையுடையீர்.
4. புனலும் - கங்கையும், அனல் - தீ, அரவும் - பாம்பும், கறை - நஞ்சுண்டகருப்பு, மிடற்று-கண்டத்தையுடைய, எந்தையார் - எமது தந்தையார்.
5. சேமம் - காவல்.

## திருவாரூர் நான்மணிமாலை

திருவாரூரைப்பற்றிய நான்மணிமாலை. நான்கு மணிகளாலாகிய மாலைபோல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவற்பா நான்கும் கலந்து பத்துப்பத்தாக நாற்பது

பாடலைக்கொண்ட நூலுக்கு நான்மணிமாலை என்று பெயர். இந்நூலை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள். இவர் ஸ்ரீவைகுண்டத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரது தந்தை - சண்முகசிகாமணிக் கவிராயர். இவர், ஐந்து வயது வரையிலும் ஊமையாயிருந்து, திருச்செந்தூரடைந்தபொழுது பேசப்பெற்றுக் கந்தர் கலி வெண்பாவைப் பாடினார். இவர் இயற்றிய வேறு நூல்கள் நீதிநெறிவிளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம், பண்டார மும்மணிக்கோவை முதலியன. காலம் 300 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

1. முந்நீர்-மூன்று நீர்-மழைநீர், ஆற்று நீர், ஊற்றுநீர் என்ற இம்மூன்றும் சேர்ந்த கடல்நீர், நிலவலயம் - பூமி, கொடிஞ்சி - தேருறுப்பு, தியாகனே-கொடையாளியே, (திருவாரூர்க் கோவிலில் குடிகொண்ட சிவனுக்குத் தியாகேசர் என்று பெயர்.) அடங்கா - அடங்காத, வேலைவிடம் - கடலில் தோன்றிய நஞ்சு, மதி-சந்திரன்.

2. பார்பெற்ற வல்லி - பூமியில் உள்ள உயிர்களைப் படைத்த உமாதேவி, பாகீரதி - கங்கை, வேணி - சடை, புயம்-தோள், பொன்மலை - மேருமலை.

3. என்பு - எலும்பு, நகு - சிரிக்கும், கமலேச - கமலாலயத்தையுடையவனே.

4. ஒண் - அழகிய, செங்கதிர்க்கடவுள் - கதிரவன், வீங்கு - தடித்த.

1-10. பிழம்பு - திரட்சி, புயல் - மேகம், பொதும்பு - சோலை, பாதபம் - மரம், வடுக்கை - பலா. எயிறு - பல், உகிர் - நகம், மடுப்பது - உண்பது, மானுடமடங்கல் - நரசிங்கம்.

11-20. ஆடகம் - பொன், அவுணன் - அசுரன், இடந்து - பிளந்து, நிணம்-ரத்தம், இறும்பூது - வியப்பு, பணை-வயல், மருதம்-மருதநிலம், எந்தை-எமது தந்தையே, தவிசில் - இருக்கை, கங்குல் - இரவு, நெக்கு உருக - குழைய.

21-28. குமுதம் - ஆம்பல், தேறல் - தேன், ஏழ்இசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என இசை ஏழு, இமிழ் - ஒலிக்குறிப்பு, தீஞ்சொல் - இனிய சொல்.

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

இது முத்துக்குமாரசாமியைப் பற்றிய பிள்ளைத்தமிழாகும். பிள்ளைத் தமிழ் என்பது தமிழில் உள்ள 96-வகைப் பிரபந்தங்களில் ஒன்று. தெய்வங்களையும் மக்களையும் பிள்ளையாகப் பாவித்துப் பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்புப் பருவம், தாலப்பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வாரானைப் பருவம், அம்புலிப் பருவம் இந்த ஏழும் இரண்டுக்கும் பொது. ஆண்பாலுக்கு - சிற்றில் சிதைத்தல், சிறுபறை கொட்டல், சிறு தேர் உருட்டல் - இம் மூன்றையும் சேர்ப்பர். பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு அம்மானையாடல், கழங்காடல், ஊசலாடல் இம்மூன்றையும் சேர்ப்பர். இந்நூலை இயற்றியவரும் குமரகுருபரரே.

இழும் - ஒலிக்குறிப்பு, இமய முதல்வி - பருவதராஜன் குமாரியாகிய உமாதேவி, புதல்வன் - உமாதேவியின் குமாரன், அரியன் - அருமையானவன், வதனன் - முகமுடையவன், உபயம் - இரண்டு, சரணன் - திருவடியுடையவன், விளரி - பண், அரி - வண்டு, ஞிமிறு - வண்டில் ஒருவகை, குரவன் - ஆசிரியன்.

## மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

இந்நூலை இயற்றியவரும் குமரகுருபரரே. தென்னன் - பாண்டியன், சிறுகால் - தென்றல், தீ - சிவந்த தளிர், மா - மாமரம், கயவாய்-பெரிய வாய், புனிற்று எருமை- ஈன்றணிமையுடைய எருமை, கறிக்கல்லா - கறித்தல் அறியாத, உவட்டெறிதல் - பெருக்கெடுத்தல், தோடு - இதழ், ஆடுதல் - பூசிக் கொள்ளல், தரங்கம் - அலை, பொறையுயிர்த்தல் - ஈனுதல், பொன்-இலக்குமி, சூல் - கருப்பம்.

## திருவரங்கக் கலம்பகம்

திருவரங்கம்: இது வைணவர்களுக்குப் பூலோக வைகுந்தம் எனப்படும்; பெரிய கோவில் எனவும் படும். திருஅரங்கம்- இலக்குமி தங்கிய ஆற்றிடைக்குறை. திருவரங்கத்தைப் பற்றிய கலம்பகம். கலம்பகம் என்றது தமிழில் உள்ள பிரபந்தங்களில் ஒன்று. இது பாவாலும் பாவினங்களாலும் பாடப்படுவது. தவம், கார், சம்பிரதம், மறம் முதலிய பதினெட்டு உறுப்புக்களையுடையது.

செல் - கரையான், பின்னை - நப்பின்னை, கேள்வர்-நாயகர், பாசம் - அன்பு, மறவர் - வலிமையுடையார், பட்ட - இறந்த, பதி - நகரம், படல் - தட்டி, கவிகை - குடை, மகுடம் - கிரீடம், கால்-மரக்கால், நாழி-படி, சாமரம்-வெண்சாமரம், குடில் - குடிசை.

## அம்மானை

அம்மானை மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. அலி-ஆணும் பெண்ணும் அல்லாத உரு, தாரம் - மனைவி, சாபம் - வசைமொழி, வில்.

## திருக்குற்றாலக் குறவஞ்சி

இதனைப் பாடியவர் திரிகூட ராசப்பக் கவிராயர்.

சதுர் - சபை, பின் - குறைவு, குடுக்கை - உணவுப் பாண்டம், மண்டுவேன் - உட்கொள்வேன், இலை-வெற்றிலை, பிளவு - பாக்கு, சீனச்சாக்கு - சைனாவிலிருந்து வரும் சாக்கு, துக்கிணி - சிறிதளவு.

## எலிக்கும் புலிக்கும் சிலேடை

இதனைப் பாடியவர் - மாம்பழக் கவிச்சிங்க நாவலர். இவரது ஊர் - பழனி. இவர் கவி பாடுவதில் வல்லவர். இவர் சேது சமஸ்தானம் முதலிய இடங்களில் நன்கு மதிக்கப் பெற்றவர். இவர் பாடிய பாடல்கள் பல.

சிலேடை - இருபொருள்படப்பாடுவது. சேதுபதி - சேது நாட்டுக்குத் தலைவன்.

வேங்கை-பாயும் - இரைமேல்பாயும், கடிக்கும்-இரையைக் கடிக்கும், பசு, கடு ஆடு - பசு, கரிய ஆடு, புசிக்கும் - தின்னும், குன்றில் - குன்றுகளில், தாவிச்சஞ்சரிக்கும் - தாவித்திரியும்.

எலி - பாயும் கடிக்கும்-பாயையும் கடிக்கும், பசு கருவாடு-இனிய கருவாடு, புசிக்கும் - தின்னும், குன்றில் - சிறு மலைகளில், தாவிச் சஞ்சரிக்கும்-தாவித்திரியும்.

இக்காரணங்களால் வேங்கையொடு சிற்றெலியும் சமமாகும்.

## தோழில்

இதனை இயற்றியவர் சுப்பிரமணிய பாரதியார். இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமையிலேயே இவரது கவிதா சக்தியைக் கண்ட பலரும் இவரைப் பாரதியார் எனப் பாராட்டினர். அதுவே இவரது புகழ்ப்பெயராயிற்று. இவர் சிறந்த தேசிய கவிஞர். குயில்பாட்டு, கண்ணன்பாட்டு. பாஞ்சாலி சபதம் முதலிய செய்யுள் நூல்களும் சில உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார்.

வானவர் - தேவர், பார் - பூமி, பரதநாட்டியம் - ஒரு வகைக்கூத்து.

## பாண்டியன் பரிசு

இதனைப்பாடியவர் பாரதிதாசன். இவர் புதுச்சேரியில் 1891-ம் ஆண்டில் பிறந்தவர். தந்தையார் - கனகசபை முதலியார். இவரது இயற்பெயர் - சுப்புரெத்தினம் என்பது. இவர் முத்தமிழ்ப் புலமை நிறைந்தவர். இவர் பாடியன - அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு முதலிய பலவாம்.

கொண்டவன் - நாயகன், மேனி - உடம்பு, ஓவியம் - சித்திரம், ஐயகோ - ஐயோ, மூதாதை - முன்னோர், சேதி - சொல், விளக்கே - தீபம் போன்றவளே, அகத்துன்பம் - மனத்துயர்.

## நினைவும் முடிவும்

இதனை இயற்றியவர் தேசிகவிநாயகம்பிள்ளை.

இரவி - சூரியன், பொருவு - ஒப்பு, நறை - கள், மதுகரம் - வண்டு, வேழம் - யானை, கயம் - குளம்.

## பொங்கல்

இதனைப்பாடியவர்-இராமலிங்கம்பிள்ளை. இவர் ஊர்-நாமக்கல். இவர் பாடிய பாடல்கள்-தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும் முதலியனவாம்.

தோழமை - நட்பு, இங்கிதம் - இனிமை, குடித்தனம் - குடும்பம்.

43
10-3